இலங்கை
காப்புறுதி ஒழுங்கு
முறைப்படுத்தல்
ஆணைக்குழு

# அபிவிருத்தி • மேற்பார்வை •
# ஒழுங்குமுறைப்படுத்தல்



ஆண்டு அறிக்கை
2019

# உள்ளடக்கம்


தொலை நோக்கு, செயற்பணி ........ 5
ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் ........ 6
தலைவரின் செய்தி ........ 8
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு ........ 11
ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ........ 16
ஆணைக்குழு அங்கத்தவர்களின் விபரங்கள் ........ 17
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ........ 19
பணிக் குழுவினர் ........ 20

மீளாய்வுகள்
- பொது மீளாய்வு ........ 24
- புள்ளிவிபர மீளாய்வு ........ 28
- தொழிற்பாடுகளின் மீளாய்வு (மேற்பார்வையாளர் மீளாய்வு) ........ 67
- ஒழுங்குபடுத்துனர் மீளாய்வு ........ 71
- புலனாய்வாளரின் மீளாய்வு ........ 74
- சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகளின் மீளாய்வு ........ 77
- நிர்வாக மீளாய்வு ........ 79
- நிதியியல் மீளாய்வு ........ 80

நிதியியல் தகவல்கள்
- நிதியியல் நிலைமைக் கூற்று ........ 83
- நிதிச் செயலாற்றுகை கூற்று ........ 84
- உரிமைப்பங்கு/தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றத்திற்கான கூற்று ........ 85
- காசுப்பாய்ச்சல் கூற்று ........ 86
- காசுப் பாய்ச்சல் கூற்றுகள் ........ 87
- கணக்கீட்டுக் கொள்கைகள் ........ 88
- நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........ 91

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ........ 99
2018 ஆண்டுக்கு கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விசாரணைகள் மற்றும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள் ........ 103
இணைப்பு I ........ 105
இணைப்பு II ........ 106
இணைப்பு III ........ 108
அருஞ்சொல் அகராதி ........ 109






## அபிவிருத்தி, மேற்பார்வை, ஒழுங்குமுறைப்படுத்தல்

விவேகமான மேற்பார்வை முறையின் ஊடாக காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்கு வசதியளிக்கின்றது. மக்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் நிலைபேறான காப்புறுதித் துறையை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களுடைய வாழ்க்கையில் எந்தவொரு நேரத்திலும், அது சார்ந்த விடயங்கள் தொடர்பாக பொது மக்களுக்கு உதவுவதற்கு காப்புறுதிக் கைத்தொழிற்துறை அதன் இயலளவை அபிவிருத்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் இங்கேயுள்ளோம்.

கைத்தொழிற்துறையானது சாத்தியமானதாக தொடர்ந்திருப்பதற்கும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் விருப்பங்களைப் பாதுகாத்து, அவர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கொள்கை மற்றும் சட்டங்கள் தொடர்பாக நாங்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகின்றோம். நாம் இன்று, ஒரு சிறந்த நாளைய எதிர்காலத்திற்காக, எங்கள் மக்களுடனும் நாட்டுடனும் இணைந்திருக்கின்றோம்.


இலங்கை
காப்புறுதி ஒழுங்கு
முறைப்படுத்தல்
ஆணைக்குழு

# தொலைநோக்கு

ஆசியாவின் திறன்மதிப்புமிக்க காப்புறுதி ஒழுங்குபடுத்துனராக இருத்தல்

# செயற்பணி

காப்புறுதிதாரர்களின் நாட்டங்களைப் பாதுகாக்கும் அதேவேளை, காப்புறுதித் துறையின் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் வசதிப்படுத்தல்.

# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை - 28
- காப்புறுதித் தரகர்களின் எண்ணிக்கை - 68
- காப்புறுதியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்திய காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை - 45,567
- காப்புறுதித் தரகர்களுடன் பதிவுசெய்த காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை - 617

08 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 471 கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட காப்புறுதி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை

**காப்புறுதித் தொழிற்துறையின் செயலாற்றுகை**

| | 2019 | 2018 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் (ரூ. மில்லியனில்) | 196,513 | 180,880 | 8.64% |
| மொத்த சொத்துகள் (ரூ. மில்லியன்) | 696,283 | 630,447 | 10.44% |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் % சத வீதத்தில் ஊடுருவல் | 1.31 | 1.26 | 3.94% |
| காப்புறுதியின் அடர்த்தி (ரூபா) | 9,013 | 8,347 | 7.98% |

**ஆணைக்குழுவின் செயலாற்றுகை**

| | 2019 | 2018 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (ரூ.மில்லியன்) | 6,252.96 | 5,042.80 | 24% |
| செஸ் வருமானம் (ரூ.மில்லியன்) | 493.07 | 479.09 | 2.92% |
| வருடாந்தக் கட்டணங்கள் (ரூ.மில்லியன்) | 224.43 | 168.50 | 33.19% |

**ரூபா 696,283 மில்.**
காப்புறுதித் தொழிற்துறையின் மொத்த சொத்துக்கள்

**ரூபா 196,513 மில்.**
காப்புறுதித் தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம்




# முகாமைத்துவத் தகவல்கள்

# தலைவரின் செய்தி



**ராஸீக் ஸரூக்**
தலைவர்

"ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பொதுக் காப்புறுதி மற்றும் நீண்ட கால காப்புறுதித் தவணைக் கட்டணங்கள் முறையே 17% மற்றும் 12.65% வீத வளர்ச்சியை வெளிப்படுத்தினதுடன், கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்களின் வளர்சியானது மிதமாக அமைந்திருந்தது."

# தலைவரின் செய்தி

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மற்றும் அக்காலப்பகுதியில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற நிலைமை போன்ற காரணங்களினால் பொருளாதாரமானது கணிசமானளவு நலிவடைந்திருந்தமையால் 2019 ஆம் ஆண்டானது எமது நாட்டினைப் பொறுத்தவரையில் சவால் நிறைந்ததாகவே காணப்பட்டது. இவ்வாறு நெருக்கடி நிறைந்த சூழ்நிலையில் 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவின் (IRCSL) வருடாந்த அறிக்கையினைச் சமர்ப்பிக்கின்றேன்.

### துறைசார்ந்த செயலாற்றுகை

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது, 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2.3% வரையில் மந்தநிலையினை அடைந்திருந்தது.

சாதகமற்ற வியாபாரச் சூழ்நிலை நிலவிய போதிலும், இலங்கையின் காப்புறுதித் தொழில்துறையானது 2019 ஆம் ஆண்டில் நீண்டகால மற்றும் பொது காப்புறுதித் துறைக்கான ஒட்டுமொத்த எழுத்து மூல காப்புறுதிக் கட்டண (GWP) நியதிகளின்படி 8.64% வளர்ச்சியினை அடைந்திருந்தது. நீண்டகால காப்புறுதித் துறை மற்றும் பொதுக் காப்புறுதித் துறை என்பன கடந்த இரண்டு ஆண்டுகளில் முறையே 10.57% மற்றும் 7.10% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளன. 2019 இல் நிலவிய பாதகமான காலநிலை மற்றும் 2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என்பவற்றின் காரணமாக பொதுக் காப்புறுதியினால் வழங்கப்படும் காப்புறுதிக் கோரிக்கைகளினை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளது. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் காப்புறுதித் துறையின் மொத்த சொத்துக்கள் 10.44% இனால் மிதமாக அதிகரித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, காப்புறுதி மீதான நுகர்வோரின் நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தினையும் காப்புறுதி பூட்கைகளின் கொள்வனவு நோக்கிலான நடத்தைகள் என்பன பொது மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் காரணமாக படிப்படியாக அதிகரித்துள்ளதுடன் காப்புறுதிக் கம்பனிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட சேவைகள் மற்றும் உற்பத்தி விருத்திகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. எனவே, காப்புறுதி ஊடுருவலானது 2019 இல் சிறியளவில் அதிகரித்துள்ளதுடன் 1.31% ஆக பதிவு செய்துள்ளது (விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சமூகப் பாதுகாப்பு சபை நீங்கலாக). நீண்ட கால காப்புறுதி வியாபார ஊடுருவலானது 0.59% இல் இருந்துள்ளதுடன் பொது வியாபார காப்புறுதியானது 0.72% ஆக இருந்துள்ளது. இது முழுமையான வாய்ப்பினை அடைவதற்கு செல்ல வேண்டிய நீண்ட வழியினை மீளவும் குறிப்பிடுவதுடன் இலங்கையில் காப்புறுதித் துறைக்கான வளர்ச்சிக்குரிய பாரிய வாய்ப்பினையும் கொண்டுள்ளது. காப்புறுதியின் எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டில் ரூபா.9,013 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா. 8,347 மில்லியன் ஆக இருந்துள்ளதுடன் இது 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 7.98% இனால் அதிகரித்துள்ளது. மேலும், கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் மொத்த சனத்தொகை வளர்ச்சியானது, இலங்கையில் காப்புறுதி அபிவிருத்திக்கான நேர்வினைக் குறிகாட்டிகளினைக் காட்டுகின்றது.

### சாதனைகள்

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஆணைக்குழுவானது குறித்த சில சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் தீர்மானங்களை திருத்தியமைத்துள்ளதுடன் காப்புறுதி துறைக்கான சாதகமான ஒழுங்குமுறைப்படுத்தும் சூழலினை உருவாக்கும் நோக்குடன் புதிய பணிப்புரைகளினை வழங்கியுள்ளது.

இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தும் ஆணைக்குழுவானது இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் அதாவது ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) மூலதன சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (CMDP) மற்றும் உலக வங்கியின் (WB) நிதித்துறை நவீனமயப்படுத்தும் கருத்திட்டம் (FSMP) என்பவற்றின் பயனாளியாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியானது, காப்புறுதி பூட்கைகளின் நிதிசார் ஆற்றலினை விரிவாக்குவதற்கும் சர்வதேச மிகச் சிறந்த நடைமுறைகளுக்கமைவாக விரிவான பிணக்குத் தீர்வுப் பொறிமுறையொன்றினை விருத்தி செய்வதற்குமான அறிவூட்டல் மூலோபாயங்களை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவுகையினை வழங்கி வருகின்றதுடன் இந்த நடவடிக்கையானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படவுள்ளது. உலக வங்கி கருத்திட்டமானது, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தும் செயல்திறனை வலுவூட்டுவதற்கும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவுக்குத் தேவையான உள்ளக கட்டமைப்பினை விருத்தி செய்வதற்குமான நிதிசார் மற்றும் தொழில்நுட்பசார் உதவுகையினை வழங்கி வருகின்றது. இத்தகைய இரண்டு கருத்திட்டங்களின் மூலமான பயன்கள் இலங்கையில் காப்புறுதி துறையின் விருத்திக்கு பெரிதும் நன்மை பயக்குமெனவும் இதன் மூலம் காப்புறுதி ஊடுருவல் மட்டத்தினை அதிகரிக்க முடியுமெனவும் நாம் நம்புகின்றோம்.

மீளாய்வு காலப்பகுதியில், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக காப்புறுதி எண்ணக்கரு பற்றி பொதுமக்களுக்கு நன்றாக அறியத்தரப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் அவர்களுக்கு அறிவூட்டப்பட்டுமுள்ளதுடன் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விரிவான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளினை விரிவாக்கம் செய்யும் பிரச்சார நடவடிக்கைகளும் காப்புறுதியாளர்களினால் நடாத்தப்பட்டுள்ளன.

டிஜிரல் நிலைமாற்றத்தினை கருத்தில் கொண்டு, இலங்கையின் முதலாவது டிஜிரல் காப்புறுதி ஒப்பீட்டுத் தள விருத்தி மற்றும் முதலாவது இணைய அடிப்படையிலான தரகர் என்பன இலங்கையின் காப்புறுதித் துறைக்கான பிரதான சாதனைகளாக விளங்கியுள்ளன. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், காப்புறுதித் துறையில் இடம்பெற்ற முன்னேற்றங்கள், நாட்டில் சாதகமான போக்கினை வெளிக்காட்டும் வகையில் தெளிவான வழியொன்றினை காண்பிக்கும் அதேவேளையில், நாட்டில் தொழிற்பட்டு வரும் காப்புறுதியாளர்களுக்கு மிகவும் போட்டி நிறைந்த சூழலொன்றினைத் தாபிக்கும் நோக்கில் பங்களிப்புச் செய்யப்பட்டன.

### முன்னோக்கிச் செல்லுதல்

2019 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார செயலாற்றுகையானது மிகவும் மந்த நிலையில் இருந்த அதேவேளையில் 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தல் நிறைந்த ஆண்டாகவே விளங்கும். COVID-19 தொற்று நோயானது தற்போது உலகளாவிய ரீதியில் உயிர்களுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் பாரிய அச்சுறுத்தலினை ஏற்படுத்தி வருகின்றது. முன்னுதாரணமற்ற நிதி நாணய மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் கொள்கை ஆதரவு என்பன பொருளாதார வீழ்ச்சியினைத் தணிப்பதுடன் பயன்களும் தொழில் இழப்புக்களும் தவிர்க்க முடியாதவையாகும். இது வெளிப்புறச் சூழலில் ஏற்படுகின்ற தாக்கங்களினைக் கட்டுப்படுத்தும் நிலையில் நாம் இல்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். எவ்வாறாயினும், அதனை எதிர்கொள்வதற்கு நாம் நிறைய செய்ய வேண்டியுள்ளது. காப்புறுதித் துறையானது இத்தகைய சூழ்நிலையினை மிகவும் கவனமாக பகுப்பாய்வு செய்து

# தலைவரின் செய்தி

வளர்ச்சிக்குரிய வாய்ப்புக்களைப் பெற வேண்டியுள்ளது.


காப்புறுதியாளர்கள், புத்தாக்கம் மிக்க காப்புறுதிப் பூட்கைகளினை அறிமுகம் செய்தல், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் சார்ந்த துறைகளினை நோக்கியதான பொதுமக்களுக்குரிய விநியோக வழிகள் என்பவற்றின் மூலமான புதிய விருத்திகளுக்கிணங்க தொடர்ந்தும் வளர்ச்சியினை நோக்கி பயணிப்பார்கள் என நான் நம்புகின்றேன். மேலும், நுண் காப்புறுதி துண்ட விருத்தியானது காப்புறுதி துறையின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கும்.

### மெச்சுதல்கள்

முடிவாக, ஆணைக்குழுவின் நோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றினை அடைவதில் தமது அயராத முயற்சிகளினையும் உழைப்பினையும் வழங்கியுள்ள எமது பணிப்பாளர் சபையின் சக உறுப்பினர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் அவர்களினால் வழங்கப்பட்ட எல்லையில்லா ஆதரவினை மெச்சுவதில் பெருமிதமடைகின்றேன்.

மேலும், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவுக்கு தமது ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் தொடர்ச்சியாக வழங்கி வருவதற்காகவும் சினேகபூர்வ உறவினைப் பேணி வருவதற்காகவும் அனைத்துப் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் தரகர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட இடைத்தரகர்கள் இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL), இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கம் (SLIBA), இலங்கை காப்புறுதி நிறுவகம் (SLII), மற்றும் காப்புறுதி ஒம்பூட்ஸ்மன் உள்ளடங்கலான அனைத்து துறைசார் அக்கறைதாரர்களுக்கும் இவ்விடத்தில் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இலக்கினை அடைவதற்கு நாம் எதனை வகுக்க வேண்டுமென்பதனை உணரும் வகையில் அடிப்படை சார்ந்த ஆதரவினை வழங்கியுள்ள பணிப்பாளர் நாயகம், சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மற்றும் பதவியணி உறுப்பினர்களுக்கும் எனது விசேட நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது உலகளாவிய ரீதியில் நிலவி வரும் நிதிசார் மற்றும் சுகாதார சவால்களை நாம் எதிர்கொண்டு வருவதால், "காப்புறுதித் துறையின் விருத்தியினை ஒழுங்கமைப்பதனூடாக காப்புறுதி பூட்கைதாரர்களின் நலன்களைப் பாதுகாத்தல்" எனும் எமது செயற்பணியினை நோக்கியதான மூலோபாயங்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவின் குழுவானது தொடர்ந்தும் முன்னெடுக்குமென நான் நம்புகின்றேன்.



**ராஸீக் ஸரூக்**
தலைவர்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



**தமயந்தி பெர்ணான்டோ**
பணிப்பாளர் நாயகம்

"மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தின் பெறுமதி இ.ரூபா 196,513 மில்லியன் ஆகும். இந்த தவணைக் கட்டண வளர்ச்சியானது, பிரதானமாக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தினால் முன்னெடுக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வியாபாரங்களினால் பெறப்பட்டதுடன், வளர்ச்சி வீதமானது முறையே 10.57%, 7.10% மற்றும் 2.9% வீதமாக இருந்தது."

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

நான், 2019ஆம் ஆண்டுக்கான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வெற்றிகளை அறிக்கையிடுவதையிட்டு பெருமை கொள்கின்றேன்.

இந்த வருடம், பூட்கையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துத்தும் அதே வேளையில், ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் மிகச் செயற்பாடானதாகவும் கைத்தொழிற்துறை எதிர்கொள்ளும் சவால்களை எதிர்நோக்குகையில் கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் மிகச் சவாலானதாகவே அமைந்திருந்தது. ஒழுங்குமுறைப்படுத்துனராக, கைத்தொழிற்முறையின் வளர்ச்சிக்கு எவ்வித தாக்கமுமின்றி எங்கள் சீர்திருத்தங்களை உறுதிப்படுத்தும் அதேவேளையில் காப்புறுதிப் பூட்கையாளர்களின் தேவைகளைப் பாதுகாப்பதற்கான மிகவுயர்ந்த பொறுப்பினை அடைவதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை சமநிலையில் பேணுதல் வேண்டும்.

இந்த வருடம் ஆணைக்குழு, மாறிவரும் சூழலுக்கு முகம்கொடுக்கும் வகையில் பழைய நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை சீரமைப்பதற்கு எங்களுக்கு வழிகாட்டியது. நாங்கள் அனைவரும் இவ்வருடம் ஆணைக்குழுவில் பணியாற்றிய அனைத்து அங்கத்தவர்களுக்கும், அவர்கள் வழங்கிய பெறுமதிமிக்க வழிகாட்டல் மற்றும் அறிவுகளுக்கு உண்மையாக நன்றியைத் தெரிவிக்கின்றோம். ஊழியர்களின் ஊக்கம் மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பாகவும் ஊழியர்களை நீண்ட காலத்திற்கு தக்கவைப்பதற்கு பொருத்தமான வெகுமதியளிப்பு கட்டமைப்பு இருத்தல் வேண்டும் என்பதிலும் ஆணைக்குழு மிகுந்த கவனத்துடன் இருந்தது.

### பிரதான ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னெடுப்புகள்

2019ஆம் ஆண்டில் ஆணைக்குழு, பொது மீளாய்வு அறிக்கையினுள் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்களில் ஒன்றாக சில முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்களை, மேற்கொண்டுள்ளது. இதில் விநியோகிக்கப்பட்ட பணிப்புரை #18 மற்றும் 19 என்பன பிரதான ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்களாகும்.

### பணிப்புரை #18

இந்த பணிப்புரை விநியோகிக்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைளில் இருந்து எழும் கோரப்படாத ஏதேனும் காப்புறுதி நன்மைகளை பங்குதாரர்களுக்கு நீண்டகால நிலுவை நன்மைகளாக மாற்றம் செய்வதைத் தடுப்பதற்கு நீண்ட கால காப்புறுதியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. அவ்வாறான மாற்றங்கள் மீது அவ்வாறான கட்டுப்பாடுகளை விதிப்பதானது, மாற்றங்கள் காப்புறுதியாளர்களுக்கு அல்லது அவர்களின் பயன்பெறுனர்களின் தேவைகளுக்கு மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை ஆணைக்குழு அவதானித்தமையினால் மேற்கொள்ளப்பட்டதாகும். இந்த கட்டுப்பாடுகள் ஆணைக்குழு அந்த நன்மைகள் தொடர்பாக உரிய வழிகாட்டல்களை உருவாக்கும் வரையில் மட்டுமே பிரயோகிக்கப்படும். இந்தக் கட்டுப்பாடுகள் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் ஐந்தொகை மீதியில் “கோரப்படாத நன்மைகள்” எனப் பதிவு செய்யப்பட்ட கோரப்படாத நன்மைகளையும் வரையறுத்தவற்றினையும் குறிக்கும்.

### பணிப்புரை #19

இந்த பணிப்புரை, பல காப்புறுதி தரகர்கள் இ.ரூ 2.5 மில்லியன் எனும் குறைந்தபட்ச தேறிய மூலதன தேவைப்பாட்டினைவிடவும் குறைந்த நிலையில் உள்ளமையை ஆணைக்குழு அவதானித்தமையினால் விநியோகிக்கப்பட்டது. இந்தப் பணிப்புரை இந்தத் தேவைப்பாட்டுடன் இணங்காத தரகர்களினால் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விதித்துரைக்கின்றதுடன் தொடர்ச்சியாக விதிகளை மீறுபவர்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்துசெய்வதற்கு வழிவகுக்குப்பதற்கு அவசியமான அமுல்படுத்தலுக்குரிய நடைமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது.

### காப்புறுதி கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் ஊடுறுவல்

இலங்கை அதன் பொருளாதார வளர்ச்சியில் 2019இல் உயர் மத்திய வருமான பொருளாதாரத்திற்கு படிப்படியாக அதிகரித்து, அதன் மைல்கல்லை எட்டியது. நாட்டின் பொருளாதார செழிப்பானது அதன் குடிமக்களின் உயர் செலவழிப்பு மட்டத்திற்கு பங்களிப்பு செய்வதனால், அது கைத்தொழிற்துறையின் இடர் மாற்ற பொறிமுறைக்கு அவர்களின் கவனத்தை ஈர்ப்பதனால், இது காப்புறுதித் துறையின் வளர்ச்சிக்கும், ஒரு நேர்மறைக் காரணியாகும். எனினும், இந்த வளர்ச்சியானது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக பலமாக பாதிப்படைந்ததுடன், காப்புறுதி துறை உள்ளடங்களாக பல்வேறுபட்ட சேவைத்துறைகள் பாதிக்கப்பட்டமையினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு தாக்கத்தினை உருவாக்கியது. அதனால், 2001இன் பின்னர் அதிகுறைந்த 2.3% வீதம் எனும் மிகக் குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பதிவு செய்தது. இந்த தாக்கமானது காப்புறுதிக் கைத்தொழிற்துறையையும் பாதித்தமையினால், 2015ஆம் ஆண்டின் பின்னர் மிகக் குறைந்த வளர்ச்சி வீதமாக 8.64% வீதத்தை பதிவு செய்தது. மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தின் பெறுமதி இ.ரூபா 196,513 மில்லியன் ஆகும். இந்த தவணைக் கட்டண வளர்ச்சியானது, பிரதானமாக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தினால் முன்னெடுக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வியாபாரங்களினால் பெறப்பட்டதுடன், வளர்ச்சி வீதமானது முறையே 10.57%, 7.10% மற்றும் 2.9% வீதமாக இருந்தது.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த நாட்டின் காப்புறுதி ஊடுறுவல் மட்டம் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளதுடன், கடந்த ஐந்து ஆண்டுகளில் காப்புறுதி ஊடுறுவல் மட்டம் 2015 இல் இருந்து 2019 வரை 1.12% வீதத்தில் இருந்து 1.31% வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு 1.26% வீதத்தில் இருந்து 1.34% வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

2019இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் வீதம் 0.56% வீதத்தில் இருந்து 0.59% வீதமாகவும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் 0.70% வீதத்தில் இருந்து 0.72% வீதமாகவும் காணப்பட்டது. இந்த ஊடுறுவலை ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித் துறைகள் இரண்டிலும் அவதானிக்க முடிந்ததுடன், காப்புறுதி தரகர் கம்பனிகளினால் விற்பனை செய்யப்பட்ட வெளிநாட்டு காப்புறுதிப் பூட்கைகளுக்காக சேகரிக்கப்பட்ட தவணைக் கட்டணங்கள், நுண் நிதி நிறுவனம் மற்றும் சில நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன் பாதுகாப்பு பூட்கைகளுக்காக சேகரிக்கப்பட்ட தவணைக் கட்டணங்கள் மற்றும் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் சேகரிக்கப்பட்ட தவணைக் கட்டணங்கள் மற்றும் கமத்தொழில் மற்றும் விவசாய காப்புறுதி சபை என்பவற்றினால் சேகரிக்கப்பட்ட தவணைக் கட்டணங்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி ஊடுறுவல் மட்டக் கணிப்பில் உள்ளடக்கப்படவில்லை.

மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தை ஒப்பிடுகையில் ஊடுறுவல் மட்டமானது மிகக் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. 2019இல் மொத்த சனத்தொகையில் அமுலில் இருந்த ஆயுள் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை வீதமானது 15.61% வீதமாகவே காணப்பட்டது. ஆயுள் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையை தற்போதுள்ள தொழில் படையுடன் ஒப்பிடுகையில் 2015 இல் இருந்து இந்த வீதமானது 41.59% ஆக அதிகரித்துள்ளதுடன், இது ஆயுள் காப்புறுதித்துறை தொடர்பாக கொண்டுள்ள நம்பிக்கையையும் நேர்மறை எண்ணத்தினையும் வெளிப்படுத்துகின்றது. இந்தப்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

போக்கானது, கைத்தொழிற்துறையின் ஆயுள் காப்புறுதித்துறையில் உத்தேச விரிவாக்கத்தை பிரதிபலிக்கும் நேர்மறையான போக்கினை வெளிப்படுத்துகின்றது.

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு 6,728,079 பூட்கைகளைக் கொண்டு 3.67% வீத வளர்ச்சியை பொதுக் காப்புறுதித்துறை வெளிப்படுத்துகின்றது. இந்த வளர்ச்சி 2015இல் இருந்து படிப்படியாக அதிகரிக்கின்றது.

### நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் செயலாற்றுகை

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இத்துறையானது 10.57% வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. எனினும், இந்த ஆண்டில் காணப்பட்ட நிட்சயமில்லாத நிலை காரணமாக 2015ஆம் ஆண்டில் இருந்து பார்ப்போமாயின் இதுவே குறைந்த வளர்ச்சி வீதமாகும்.

மொத்த ஆயுள் காப்புறுதிக்கான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 80.60% வீதத்தினை பிரதான ஐந்து பங்களிப்பாளர்கள் பதிவு செய்தனர். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸொப்ட் லொஜிக் லைப் தவிர்ந்த ஏனைய மூன்று கம்பனிகளின் சந்தைப் பங்குகள் குறிப்பிட்டளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஏனைய 10 ஆயுள் காப்புறுதிக் கம்பனிகளும் ஆயுள் காப்புறுதியின் மொத்த எழுதப்படட்ட தவணைக் கட்டணத்தில் 19.40% வீதத்தினை வைத்திருந்ததுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.04% வீதத்தில் இருந்து 19.40% வீதமாக வளர்ச்சியைப் பெற்றிருந்தது. 2015 இல் ஸொப்ட் லொஜிக் லைப் நிறுவனம் 7.62% வீதத்தைக் கொண்டிருந்ததுடன் இது 2019இல் 14.11% வீதமாக உயர்ந்தமை சந்தைப் பங்கில் ஏற்பட்ட குறிப்பிடக்கூடிய வளர்ச்சியாகும்.

முழுமையான ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் இணைக்கப்பட்ட நீண்ட கால வியாபாரம், தவணைக் காப்புறுதி மற்றும் உரிமை வழங்கல் பண்டங்கள் என்பன வீழ்ச்சியடையும் போக்கினை கைத்தொழிற்துறை வெளிப்படுத்தியதுடன், பூட்கையாளர்களின் முதலீட்டுகளை நோக்கி கேள்வியைப் பிரதிபலிக்கும் வகையில் யுனிவேர்சல் பண்டங்கள் மேல்நோக்கிய போக்கை வெளிப்படுத்தின மற்றும் பாதுகாப்பு பண்டங்களை விட வழமையான ஆயுள் பண்டங்களுக்கு கேள்வி காணப்பட்டது.

ஆயுள் காப்புறுதித்துறையின் கடன்தீர் நிலை தொடர்ந்தும் நிலையாக காணப்பட்டதுடன், ஒரு கம்பனி மட்டும் குறைந்தபட்ட போதுமை மட்டமான 120% வீதத்துடன் இணங்கி அமுல்படுத்தல் மட்டமான 160% வீதத்திற்கு குறைவாக காணப்பட்டது. ஒரு கம்பனியைத் தவிர்த்து ஏனைய காப்புறுதி நிறுவனங்கள் மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு எனும் மற்றுமொரு இணக்கப்பாட்டுடன் இணங்கின.

வருடத்தின் முடிவில், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 6.35% வீதத்தினால் அதிகரித்து 6,199,354ஆகக் காணப்பட்டது. இந்த வருடம் ஆயுள் காப்புறுதித்துறை 736,354 புதிய பூட்கைகளை விநியோகித்ததுடன், இது 2018ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட 711,126 புதிய பூட்கைகளுடன் ஒப்பிடுகையில் 3.36% வீத வளர்ச்சியாகும்.

மற்றொரு வகையில், 2018ஆம் ஆண்டு காலவதியான 8.34% வீத மொத்த ஆயுள் பூட்கைகளுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 7.34% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. மேலும், புதிதாக விநியோகிக்கப்பட்ட பூட்கைகளின் எண்ணிக்கையுடன் புதிதாக காலாவதியான பூட்கைகளின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில், 2018ஆம் ஆண்டில் இது 12.16% வீதத்தைப் பதிவு செய்திருந்ததுடன், இவ்வருடம் அது 11.69% வீதமாக குறைவடைந்துள்ளது.

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு உறற்றப்பட்ட கோரிக்கைகளின் மொத்தப் பெறுமதி இ.ரூபா 36,079 மில்லியனாகவும், வளர்ச்சியானது 4.83% வீதத்தினால் அதிகரித்தும் உள்ளது. மொத்த உறற்றப்பட்ட கோரிக்கைகளில் முதிர்ச்சியிலான நன்மைகள் உயர்ந்தளவு வீதத்தை கொண்டிருந்ததுடன், இது மொத்தக் கோரிக்கைகளில் 52.25% வீதமாகவும், இதன் பெறுமதி இ.ரூபா 18,852 மில்லியனாகவும் காணப்பட்டது.

எனினும், அதிகரித்து வரும் மீள்கையளிக்கப்படும் கோரிக்கைகளின் பெறுமதி (இ.ரூபா 7,070 மில்லியன்) மற்றும் எண்ணிக்கை (76,630) அதிகரித்து வருகின்றமை கைத்தொழிற்துறை மீது எதிர்மறையாக பிரதிபலிக்கின்றமையினால் கைத்தொழிற்துறையினால் உடனடியாக அதனைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் அவசியமாகும் என்பதுடன், இது கவனத்தில் கொள்ள வேண்டிய கைத்தொழிற்துறைக்கான முக்கிய காரணியாகும்.

### பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் செயலாற்றுகை

பொதுக் காப்புறுதித்துறையும் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேலும் வீழ்ச்சியடைந்து 7.10% எனும் வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு 17.34% வீதத்தில் இருந்து 7.71% வீதமாக குறிப்பிடக்கூடிய வீழ்ச்சியைப் பெற்றிருந்தது. இதற்கு காரணம் அந்த வருடத்தில் காணப்பட்ட நிட்சயமில்லாத நிலை காரணமாக வியாபாரத்தின் மீது தாக்கத்தினை விளைவித்தமையாகும்.

பொதுக் காப்புறுதித்துறை சந்தைப் பங்களிப்பில் 73.58% வீதத்தைக் கொண்டிருக்கும் ஐந்து கம்பனிகளின் பங்களிப்பினால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றதுடன், ஏனைய ஒன்பது கம்பனிகளும் சந்தைப் பங்கில் 28.77% வீத பங்களிப்பினை கொண்டுள்ளதுடன், இது 2018ஆம் ஆண்டின் 25.77% வீதத்துடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியைப் பதிவு செய்கின்றது. பொதுக் காப்புறுதித் துறையில் காணப்படும் கடுமையான போட்டியின் மத்தியிலும் ஒன்பது கம்பனிகளில் ஏழு கம்பனிகள் சந்தைப் பங்கில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பு செய்துள்ளன. 5 பிரதான ஆதிக்கம் செலுத்தும் கம்பனிகளில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சந்தைப் பங்கு மட்டும் அரசாங்க வியாபார பங்களிப்பின் காரணமாக அதிகரித்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளுடன் இந்த ஆண்டினை ஒப்பிடுகையில், பொதுக் காப்புறுதித்துறையின் பிரதான உப வகுப்பான மோட்டார் காப்புறுதி, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டத்தில் குறைந்த வளர்ச்சி வீதமாக 2.20% வீதத்தைப் பதிவு செய்ததுடன், இது பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் 59.16% வீத சந்தைப் பங்கினைக் கொண்டுள்ளது. இந்த வருடத்தில் காணப்பட்ட தனிப்பட்ட வாகனங்களின் குறைந்த இறக்குமதி மற்றும் உயர் வரி வீதம் என்பவற்றின் விளைவாக இது ஏற்பட்டுள்ளது.

அதற்கு மாறாக, தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி, ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர் காப்புறுதி, விமானங்களின் ஹல் காப்புறுதி, தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டம் போன்றவற்றை உள்ளடக்கிய நானாவிதக் காப்புறுதி 2015 இல் இருந்து பார்க்கும் போது, அதிகூடிய வளர்ச்சியான 26.69% வீதத்தைப் பதிவு செய்துள்ளது. இதற்கு காரணம் தேசிய இயற்கை இடர் காப்புறுதி திட்டத்தின் தவணைக் கட்டணம் இ.ரூபா 500 மில்லியனில் இருந்து இ.ரூபா 1,500 மில்லியனாக அதிகரித்துள்ளதுடன், ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர் காப்புறுதி இ.ரூபா 467 மில்லியனில் இருந்து இ.ரூபா 1,694 மில்லியனாக அதிகரித்தமை காரணமாக அமைந்தது. எனினும், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்துடன் ஒப்பிடுகையில் இந்த உப வகுப்பின் பங்கு மிகக் (9.71%) குறைவானதாகும்.

சுகாதார காப்புறுதித் தவணைக் கட்டணமும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் (பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களின் சுகாதாரம் தொடர்பான செலவுகளை பூர்த்தி செய்வதற்கான) தவணைக் கட்டணம் மற்றும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் (அரசாங்க மற்றும் பொதுத்துறை ஊழியர்களின் காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பு) தவணைக் கட்டணம் என்பன காரணமாக 17.07% வீதம் எனும் குறிப்பிடக்கூடிய வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக பொது மக்கள் தங்கள் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேலை நிறுத்தம், கலவரம், சிவில் யுத்தம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதியைப் பெற்றுக்கொண்டமையினால் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் யுத்தம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதியும் 37.67% வீதத்தினால் அதிகரித்தது.

மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் முறையே 7.68% மற்றும் 2.21% வீதத்தைக் கொண்டிருக்கும் தீக் காப்புறுதி மற்றும் கடல் காப்புறுதி என்பனவும் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் மறைமுக வளர்ச்சியைக் காட்டின. இதில் முக்கியமானது என்னவெனில், கைத்தொழிற்துறை குறிப்பாக தீக் காப்புறுதி, இயற்கை இடர் போன்றவற்றிலிருந்தான காப்பீடு தொடர்பாக பொது மக்களுக்கான விழிப்பூட்டலை வழங்கியது. கைத்தொழிற்துறையில் இலங்கையில் ஒரு இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உச்சளவான நன்மைகளை அபிவிருத்தி செய்வதற்கான இயலளவை கட்டியெழுப்புவதல் கடல் காப்புறுதி மற்றுமொரு முக்கியமான விடயப்பரப்பாகும்.

இந்த வருடம் பொதுக் காப்புறுதித்துறையில் இடர் அடிப்படையிலான மூலதன தேவைப்பாடுகள் தொடர்பான சந்திப்புடன், அமானா ஜெனரல் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தவிர்ந்த, ஏனைய அனைவரும் மூலதன போதுமை விதிகள் ஏற்றுக்கொள்ளும் குறைந்த காப்புறுதி தவணைக்கட்டண வளர்ச்சி வீதங்களை சாட்சியாக்கின.

இவ்வருடம் பொதுக் காப்புறுதித் துறை இ.ரூபா 58,436 மில்லியன் பெறுமதியான தேறிய கோரிக்கைகளை உற்றறியிருந்தது. இதில் இ.ரூபா 34,703 மில்லியன் மோட்டார் வாகன காப்புறுதிக்காக உற்றறப்பட்டிருந்தது. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய கோரிக்கைகளின் வளர்ச்சி வீதமானது 11% வீதமாகும். கடந்த காலங்களில் உற்றறப்பட்ட தேறிய கோரிக்கைகளின் வளர்ச்சி வீதமானது முறையே 19.5% (2016), 18% (2017), 9.8% (2018) ஆகும். 2015 இருந்து 2019 வரை பதிவு செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை கருத்தில் கொள்ளும் போது அண்ணளவாக 50% வீதத்தினை பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் உற்றறியுள்ளன.

### மீள்காப்புறுதி வியாபாரத்தின் செயலாற்றுகை

2008ஆம் ஆண்டிலிருந்து அனைத்து பொதுக் காப்புறுதிக் கம்பனிகளும் ஒரு தொகையை விட்டுக்கொடுத்தல் கட்டாயமாக்கப்பட்டதன் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் மீள்காப்புறுதி வியாபாரம் கொண்டு நடாத்தப்படுகின்றது. இலங்கையினுள் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடரினைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் உள்ளூர் சந்தைக்கு மீள்காப்புறுதி ஆதரவினை வழங்குவதற்கும் நாட்டினுள் பலமான மீள்காப்புறுதித்துறையை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பரப்பெல்லையானது திருத்தப்பட்டது.

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2019ஆம் ஆண்டினுள், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி தவணைக்கட்டணமானது 2.89 வீதத்தினால் அதகரித்தது. 2019ஆம் ஆண்டுக்கான மீள்காப்புறுதி தவணைக் கட்டணமாக இ.ரூபா 4,174 மில்லியன் பதிவு செய்யப்பட்டதுடன், இதில் இ.ரூபா 499 மில்லியனானது மீள்காப்புறுதியானது சரணடையப்பட்ட தவணைக் கட்டணமாவதுடன், இது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.23% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

எனினும், 2019இல் உறற்றப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி இ.ரூபா 3,560 மில்லியன் ஆவதுடன், இது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியான 137% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. இந்த வருடத்தினுள் மொத்தமாக உறற்றப்பட்ட கோரிக்கைகளில் பின்னடைவின் கீழ் இ.ரூபா 498 மில்லியன் மட்டுமே உறற்றப்பட்டுள்ளதுடன், 2018ஆம் ஆண்டு பின்னடைவுக் கோரிக்கைகள் ஏதுமில்லை என்பதுடன், 2017 எழுத்துறுதி நட்டம் மற்றும் வரிக்கு முன்னரான தேறிய நட்டங்களாக முறையே இ.ரூபா 763 மில்லியன் மற்றும் இ.ரூபா 662 மில்லியனை பதிவுசெய்து அதன் விளைவாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் உயர் தக்கவைத்தல் இடரைக் காட்டுகின்றதுடன் 2018ஆம் ஆண்டு நேர்மறை நிலையைப் பதிவு செய்கின்றது.

### இலாபத்தன்மை

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் காரணத்தினால் உருவான எதிர்மறைத் தாக்கதினால் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை பாதிப்புற்று அதன் இலாபத்தன்மை 22.35% வீதத்தினால் வீழ்ச்சியுற்றுள்ளது. பிரதான வகுப்பான நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் இலாபத்தன்மை 25% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு பிரதான காரணம், ஆயுள் கம்பனிகளின் பெரிய பொது காப்புறுதி துணைக் கம்பனிகளின் கையுதிர்வு மூலம் கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற குறிப்பிடத்தக்க இலாபமாகும். எனினும், 2018ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்திய பொதுக் காப்புறுதி வியாபாரமும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்குான சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் கீழ் பாரிய எண்ணிக்கையிலான கோரிக்கைகளைச் செலுத்தியமையினால் அதுவும் வீழ்ச்சியடையும் போக்கினையே காட்டுகின்றது.

### முன்னெடுக்கப்பட்டுள்ள பிரதான ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்கள்

நிதியியல் துறைகளின் வளர்ச்சிக்கு அதன் வினைத்திறனை அதிகரிப்பதையும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பையும் மேம்படுத்தம் நோக்கத்துடன் உள்ளகத்தில் கிடைக்கப்பெறாத நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழு நிதியியல் துறையின் நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தில் செயற்பாட்டுடன் பங்குபற்றுகின்றது. ஆணைக்குழுவிற்கு இக்கருத்திட்டத்தின் கீழ் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் வினைத்திறனான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக்காக அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை சட்டகத்தை நவீனமயப்படுத்துவதற்கு திறைசேரியில் இருந்து அமெரிக்க டொலர் 9 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் இந்த ஆணைக்குழு, இலங்கைப் பிணையங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பன பிரதான ஒழுங்கு முறைப்படுத்தல் நிறுவனங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டம் 2022 வரை தொடரும்.

ஆணைக்குழு காப்புறுதிப் பூட்கையாளர்களின் சிறந்த பாதுகாப்பிற்காக, இடர் அடிப்படையிலான மூலதன விதிகள், இடர் அடிப்படையிலான மேற்பார்வைச் சட்டகம் மற்றும் பல்வேறுபட்ட சட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டு நடாத்தும்.

### பாராட்டுகள்

நான் தலைவருக்கும் ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கும் பல்வேறுபட்ட கொள்கை முன்னெடுப்புகளில் சரியான பாதைக்கு எங்களுக்கு வழிகாட்டியமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் காப்புறுதி கைத்தொழிற்துறை சங்கங்களுக்கு மீளாய்வு தொடர்பாக ஆக்கபூர்வமான பின்னூட்டலை வழங்கியமைக்காகவும், கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ச்சியான ஆதரவினை வழங்கியமைக்காகவும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இறுதியாக காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு, ஆணைக்குழுவின் இலக்கினை அடைவதற்கு அவர்கள் மேற்கொண்ட முயற்சிக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**தமயந்தி பெர்ணான்டோ**
பணிப்பாளர் நாயகம்



# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்கள்

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்



**திரு. ஹரீஸ் சல்பிடிகோரள**
*அங்கத்தவர்*

**செல்வி. இந்திரா பதுகே**
*அங்கத்தவர்*

**திரு. பி. அல்கம**
*பதவி வழி அங்கத்தவர் (பிரதிச் செயலாளர் - திறைசேரி மற்றும் நிதி, பொருளாதார கொள்கை அபிவிருத்தி அமைச்சு)*

**திரு. ராஜா குணரத்ன**
*அங்கத்தவர்*

**திரு. டி.என்.ஆர்.சிறிவர்தன**
*பதவி வழி அங்கத்தவர் (கம்பனிகள் பதிவாளர் நாயகம்)*

**திரு. எச்.ஏ. கருணாரத்ன**
*பதவி வழி அங்கத்தவர் (பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி)*

**திரு. ராஸீக் ஸரூக்**
**தலைவர்**

# ஆணைக்குழு அங்கத்தவர்களின் விபரங்கள்

**திரு. ராஸீக் ஸரூக்**
**ஜனாதிபதி ஆலோசகர்**
**தலைவர்**

திரு. ராஸீக் ஸரூக் ஒரு சட்டத்தரணி, தூதுவர் மற்றும் பல்வேறு அரச கூட்டுத்தாபனங்களின் முன்னாள் தலைவர் என பல பதவிகளை வகித்துள்ளதுடன், நடைமுறையில் அவர் சிரேஸ்ட சட்டத்தரணியாவர். இவர் கூட்டுறவு மொத்த தாபனத்தின் தலைவராக இருந்தார், அத்துடன் அவரது பதவிக் காலத்தில், அதாவது 1978ஆம் ஆண்டில் இருந்து 1989ஆம் ஆண்டுவரை கூட்டுறவு மொத்த தாபனம், இலாபகரமான மற்றும் சாத்தியமான அமைப்பாக மாற்றப்பட்டதுடன், பல சொத்துக்களை பன்முகப்படுத்தி கையகப்படுத்தியதுடன் ஆதனங்கள் வாங்கி விற்கும் துறையை வளர்த்து சத்தோச மோட்டர்ஸ், லங்கா மில்க் புட்ஸ் போன்ற பல நிறுவனங்களை நிறுவியது.

அத்துடன் அவர் விவசாய அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் இலங்கை வங்கியின் தலைவராகவும் இருந்தார்.

அப்போதைய பெரடல் குடியரசு யுகொஸ்லேவியா தூதராகவும், அதன் பின்னர் ஹங்கேரியின் முதல் தூதுவராகவும் இராஜதந்திர சேவையில் பணியாற்றினார். அதைத் தொடர்ந்து சிங்கப்பூருக்கு உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார்.

இவர் மாத்தறை புனித சேவியஸ் கல்லூரி மற்றும் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவன் ஆவார்.

**திரு. பீ. அல்கம**

நிலைபேறான முறையில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடைவதற்கு உதவும் வகையில் அரச துறை நிறுவனங்களில் காணப்படும் பற்றாக்குறையான வளங்களையும் நேரத்தையும் சேமிக்கும் வகையில் அரச நிதி முகாமைத்துவத் துறையில் முறைமை, செயல்முறைகள், நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்வதில் விருப்பமுடைய அரச நிதியியல் முகாமைத்துவத்துறையில் தொழில் கல்வி சார் மற்றும் தொழில் ரீதியான ஒரு நிபுணராவார்.
தொழிலை கணக்காளராக ஆரம்பித்து, அரச நிதியியல் முகாமைத்துவம், அரச பெறுகை, சொத்து முகாமைத்துவம் தொடர்பான துறைகளில் ஊழியருக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தியை வழங்கினார்.
திரு.அலகம சிங்கப்பூர் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் பொஸ்டனில் தொழில்நுட்பம் தொடர்பான மஸாசூயூட்ஸ் நிறுவனத்தில் முகாமைத்துவ ஸ்லோன் பாடசாலையில் இருந்து வியாபார நிர்வாகம் தொடர்பான முதுமானிப் பட்டத்தையும், களனிப் பல்கலைக்கழகத்தில் இருந்து வர்த்தகமானிப் இளங்கலைமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் அரச நிதி மற்றும் கணக்கியல் பட்டய நிறுவனம் மற்றும் அவுஸ்திரேலியாவின் சிபிஏ நிறுவனத்தில் இணை அங்கத்தவராகவும் உள்ளார்.
இவர் 1987ஆம் ஆண்டு அரச சேவையில் இணைந்து கொண்டதுடன், 1991ஆம் ஆண்டிலிருந்து பொதுத் திறைசேரியில் அரச கணக்குகள் திணைக்களம், தேசிய வரவுசெலவுத் திணைக்களம், பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் மற்றும் அரச நிதித் திணைக்களம் போன்றவற்றில் பல்வேறு பதவிகளை வகித்தார்.
திறைசேரியின் பிரதிச் செயலாளராக பதவியேற்பதற்கு முன்னர் அரச நிதித் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக ஏழு வருடங்களைப் பூர்த்தி செய்தார்.
அதன் போது அரச நிதி முகாமைத்துவ உண்டியல், அரச பெறுகைகள் மற்றும் அரச சேவைக்கு ஈ-ஜிபி முறைமையை அறிமுகப்படுத்தல் போன்ற அரச நிதியியல் முகாமைத்துவ சீரமைப்புகளை மேற்கொண்டுள்ளார்.

**திரு. டி.என்.ஆர். சிறிவர்தன**

திரு.டி.என்.ஆர்.சிறிவர்தன பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியலில் கௌரவ இளமானிப் பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமானிப் பட்டத்தையும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் கார்டிப் மெற்றோபொலிடன் பல்கலைக்கழகத்தில் இருந்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் புலமைச் சொத்துக்களுடன் சர்வதேச வியாபாரத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் தொழில் ரீதியாக ஒரு சட்டத்தரணியாவர். திரு சிறிவர்தன பதிவாளர் திணைக்களத்தில் 1988ஆம் ஆண்டு இணைந்துள்ளார். தற்போது அவர் பதிவாளர் நாயகமாக பணிபுரிகின்றார். திரு. சிறிவர்தன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு கண்காணிப்புச் சபை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் நாணயப்பரிமாற்ற ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவராக உள்ளார்.

**திரு. எச்.ஏ. கருணாரத்தன**

திரு.எச்.ஏ.கருணாரத்தன இலங்கை மத்தியவங்கியின் நிதியியல் முறைமையின் நிலைத்திருப்பை மேற்பார்வை செய்யும் பிரதி ஆளுனராக செயற்படுவதுடன் இலங்கையிலும் வெளிநாட்டிலும் நிதியியல் சேவைகள் தொடர்பாக பரந்தளவிலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் நாணயக் கொள்கை ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் முறைமை நிலைத்தன்மைக் குழு, தேசிய கொடுப்பனவு கவுன்சில் மற்றும் ஊழியர் சேமலாபக் கொடுப்பனவு முதலீட்டு மேற்பார்வைக் குழு என்பவற்றின் தலைவராகவும் உள்ளார். அவர் இலங்கை கடன் தகவல் பணியகம், இலங்கை வங்கியாளர் நிறுவனம் மற்றும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தின் தலைவராக உள்ளார்.
அத்துடன், பிணையங்கள் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழு மற்றும் கொழும்பு டொக்கியாட் என்பவற்றில் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் உள்ளார். அவரின் இலங்கை வங்கியில் முப்பத்திநான்கு வருட சேவைக் காலத்தில் அவர் நாணயச் சபையின் உதவி ஆளுனர் மற்றும் செயலாளர், நாணயச் சபையின் ஆலோசனைக் கணக்காய்வுக் குழுவின் செயலாளர், பணிப்பாளர், சர்வதேச தொழிற்பாடுகள் திணைக்களம், பணிப்பாளர், இலங்கையின் நிதியியல் புலனாய்வு அலகு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரதான வியாபாரியாகவும் செயற்பட்டார்.

திரு கருணாரத்தன சிங்கப்பூர் நாணய சபையிடமிருந்து வர்த்தகங்களை எதிர்காலங்கள், விருப்பங்கள், பிற வழித்தோன்றல் தயாரிப்புகளை வர்த்தகம் செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்த வேளையில் ரிப்கோ சிங்கப்பூர் தனியார் நிறுவனத்தின் நிலையான வருமானத் திணைக்களத்தின் பிரதித் தலைவர், சிங்கப்பூர் மன் பினான்ஷீயல் பிறைவற் லிமிடட் நிறுவனத்தின் பிரதான இடர் கண்காணிப்புக்கான பிரதித் தலைவர் எனும் பதவிகளையும் வகித்துள்ளார்.

திரு கருணாரத்தன 2009இல் இருந்து 2015 வரை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழு மற்றும் சந்தை தொழிற்படுத்தல் குழு என்பவற்றில் அங்கத்துவம் வகித்துள்ளார். இவர் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொதுத்துறை நிர்வாகத்தில் முகாமைத்துவ பட்டப்படிப்பில் விஞ்ஞானமானிப் பட்டத்தையும், அமெரிக்காவின் ஒஹியோ பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பெலே அங்கத்துவத்தையும் கொண்டுள்ளார்.

ஒதுக்கீடுகள் மற்றும் போர்ட்போலியோ முகாமைத்துவம் மீதான பல்வேறுபட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச மாநாடுகளில் வழமையாக உரையாற்றுபவராகவும் திரு கருணாரத்தன விளங்குகின்றார்.

# ஆணைக்குழு அங்கத்தவர்களின் விபரங்கள்

### திரு. ஹரிஸ் சல்பிடிகோரல

திரு.ஹரிஸ் சல்பிட்டி கோரல ஐக்கிய ராஜ்ஜிய முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினதும் ஐக்கிய அமெரிக்காவின் ஆயுள் முகாமைத்துவ நிறுவனத்தினதும் அங்கத்தவராவர். இவர் ஆயுள் காப்புறுதித்துறையில் 30 வருடத்திற்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், இவர் புருணை, சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆலோசனையாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

### திரு. ராஜா குணரத்ன

திரு. ராஜா குணரத்ன ஒரு சட்டத்தரணியாவார். இவர் அவுஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் வர்த்தக சட்டம் தொடர்பான முதுமானியைப் பெற்றிருப்பதுடன், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிகின்றார். திரு குணரத்ன இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வித் திணைக்களத்தின் சிரேஸ்ட விரிவுரையாளராகவும் உள்ளார்.

இவர் அரச சேவையில் தேசிய மருத்துவ ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பவற்றின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவராக உள்ளார்.

திரு. குணரத்ன சட்டத்தரணிகள் சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தவராக இருப்பதுடன், பங்களாதேஷ் உயிரியல் மருத்துவ சங்கம் மற்றும் இலங்கை மெடிகோ சட்டச் சங்கம் என்வற்றிலும் அங்கத்தவராக இருக்கின்றார். அத்துடன், இவர் முன்னாள் தேசிய வீடமைப்பு ஆணையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் தேசிய அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர் போன்ற பதவிகளிலும் இருந்துள்ளார். இவர் பல்கலைக்கழக முறைமையில், சட்டக் கல்வித் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மனித்தன்மை மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பதில் பீடாதிபதி என பல பதவிகளை வகித்துள்ளார்.

### செல்வி. இந்திரா பதுகே

செல்வி. இந்திரா பதுகே ஒரு சட்டத்தரணியாவதுடன் சட்டக் கல்வியில் முதுமானியையும் பெற்றுள்ளார். இவர் அரச மற்றும் தனியார் துறைகளில் 26 வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்டுள்ளார். இவர் பணியாற்றிய காலத்தில் வீதிப் போக்குவரத்து அமைச்சின் சட்ட ஆலோசகர், தேசிய மீன்வள மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவனத்தின் பிரதான சட்ட ஆலோசகர் போன்ற உயர் பதவிகளை வகித்துள்ளார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



**அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து)**

திருமதி. பிரபாசினி சமரகோன் (பணிப்பாளர், புலனாய்வு)

திரு.சதீஸ் குமார் (பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம்)

திருமதி. தமயந்தி பெர்னான்டோ (பணிப்பாளர் நாயகம்)

திருமதி. சமரி ஏக்கநாயக்க (பணிப்பாளர் மேற்பார்வை)

**பின்நிற்பவர்கள் (இடமிருந்து)**

திரு.ராஜன் நிருபசிங்கம் (உதவிப் பணிப்பாளர் சட்டம்)

திருமதி. சாரிக வத்துஹேவா (உதவிப் பணிப்பாளர் மேற்பார்வை)

திரு. பிம்சரா விஜேசிங்க (உதவிப் பணிப்பாளர் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள்)

# பணிக் குழுவினர்




1. திரு. பானுக கமகே
2. திரு. ரொஷான் த கொஸ்தா
3. திருமதி. கௌஷாலி தயாரத்ன
4. திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா
5. திருமதி. உபேந்திரா சேனவிரத்ன
6. திருமதி. பிரசாதி நட்டுன்ன
7. திரு. சுபுன் விஜேபண்டார
8. செல்வி. சத்துனி தல்பாவில
9. திருமதி. மல்ஹாரி விக்ரமசிங்க
10. திருமதி. துஷாரி விஜேகுணவர்தன
11. திரு. எதிராஜ் ஸ்ரீகாந்தன்
12. திருமதி. ஹர்ஷனி பெரேரா
13. திரு. நளின் தலகல
14. திருமதி. ருவினி லியனகே
15. திரு. சரித விக்ரமசிங்க
16. திருமதி. லசந்தி தொட்டஹேவா
17. திரு. லக்ஷ்மன் விஜேசிங்க
18. திருமதி. சுஜீவா ரனசிங்க
19. திருமதி. லக்மின பத்திராஜ
20. செல்வி. ஜயனி ராஜபத்திரன




21. திரு. சமன் சேனாதீர
22. திருமதி. பிரியங்கி த சில்வா
23. திரு. சமிந்த லால் குமார
24. திருமதி. வீணா செனவிரத்ன
25. திருமதி. கோகில சிறிவர்தன
26. திரு. அனுஷ்க பண்டார
27. செல்வி. சந்தமாலி கருணாதிஸ்ஸ
28. திருமதி. சந்திமா கம்புருகமுவ
29. திருமதி. நிலங்கா வலிசுந்தர
30. திருமதி. டெஷிகா ரத்நாயக்க
31. திரு. கலன புஸ்பகுமார
32. திருமதி. வித்யானி துலபிட்டிய
33. செல்வி. குமாரி தர்மசேன
34. திரு. நயன ரவீந்திர
35. திருமதி. டி.டபில்யூ.எஸ்.எஸ். சுபுலி
36. திருமதி. ஷானிகா நாணயக்கார
37. செல்வி. உபலக்ஷி ரனசிங்க
38. திருமதி. சஷினி பிரேமலால்
39. திருமதி. சியாமளி அத்தநாயக்க
40. திரு. சனத் உதயங்க



# மீளாய்வுகள்


| | |
|---|---|
| பொது மீளாய்வு | 24 |
| புள்ளிவிபர மீளாய்வு | 28 |
| தொழிற்பாடுகளின் மீளாய்வு | 63 |

# பொது மீளாய்வு

## சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்பு நிர்வாகம்

### சட்டவாக்கம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (இதற்குப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பிடப்படும்) இலக்கு மற்றும் பொறுப்பு யாதெனில், காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் சாத்தியமான காப்புறுதிப் பூட்கையாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை நேர்மைத்திறனுடன் தொழிற்துறை ரீதியாகவும் விவேகமாகவும் நடாத்துதலாகும்.

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டம் (இதன் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதி தரகுக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள் மற்றும் நட்ட சீராக்கலாளர்கள் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்குரிய இயைபான சட்டக் கட்டமைப்பைத் தருகின்றது.

2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க மற்றும் 2017ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் (திருத்தம்)சட்டம் என்பவற்றினால் காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்குமுறைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளது.

### துணைச் சட்டவாக்கம்

இவ்வாண்டில் இந்தச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கம் கீழே ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

### ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்புகள்

#### சட்டத்தின் 96அ பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட பணிப்புரை

**i) பணிப்புரை 17 – காப்புறுதிக் கம்பனிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை**

காப்புறுதிக் கம்பனிகளின் விவகாரங்களில் அதிகூடிய வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு 17 ஆம் இலக்க பணிப்புரையை ஆணைக்குழு விநியோகித்தது.

காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் கோரிக்கையை மீளாய்வு செய்து, இணக்கத்திற்காக 30 ஜுன் 2019 வரை நீடித்தல் காலத்தை ஆணைக்குழு வழங்கியது.

இந்தப் பணிப்புரை 01 ஜுலை 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

**ii) பணிப்புரை 18 – நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் கோரப்படாத நன்மைகள்**

31 டிசம்பர் 2018ஆம் முடிவடைந்த நிதியியாண்டில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் ஏதேனும் கோரப்படாத நன்மைகளில் இருந்து பங்குதாரர்களுக்கு மாற்றம் செய்வதைத் தடைசெய்தும் மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபரத்தின் ஐந்தொகையில் "கோரப்படாத நன்மைகள்" என உரிய தொகையை பொறுப்பாக பதிவுசெய்வதற்கும் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் அனைத்து காப்புறுதியாளர்களுக்கும் 18 ஆம் இலக்க பணிப்புரையை ஆணைக்குழு விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 22 பெப்பரவரி 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

**iii) பணிப்புரை 19 – காப்புறுதித் தரகர்களுக்கான குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்குதல்**

காப்புறுதித் தரகர் கம்பனிகள் குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாடான ரூபா 2.5 மில்லியனுடன் இணங்காமையை ஆணைக்குழு கவனத்தில் கொண்டு, சட்டத்தின் 96ஏ பிரிவின் நிபந்தனைகளின் கீழ், கீழ் வரும் பணிப்புரையை விநியோகிப்பதற்குத் தீர்மானித்தது.

1. காப்புறுதித் தரகர் கம்பனிகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் ஊடாக இணைக்கமின்மையை வெளிப்படுத்திய காலாண்டில் இருந்து ஒரு மாதத்தினுள் தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடனான இணக்கத்தை படிவம் 6 (மூலதன உட்செலுத்தல்) மற்றும் அதனை உறுதிப்படுத்தக்கூடிய (மூலதனம் உட்செலுத்தப்படல்) வங்கிக்கூற்றுகளின் ஊடாக நிரூபித்தல் வேண்டும்.

2. கம்பனி மேற்குறிப்பிட்டவாறு நிரூபிக்கத் தவறின் (அவசியமான ஆவணங்களை சமர்ப்பித்தல் மற்றும் / அல்லது மேற்குறிப்பிட்ட மூலதன தேவைப்பாட்டுடன் இணங்குதல்), ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளில் உள்ள நிபந்தனைக்கு அமைவாக அதனுடைய அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தும்.

   தொடர்ச்சியாக இணக்கப்பாடின்மை காணப்பட்டால் அல்லது மீண்டும் மீண்டும் எழுந்தால் ஆணைக்குழு அதனுடைய அனுமதிப்பத்திரத்தினை இரத்து செய்யும். இந்தப் பணிப்புரை 24 ஜுலை 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

**iv) பணிப்புரை 20 – காப்புறுதிக் கம்பனிகளினால் சுருக்கெழுத்து மற்றும்/ அல்லது வர்த்தக சின்னங்களைப் பயன்படுத்துவதற்காக தாய்க் கம்பனி, தொடர்புடைய மற்றும் அல்லது தொடர்பல்லாக் கம்பனிகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதைத் தடைசெய்தல்.**

சில குறிப்பிட்ட கம்பனிகள் அதனுடைய தாய்க் கம்பனியின் சுருக்கெழுத்து மற்றும்/அல்லது வர்த்தக சின்னங்களைப் பயன்படுத்துவதற்காக, அதனை அரசுரிமைப் பணமாக விபரித்து தாய்க் கம்பனிக்கு, கொடுப்பனவுகளை மேற்கொண்டதை அவதானித்ததனால், காப்புறுதிக் கம்பனிகளினால் சுருக்கெழுத்து மற்றும்/அல்லது வர்த்தக சின்னங்களைப் பயன்படுத்துவதற்காக தாய்க் கம்பனி, தொடர்புடைய மற்றும் அல்லது தொடர்பல்லாக் கம்பனிகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதைத் தடைசெய்து. அனைத்துக் காப்புறுதியாளர்களுக்கும் 20ஆம் இலக்க பணிப்புரையை சட்டத்தின் 96ஏ பிரிவின் கீழ், ஆணைக்குழு விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 22 பெப்பிரவரி 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

### இந்த வருடத்தில் விநியோகிக்கப்பட்ட சுற்றுநிருபங்கள்

#### சுற்றுநிருபம் 40 – நீண்ட கால காப்புறுதியாளர்களினால் எழுதப்பட்ட சுகாதாரக் காப்புறுதி

ஆணைக்குழு நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் சில காப்புறுதியாளர்கள் தனித்தியங்கும் காப்புறுதிக் கொள்கைகளைக் கையாளுவதை அவதானித்து சுற்றுநிருபம் 40இனை விநியோகித்தது. இந்தச் சுற்றறிக்கை 25 பெப்பரவரி 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

#### சுற்றுநிருபம் 41 - இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் நடைமுறைகளை அமுல்படுத்தல்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் அறிக்கையிடல் தேவைப்பாட்டின் மீது அல்லாத மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் (விபரத்திரட்டு போன்றவை) இணங்காமை மற்றும் அல்லது மீறுதலுக்கான நடைமுறைகளை அமுல்படுத்துவதற்காக ஆணைக்குழு சுற்றுநிருபம் 41இனை விநியோகித்தது. இந்தச் சுற்றறிக்கை 04 நவம்பர் 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது

### சந்தைக் கட்டமைப்பு

#### காப்புறுதியாளர்கள்

சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு அமையவும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும், சட்டத்தின் கீழ், அத்தகைய வியாபாரத்தின் பதிவு அல்லது பதிவு செய்ய கருதும் எந்த ஒரு நபரும் அத்தகைய பதிவினை மேற்கொள்ளாதிருப்பாராயின் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள முடியாது.


சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு அமைவாக, இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வமுடைய ஒருவர், 2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றில் ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்பதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமத் தேவைகள் அனைத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர் காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைப்பு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

ஆண்டின் இறுதியில் அன்றுள்ளவாறு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர்களாக 27 கம்பனிகள் பதிவு செய்துள்ளன. ஏஐஜி காப்புறுதி லிமிடட் நிறுவனம் எந்தவொரு புதிய காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டாது மற்றும் 2007 ஆம் ஆண்டு 07ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக திரவப்படுத்தல் ஒருவரை நியமித்து இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

வியாபாரத்தை கொண்டு செல்வதற்கு பதிவு செய்துள்ள காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் கம்பனிகளின் வகைகளை வரைபு 01 காண்பிக்கின்றது. தொழிற்படும் 27 காப்புறுதி கம்பனிகளில், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தையும், பொதுவான காப்புறுதி வியாபாரத்தையும் மேற்கொள்ளும், கலவை காப்புறுதி வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்ட 2 கம்பனிகளும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 13 கம்பனிகளும்,

பொதுவான காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 12 கம்பனிகளும் உள்ளடங்கும்.

**விளக்கப்படம் 1**
**காப்புறுதியாளர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்**





**காப்புறுதித் தரகர்கள்**
2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் உட்சேர்க்கப்பட்டு காப்புறுதி தரகர் வியாபாரத்தை மேற்கொள்வதற்காக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி காப்புறுதி தரகர் எனப்படும். காப்புறுதி வழங்குனர், காப்புறுதி வைப்பாளர் அல்லது காப்புறுதி ஒன்றை பிரேரிப்பவர்கள் அல்லது மீள் காப்புறுதி செய்பவர்களுக்கு அல்லது ஒரு காப்புறுதி கம்பனியுடன் அவர்கள் சார்பாக காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி கம்பனியிடமிருந்து தரகுப் பணத்தை அல்லது தரகு எனும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் காப்புறுதி வியாபாரத்திற்கு இடையீட்டாளர்களாக காப்புறுதி தரகர்கள் செயற்படுகின்றனர்.

ஆண்டிறுதியின் போது 68 கம்பனிகள் காப்புறுதி தரகர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. சொல்லப்பட்ட கம்பனிகளில், 48 கம்பனிகள் நீண்ட காலம் மற்றும் பொதுவான காப்புறுதி தரகு வியாபாரம் இரண்டிலும் பதிவு செய்திருந்த அதே நேரம் 20 கம்பனிகள் பொது காப்புறுதி தரகு வியாபாரத்தில் மட்டும் பதிவு செய்திருந்தன.

விளக்கப்படம் 2 இந்த ஆண்டில் காப்புறுதி தரகர்கள் மேற்கொண்ட காப்புறுதி தரகு வியாபாரத்தின் வகைப்படுத்தல்களை காண்பிக்கின்றது.

**விளக்கப்படம் 2**
**காப்புறுதி தரகர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்**





**காப்புறுதி முகவர்கள்**

சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர் ஒருவருடன், காப்புறுதி முகவராக பதிவு செய்து கொள்ளும் தனியாளர்கள், அத்தகைய காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர்களுடன் தரகை நோக்கமாகக் கொண்டு காப்புறுதி வியாபாரத்தை பதிவு செய்தவர்களாவர். பதிவுசெய்வதற்கான தகைமைகள் சபையினால் நிர்ணயிக்கப்படும். சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி முகவர்கள் முக்கிய விநியோக ஊடகமாக இருப்பதுடன், இவர்களூடாக காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதி வியாபாரத்தை தேடிப் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இந்த ஆண்டின் போது காப்புறுதி முகவர்களாக சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 16,101 ஆகவிருந்ததுடன், இது கடந்த ஆண்டின் எண்ணிக்கையுடன் (15,798) ஒப்பிடும் போது 1.92% வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில், காப்புறுதி வழங்குனர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தனிப்பட்ட காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 45,567 ஆகும். இது கடந்த ஆண்டின் (44,919) எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 1.44% வீத அதிகரிப்பாகும். விளக்கப்படம் 03 காப்புறுதி கம்பனிகளுடன் பதிவு செய்து கொண்டுள்ள தனிப்பட்ட காப்புறுதி முகவர்களைக் காட்டுகின்றது.

**விளக்கப்படம் 2**
**31.12.2019ஆம் திகதியன்று மொத்த முகவர்கள்**




இந்த வருடம் காப்புறுதி முகவர் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காப்புறுதி முகவர்களின் கம்பனிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 617 ஆகும்.

**நட்ட சீராக்கலாளர்கள்**

இவ்வருட இறுதியில் 16 தனிப்பட்ட நட்ட சீராக்கலாளர்கள் செயற்பட்டார்கள். 2017 ஜுலை 5ஆம் திகதியிடப்பட்ட 2026/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் நட்ட சீராக்கலாளர்களுக்கான பதிவு விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் பதிவு செய்யாமல் நட்ட சீராக்கலாளராக (பிரிவு 114(1) இல் வரையறுக்கப்பட்டவாறு) எவரேனும் நபர் செயற்படுதல் அல்லது வைத்திருத்தல் தடைசெய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் 2011ஆம் ஆண்டு சட்டம் திருத்தப்பட்டது. சட்டத்தின் 89அ(2)ஆம் பிரிவுக்கு அமைவாக பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகளில் இருந்து வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் சில உள்ளன.


சட்டத்தின் 89பி பிரிவின் கீழ் நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கு அவசியமான குறிப்பிடப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களை குறிப்பிட்ட விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஆணைக்குழு விதிகளை உருவாக்க முடியும். சட்டத்தின் 89 சீ (1)இன் கீழ் ஆணைக்குழு பதிவுசெய்வதற்கு அவசியமான விண்ணப்பங்களைக் கோருவதற்கு அவசியமான ஆவணங்கள், தகவல்கள் மற்றும் கட்டணங்களை குறிப்பிட்டு விதிகளை உருவாக்க முடியும்.

அதற்கமைவாக, ஆணைக்குழு நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கு அவசியமான தகைமைகள் மற்றும் அனுபவங்களை கோரி மேற்குறிப்பிட்ட விதிகளை உருவாக்கும்.

**கம்பனியின் அந்தஸ்தும் மூலதன மாற்றங்களும்**

காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபடும் காப்புறுதி வழங்குனர்களில் 08 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன. அவையாவன யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி, சொப்ட்லொஜிக் லைப் இன்சூரான்ஸ் பிஎல்சி, எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி, அமானா டக்பாபுல் பிஎல்சீ, அமானா டக்பாபுல் லைப் பிஎல்சீ, ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ ஆர்பிக்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி மற்றும் பீப்பள்ஸ் இனசூரன்ஸ் பிஎல்சீ, என்பனவாகும். பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான காப்புறுதியாளர்களின் சதவீதத்தை விளக்கப்படம் 4 காண்பிக்கின்றது.

**விளக்கப்படம் 4**
**பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான காப்புறுதியாளர்களின் நிலவரம்**



1987 இன் 36 ஆம் இலக்க இலங்கையின் பிணையங்களும் பரிவர்த்தனையும் ஆணையகத்தின் கீழ், உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் தற்போதுள்ள காப்புறுதியாளர்கள் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை 2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்கச் திருத்தச் சட்டம் கொண்டுள்ளது. பெப்ரவரி 2015 அன்று அல்லது அதற்கு முன்னர், கலவைக் காப்புறுதி கம்பனிகள் அதன் வியாபாரத்தை இரண்டு வெவ்வேறு கம்பனிகளாக வேறாக்கி பெப்பரவரி 2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பட்டியலிடுதல் வேண்டும்.

2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்கச் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யும் புதிய கம்பனி ஒன்றிற்கு சபையின் உரிமம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்களும், பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட வேண்டிய தேவையுள்ளது.

2011 ஜூன் மாதத்திற்கு முன்னால் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்றிற்கு, 2015 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகைப்படுத்தலுக்கும் அதன் பங்கு மூலதனத்தை மிகக் குறைந்தது ரூபா ஐநூறு மில்லியனை அதிகரிக்குமாறு கூற வேண்டிய தேவை ஆணைக்குழுவிற்கு உள்ளது.

2011 ஜூன் மாதத்தை தொடர்ந்து பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள், ரூபா 500 மில்லியனுக்கு குறையாத பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளனர்.

### காப்புறுதியாளர்களிடமிருந்து ஒரு செஸ் தீர்வை

சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு செஸ் தீர்வை ஒன்றை ஏற்படுத்துமாறு கட்டளை ஒன்று கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டது. 09 ஜூலை 2002ஆம் திகதி உடைய 1244/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி, நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.2% வீதமும் மற்றும் பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.4%உம் காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2003 ஜனவரியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, காப்புறுதியாளர்கள் வழங்குனர்களிடமிருந்து செஸ் சேகரிப்பு ஆரம்பமாகியதுடன், 2019 ஆம் ஆண்டிற்கான செஸ் சேகரிப்பு தொகை ரூபா 493 மில்லியன் ஆகும்

விளக்கப்படம் 5 செஸ் மற்றும் காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் என்பவற்றின் அசைவை காண்பிக்கின்றது.

### காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்

சட்டத்தின் 103 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட செஸ் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பு செய்யப்படுகின்றது.

இந்த நிதி காப்புறுதிப்பூட்கையாளர்களின் பொதுப் பாதுகாப்புக்கும் மற்றும் ஏதேனும் விசேட நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படலாம். இது காப்புறுதிப் பூட்கையாளர்களுக்கும் உத்தேச பூட்கையாளர்களுக்கும் நன்மையளிப்பதற்காக இருக்கின்றது.

(அ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி தொழில் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய செலவினம் மற்றும் காப்புறுதி தொழிலை அபிவிருத்தி செய்வதில் ஏற்படக்கூடிய ஏனைய செலவினங்களை தீர்த்தல்.

(ஆ) ஆணைக்குழுவின் அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பிரயோகிப்பது, கடமையாற்றுவது மற்றும் செயற்படுத்துவதினால் ஏற்படக்கூடிய செலவினத்தை தீர்த்தல்.

காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் வரவில் இருக்கும் தொகை அரசாங்க பிணையங்களிலும் அரசாங்க வங்கிகளின் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்படும்.

2019 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதியத்திற்கு திரண்ட தொகை ரூபா 6,253 மில்லியனாகும். இது முன்னைய ஆண்டைவிட (ரூபா 5,043 மில்லியன்) 33.99% அதிகரிப்பாகும்.

### காப்புறுதித் தீர்வை

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு வகுப்பு தொடர்பிலும் தற்போது எவ்வித தீர்வைகளும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாய காப்புறுதி, தொழிலாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி என்பவற்றிற்கு இருந்த தீர்வைகள் முறையே 1 ஜனவரி 2002, 2005, 2007 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு நீக்கப்பட்டன.

### சட்டத்தின் பிரயோகத்திற்கான விதி விலக்குகள்

சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவிற்கு அமைவாக, 1999 இன் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விவசாய மற்றும் கமத்தொழில் சபை, 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபன சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு சபை என்பவற்றுக்கு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுவதில்லை


### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF)

2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தினால் (NITF சட்டம்) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை தாபிக்கப்பட்டு திருத்தச் சட்டத்தினால் ஆணைக்குழுவின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்திற்கு அமைவாக, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் பேணப்பட்டு வந்த நிதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உள்ளீர்ப்பு செய்யப்பட்டது. காப்புறுதியாளர்களினால் விநியோகிக்கப்படும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் காப்புறுதி இடர்களுக்கு எதிராக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பான காப்புறுதி காப்புகளை வழங்கும் காப்புறுதியாளர்கள் அவற்றின் மீது சேகரிக்கும் எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டும்.

2007 இன் 27 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக, ஒவ்வொரு மீள்காப்புறுதி செய்யும் ஒவ்வொரு காப்புறுதியாளரும் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளவாறு 50% வீதத்திற்கும் மேற்படாது பொறுப்புத் தொகையை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள் காப்புறுதி செய்ய வேண்டும்.

**விளக்கப்படம் 05**
**செஸ் மற்றும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்**



31 டிசம்பர் 2012 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1791/4 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி, ஒவ்வொரு காப்புறுதியாளரும் நீண்டகால மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் தவிர்த்து ஒவ்வொரு பொது மீள்காப்புறுதிக் கொள்கையில் இருந்து எழும் மொத்த பொறுப்பில் 30% வீதத்தை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள்காப்புறுதி செய்வதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதற்கு முன்னர் இது 20% சதவீதமாகும்.

### ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் (NCRS)

வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில், போக்குவரத்து அமைச்சின் நோக்கெல்லையின் கீழ், வாகன போக்குவரத்து சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. வாகன காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் வீதிப்பாதுகாப்பு நிதியத்திற்காக மூன்றாந் தரப்பு காப்புறுதி கட்டணங்களின் 1% வீதத்தைப் பங்களிப்பு செய்ய வேண்டும். வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சிலின் சபையில் காப்புறுதி சபை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

இந்தப் பங்களிப்பு மோட்டார் வாகன விபத்துகளின் போது விபத்தை ஏற்படுத்திவிட்டு ஓடும் சந்தர்ப்பங்களில் நட்டஈட்டை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

### நிதித்துறை புறக்கணிப்புக் கவுன்சில் (FSOC)

இலங்கை மத்திய வங்கியினால் நிதித்துறை மேற்பார்வைக் கவுன்சில் நிறுவப்பட்டதுடன், இதில் நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல்களை மேற்கொள்ளும் சிரேஷ்ட பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர். இந்த உயர் மட்டக் குழு, நிதிச் சந்தையின் சீரான அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கை பணிப்புரைகள் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் முழு நிதி முறைமையினதும் தேவைக்கு அமைவாக அனைத்து நிதியியல் ஒழுங்கமைப்பு முகவர்களை ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதித்துறை மேற்பார்வைக் கவுன்சிலில் ஆணைக்குழுவின் தலைவரும் பணிப்பாளரும் பிரதிநிதித்துவப்படுத்துவர்.

### இலங்கை காப்புறுதி சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதி சங்கம் (IASL) 1989 இல் நிறுவப்பட்டது. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர்கள் அனைவரும் சபையில் அங்கத்துவம் பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள்.

இலங்கை காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை கொண்டுள்ள இலங்கை காப்புறுதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருக்கும். அத்துடன் பின்வரும் குழுக்கள் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நிறைவேற்றுக் குழுவிற்கு தமது பரிந்துரைகளை செய்வதிலும் உதவும்.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொது காப்புறுதி மன்றம்
- நிதி தொழில்நுட்ப உப-குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப-குழு
- தகவல் தொழில்நுட்ப உப-குழு
- சந்தைப்படுத்தலும் விற்பனையும் மன்றம்
- காப்புறுதிக் கணிப்பீட்டு உப குழு

### இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (SLIBA)

ஆணைக்குழுவில் பதிவுசெய்த காப்புறுதி தரகர்கள் இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவர். இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் காப்புறுதி தரகர்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்டது.

### வழங்குனர்கள் பரஸ்பர நன்மைபயக்கும் இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)

1982 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவனமானது இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாக இருப்பதோடு காப்புறுதி வியாபாரத்தில் உள்ளவர்களின் திறமைகளையும் அறிவையும் விருத்தி செய்வது அதன் நோக்கமாகவும் உள்ளது. இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கான நிதி காப்புறுதி வழங்குனர்களின் ஆண்டு சந்தா மற்றும் அதன் உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகளில் இருந்து கிடைக்கிறது.

இலங்கை காப்புறுதி நிறுவனம் இலண்டன் பட்டய காப்புறுதி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலண்டனிலுள்ள பட்டய காப்புறுதி நிறுவனம், இந்திய காப்புறுதி நிறுவனம், இந்தியாவின் காப்புறுதி கணிப்பீட்டாளர் சங்கம் போன்ற தொழிச்சார் அமைப்புகளுக்கான பரீட்சைகளையும் நிருவகித்து வருகின்றது. நிறுவனமானது காப்புறுதி கைத்தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்காக காப்புறுதியில், குறுங்கால டிப்ளோமா பாடநெறிகளையும் நடாத்தி வருகின்றது.

சபையானது காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்துவதற்கான பொறுப்பையும் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. நிறுவனமானது காப்புறுதி வியாபாரத்தின் இரு பகுதிகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு பரீட்சைகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

### காப்புறுதி ஒம்புட்ஸ்மன்

இலங்கை காப்புறுதி சங்கம் பெப்பரவரி 2019 ஆம் ஆண்டு டாக்டர் ரஞ்சித் ரனராஜாவை காப்புறுதி ஒம்புட்ஸ்மனாக நியமித்துள்ளது. இலங்கை காப்புறுதிச் சங்கம் மற்றும் ஒம்புட்ஸ்மன் என்பவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களினால் காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு கொண்டுவரப்படும் முரண்பாடுகளை இலங்கை காப்புறுதிச் சங்கத்துடன் இணைந்துள்ள காப்புறுதிக் கம்பனிகள் தீர்த்துக்கொள்கின்றன.

### காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம (IAIS)

காப்புறுதி மேற்பார்வையார்களின் சர்வதேச சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்ற வகையில் சபையானது காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான பிரதான காப்புறுதி கோட்பாடுகள், தகவல்கள் போன்ற வெளியீடுகளையும், வழிகாட்டிகளையும் கிரமமான முறையில் பெறுகின்றது. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சில பிரதான கோட்பாடுகள் இலங்கையில் காப்புறுதி தொழிலின் சிறந்த மேலாண்மை மற்றும் கண்காணிப்பிற்காக சபையினால் பின்பற்றப்படுகின்றன.

### காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் (AFIR)

சீன காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் முன்னெடுப்புடன் 2006 ஆம் ஆண்டு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் பிராந்திய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஒத்துழைப்பு பொறிமுறைக்காக உருவாக்கப்பட்டது. ஆணைக்குழு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றத்தில் அங்கத்தவராக உள்ளது.

காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் கரைகடந்த மேற்பார்வையைப் பலப்படுத்துவத்காக ஆசிய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தலாளர்களுக்கான பிராந்திய ஒத்துழைப்பு மேடையாக அமைந்துள்ளது.

அதன் வகிபாகத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பரிமாற்றிக்கொள்ளுதல், ஒழுங்குமுறைப்படுத்தல் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளல் மற்றும் கைத்தொழிற்துறை நிபுணர்களை பரிமாறிக்கொள்ளுதல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கான அதன் பிரதான மேடையை சரியாக அமைப்பதற்கும், எல்லை தாண்டிய அபாயங்களை தடுப்பதற்கும் பதிலளிப்பதற்கும் ஒழுங்குமுறை ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கான ஒரு முக்கிய தளமாகவும், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாகவும் இதனை உருவாக்குவதற்கும், காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் எதிர்பார்க்கின்றது. இதனால் உலகளாவிய காப்புறுதி ஒழுங்குமுறை சீர்திருத்தத்தில் மிகவும் பயனுள்ள முறையில் பங்கேற்க வேண்டும்.

# புள்ளிவிபர மீளாய்வு

**காப்புறுதிக் கம்பனிகளின் சுருக்கப் பெயர்**

| | காப்புறுதிக் கம்பனிகளின் முழுப் பெயர் | சுருக்கப் பெயர் |
|---|---|---|
| 1 | ஏஐஏ இன்சூரன்ஸ் லங்கா பிஎல்சி. | ஏஐஏ லைப் |
| 2 | ஏஐஏ ஜெனரல் இன்சூரன்ஸ் லங்கா. | ஏஐஏ ஜெனரல் |
| 3 | ஏஐஜி இன்சூரன்ஸ் லிமிடட். | ஏஐஜி |
| 4 | எலையன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | எலையன்ஸ் ஜென் |
| 5 | எலையன்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | எலையன்ஸ் லைப் |
| 6 | அமானா டக்காபுல் பிஎல்சி. | அமானா ஜென |
| 7 | அமானா டக்காபுல் லைப் பிஎல்சி. | அமானா லைப் |
| 8 | ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி. | ஆர்பிகோ |
| 9 | சிலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | சிலிங்கோ ஜென் |
| 10 | சிலிங்கோ லைப் இன்சூரன்ஸ் லிமிடட். | சிலிங்கோ லைப் |
| 11 | கென்டினன்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | கென்டினன்டல் |
| 12 | கோப்பரட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | கோப்பரட்டிவ் ஜென் |
| 13 | கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிடட். | கோப்லைப் |
| 14 | பியார்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட். | பியார்பெஸ்ட் |
| 15 | எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி. | எச்என்பி லைப் |
| 16 | எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | எச்என்பி ஜென். |
| 17 | ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி. | ஜனசக்தி லைப் |
| 18 | ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | ஜனசக்தி ஜென் |
| 19 | லைப் இன்சூரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிடட். | எல்ஐசி |
| 20 | எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | எல்ஓஎல்சி ஜென் |
| 21 | எல்ஓஎல்சி லைப் அசூரன்ஸ் லிமிடட். | எல்ஓஎல்சி லைப் |
| 22 | எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | எம்பிஎஸ்எல் |
| 23 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம். | என்ஐடிஎப் |
| 24 | ஓரியன்ட் இன்சூரன்ஸ் லிமிடட். | ஓரியன்ட் |
| 25 | பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பீப்பிள்ஸ் |
| 26 | சனச லைப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | சனச லைப் |
| 27 | சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | சனச ஜென். |
| 28 | ஸெப்ட்லொஜிக் லைப் இன்சூரன்ஸ் பிஎல்சி | ஸெப்ட்லொஜிக் லைப் |
| 29 | வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | எஸ்எல்ஐசி |
| 30 | யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி | யூனியன் லைப் |

புள்ளிவிபர மீளாய்வுக்கான அட்டவணைகளினதும் விளக்கப்படங்களினதும் தரவுகளை விளக்கும் போது கீழ்வரும் பொதுக்குறிப்புகள் துணையாகும்.

1. காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அட்டவணைகளும் வரைபுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது.
2. ஏஐஏ பொது காப்புறுதி லங்கா லிமிடட் மற்றும் ஜனசக்தி பொது காப்புறுதி லிமிடட் என்பன 2016 இல் ஒன்றிணைக்கப்பட்டு “ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட்” என அழைக்கப்படுகின்றது.
3. ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் 28 செப்டெம்பர் 2018 இல் எலையன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு ”எலையன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட்” என அழைக்கப்படுகின்றது.
4. 2016இற்கு முன்னர் சொப்ட்லொஜிக் லைப் பிஎல்சி நிறுவனம் ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி லிமிடட் என அழைக்கப்பட்டது
5. ஏசியன் எலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் 2015இல் பியார்பகஸ் ஏசியா லிமிடட் நிறுவனத்தினால் கைக்கொள்ளப்பட்டு தற்போது “பியார்பர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்” என அழைக்கப்படுகின்றது.
6. யூனியன் ஜெனரல் லிமிடட் பியார்பர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் கைக்கொள்ளப்பட்டு அத்துடன் இணைக்கப்பட்டு 28 பெப்பரவரி 2017 தொடக்கம் “பியார்பர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்” என அழைக்கப்படுகின்றது.
7. ஏஐஜி இன்சூரன்ஸ் லிமிடட் தனது வியாபார நடவடிக்கைகளை 2014 தொடக்கம் நிறுத்திக் கொண்டு, தன்னார்வ திரவமயமாக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டதனால், 2018ஆம் ஆண்டு ஏஐஜியின் புள்ளிவிபரங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை.
8. சீமாசயித்த ரகஷன சமாகம 01 ஜுலை 2019ஆம் திகதி தொடக்கம் நீண்ட கால காப்புறுதி வியாபரமாகவும் பொதுக் காப்புறுதி வியாபாரமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக, “சனச லைப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட்” மற்றும் “சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட்” என நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் பொது காப்பறுதி வியாபாரத்தையும் தொடர்கின்றது.
9. என்ஐடீஎப் வேறுபட்ட காப்புறுதித் திட்டங்களைக் கையாளுவதனால் ஒப்பீட்டளவைப் பராமரிப்பதற்கு இடர் அடிப்படையிலான மூலதனத்தைக் கருத்தில் கொள்வதற்கு என்ஐடீஎப் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தரவுகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.
10. என்ஐடீஎப் நிறுவனத்தின் பயிர் மற்றும் கடன் பாதுகாப்பு திட்டத்தின் நிதித் தரவுகள், குறிப்பிடப்பட்ட தொழிற்பாடு காப்புறுதியாக கருதப்படாமையினால் 2014 தொடக்கம் அப்புள்ளிவிபரங்கள் அகற்றப்பட்டன.
11. அட்டவணைகளில் காணப்படும் பெறுமதி மிகக்கிட்டிய எண்ணுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கும் அதன் ஆக்கக்கூறுகளின் கூட்டுத்தொகைகளுக்கும் இடையில் சிறிய வேறுபாடு காணப்படக்கூடும்.
12. முன்னர் வெளியிடப்பட்ட பெறுமதிகளுடன் தற்போதுள்ள பெறுமதியை ஒப்பிடும் போது வேறுபாடு காணப்பட்டால், அது திருத்தத்தின் காரணமாக ஏற்பட்டதாகும்.
13. அடைப்புக்குறிக்குள் சுட்டிக்காட்டியுள்ள பெறுமதிகள் மறைப்பெறுமதியாகும்.
14. கீழ்வரும் சின்னங்கள் அறிக்கை முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(a) = மீண்டும் குறிப்பிடப்பட்ட மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட பெறுமதி
(b) = தற்காலிக புள்ளிவிபரங்கள்
 -  =  ஏதுமில்லை

### இலங்கை காப்புறுதிக் கைதொழிற்துறை பற்றிய ஓர் கண்ணோட்டம்

#### உலகக் காப்புறுதிச் சந்தை ஒரே பார்வையில்

உலகளாவிய காப்புறுதிக் கைதொழிற்துறை 2019ஆம் ஆண்டில் உண்மையான நியதிகளில் அண்ணளவாக 3% வீத தவணைக் கட்டண நிலையான வளரச்சியை தொடர்ந்தது. இது விசேடமாக ஆசியாவில் விரிவடையந்துவரும் சந்தைகளின் காரணமாக உறுதியான வளர்சிக்கு துணைபுரிந்தமையால் ஏற்பட்டதாகும். சீனா 2018ஆம் ஆண்டு கடுமையான ஒழுங்குவிதிகளினால் ஆயுட் காப்புறுதித் தவணைக் கட்டணங்கள் பாதிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் அதன் வளர்ச்சித்திறனைப் பெற்றுள்ளது. சுவிஸ் ரீ வெளியீடுகளின் படி, சுகாதார, பொறுப்பு மற்றும் விவசாய காப்புறுதிகளுக்கு ஏற்பட்ட பலமான கேள்வி, பொதுக் காப்புறுதி தவணைக் கட்டங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. ஆனால் பொது காப்புறுதிச் சந்தையில் விலைகள் கடந்த சில வருடங்களாக ஏற்பட்ட தொடர்ச்சியான இயற்கை பேரழிவுகள் காரணமாக ஆதன வீதங்கள் தவிர்த்து, ஒரு குறுகிய வரம்புக்குள் ஏறியிறங்கியது.

நீண்ட காலமாக வட்டி வீதங்கள் தொடர்ச்சியாக குறைந்திருந்தமை, உலகம் முழுவதிலுமுள்ள காப்புறுதி நிறுவனங்களின் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல அதிகார வரம்புகளில் குறைந்த வருமான வீதத்தின் காரணமாக நிலையான உத்தரவாத வீதத்தினுடனான பாரம்பரிய ஆயுட் காப்புறுதிப் பண்டங்களைக் கொண்டுள்ள காப்புறுதியாளர்கள் அதன் வளரச்சியில் தடுமாறுவதுடன் பூட்கையாளர்கள் அவர்களுடைய சேமிப்பினை ஏனைய சாதகமான சந்தைகளிலும் உயர் வருமானத்தைத் தரும் ஏனைய இடர் முதலீடுகளிலும் முதலிடுவதற்கு வழிவகுக்கின்றது.

தொடர்ச்சியான இயற்கைப் பேரழிவுகள் பொதுக் காப்புறுதித்துறையின் இலாபத்தன்மைக்கு மேலும் அழுத்தத்தை வழங்குவதுடன், வரும் வருமானங்கள் மூலதனச் செலவை ஈடுகட்டுவதற்கு போதுமானதகவும் இல்லை. சுவிஸ் ரீ நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சிக்மா அறிக்கையில் விளக்கப்பட்டவாறு, 2019ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட ஹஜிப்ஸ் மற்றும் பக்ஸாய் டையூன்கள், பனாமாவில் ஏற்பட்ட டோரியன் ஹரிகேன் மற்றும் மொசாம்பிக் நாட்டில் ஏற்பட்ட இடாய் சூறாவளி போன்ற பேரழிவு நிகழ்வுகளினால் ஏறத்தாழ 60 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உலகளாவிய இழப்புகளை காப்புறுதியாளர்கள் சந்தித்தனர். இந்தத் தொகையானது கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட வருடாந்த சராசரி நட்டங்களை விடச் சற்றுக் குறைவாக இருந்த போதிலும், 2019ஆம் ஆண்டின் இறுதியில் அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட புதர் தீயின் காப்புறுதி கணிப்பீடு காப்புறுதியாளர்களின் இழப்பினை மேலும் அதிகரித்தது. அதனால், முன்னெப்போதும் இல்லாது தற்போது வளர்ந்துவரும் காலநிலை இடர்கள் காப்புறுதியாளர்களையும் ஒழுங்குமுறைப்படுத்துனர்களையும் இயற்கை அழிவில் இருந்து பாதுகாப்பதற்கான இடைவெளியை விளங்கிக் கொள்வதற்கு அபிவிருத்திக் கருவிகளை கண்டறிவதற்கு பணித்துள்ளது.

அதேவேளையில், கைத்தொழிற்துறை பகுப்பாய்வாளர்கள் அடுத்துவரும் சில தசாப்தங்களில் உயர் சாரதி உதவி முறைமைகள் மற்றும் கார் சுய இயக்க தொழில்நுட்பம் போன்ற தொழில்நுட்ப புரட்சியின் காரணமாக குறைவடையும் கோரிக்கைகள் மற்றும் தவணைக் கட்டணப் பெறுமதி மற்றும் தொகைகளில் ஏற்படும் வீழ்ச்சி என்பனவற்றின் விளைவாக இன்றைய பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான வகையாக இருக்கும் மோட்டார் காப்புறுதி வகைகளில் இருந்து கிடைக்கப்பெறும் தவணைக் கட்டணங்கள் குறைவடைவதுடன், அடிப்படைக் கட்டமைப்பு மாற்றங்களை பொதுக் காப்புறுதித்துறை எதிர்கொள்ளும் என எதிர்வுகூறியுள்ளனர்.

மேற்கூறிய சவால்களுக்கு மத்தியில், தற்போது முழு உலகமும் எதிர்கொள்ளும் பாரிய அச்சுறுத்தலான கோவிட் - 19 நோய்ப்பரவலின் தாக்கத்தினால் ஏற்படும் எதிர்பார்க்காத தாக்கத்தினை காப்புறுதிக் கைத்தொழிற்துறை எதிர்நோக்கவுள்ளது. உலகில் மிகப் பலம்வாய்ந்த சுகாதார முறைமைகளைக் கொண்டுள்ள செல்வந்த நாடுகளும் இந்த நிலைமையில் தடுமாறுகின்றன. மாதக் கணக்கில் பல நாடுகளும் பிராந்தியங்களும் மூடப்பட்டிருப்பதனால், பொருளாதாரத்தின் மீது எதிர்மறையான விளைவுகள் தொடர்கின்றன.

இந்த நோய்த்தொற்று உரிமைப் பங்குச் சந்தைகளில் வியாபாரக் குறுக்கீடுகளையும் நிலையின்மையையும் உருவாக்குவதனால் விலையிடல் கருவிகளுக்கும் தொந்தரவாக இருப்பதனால் காப்புறுதிக் கம்பனிகளின் முதலீட்டு வருமானத்திற்கும் இடையூறாக இருக்கும். நீண்டகால காப்புறுதிக் கம்பனிகளுக்கு மரணத்தின் போது வழங்கப்படும் நன்மைகள் மற்றும் வைத்தியசாலை நன்மைகள் என்பன பிரதான பிரச்சினையாக இருக்கும் போது பொதுக் காப்புறுதியாளர்கள் போக்குவரத்து, ஊழியர்களின் பொறுப்பு, வியாபாரத் தடங்கல்கள் மற்றும் சுகாதார காப்புறுதிப் பூட்கைளினால் ஏற்படும் நட்டங்களை எதிர்கொள்ளுகின்றனர். அதனால், உலகம் முழுவதிலுமுள்ள காப்புறுதியாளர்கள் அவர்களுடைய வரவு செலவுத்திட்டத்தையும் அமுல்படுத்தல் திட்டங்களையும் சீராக்குவதுடன் இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு போதியளவு ஒதுக்குகளையும் மூலதன நிலைமைகளையும் பராமரிப்பதற்கு பங்குலாப விநியோகத்தைப் மட்டுப்படுத்தல் வேண்டும்.

#### இலங்கைப் பொருளாதாரம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

இலங்கையின் பொருளாதாரம் அதிகரித்துவரும் கடன் மட்டங்கள், இயற்கை அனர்த்தத்தின் தாக்கங்கள், வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக தேய்வடையும் இலங்கை ரூபாவின் பெறுமதி மற்றும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக நாட்டின் கடன் மதிப்பீடு குறைவடைவதனால் அண்மையில் சவாலான காலத்தை அனுபவித்து வருகின்றது. 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட முறையே 3.6% மற்றும் 3.3% வீத குறைந்த பொருளாதார வளர்ச்சி இதற்கு சான்றாக அமைகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட சிக்கல்களின் மத்தியிலும் 2019ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 3.7% வீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை அறிக்கையிட்டது. எனினும், நாட்டின் வளர்ச்சி எதிர்பார்ப்பானது 2009ஆம் ஆண்டு சிவில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரான உயிர்த்த ஞாயிறுத் தாகுதலினால் சிதைவடைந்தன. இந்தத் தாக்குதல் சுற்றுலாத்துறையைப் பாதித்ததுடன் இதன் காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் தடைப்பட்டதனால் சேவைத்துறையின் வளர்ச்சி படிப்படியாக குறைவடைந்து இவ்வருடத்தினுள் 2.3% வீத மிகக் குறைந்த வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. 2019ஆம் ஆண்டில் விவசாயத்துறையை கடுமையான காலநிலை பாதித்ததனால் அதன் வளர்ச்சி 0.6% வீதத்தைப் பிரதிபலித்தது. நான்காம் காலாண்டில் நெல் வளர்ச்சியில் ஏற்பட்ட சுருக்கம் தேயிலைத் துறையில் காணப்பட்ட சம்பளம் தொடர்பான தொழிற்சங்கங்களின் பிரச்சினை காரணமாக தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன விவசாயத்துறையின் வளர்ச்சியைப் பாதித்தன. சேவைத்துறை மற்றும் விவசாயத்துறை என்பவற்றில் ஏற்பட்ட மந்த வளர்ச்சியின் காரணமாக, 2019ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி இ.ரூபா 15,016 பில்லியனாக காணப்பட்டது. அதற்கமைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.3% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன், இது 2001ஆம் ஆண்டிலிருந்து பதிவுசெய்த மிகக்குறைந்த வீதமாகும்.

அதிகரித்துவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் மேம்படுத்தப்பட்ட வியாபார நம்பிக்கைகளுடன் மெல்லப் பொருளாதாரம் புத்துயிர் பெறத் தொடங்கியிருந்த வேளையில், கோவிட்-19 தொற்று நோய்ப் பரவல் 2020இல் நாட்டில் பொருளாதாரச் செயலாற்றுகையில் நிலையற்ற நிலைமையை உருவாக்கியுள்ளது.
(மூலம் - இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை 2019)

#### இலங்கை காப்புறுதிச் சந்தை

இலங்கையின் காப்புறுதித்துறை 2019ஆம் ஆண்டு இருபத்தியேழு காப்புறுதிக் கம்பனிகளையும் அறுபத்தியாறு காப்புறுதித் தரகர் கம்பனிகளையும் கொண்டுள்ளது. இந்த இருபத்தியேழு காப்புறுதிக் கம்பனிகளில் பதின்மூன்று கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் பன்னிரெண்டு கம்பனிகள் பொது வியாபார நடவடிக்கைகளையும் இரு கம்பனிகள் இவை இரண்டு வியாபாரத்தையும் கொண்டு நடாத்துகின்றன. இவ்வாண்டினுள், கலவைக் காப்புறுதியாளரான வரையறுக்கப்பட்ட சனச காப்புறுதி சங்கம் அதனுடைய நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தையும் முறையே வரையறுக்கப்பட்ட சனச ஆயுள் காப்புறுதிக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட சனச பொது காப்புறுதி வியாபாரம் எனத் தனித்தனியாக வேறாக்கியது. கடந்த இரு வருடங்களாக, சந்தையில் இணைவதற்கான விருப்பம் வளர்ச்சியடைந்ததன் காரணமாக காப்புறுதி தரகர் கம்பனிகளின் புதிய பதிவு சற்று அதிகரித்துள்ளது.


சந்தையில் காணப்படும் கம்பனிகளுக்கிடையில் போட்டிகள் உருவாவதனால், வாடிக்கையாளரைத் தக்கவைத்தல் மற்றும் ஆகுசெலவின் வினைத்திறன் என்பன அதிக முக்கியமானதாக அமைந்துள்ளன, இதனால் ஆகுசெலவைக் குறைத்து இலாபத்தன்மையை அதிகரிக்கும் அதேவேளையில் விற்பனையை அதிகரிப்பதற்கும் வாடிக்கையாளர் திருப்தியினை மேம்படுத்துவதற்கும் தங்கள் கவனத்தை காப்புறுதிக் கம்பனிகள் திருப்பியுள்ளன. இது குறைந்த ஆகுசெலவுடைய தவணைக் கட்டண வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஒன்லைன், கைத்தொலைபேசி பிரயோகம் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற புதிய மாற்று விநியோக ஊடகங்களின் விரிவுக்கு இட்டுச் செல்கின்றது. அதேவேளையில், உயர் மட்ட போட்டியினை வெளிப்படுத்தும் வங்கி காப்புறுதி உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற காப்புறுதிக் கம்பனிகளினால் பின்பற்றப்பட்ட தந்திரோபாயங்கள் இவ்வருடத்தினுள் அவதானிக்கப்பட்டது.

2019 இல், காப்புறுதிக் கைத்தொழிற்துறை 8.64% வீத ஒட்டுமொத்த வளர்சியை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமான இ.ரூபா 196,513 (2018:இ.ரூபா 180,880 மில்லியன்) இனைப் பெற்று வெளிப்படுத்தியது. இந்த தவணைக் கட்டண வளர்சியானது முறையே இ.ரூபா 8,487 மில்லயன் மற்றும் இ.ரூபா 7,146 மில்லியன் தவணைக் கட்டணங்களைப் பெற்று (2018: இ.ரூபா 8,723 மற்றும் 7,197 மில்லியன்) பிரதானமாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தினாலும், அதைத் தொடர்ந்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தினாலும் பெறப்பட்டது.

தவணைக் கட்டண வருமானத்தில் 7.10% (2018:7.71%) வீத வளர்ச்சியை வெளிப்படுத்தி, கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைந்த வளர்ச்சி வீதத்தை அறிக்கையிட்டு கடந்த வருடங்களைப் போலவே மிக மந்தமான வளர்ச்சி 2019ஆம் ஆண்டிலும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் அவதானிக்கப்பட்டது. அதேவேளை, மோட்டார் வாகன வகையின் தவணைக் கட்டணப் பங்களிப்பு கடந்த வருடங்களைப் போலன்றி 2019இல் வீழ்ச்சியடைந்துள்ளது. தீர்வைகள் மற்றும் அதிசொகுசு வரிகள் அதிகரிக்கப்பட்டமை, நாணய மாற்று வீதத்தின் வீழ்ச்சி காரணமாக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் என்பவற்றினால் புதிய மோட்டார் வாகனங்களின் பதிவு இவ்வருடத்தில் குறைவடைந்தன. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மோட்டார் வாகன தவணைக் கட்டணங்களில் ஒரு சிறிய வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது.

**விளக்கப்படம் 1**

**காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதம்**




உயிர்த்த ஞாயிறுக்கு பின்னர் சவாலான சூழ்நிலை காணப்பட்ட போதிலும், நீண்டகால காப்புறுதி வியாபாரங்களினால், அவற்றின் வளர்ச்சியை 10.57% வீதம் (2018:12.19%) எனும் நடுநிலை மட்டத்தில் பேணுவதற்கு இயலுமானது. காப்புறுதி தொடர்பாக அதிகரிக்கப்பட்ட விழிப்புணர்வுகள், கவர்ச்சிகரமான பண்ட அபிவிருத்தி மற்றும் காப்புறுதியாளர்களின் மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை என்பன கடந்த சில வருடங்களாக தவணைக் கட்டண வளர்ச்சிக்கு உதவின. அதிகரித்துவரும் வயது முதிர்ந்தவர்களின் குடித்தொகையானது காப்புறுதியாளர்களுக்கு கவர்ச்சிகரமான காப்புறுதித் திட்டங்களின் ஊடாக சிரேஸ்ட பிரஜைகளுக்கான சுகாதார மற்றும் சமூக கவனிப்பினை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு வகை செய்கின்றது. மேலும் கோவிட்-19 தொற்று நோயின் தாக்கம் அதிகரிப்பதினால் நீண்ட கால காப்புறுதியாளர்களினால் வழங்கப்படும் சுகாதார நன்மைகளுக்கான கேள்வி அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 1இல் வெளிப்படுத்தப்பட்டவறு, ஏனைய தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் உட்புகும் காப்புறுதி வீதம் தொடர்ந்தும் குறைவாகவே உள்ளதுடன், கடந்த ஐந்து ஆண்டுகளில் 2015 இல் 1.12% வீதமாக இருந்தது 2019 இறுதியில் 1.31% ஆக சற்று அதிகரித்துள்ளது.

பொது மக்களின் காப்புறுதி தொடர்பான அறிவு மற்றும் காப்புறுதியின் பெறுமதி பற்றிய விளக்கம் என்பன இன்னும் அபிவிருத்தி மட்டங்களிலேயே உள்ளது. எனினும் கடந்த சில வருடங்களாக, பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகளும் பண்ட அபிவிருத்திகளும் காப்புறுதியின் மீது வாடிக்கையாளரின் நம்பிக்கை மற்றும் காப்புறுதிப் பண்டங்களைக் கொள்வனவு செய்யும் நடத்தையில் மாற்றம் என்பன படிப்படையாக அதிகரித்துள்ளது. மேலும், கடந்த ஐந்து வருடங்களில் நாட்டின் மொத்தக் குடித்தொகையில் காப்புறுதி தவணைக் கட்டணங்களின் விகிதமான காப்புறுதி அடர்த்தியானது, இலங்கையில் காப்புறுதி அபிவிருத்திக்கான நேர்மறையான காட்டியாக விளங்குகின்றது.

காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் பணத்துாய்தாக்கலுக்கு எதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான மேற்பார்வையை அதிகரிப்பதற்கு இலங்கையின் நிதியியல் புலன்விசாரணைப் பிரிவு, 2019 மே மாதம் நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளுக்கு பிரயோகிக்கக்கூடிய வாடிக்கையாளருக்குரிய கட்டுப்படுத்தல்களை விநியோகித்தது. இவ்வருடம் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் புலன்விசாரணைப் பிரிவுடன் இணைந்து ஆணைக்குழு மூன்று பணத்துாய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடல் தொடர்பான கள விசாரணைகளை மேற்கொண்டது.

**அட்டவணை 1**

**எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமும் ஊடுறுவலும்**

| | 2015 | 2016 | 2017 | 2018 (a) | 2019 (b) |
|---|---|---|---|---|---|
| எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 53,691 | 63,477 | 71,571 | 80,294 | 88,781 |
| தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம் (%) | 20.39 | 18.23 | 12.75 | 12.19 | 10.57 |
| எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 69,271 | 79,590 | 93,389 | 100,586 | 107,732 |
| தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் (%) | 13.18 | 14.90 | 17.34 | 7.71 | 7.10 |
| மொத்தத் தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 122,962 | 143,067 | 164,960 | 180,880 | 196,513 |
| மொத்தத் தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - காப்புறுதி வியாபாரம் (%) | 16.22 | 16.35 | 15.30 | 9.65 | 8.64 |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் (இரூபா.மில்) ** | 1,738 | 2,397 | 3,683 | 4,056 | 4,174 |
| நடைமுறை சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (இரூபா.மில்) * | 10,951 | 11,996 | 13,328 | 14,366 | 15,016 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் (%)* | 5.00 | 4.50 | 3.60 | 3.30 | 2.30 |
| ஊடுருவல் %(மொ.உ.உ. இன் மூ இல் மொத்தக் காப்புறுதித் எழுதப்பட்ட தவணைக் கட்டணம்) | 1.12 | 1.19 | 1.24 | 1.26 | 1.31 |
| ஊடுருவல் %(மொ.உ.உ. இன் % இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டணம்) | 0.49 | 0.53 | 0.54 | 0.56 | 0.59 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் பொது காப்புறுதி வியாபாரத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 0.63 | 0.66 | 0.70 | 0.70 | 0.72 |
| காப்புறுதி செறிவு (மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் / சனத்தொகை) (இரூபா.மில்) | 5,864 | 6,747 | 7,693 | 8,347 | 9,013 |
| சனத்தொகை “000 (ஆண்டின் மத்தியில்) % | 20,970 | 21,203 | 21,444 | 21,670 | 21,803 |

* *மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்:*
*இலங்கை மத்திய வங்கியின் 2019ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2015 இல் இருந்து தற்போதைய சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி இற்றை செய்யப்பட்டுள்ளது.*

** *தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உழைக்கப்பட்ட பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.*

## காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள்

ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுடன் இணைங்கும் வகையில் கடன் தீர் மற்றும் மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு காப்புறுதியாளர்கள் வினைத்திறனான சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவத்தை மேற்கொள்ளல் அத்தியாவசியமானதாக அமைகின்றது. பலமான சொத்து கையிருப்பானது இலாபத்தன்மை மீதான அழுத்தத்தைக் குறைப்பதுடன் உயர் கோரிக்கைகள் மற்றும் செலவுகளின் கையாளுகையில் காப்புறுதியாளரின் வெற்றியைத் தீர்மானிக்கின்றது. சவாலான பொருளாதாரச் சூழ்நிலைகளிலும், காப்புறுதிக் கைத்தொழிற்துறை 2018ஆம் ஆண்டு பதிவு செய்த 8.38% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டில் 10.44% வீதத்தைப் பதிவு செய்தது. அட்டவணை 2 மற்றும் விளக்கப்படம் 2 என்பன கடந்த ஐந்து ஆண்டுகளில் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்தச் சொத்துக்களின் விபரங்களை விளக்குகின்றன.

இவ்வருடம், பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள் குறைந்த வீதத்தில் வளரச்சியடையும் போது, நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மொத்த சொத்து வளர்ச்சி 12.76% வீதம் நடுநிலையான வளர்ச்சியைப் பெற்று, மொத்த சொத்து வளர்ச்சிக்கு பிரதான பங்குதாரராகியது. இலங்கையின் நிதியில் அறிக்கையிடல் நியமம் (SLFRS) 16, காப்புறுதியாளர்கள் 2019 தொடக்கம் தொழிற்படுத்தும் குத்தகை ஒழுங்குபடுத்தல்களுக்கு சொத்தினை சரியாகப் பயன்படுத்தலை அடையாளம் காணுதல் வேண்டும் எனக் குறிப்பிட்ட வேளையில், 2019இல் சொத்துக் கலவையின் பிரதான உந்துதல் கருவிகளாக கூட்டிணைந்த கடன் கருவிகள் மற்றும் அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் அமைந்திருந்தன, இது மொத்த சொத்து அடிப்படையில் சிறியளவிலான வெளிப்படுத்தலையும் இணைத்தது.

ஒரு கலவை காப்புறுதியாளரான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் நீண்ட கால காப்புறுதியாளர்களான சிலிங்கோ லைப், ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் என்பன மொத்த சொத்துக்களுக்கு பிரதான பங்குதாரர்களாக இருந்ததுடன், அதனைத் தொடர்ந்து பொதுக் காப்புறுதிக் கம்பனிகளினுள் உயர் சொத்துக்களைக் கொண்ட நிறுவனங்களாக எலையின்ஸ் ஜெனரல் மற்றும் சிலங்கோ ஜெனரல் என்பன காணப்பட்டன.

கடந்த இரு வருடங்களில் நிலையான வீழ்ச்சியின் மத்தியிலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 31 டிசம்பர் 2019 அன்று இ.ரூபா 6,690 மில்லியன் மொத்த சொத்துக்களைக் கொண்டு, அதன் மீள்காப்புறுதி வியாபாரச் சொத்துக்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியது. இது முக்கியமாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புடைய அரசாங்க கடன் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் அதிகரித்தமையினால் ஏற்பட்டமையாகும்.


**அட்டவணை 2**

**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள் ஊடுறுவலும்**

| | 2015 | 2016 | 2017 | 2018 (a) | 2019 (b) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (இ.ரூபா. மில்லியன்) | 312,713 | 345,589 | 391,890 | 430,759 | 485,723 |
| வளர்ச்சி வீதம் - நீண்ட கால காப்புறுதி (%) | 26.57 | 10.51 | 13.40 | 9.92 | 12.76 |
| பொதுக் காப்புறுதி (இ.ரூபா. மில்லியன்) | 151,177 | 173,985 | 185,583 | 196,005 | 203,870 |
| வளர்ச்சி வீதம் - பொதுக் காப்புறுதி (%) | (13.41) | 15.09 | 6.67 | 5.62 | 4.01 |
| மீள்காப்புறுதி (இ.ரூபா.மில்) | 3,417 | 5,755 | 4,212 | 3,683 | 6,690 |
| வளர்ச்சி வீதம் - மீள்காப்புறுதி (%) | 11.48 | 68.42 | (26.82) | (12.54) | 81.63 |
| மொத்தம் (இ.ரூபா மில்லியன்) | *466,519 | 525,329 | 581,685 | 630,447 | 696,283 |
| வளர்ச்சி வீதம் - மொத்தம் (%) | 10.54 | 12.61 | 10.73 | 8.38 | 10.44 |

* *உள்ளக கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்பட்டுள்ளது*

**விளக்கப்படம் 2**
**காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்கள் மற்றும் சொத்துக்களின் வளர்ச்சி வீதம்**




### பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக வியாபார நம்பிக்கை குறைவடைந்ததுடன் நாட்டின் சுருங்கியதனால் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் நிதியியல் துறைகளின் செயற்பாடும் அதன் விரிவாக்கமும் குறைவடைந்தது. இலங்கையின் பிரதான நிதியியல் துறைகளுக்கிடையில் சொத்துக்களின் விநியோக விபரத்தை அட்டவணை 3 மற்றும் விளக்கப்படம் 3 உள்ளடக்கியுள்ளன. அதில் விளக்கப்பட்டவாறு, 2018இல் அறிக்கையிடப்பட்ட 11.23% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 6.17% வீத வளர்ச்சி நிதியியல் துறையின் மொத்த சொத்துக்களின் அடிப்படையில் ஏற்பட்ட வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இந்த வளர்ச்சியானது பிரதானமாக வங்கித் துறையினாலும், அதனைத் தொடர்ந்து ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களினாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. வங்கித்துறை மற்றும் வைப்புகளை ஏற்றுக்கொள்ளும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் மற்றும் விசேட நிதியியில் நிறுவனங்கள் எனும் இரண்டையும் செயற்படாத கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பன பிரதானமாகப் பாதித்ததுடன், இது 2014இல் இருந்து அதன் குறைந்த மட்டத்திற்கு அவர்களுடைய சொத்துத் தரத்தை பலவீனப்படுத்தியது. (மூலம் - இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2019).

33 அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளைக் கொண்ட வங்கித்துறை, இலங்கையின் நிதியியல் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்து வகைகளின் 71.6% வீதத்தைக் கொண்டுள்ள வங்கித்துறையின் மொத்த சொத்துக்களின் பெறுமதி இ.ரூபா 14,442.1 பில்லியன் ஆகும். அதேவேளை இலங்கை மத்திய வங்கியின் 2019ஆம் ஆண்டறிக்கையில் விளக்கப்பட்டவாறு, கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான குறைந்த கேள்வி மற்றும் அதிகரித்த செயற்படாத கடன்களின் காரணமாக வங்கிகளினால் இறுக்கப்பட்ட கடன் வழங்கல் என்பன காரணமாக வங்கித்துறை சொத்துக்கள் தொடர்பாக கடந்த ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 15.25% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு மிகக் குறைந்த வளர்ச்சியான 5.33% வீத வளர்ச்சியைப் பெற்றிருந்தது.

**அட்டவணை 3**
**பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்**

| நிதியியல் துறை | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % |
| வங்கித்துறை | 9,503.7 | 68.7 | 10,575.8 | 69.5 | 11,897.4 | 69.7 | 13,711.4 | 72.2 | 14,442.1 | 71.6 |
| வைப்புகளை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள் | 1,044.2 | 7.6 | 1,246.7 | 8.2 | 1,370.4 | 8.0 | 1,603.2 | 8.4 | 1,647.2 | 8.2 |
| விசேட நிதி நிறுவனங்கள் | 557.8 | 4.0 | 335.4 | 2.2 | 388.9 | 2.3 | 241.1 | 1.3 | 282.6 | 1.4 |
| ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் | 2,257.5 | 16.3 | 2,536.6 | 16.7 | 2,838.0 | 16.6 | 2,807.4 | 14.8 | 3,096.5 | 15.4 |
| காப்புறுதிக் கம்பனிகள்* | 466.5 | 3.4 | 525.3 | 3.5 | 581.7 | 3.4 | 630.4 (a) | 3.3 | 696.3 (b) | 3.5 |
| **மொத்தம்** | **13,829.6** | **100** | **15,219.8** | **100** | **17,076.4** | **100** | **18,993.5** | **100** | **20,164.7** | **100** |

*மூலம் : இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2019*
** காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.*

ஏனைய வைப்புக்களை பெற்றுக்கொள்ளும் நிதியியல் நிறுவனங்களை அனுமதிப்பத்திரம் பெற்ற நிதியியல் கம்பனிகள், பிராந்திய வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்ககங்கள் என்பன பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன், 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று மொத்தச் சொத்துக்களின் பெறுமதி இ.ரூபா 1,647.2 பில்லியனாகும். இதன் வளர்ச்சி 2018ஆம் ஆண்டில் 16.99% வீதமாக இருந்ததுடன் வருடத்தின் அடிப்படையில் அதன் வளர்ச்சி 2.74% வீதத்தினால் குறைவடைந்ததைக் காட்டுகின்றது.


எனினும், விசேட நிதியியல் நிறுவனங்களினால், கடந்த ஆண்டு வீழ்ச்சியடைந்த அவர்களுடைய சொத்து அடிப்படையை 2019ஆம் ஆண்டு மீட்டுக்கொள்வதற்கு இயலுமானது. இது இவ்வருடத்தில் கூறு நம்பிக்கையாளர்களின் எண்ணிக்கை மற்றும் கூறு நம்பிக்கை அலகுகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக கூறு நம்பிக்கை அலகுகளின் சொத்துகளின் அதிகரிப்பினால் ஏற்பட்ட விளைவாகும். அதற்கமைவாக, 2018ஆம் ஆண்டில் இ.ரூபா 24.1 பில்லியனாக இருந்த விசேட நிதியியல் நிறுவனங்களின் சொத்து அடிப்படை 2019ஆம் ஆண்டில் இ.ரூபா 282.6 பில்லியனாக அதிகரித்து 17.21% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.
ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களை ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பன ஆக்கிரமிப்பு செய்ததுடன், இவ்வருடத்தினுள் 10.30% வீதம் எனும் நடுத்தர வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இந்த வளரச்சி பிரதானமாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர்களின் தேறிய பங்களிப்பினாலும் நிதியங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட வருமானங்களினாலும் ஏற்பட்டதாகும்.

காப்புறுதிக் கம்பனிகளும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.44% வீத நடுத்தர வளரச்சியை வெளிப்படுத்தும் இ.ரூபா 696.3 பில்லியன் பெறுமதியான சொத்துக்களை வழங்கியதன் ஊடாக நிதியியல் துறையின் மொத்த சொத்துகளுக்கு நேர்மறையாக பங்களிப்பு செய்தன. அதற்கமைவாக 2019ஆம் ஆண்டில் காப்புறுதிக் கம்பனிகள் நிதியியல் கம்பனிகளின் மொத்த சொத்தில் 3.5% (2018:3.3%) வீதத்தை வைத்திருந்தன.

**இலாபத்தன்மை**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் காரணமாக உருவாக்கப்பட்ட எதிர்மறைத் தாக்கத்தினால் சாதகமற்ற பொருளாதார சூழ்நிலைகள் நாட்டில் நிலவியதால், காப்புறுதிக்

**விளக்கப்படம் 3**
**31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்**




கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை சவாலுக்குட்பட்டது. அதற்கமைவாக, 2019ஆம் ஆண்டு காப்புறுதிக் கைத்தொழிற்துறையானது மொத்த இலாபமாக (வரிக்கு முன்னரான) இ.ரூபா 30,544 மில்லியனை அறிக்கையிட்டதுடன், இது 2018ஆம் ஆண்டு அறிக்கையிட்ட ரூபா 39,335 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 22.35% வீத வீழ்ச்சியை வெளிப்படுத்தியது. ஒருதடவை மிகை மற்றும் ஜனசக்தி லைப் அதன் துணை முதலீடான ஜனசக்தி ஜெனரல் நிறுவனத்தை எலைன்ஸ் ஜெனரலுக்கு விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட இலாபம் உள்ளடங்கலாக பல காப்புறுதியாளர்களினால் மிகைப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக நீண்டகால காப்புறுதி வியாபாரம் கடந்த இரண்டு வருடங்களாக அதன் இலாபம் அதிகரித்து வரும் போக்கினைக் காட்டியது. எனினும், அதிகரித்த உரிமைக் கோரிக்கைகள் மற்றும் உருவாக்கப்பட்ட மிகை பரிமாற்றங்களின் காரணமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யூனியன் லைப், சனச லைப், எச்என்பி லைப், ஆர்ப்பிகோ மற்றும் எலைன்ஸ் லைப் போன்ற சில குறிப்பிட்ட ஆயுள் காப்புறுதிக் கம்பனிகள் வீழ்ச்சியடைந்த இலாபத்தை வெளிப்படுத்தியமையினால் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டின் இலாபம் 24.92% வீதம் வீழ்ச்சியைக் காட்டியது.

விசேடமாக எலைன்ஸ் ஜெனரல் கம்பனியின் “சுரக்ஸா ஸ்கீம்” திட்டத்தின் காரணமாக அதிகரித்த கோரிக்கைகள் காரணமாகவும் எலைன்ஸ் ஜெனரல், சிலிங்கோ ஜெனரல் மற்றும் அமான ஜெனரல் என்பவற்றின் செயலாற்றுகைகள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த இலாபமானது பாரியளவு தாக்கத்திற்குள்ளாகியது. அதற்கமைவாக 2019ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வரிக்கு முன்னரான மொத்த இலாபம் இ.ரூபா 11,130 மில்லியனாக (2018: இ.ரூபா 11,737 மில்லியன்) இருந்ததுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.17% வீத வீழ்ச்சியைக் காட்டியது.

எனினும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், எல்ஓஎல்சி ஜெனரல் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க இலாபத்தை பெற்றிருந்தன. அக்ரஹார, என்என்டிஜஎஸ் மற்றும் எஸ்ஆர்சீசீ என்பவற்றின் அதிகரித்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் காரணமாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இலாபத்திற்கு வழிவகுத்தது.

**அட்டவணை 4**
**காப்புறுதிக் கம்பனிகளின் இலாபத்தன்மை**

| காப்பறுதியாளர் | 2018(அ) | | | 2019(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | நீண்டகால காப்புறுதி (இ.ரூபா'000) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) | நீண்டகால காப்புறுதி (இ.ரூபா'000) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) |
| ஏஜஏ லைப் | - | 647,973 | 647,973 | - | (1,691,424) | (1,691,424) |
| எலைன்ஸ் ஜென. | 85,583 | - | 85,583 | 46,603 | - | 46,603 |
| எலைன்ஸ் லைப் | - | 23,986 | 23,986 | - | (264,168) | (264,168) |
| அமானா ஜென. | (62,976) | - | (62,976) | (29,478) | - | (29,478) |
| அமானா லைப் | 198,834 | - | 198,834 | 83,485 | - | 83,485 |
| ஆர்பிகோ | - | 2,335,822 | 2,335,822 | - | 1,734,516 | 1,734,516 |
| சிலிங்கோ ஜென. | 7,157,389 | - | 7,157,389 | 8,211,937 | - | 8,211,937 |
| சிலிங்கோ லைப். | - | 427,023 | 427,023 | - | 506,285 | 506,285 |
| கென்டினன்டல் | - | 405,776 | 405,776 | - | 368,873 | 368,873 |
| கோப்பரட்டிவ் ஜென. | 43,737 | - | 43,737 | 57,592 | - | 57,592 |
| கோப்லைப் | - | 520,205 | 520,205 | - | 614,175 | 614,175 |
| பியார்பர்ஸ்ட் | 1,297,848 | - | 1,297,848 | 1,106,535 | - | 1,106,535 |
| எச்என்பி லைப் | - | 282,806 | 282,806 | - | 354,826 | 354,826 |
| என்என்பி ஜென. | 9,855,686 | - | 9,855,686 | 591,571 | - | 591,571 |
| ஜனசக்தி லைப் | - | - | - | - | - | - |
| எல்ஐசி | (133,772) | - | (133,772) | (240,571) | - | (240,571) |
| எல்ஓஎல்சி ஜென. | - | 181,870 | 181,870 | - | 730,806 | 730,806 |
| எல்ஓஎல்சி லைப் | (263,142) | - | (263,142) | 145,948 | - | 145,948 |
| எம்பிஎஸ்எல் | - | (149,235) | (149,235) | 32,115 | (79,206) | (47,091) |
| என்ஐசீஎப்* | - | 1,717,284 | *3,288,840 | - | 3,134,564 | *3,008,485 |
| ஒரியன்ட் | - | 94,742 | 94,742 | - | 169,429 | 169,429 |
| பீப்பிள்ஸ் | - | 847,017 | 847,017 | - | 912,029 | 912,029 |
| சனச லைப் | 249,819 | - | 249,819 | 16,386 | - | 16,386 |
| சனச ஜென. | - | 4,475 | 4,475 | - | 97,599 | 97,599 |
| சொப்ட்லொஜிக் லைப் | 1,094,762 | - | 1,094,762 | 2,603,557 | - | 2,603,557 |
| எஸ்எல்ஐசி | 2,753,607 | 4,396,994 | 7,150,601 | 2,038,641 | 4,541,432 | 6,580,073 |
| யூனியன் லைப் | 2,132,392 | - | 2,132,392 | 1,708,463 | | 1,708,463 |
| **மொத்தம்** | **26,026,618** | **11,736,739** | **39,334,913** | **19,540,181** | **11,129,736** | **30,543,839** |

**பயிர் மற்றும் மீள்காப்புறுதி வியாபாரத்தின் வரிக்கு முன்னரான இலாபம்/ நட்டத் தொகைகளானது முறையே இ.ரூபா 536 மில்லியன் இலாபத்தையும் (2018: இ.ரூபா 229 மில்லியன்) இ.ரூபா 662 மில்லியன் நட்டத்தையும் (2018: இ.ரூபா 1342 மில்லியன்) உள்ளடக்கியுள்ளது.*

**காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதி**

இவ்வருடத்தில் இலாபம் உருவாக்கப்பட்டமையினால் முதன்மையாக உந்தப்பட்டது, காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த பங்குதாரர்களின் நிதியானது 2018இல் இ.ரூபா 195,542 மில்லியனில் இருந்து 7.02% வீதமாக 2019ஆம் ஆண்டில் இ.ரூபா 209,271 மில்லியனால் வளர்ச்சியடைந்தது. எனினும், 2018ஆம் ஆண்டின் (10.61%) வளர்ச்சியுடன் ஒப்பிடும் பொழுது, பல காப்புறுதியாளர்களின் வீழ்ச்சியடைந்த இலாபமானது மேற்குறித்த வளர்ச்சி வீதத்திற்கு இட்டுச் சென்றது.

இவ்வருடத்தினுள் எல்ஓஎல்சி லைப், எம்பிஎஸ்எல், சனச லைப் மற்றும் சனச ஜெனரல் நிறுவனங்களினால் பிரதானமாக மூலதன உட்செலுத்தல் மேற்கொள்ளப்பட்டதனால் அறிவிக்கப்பட்ட மூலதன தொகையானது 2019ஆம் ஆண்டில் ரூபா 43,891 மில்லியனாக காணப்பட்டு 5.94% வீதம் என நடு நிலை வளர்ச்சியைக் கொண்டிருந்த போதிலும், 'கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் ஒதுக்கு' எனப் பேணப்படும் ஒரே தடவை மிகை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் மாற்றமின்றி இ.ரூபா 16,248 மில்லியனாகக் காணப்பட்டது. அதன் விளைவாக சிலிங்கோ லைப், ஏஐஏ லைப் மற்றும் சொப்ட்லொஜிக் லைப் நிறுவனங்களினால் குறிப்பிடத்தக்க வரிக்கு முன்னரான இலாபம் பதிவு செய்யப்பட்டமையினால், 2019 இன் இறுதியில் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த ஏனைய ஒதுக்குகள் மாற்றமின்றி இ.ரூபா 149,132 மில்லயனாகக் காணப்பட்டது.

அட்டவணை 5இல் வெளிப்படுத்தப்பட்டவாறு, கலவைக் காப்புறுதியாளரான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதி உயர் தொகையான இ.ரூபா 60,912 மில்லியனை தனது பங்குதாரர் நிதியாகக் கொண்டிருந்ததுடன், அதனைத் தொடர்ந்த இடங்களை சிலிங்கோ லைப், ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் என்பன பெற்றிருந்தன. கடந்த ஆண்டைப் போலவே பொதுக் காப்புறுதியாளர்களிடையில் சிலிங்கோ ஜெனரல் மற்றும் எலைன்ஸ் ஜெனரல் என்பன அதியுயர் பங்குதாரர் நிதியினைக் கொண்டிருந்தன. எல்ஐசி மற்றும் அமான லைப் நிறுவனங்களினால் ஏற்பட்ட நிலையான நட்டங்களினால் அவர்களுடைய ஒதுக்குகள் மேலும் குறைந்ததுடன் அவை 2019 டிசம்பர் 31ஆம் திகதியில் மிகக் குறைந்த பங்குதாரர் நிதியினை அறிக்கையிட்டன.

**அட்டவணை 5**
**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதிகள்**

| காப்புறுதியாளர் | 2018(அ) | | | | 2019(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா'000) | % | எழுதப்பட்ட மூலதனம் (இ.ரூபா'000) | கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் ஒதுக்கு (இ.ரூபா'000) | மொத்த ஏனைய ஒதுக்குகள் (இ.ரூபா'000) | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் | % |
| ஏஐஏ லைப் | 18,698,864 | 9.56 | 511,922 | 6,080,848 | 14,048,613 | 20,641,383 | 9.86 |
| எலைன்ஸ் ஜென. | 11,114,237 | 5.68 | 8,619,972 | - | 1,377,284 | 9,997,256 | 4.78 |
| எலைன்ஸ் லைப் | 1,325,815 | 0.68 | 739,624 | - | 862,259 | 1,601,883 | 0.77 |
| அமானா ஜென. | 1,935,856 | 0.99 | 2,124,823 | - | (383,044) | 1,741,779 | 0.83 |
| அமானா லைப் | 547,777 | 0.28 | 580,033 | - | (10,473) | 569,560 | 0.27 |
| ஆர்பிகோ | 1,432,318 | 0.73 | 675,565 | - | 840,319 | 1,515,884 | 0.72 |
| சிலிங்கோ ஜென. | 11,145,323 | 5.70 | 500,200 | - | 11,197,392 | 11,697,592 | 5.59 |
| சிலிங்கோ லைப். | 26,425,582 | 13.51 | 500,001 | 3,456,184 | 27,535,891 | 31,492,076 | 15.05 |
| கொன்டினன்டல் | 1,731,618 | 0.89 | 750,000 | - | 1,251,919 | 2,001,919 | 0.96 |
| கோப்பரட்டிவ் ஜென. | 2,360,158 | 1.21 | 1,515,757 | - | 1,086,282 | 2,602,039 | 1.24 |
| கோப்லைப் | 785,213 | 0.40 | 544,260 | - | 348,966 | 893,226 | 0.43 |
| பியார்பர்ஸ்ட் | 5,138,088 | 2.63 | 3,131,949 | - | 2,531,469 | 5,663,418 | 2.71 |
| எச்என்பி லைப் | 5,515,881 | 2.82 | 1,171,875 | 381,156 | 4,724,964 | 6,277,995 | 3.00 |
| என்என்பி ஜென. | 1,378,434 | 0.70 | 1,150,000 | - | 436,349 | 1,586,349 | 0.76 |
| ஜனசக்தி லைப் | 9,321,040 | 4.77 | 4,853,752 | 1,795,829 | 2,986,706 | 9,636,286 | 4.60 |
| எல்ஐசி | 460,893 | 0.24 | 500,000 | - | (207,022) | 292,978 | 0.14 |
| எல்ஓஎல்சி ஜென. | 1,293,985 | 0.66 | 700,000 | - | 1,164,891 | 1,864,891 | 0.89 |
| எல்ஓஎல்சி லைப் | 720,022 | 0.37 | 1,250,000 | 256,134 | (181,375) | 1,324,760 | 0.63 |
| எம்பிஎஸ்எல் | 419,141 | 0.21 | 2,280,022 | - | (738,745) | 1,541,277 | 0.74 |
| என்ஐசீஎப் | 6,995,501 | 3.58 | - | - | 6,153,313 | 6,153,313 | 2.94 |
| ஓரியன்ட் | 768,777 | 0.39 | 825,000 | - | 61,154 | 886,154 | 0.42 |
| பீப்பிள்ஸ் | 3,375,147 | 1.73 | 1,350,000 | - | 2,305,436 | 3,655,436 | 1.75 |
| சனச லைப் | 864,300 | 0.44 | 1,044,844 | - | 118,217 | 1,163,061 | 0.56 |
| சனச ஜென | 254,317 | 0.13 | 508,995 | - | 168,179 | 677,174 | 0.32 |
| சொப்ட்லொஜிக் லைப் | 6,670,963 | 3.41 | 1,062,500 | 798,004 | 6,358,415 | 8,218,919 | 3.93 |
| எஸ்எல்ஐசி | 61,191,386 | 31.29 | 6,000,000 | 98,237 | 54,813,348 | 60,911,585 | 29.11 |
| யூனியன் லைப் | 13,671,688 | 6.99 | 1,000,000 | 3,381,934 | 10,280,968 | 14,662,903 | 7.01 |
| **மொத்தம்** | **195,542,325** | **100** | **43,891,092** | **16,248,326** | **149,131,676** | **209,271,094** | **100** |

*குறிப்பு: கணக்காய்வு சீராக்கத்துடன் 2018 இல் வெளியிடப்பட்ட எண்கள் திருத்தப்பட்டன (பல காப்புறுதியாளர்களின் மறை வருமான வரி செலவுகள்/வருமான வரி மீளளிப்புகள் காரணமாக ஏற்பட்டவையாகும்).*

**காப்புறுதியாளர்களின் கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் பகுப்பாய்வு**

நாடு முழுவதிலும் அவற்றினுடைய கிளைகளை பரப்புவதன் ஊடாக காப்புறுதியாளர்களினால் அதிக காப்புறுதி பூட்கையாளர்களுக்கு வினைத்திறனுடன் சேவைகளை வழங்குவதற்கு இயலுமாகின்றது. எனினும், இவ்வருடத்தினுள், சில பிரதான காப்புறுதியாளர்கள் தங்களுடைய கிளைகளை மீள்கட்டமைப்பு செய்ததமையினால் 2018ஆம் ஆண்டு 2147 ஆக இருந்த கிளைகளின் எண்ணிக்கையானது 2019ஆம் ஆண்டு 2012 ஆக குறைந்தது. 2019இல் நாட்டின் அதிக பூட்கையாளர்களைக் கொண்டுள்ள மேல் மாகாணத்திலே அதிக எண்ணிக்கையான 653 கிளைகள் உள்ளன. மொத்தக் கிளைகளில் 1,119 நீண்ட கால காப்புறுதிக் கிளைகளும், 749 பொதுக் காப்புறுதிக் கிளைகளும் 144 கலவைக் காப்புறுதிக் கிளைகளும் உள்ளடங்குகின்றன.

2018ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 19,437 தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு சிறிய வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ள தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை 19,830 ஆகும். எனினும், 60% வீதத்திற்கு அதிகமான தொழில்வாய்ப்புகள் மேல் மாகாணத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளது. மொத்த தொழில்வாய்ப்புகளில் 51% வீதத்தை பொதுக் காப்புறுதிக் கம்பனிகளும் 34% வீதத்தை நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளும் 15% வீதத்தை கலவைக் காப்புறுதிக் கம்பனிகளும் கொண்டிருந்தன.

பல காப்புறுதியாளர்களினால் அவர்களைக் கையாளுதல் சவாலான இலக்காகக் காணப்பட்ட போதிலும், காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் வெற்றியையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் பிரதான காரணியாக வினைத்திறனான முகவர் படையணி கருதப்படுகின்றது. குறைந்த செயலாற்றுகை, காப்புறுதிப் பூட்கையாளர்களிடமிருந்து சேகரிக்கும் நிதியினை முறையற்றுக் கையாளுதல் மற்றும் ஏனைய நிதியியல் மோசடிகள் காரணமாக குறிப்பிடத்தக்க முகவர்களை காப்புறுதிக் கம்பனிகள் இடைநிறுத்திய போதிலும், புதிய காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை வருடத்திற்கு வருட அடிப்படையில் அதிகரித்துள்ளதைக் காண முடியும். அதன் விளைவாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் பணிபுரியும் முகவர்களின் மொத்த எண்ணிக்கை 44,904 இருந்து 44,998ஆக சற்றுக் அதிகரித்துள்ளது. எனினும் 2019ஆம் ஆண்டு ஸொப்ட்லொஜிக் லைப், ஆர்ப்பிகோ, எல்ஓஎல்சி லைப் மற்றும் எச்என்பி லைப் போன்ற பல காப்புறுதியாளர்கள் அவர்களுடைய முகவர் வலையமைப்பை விரிவுபடுத்தினர். கடந்த ஆண்டைப் போலவே, மேல் மாகாணமும் நீண்ட கால காப்புறுதி வியாபாரமும் 2019ஆம் ஆண்டில் அதிகூடிய எண்ணிக்கையாக மொத்த முகவர்களின் எண்ணிக்கையில் 40% வீதத்தைக் கொண்டிருந்தன.


**அட்டவணை 6**

**31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை**

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | ஊழியர்களின் எண்ணிக்கை | | காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2018 | 2019 | 2018 | 2019 |
| மத்திய மாகாணம் | 204 | 211 | 1,070 | 1,158 | 3,768 | 4,036 |
| கிழக்கு மாகாணம் | 166 | 134 | 682 | 682 | 2,272 | 2,151 |
| வட மத்திய மாகாணம் | 144 | 146 | 753 | 725 | 2,257 | 2,478 |
| வட மேல் மாகாணம் | 233 | 221 | 1,151 | 1,263 | 4,497 | 4,212 |
| வட மாகாணம் | 162 | 144 | 622 | 613 | 2,683 | 2,805 |
| சப்பரகமுவ மாகாணம் | 160 | 171 | 866 | 872 | 3,166 | 3,347 |
| தென்மாகாணம் | 274 | 250 | 1,554 | 1,559 | 5,015 | 4,848 |
| ஊவா மாகாணம் | 124 | 122 | 632 | 634 | 2,204 | 2,430 |
| மேல் மாகாணம் | 680 | 670 | 12,107 | 12,335 | 19,042 | 18,691 |
| **மொத்தம்** | **2,147** | **2,069** | **19,437** | **19,841** | **44,904** | **44,998** |

**விளக்கப்படம் 4**

**2019 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ள கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை**




### காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகம்

கடந்த சில வருடங்களாக, உலகம் முழுவதிலும் காப்புறுதிக் கைத்தொழிற்துறைக்கு தொழில்நுட்ப அபிவிருத்திகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், இலங்கையும் அதே அளவு தாக்கத்தை அனுபவித்துள்ளது. வாடிக்கையாளர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் இணையத்தைப் பயன்படுத்துவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளதுடன், காப்புறுதியாளர்களுக்கும் அவர்களுடைய காப்புறுதி பூட்கைகளை விநியோகிப்பதற்கு ஒன்லைன் தளங்கள், இணையதளங்கள், கைத்தொலைபேசி அப்பிளிகேஷன்கள் மற்றும் சமூக ஊடகங்கள் என்பன கவர்ச்சிகரமான ஊடகமாக மாறியுள்ளது. இந்த விடயங்கள் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண உருவாக்கத்திற்கு சமூக ஊடகம் உள்ளடங்கலாக கைத்தொலைபேசி மற்றும் இணையத்தினால் (கீழ்வரும் 5ம் விளக்கப்படத்தில் ‘நேரடி’ எனும் வகைப்படுத்திலின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது) வழங்கப்பட்ட பங்களிப்பின் காரணமாக இந்த விடயங்கள் நேர்மைறை வாய்ப்புகளை வெளிப்படுத்தின.

விளக்கப்படம் 5இல் காட்டியவாறு, 2019இல் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 85.72% வீத வழங்கலை பதிவுசெய்து, முகவர்கள் தங்கள் ஆக்கிரமிப்பினை நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் தொடர்ந்தனர். விநியோக ஊடகத்தின் இன்னோர் வடிவமான பாங்கசூரன்ஸ்சும் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 7.14% வீதத்தில் இருந்து 8.18% வீதத்திற்கு நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் வளர்ந்தது. தவணைக் கட்டண வளர்ச்சியின் அவர்களுடைய போட்டித்தன்மையை உயர்த்துவதற்கான நோக்கத்துடன் இவ்வருடம் சில வங்கிகளிடமிருந்து விசேடமாக பாங்கசூரன்ஸ் உரிமைகளை சில நீண்டகால காப்புறுதி நிறுவனங்கள் கையகப்படுத்தினர். மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமான உருவாக்கத்திற்கு பொதுக் காப்புறுதி வியாபாரத்தைச் சேர்நத முகவர்கள், தரகர்கள், சந்தைப்படுத்தல் அலுவலர்கள் போன்ற விசேட விற்பனைப் படையினர் மற்றும் நேரடி வியாபாரம் என்பன முறையே 23.69%, 22.81%, 22.15% மற்றும் 21.07% வீதம் எனும் சமமான பங்களிப்பினை வழங்கியிருந்தன. நேரடி வியாபாரம் பிரதானமாக அதனுடைய காப்பறுதி வகைகளின் தன்மை காரணமாக அரசாங்க காப்புறுதித் திட்டங்கள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஏனைய தவணைக் கட்டணங்களை உள்ளடக்கியிருந்ததுடன் மேலும் வருகை தரும் வாடிக்கையாளர்கள், கைத்தொலைபேசி பிரயோகங்கள் மற்றும் இணையத்தையும் உள்ளடக்கியிருந்தது. பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக 2019ஆம் ஆண்டில் 6.85% (2018:4.17%) வீதத்தை அறிக்கையிட்ட அந்த காப்புறுதியாளருக்கு சொந்தமான அதே குழுவினுள் கம்பனிகளிடமிருந்து உருவாக்கப்படும் எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் விகிதத்தை தொடர்புடைய/ குழுமக் கம்பனிகள் வெளிப்படுத்தின.

**விளக்கப்படம் 5**

**காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகங்கள்**




| | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|
| முகவர்கள் | 86.94 | 25.01 | 85.72 | 23.69 |
| தரகர்கள் | 1.01 | 20.02 | 1.30 | 22.81 |
| முகவர்கள் தவிர்ந்த நிறைவேற்று விற்பனைப் படை | 1.13 | 25.24 | 1.26 | 22.15 |
| நேரடி | 1.80 | 18.93 | 1.92 | 21.07 |
| வங்கி காப்புறுதி | 7.14 | 2.65 | 8.18 | 2.79 |
| தொடர்புடைய/ குழுக் கம்பனிகள் | 1.74 | 6.17 | 1.41 | 6.85 |
| ஏனையவை | 0.24 | 1.98 | 0.21 | 0.64 |

*குறிப்பு: இந்த வருடத்தில் வகைப்படுத்தலில் மேற்க்கொண்ட காரணத்தினால் 2018ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வீதங்கள் திருத்தப்பட்டுள்ளன.*

### நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

#### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

2019ஆம் ஆண்டினுள், முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமான இ.ரூபா 88,781 மில்லியனுடன் 10.57% வீத நடுநிலையான வளர்ச்சியைப் பெற்று நீண்ட கால காப்புறுதி கைத்தொழிற்துறையினுள் குறிப்பிடக்கூடிய நிகழ்வுகள் ஏற்பட்டன. 2019இல் நாட்டில் நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் இணைந்து பொருளாதார மற்றும் அரசியல் வீழ்ச்சிகளைச் சந்தித்து, உயர்ந்தளவில் சவாலான சூழ்நிலையில் வாடிக்கையாளர்களின் மாறும் தேவைகளுக்கு தரமான சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு மேம்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு செயன்முறையினால் ஆயுள் காப்புறுதித்துறை நிலையான வளர்ச்சியைப் பெற்றிருந்தது. நீண்டகால காப்புறுதிக் கைத்தொழிற்துறை 13 நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளையும் 02 கலவைக் காப்புறுதியாளர்களையும் இணைத்து மிகவும் போட்டித்தன்மையுள்ள சந்தையைத் தொழிற்படுத்தியது, நான்கு கம்பனிகள் வெளிநாட்டுக் காப்புறுதிக் கம்பனிகளுடன் சேர்ந்தியங்கின.

எனினும், இந்த வருடம் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாகுதல்கள் காரணமாக நிலவிய நிட்சயமில்லாத் தன்மை மற்றும் தேங்கிய பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டின் செயலாற்றுகை வீழ்ச்சியடைந்ததுடன் கடந்த வருடத்தின் வளர்ச்சியான 12.19% (இ.ரூபா 80,294 மில்லியன்) வீதத்தில் இருந்து சுருங்கிய எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியை 2019ஆம் ஆண்டில் வெளிப்படுத்தியது. மேலும், 2015ஆம் ஆண்டில் இருந்து, ஆயுள் காப்புறுதிக்

கைத்தொழிற்துறை வீழ்ச்சியடைந்து வரும் எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியைப் பதிவிடுகின்றதுடன், மீளாய்வுக்குட்பட்ட வருடமானது மிகக்குறைந்த வளர்ச்சியாகும். எனினும், 2015 இல் இருந்து 2019 வரையான காலப்பகுதியில் எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் மேம்படுத்தப்பட்ட பெறுமதியானது 65% வீதத்தை சாட்சிப்படுத்தியது.

அத்துடன், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் மட்டமானது தொடர்ந்தும் தட்டையான விளைவினையே பிரதிபலிக்கின்றது. துறையின் விரிவாக்கத்திற்கான சந்தர்ப்பங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதன் ஊடாக கைத்தொழிற்துறை வளர்ச்சியடைவதற்கான சாத்தியமான சூழ்நிலை உள்ளது. இன்சூர்-டெக் போன்ற புதிய தொழில்நுட்பங்களை இணைத்துக் கொள்ளும் புதிய தொழில்நுட்பமானது வாடிக்கையாளரின் கேள்வியினை விரும்பும் சமூக பொருளாதார மற்றும் சுற்றாடல் காரணிகள் புரட்சிக்கு சான்றாவதுடன் நீண்ட கால காப்புறுதியாளர்களுக்கான புதிய அணுகுமுறையாக இருக்கும். எனினும், காப்புறுதியாளர்களின் நீண்ட கால நிதியியல் எதிர்பார்ப்பானது 2019 டிசம்பர் மாதத்தில் ஆரம்பித்த கோவிட்-19 நோய்தொற்று பரவல் காரணமாக தாக்கமுற்றது.

அட்டவணை 7 நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் கம்பனி ரீதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கினை விளக்குகின்றது.

**அட்டவணை 7**

**கம்பனி ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2015 | | 2016 | | 2017 | | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ லைப் | 8,433,333 | 15.71 | 10,103,915 | 15.92 | 11,510,581 | 16.08 | 12,739,351 | 15.87 | 13,848,283 | 15.60 |
| எலைன்ஸ் லைப் | 919,144 | 1.71 | 1,040,269 | 1.64 | 1,178,817 | 1.65 | 1,301,254 | 1.62 | 1,403,858 | 1.58 |
| அமான லைப் | 928,294 | 1.73 | 820,727 | 1.29 | 792,174 | 1.11 | 827,948 | 1.03 | 851,293 | 0.96 |
| ஆர்பிகோ | 482,447 | 0.90 | 745,386 | 1.17 | 1,038,085 | 1.45 | 1,387,432 | 1.73 | 1,635,336 | 1.84 |
| சிலிங்கோ லைப். | 13,456,828 | 25.06 | 15,027,600 | 23.67 | 15,765,484 | 22.03 | 17,812,774 | 22.18 | 18,718,553 | 21.08 |
| கோப்லைப் | 494,598 | 0.92 | 466,997 | 0.73 | 626,972 | 0.88 | 619,881 | 0.77 | 774,601 | 0.87 |
| எச்என்பி லைப் | 2,788,715 | 5.19 | 3,554,078 | 5.60 | 3,963,642 | 5.54 | 4,420,513 | 5.51 | 5,175,044 | 5.83 |
| ஜனசக்தி லைப் | 2,550,782 | 4.75 | 2,943,963 | 4.64 | 2,902,873 | 4.06 | 3,008,842 | 3.75 | 3,511,660 | 3.96 |
| எல்ஐசி | 386,885 | 0.72 | 473,867 | 0.75 | 582,114 | 0.81 | 522,698 | 0.65 | 598,897 | 0.67 |
| எல்ஓஎல்சி லைப் | 1,209,578 | 2.25 | 1,896,558 | 2.99 | 2,467,166 | 3.45 | 2,610,785 | 3.25 | 2,682,522 | 3.02 |
| எம்பிஎஸ்எல் | 203,235 | 0.38 | 235,533 | 0.37 | 123,732 | 0.17 | 65,839 | 0.08 | 54,757 | 0.06 |
| சனச லைப் | 311,434 | 0.58 | 367,637 | 0.58 | 454,056 | 0.62 | 521,193 | 0.65 | 527,464 | 0.59 |
| எஸ்எல்ஐசி | 10,470,079 | 19.50 | 11,893,640 | 18.74 | 2,517,119 | 17.49 | 13,205,802 | 16.45 | 14,820,025 | 16.69 |
| சொப்ட்லொஜிக் லைப் | 4,091,042 | 7.62 | 5,635,701 | 8.88 | 7,530,935 | 10.52 | 10,005,733 | 12.46 | 12,531,283 | 14.11 |
| யூனியன் லைப் | 6,964,390 | 12.97 | 8,270,751 | 13.03 | 10,117,630 | 14.14 | 11,243,915 | 14.00 | 11,647,757 | 13.12 |
| **மொத்தம்.** | **53,690,783** | **100** | **63,476,622** | **100** | **71,571,380** | **100** | **80,293,960** | **100** | **88,781,332** | **100** |
| **வளர்ச்சி வீதம் (%)** | **20.40** | | **18.23** | | **12.75** | | **12.19** | | **10.57** | |

கடந்த ஆண்டினைப் போலவே, 2019இல் சிலிங்கோ லைப் நிறுவனத்தினால் இ.ரூபா 18,719 மில்லியன் (2018: இ.ரூபா 17,813 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உருவாக்கியதன் மூலம் சந்தை முன்னணியாளர் எனும் நிலையை தக்க வைத்துக்கொள்ள முடிந்ததுடன், இது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 21.08% வீதமாகும். எனினும், ஏனைய காப்புறுதிக் கம்பனிகளின் போட்டி அதிகரித்தமையினால் 2015 இல் இருந்து 2019 வரையான காலப்பகுதியில் அவர்களின் பங்கு 3.98% வீதத்தினால் அதிகரித்தது. 2019இன் இறுதியில் சிலிங்கோ லைப் நிறுவனத்தின் சந்தைப் பங்கு 1.1% வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏஐஏ லைப் முந்தைய ஆண்டைப் போலவே 2019ஆம் ஆண்டில் முறையே இ.ரூபா 14,820 மில்லியன் (2018: 13,206 மில்லியன்) மற்றும் இ.ரூபா 13,848 மில்லியனைத் (2018: இ.ரூபா 12,739 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டதன் ஊடாக சந்தைப் பங்கில் முறையே 16.69% மற்றும் 15.60% வீதத்தைப் பெற்று இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொண்டன. ஏஐஏ லைப் நிறுவனத்தின் சந்தைப் பங்கு 0.27% வீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு 0.24% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது. எனினும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2015 இருந்து 2019 வரையான காலப்பகுதியினுள் 2.18% வீத சந்தைப் பங்கினை இழந்துள்ளது. இந்த மூன்று கம்பனிகளும் இணைந்து மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்திற்கு வழங்கிய பங்களிப்பானது 2018ஆம் ஆண்டில் 54.50% வீதத்தில் இருந்து 2019ஆம் ஆண்டு 53.37% வீதமாக சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த பல வருடங்களாக எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு நான்காவது அதிக பங்களிப்பினை வழங்கிய யூனியன் லைவ் நிறுவனத்தைப் பின்தள்ளி ஸொப்ட் லொஜிக் லைப் 2019ஆம்

ஆண்டில் இ.ரூபா 12,531 மில்லியனை (2018: 10,006 மில்லியன் எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டதன் ஊடாக சந்தைப் பங்கில் 14.11% (2018:12.46%) வீதத்தைப் பெற்று நான்காவது இடத்தைப் பெற்றது. யூனியன் லைப் நிறுவனம் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 11,648 மில்லியனையும் (2018: இ.ரூபா 11,224 மில்லியன்) சந்தைப் பங்காக 13.12% (2018: 14.00%) வீதத்தையும் பதிவுசெய்தது.


கைத்தொழிற்துறையின் வளர்ச்சி வீதத்தைப் பார்த்தால், தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் சந்தைப்படுத்தல் உபாயமார்க்கத்தைக் கடைப்பிடிப்பதன் காரணமாக விரைவாக வளர்ந்து வரும் கம்பனிக்காக காணப்படும் ஸொப்ட் லொஜிக் கடந்த ஐந்து ஆண்டுகளில் 14.1% வீத பங்குச் சந்தையை அடைவதற்கு அதன் பங்கினை இரண்டு மடங்காக அதிகரித்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 ஜுன் 2017இல் இருந்து 2 ஏப்பிரல் 2019 வரையான காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த எம்பிஎஸ்எல் தவிர்ந்த ஏனைய அனைத்து நீண்ட கால காப்புறுதியாளர்களும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் வளர்ச்சியை அறிக்கையிட்டன. மேலும், 2018ஆம் ஆண்டுக்கு எதிராக 2019ஆம் ஆண்டில் முறையே 25% மற்றும் 15% வளர்ச்சியை கோப்லைப் மற்றும் எல்ஜசி நிறுவனங்களிடம் காணக்கூடியதாக இருந்தது. மேலும், எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 2018இல் பதிவு செய்யப்பட்ட 34% மற்றும் 15% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 18% மற்றும் 1% வீத வீழ்ச்சியை ஆர்ப்பிகோ மற்றும் சனச லைப் நிறுவனங்கள் முனைவுறுத்தின.

விளக்கப்படம் 6 ஒவ்வொரு நீண்ட கால காப்புறுதியாளர்களினதும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் சந்தைப் பங்கினை விளக்குகின்றது.

**விளக்கப்படம் 6**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் கம்பனி ரீதியான சந்தைப் பங்குகள் - 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கான முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**


2015இல் இருந்து 2019 வரையான காலப்பகுதி வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு பங்களிப்பு செய்த முதல் ஐந்து பங்களிப்பாளர்களையும் ஏனைய காப்புறுதியாளர்களையும் விளக்கப்படம் 7 விளக்குகின்றது.

நீண்ட கால காப்புறுதி கைத்தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் இ.ரூபா 71,566 மில்லியன் பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பெற்று 80.60% வீதத்தைப் பதிவு செய்கின்ற அதேவேளையில், ஏனைய 10 காப்புறுதியாளர்களும் இ.ரூபா 17,215 மில்லியனை (2018:இ.ரூபா 15,286 மில்லியன்) பெற்று 19.38% வீதத்தைப் பதிவு செய்தனர். 2019 இல் சிலிங்கோ லைப், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஏஜஏ லைப் ஸொப், லொஜிக் லைப் மற்றும் யூனியன் லைப் என்பன நீண்ட கால காப்புறுதி சந்தைப் பங்கில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். கடந்த ஆண்டு ஐந்தாம் இடத்தில் இருந்த ஸொப்ட்லொஜிக் லைப் 2019ஆம் ஆண்டு நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

ஆதிக்க ஆட்டக்காரரான, சிலிங்கோ லைப் பல வருடங்களாக முதன்மை தானத்தில் இருந்து வாடிக்கையாளர்களுக்கு சேவையை வழங்கி வருகின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சிலிங்கோ லைப் நிறுவனத்தின் சந்தைப் பங்கு வீழ்ச்சியடைந்து வருகின்றது. இரண்டாவது பங்களிப்பாளரான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது சந்தைப் பங்கினை 0.24% வீதத்தினால் சற்று அதிகரித்துக் கொண்டுள்ளது. மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களை வகிக்கும் ஏஜஏ லைப் மற்றும் யூனியன் லைப் என்பனவற்றின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் சந்தை பங்கில் தொடர்ச்சியாக முன்னேற்றத்தை அடைந்து வரும் ஸொப்ட்லொஜிக் லைப் நான்காம் இடத்தைப் பெற்றும் சந்தைப் பங்கில் 14.11% வீதத்தைக் கொண்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏனைய காப்புறுதியாளர்களின் மொத்த சந்தைப் பங்கினை விளக்கப்படம் 7 காட்டுகின்றது. அதற்கமைவாக, கடந்த ஐந்து வருடங்களில் 80% வீதமான சந்தைப் பங்குகள் முதல் ஐந்து பங்களிப்பாளர்களிடமே காணப்படுகின்றன.

**விளக்கப்படம் 7**

**2015இல் இருந்து 2019 வரை முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | சிலிங்கோ லைப் | எஸ்எல்ஐசி | ஏஐஏ லைப் | ஸொப்ட்லொஜிக் லைப் | யூனியன் லைப் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2015 | 25.06 | 19.50 | 15.71 | 7.62 | 12.97 | 19.14 |
| 2016 | 23.67 | 18.74 | 15.92 | 8.88 | 13.03 | 19.76 |
| 2017 | 22.03 | 17.49 | 16.08 | 10.52 | 14.14 | 19.74 |
| 2018 (அ) | 22.18 | 16.45 | 15.87 | 12.46 | 14.00 | 19.04 |
| 2019 ((ஆ) | 21.08 | 16.69 | 15.60 | 14.11 | 13.12 | 19.39 |

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதிக்கு செலுத்திய தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்துக்கொள்ளல் வீதம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 24.08% (2018: 25.61%) வீத பங்குபற்றல் வியாபாரத்தையும், 36.52% (2018: 38.51%) வீத பங்குபற்றாத வியாபாரத்தையும், 37.27% (2018: 33.32%) வீத யுனிவேர்சல் லைபையும் 2.13% (2018: 2.57%) வீத இணைக்கப்பட்ட நீண்ட கால வியாபாரத்தையும் உள்ளடக்கியிருந்தது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மொத்த பங்குபற்றல் வியாபாரத்தில் 47% வீதம் பெறுமதியான பங்குபற்றல் வியாபாரத்தை தன்வசம் கொண்டுள்ளது. 2019இல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சிலிங்கோ லைப் மற்றும் ஸொப்ட்லொஜிக் லைப் என்பன மொத்த பங்குபற்றல் வியாபாரத்தில் 92% வீத ஒன்று சேர்த்த பங்களிப்பினை வழங்கின. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.95% வீதத்தினால் மேம்படுத்தப்பட்ட யுனிவேர்சல் லைப் வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் பங்களிப்பினால் நீண்ட கால காப்புறுதியாளர்களினால் யுனிவேர்சல் லைப் வியாபாரத்தின் போக்கு முன்னோக்கி கொண்டு செல்லப்படுகின்றது. இணைக்கப்பட்ட நீண்ட கால காப்புறுதிப் பண்டங்களின் பங்களிப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றதுடன் 2019இல் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தின் பெறுமதி இ.ரூபா 1,892 ஆகும்.

அட்டவணை 8இல் காட்டப்பட்டவாறு, ஆயுட் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த தக்க வைத்தல் வீதம் 95.84 (2018:95.81%) ஆகும். மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் அறிக்கையிடப்பட்ட வளர்ச்சிக்கு ஒத்திருக்கும் பங்குபற்றாத வியாபாரத்திலிருந்தான மொத்த ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் மீள்காப்புறுதியாளர்களுக்கு வழங்கிய தவணைக் கட்டணம், 10% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 8**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதிக்கு செலுத்திய தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்துக்கொள்ளல் வீதம் - நீண்ட கால காப்புறுதி வியாபரம்**

| வகுப்பு | 2017 | | | 2018 (அ) | | | 2019 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்க வைத்தல் வீதம் (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்க வைத்தல் வீதம் (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்கவைத்தல் வீதம் (%) |
| பங்குபற்றல் | 19,187,271 | 148,134 | 99.23 | 20,560,064 | 152,573 | 99.26 | 21,380,056 | 151,684 | 99.29 |
| பங்குபற்றாத | 50,327,490 | 2,661,364 | 94.71 | 30,922,561 | 2,214,357 | 92.84 | 32,422,036 | 2,984,257 | 90.80 |
| யுனிவேர்சல் லைப் | | | | 26,751,609 | 900,185 | 96.64 | 33,087,161 | 473,569 | 98.57 |
| அலகு இணைக்கப்பட்டது | 2,056,618 | 59,872 | 97.09 | 2,059,725 | 98,671 | 95.21 | 1,892,079 | 84,394 | 95.54 |
| மொத்தம் | **71,571,380** | **2,869,370** | **95.99** | **80,293,960** | **3,365,786** | **95.81** | **88,781,332** | **3,693,903** | **95.84** |

### நீண்ட கால காப்புறுதி வியாபாரங்களின் சொத்துக்கள்

அட்டவணை 9இல் வெளிப்படுத்தியவாறு, 31 டிசம்பர் 2018இல் பெற்றுக்கொண்ட இ.ரூபா 430,759 மில்லியன் மற்றும் 9.65% வீத வளர்ச்சியைப் பின்தள்ளி 2019 டிசம்பர் 31ஆம் திகதியன்று நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துகளாக இ.ரூபா 485,723 மில்லியனைப் பதிவு செய்து குறிப்பிடக்கூடிய வளர்ச்சியான 12.76% வீதத்தை வெளிப்படுத்தியது.

நிதியியல் முதலீகளில் ஏற்பட்ட அதிகரிப்பே மொத்த சொத்துக்களின் வளர்ச்சிக்கு பிரதானமாக இட்டுச் சென்றது. மேலும், 01 ஜனவரி 2019ஆம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் எஸ்எல்எப்ஆர்எஸ் 16இனை இணைத்துக் கொண்டதன் ஊடாக ஐந்தொகையில் குத்தகை சொத்துக்களின் மேலதிக பயன்படுத்தலை அங்கீகரிப்பதற்கு காப்புறுதியாளர்களை அனுமதித்தது.


நீண்ட கால காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்கள் இரண்டு கம்பனிகளினால் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சிலிங்கோ லைப்) கட்டியேழுப்பப்பட்டுள்ளதுடன், அது மொத்த நீண்ட கால காப்புறுதிக் கைத்தொழிற்துறை சொத்துக்களின் 56.53% வீதமாகும். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சிலிங்கோ லைப் என்பன முறையே இ.ரூபா 141,097 மில்லியனையும் மற்றும் இ.ரூபா 133,459 மில்லியனையும் தன் வசம் வைத்துக்கொண்டு மற்றும் மொத்த சொத்துக்களில் முறையே 29.05% மற்றும் 27.48% வீதத்தைக் கொண்டிருந்தன. ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் என்பன முறையே 12.76% (இ.ரூபா 61,973 மில்லியன்) மற்றும் 11.37% (இ.ரூபா 55,249 மில்லியன்) பெறுமதியான சொத்துக்களைக் கொண்டு மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. அதற்கமைவாக, இந்த நான்கு நிறுவனங்களும் இணைந்து மொத்த நீண்ட கால காப்புறுதி சொத்துக்கள் 80% வீதமாகும்.

நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் ஜனசக்தி லைப், எச்என்பி லைப் மற்றும் ஸொப்ட் லைப் என்பன ஐந்தாம், ஆறாம் மற்றும் ஏழாம் இடங்களைத் தக்கவைத்துக் கொண்டன. அனைத்துக் கம்பனிகளினாலும் இவ்வருடத்தில் அவற்றின் மொத்த சொத்துக்களை மேம்படுத்திக் கொள்ள முடிந்ததுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எம்பிஎஸ்எல், எல்ஓஎல்சி லைப், ஆர்ப்பிகோ, கோப்லைப் மற்றும் எலைன்ஸ் லைப் என்பன 20% வீதத்திற்கும் அதிகமான அதிகரிப்பை அடைந்திருந்தன. விளக்கப்படம் 8 31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் கம்பனி ரீதியான மொத்த சொத்துக்களின் பகுப்பாய்வைக் காட்டுகின்றது.

**அட்டவணை 9**
**மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நீண்ட கால காப்புறுதி (இ.ரூபா '000) | % | நீண்ட கால காப்புறுதி (இ.ரூபா '000) | % |
| ஏஐஏ லைப் | 54,405,486 | 12.63 | 61,973,401 | 12.76 |
| எலைன்ஸ் லைப் | 5,256,584 | 1.22 | 6,314,300 | 1.30 |
| அமான லைப் | 2,877,575 | 0.67 | 2,919,019 | 0.60 |
| ஆர்பிகோ | 2,996,478 | 0.70 | 3,719,090 | 0.77 |
| சிலிங்கோ லைப். | 118,059,390 | 27.41 | 133,458,907 | 27.48 |
| கோப்லைப் | 2,502,305 | 0.58 | 3,054,977 | 0.63 |
| எச்என்பி லைப் | 18,678,274 | 4.34 | 22,152,378 | 4.56 |
| ஜனசக்தி லைப் | 20,921,406 | 4.86 | 22,508,304 | 4.63 |
| எல்ஐசி | 2,766,230 | 0.64 | 3,110,665 | 0.64 |
| எல்ஓஎல்சி லைப் | 4,683,738 | 1.09 | 5,985,833 | 1.23 |
| எம்பிஎஸ்எல் | 850,132 | 0.20 | 1,287,877 | 0.16 |
| சனச லைப் | 1,893,220 | 0.44 | 2,209,112 | 0.45 |
| எஸ்எல்ஐசி | 128,418,012 | 29.81 | 141,097,026 | 29.05 |
| சொப்ட்லொஜிக் லைப் | 17,332,967 | 4.02 | 20,682,874 | 4.26 |
| யூனியன் லைப் | 49,116,729 | 11.40 | 55,249,152 | 11.37 |
| **மொத்தம்** | **430,758,524** | **100** | **485,722,913** | **100** |

**விளக்கப்படம் 8**
**31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று கம்பனி மொத்த சொத்துக்களின் பகுப்பாய்வு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**



### 31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 10 மற்றும் விளக்கப்படம் 9 என்பன 31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று வேறுபட்ட சொத்துக்களின் வகைப்படுத்தலுக்கிடையில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள் தொடர்பான விரிவான தகவல்களை வழங்குகின்றன.

கடந்த ஆண்டுகளைப் போலவே, நீண்ட கால காப்புறுதியாளர்கள் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலும் திரவத்தன்மையைப் பேணுவதற்காகவும் தங்கள் முதலீடுகளை அரசாங்க கடன் பிணையங்களில் முதலீடு செய்தனர். அதனால், அரசாங்க கடன் பத்திரங்களின் பெறுமதி இ.ரூபா 193,385 மில்லியன் (2018: இ.ரூபா 177,086 மில்லியன்) ஆவதுடன், தொடர்ந்தும் பிரதான பங்கினைக் கொண்டிருந்ததுடன், மொத்த சொத்துக்களில் இது 39.81% வீதமாகும். எனினும் 2018ஆம் ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த சொத்துக்களில் அரசாங்க பிணையங்களின் பங்கு சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், கூட்டிணைந்த கடன் பத்திரங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் போக்கு 31.43% வீதத்தினால் அதிரித்துள்ளதைக் காண முடிகின்றது. நீண்ட கால காப்புறுதியாளர்களின் இரண்டாவது கவர்ச்சிகரமான முதலீடாக காணப்பட்ட கூட்டிணைந்த கடன் பத்திரங்களின் பெறுமதி 2019இல் இ.ரூபா 106,695 மில்லியனாகவும் (2018:இ.ரூபா 81,181 மில்லியன்) மொத்த சொத்துக்களில் 21.97% (2018:18.85) வீதமாகவும் இருந்தது.

வைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுத் தொகையானது இ.ரூபா 76,097 மில்லியன் (2018: இ.ரூபா 66,853 மில்லியன்) ஆவதுடன், இது மொத்த சொத்துக்களில் 15.67% (2018:15.52%) வீதமாகும். கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வைப்புகளில் காணப்பட்ட அதிகரித்த வளர்ச்சியைப் போலல்லாது (63.13%), ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக வீழ்ச்சியடைந்த வட்டி வீதத்தினால் 2019ஆம் ஆண்டு 13.83% வீத அதிகரிப்பினை மட்டுமே பதிவு செய்தது.

உரிமைப் பங்குகளின் முதலீடு இ.ரூபா 35,865 மில்லியனை (2018:35,112 மில்லியன்) எட்டியதுடன், இது மொத்த சொத்துக்களில் 7.38% வீதமாவதுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருடம் முழுவதிலும் உரிமைச் சந்தையில் காணப்பட்ட ஏற்ற இறக்கங்களினால், 2.14% வீத வளர்ச்சியை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பிரதான முதலீட்டு வகைகளான அரசாங்க கடன் பிணையங்கள், கூட்டிணைந்த கடன் பத்திரங்கள், வைப்புகள் மற்றும் உரிமைப் பங்குகள் இணைந்து நீண்ட கால காப்பறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் 84.83% வீதத்தைப் பதிவு செய்தன.

மேலும், ஏனைய சொத்துக்கள் 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் இ.ரூபா 41,230 மில்லியனைப் பதிவு செய்ததுடன், மொத்த சொத்துக்களில் இது 8.49% வீதமாகும். இந்த வகை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.86% வீத வளர்ச்சியைப் பெற்றுள்ளதுடன், இது பிரதானமாக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணம், கட்புலனாகா சொத்துககள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

2019ஆம் ஆண்டில் நீண்ட கால காப்புறுதியாளர் ஒருவர் மேற்கொண்ட பாரியளவிலான அலகு நம்பிக்கை கூறு விற்பனை காரணத்தினால், அலகு நம்பிக்கை கூறுகளில் வீழ்ச்சி காணப்பட்டது.


**அட்டவணை 10**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| சொத்துகளின் வகை | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | இ.ரூபா'000 | % | இ.ரூபா'000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 177,085,744 | 41.11 | 193,384,762 | 39.81 |
| உரிமைப் பங்குகள் | 35,112,119 | 8.15 | 35,864,744 | 7.38 |
| கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் | 81,180,677 | 18.85 | 106,694,774 | 21.97 |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 13,606,144 | 3.16 | 15,547,326 | 3.20 |
| வைப்புகள் | 66,853,162 | 15.52 | 76,097,450 | 15.67 |
| அலகு நம்பிக்கைகள் | 6,884,886 | 1.60 | 5,584,810 | 1.15 |
| பூட்கைக் கடன்கள் | 6,048,322 | 1.40 | 6,810,982 | 1.40 |
| ஏனைய சொத்துகள் | 40,084,935 | 9.31 | 41,229,509 | 8.49 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 3,902,535 | 0.91 | 4,508,555 | 0.93 |
| **மொத்தம்** | **430,758,524** | **100** | **485,722,913** | **100** |

**விளக்கப்படம் 9**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**



**முதலீட்டு வருமானம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

வருடம் முழுவதிலும் காணப்பட்ட நிலையற்ற பொருளாதார நிலமைகளினால் குறைவடைந்த வட்டி வீதங்கள் மற்றும் ஏற்ற இறக்கங்களைக் கொண்ட உரிமைப் பங்கு சந்தை என்பவற்றைத் தாண்டி, 2018ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட இ.ரூபா 36,817 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2019ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட இ.ரூபா 43,538 மில்லியன் ஆனது மொத்த முதலீட்டு வருமானத்தில் 18.26% (7.71%) எனும் பாரிய அதிகரிப்பை வெளிப்படுத்தியது. இந்த அதிகரிப்பானது பிரதானமாக வங்கி வைப்புகள், உரிமைப் பங்குகள் மற்றும் அரசாங்க பிணையங்களில் இருந்து பெறப்பட்டன. மேலும், அரசாங்க பிணையங்கள், கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் மற்றும் வங்கி வைப்புகள் என்பன இணைந்து மொத்த முதலீட்டு வருமானத்தில் 95.38% வீதத்திற்கு பங்களிப்பு செய்தன. 2019இல் சராசரி நீண்ட கால வியாபார முதலீடுகள் இ.ரூபா 407,738 மில்லியன் (2018:இ.ரூபா 367,586 மில்லியன்) ஆனது 10.92% வீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

2019 இல், அரசாங்க கடன் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட சராசரித் தொகையானது, இ.ரூபா 185,235 மில்லியனை (2018:இ.ரூபா 180,218 மில்லியன்) கொண்டு மொத்த சராசரி முதலீட்டில் அதிக பங்கினை வெளிப்படுத்தும் மற்றும் 2018 இல் முதலீகளினால் உருவாக்கப்பட்ட முதலீட்டு வருமானத்தில் அதிகரிப்பை பிரதிபலித்து 10.77% வீத முதலீட்டு வருமானத்தை உருவாக்கியது. குறிப்பிட்டளவு முதலீட்டினைக் கொண்டிருக்கும் வகையான கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் இ.ரூபா 10,461 மில்லியன் (2018:இ.ரூபா 9,525 மில்லியன்) முதலீட்டு வருமானத்தை உருவாக்கியதுடன், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 9.83% வீதத்தினால் அதிகரித்துள்ளது. எனினும் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டிணைந்த கடன் பத்திர முதலீடுகளின் வருமானம் 2019இல் 11.14% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

வங்கி மற்றும் நிதியியல் கம்பனிகளிடமிருந்து உருவாக்கப்பட்ட வைப்புகளினால் உருவாக்கப்பட்ட முதலீட்டு வருமானம் இ.ரூபா 9,717 மில்லியன் (2018:இ.ரூபா 6,521மில்லியன்) ஆகும். 2018 இல் உழைக்கப்பட்ட 12.09% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு வைப்புகளினால் உருவாக்கப்பட்ட சராசரி முதலீடுகளில் இருந்தான வட்டி வருமானம் 13.59% வீதமாகும். அதற்கமைவாக, 2019 இல் அனைத்து நிதியியல் முதலீடுகளில் இருந்து அதிகமான முதலீட்டு வருமான விகிதமானது வைப்புகளினால் அறிக்கையிடப்பட்டது.

2019ஆம் ஆண்டில் உரிமைப் பங்குகளில் இருந்து உருவாக்கப்பட்ட முதலீட்டு வருமானத்தின் பெறுமதி இ.ரூபா 2,651 மில்லியன் (2018: 1,271 மில்லியன்) ஆவதுடன் இது 8.88% (2018:4.09%) வீதத்தைப் பிரதிபலிக்கின்றது. இந்த உரிமைப் பங்குகளில் இருந்தான முதலீட்டு வருமான அதிகரிப்பானது, மூலதன ஈட்டுகையிலிருந்து பெறப்பட்ட இ.ரூபா 1,515 மில்லியனால் முன்னெடுக்கப்பட்டதுடன், இது அடுத்து வரும் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட இ.ரூபா 26 மில்லியன் தேறிய பெறுகையிலிருந்தான ஈட்டுகையையும் உள்ளடக்கியிருந்தது.

அலகு நம்பிக்கை கூறுகள் மற்றும் கொள்கைகள் கடன்கள் என்பன நடுத்தரமான வருமான விளைவினை 2019இல் உருக்கியதுடன், இதன் வருமான உருவாக்க வீதங்கள் முறையே 5.71% (2018:3.39%) மற்றும் 5.01% (2018:2.00) ஆகும்.

2018ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 10.02% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் முழுமையான முதலீட்டு வருமானம் 10.68% வீதமாகும்.

**அட்டவணை 11**

**முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் சுருக்கம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| வகை | 2018 (அ) | | | 2019 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருவாய் வீதம் (%) | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருவாய் வீதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 19,071,108 | 180,217,863 | 10.58 | 19,949,101 | 185,235,253 | 10.77 |
| திறைசேரி பிணையங்கள் | 17,323,247 | - | - | 18,756,653 | - | - |
| திறைசேரி உண்டியல்கள் | 296,376 | - | - | 208,077 | - | - |
| ஏனையவை (ரீபோ) | 1,451,485 | - | - | 984,370 | - | - |
| **உரிமைப் பங்கு** | 1,271,035 | 31,042,874 | 4.09 | 2,651,114 | 29,848,261 | 8.88 |
| மூலதன ஈட்டுகை/ நட்டங்கள் | 26,459 | - | - | 1,514,819 | - | - |
| பங்குலாபம் | 1,244,576 | - | - | 1,136,295 | - | - |
| **கூட்டிணைந்த கடன்கள்** | 9,524,794 | 77,060,034 | 12.36 | 10,460,658 | 93,937,725 | 11.14 |
| தொகுதிக்கடன் | 9,433,711 | - | - | 10,288,882 | - | - |
| வணிகப் பத்திரம் | 91,083 | - | - | 157,358 | - | - |
| ஆதனம் சார்ந்த பிணையங்கள் | - | - | - | - | - | - |
| ஏனைய அதையொத்த நிதிக் கருவிகள் | - | - | - | 14,418 | - | - |
| **நிலம் மற்றும் கட்டிடங்கள்** | 73,859 | 12,341,897 | 0.60 | 82,742 | 14,576,735 | 0.57 |
| **வைப்புகள்** | 6,520,896 | 53,950,925 | 12.09 | 9,716,917 | 71,475,306 | 13.59 |
| வங்கி | 5,975,784 | - | - | 9,009,462 | - | - |
| நிதி கம்பனிகள் | 545,112 | - | - | 707,455 | - | - |
| **அலகு நம்பிக்கை** | 233,578 | 6,883,088 | 3.39 | 355,937 | 6,234,848 | 5.71 |
| **பூட்கை கடன்கள்** | 121,875 | 6,089,456 | 2.00 | 321,937 | 6,429,652 | 5.01 |
| **ஏனையவை** | 610,768 | 1,151,807 | - | (88,103) | 1,762,070 | - |
| **மொத்தம்** | **36,817,146** | **367,586,137** | **10.02** | **43,538,406** | **407,737,781** | **10.68** |

***குறிப்பு:***

*ஏனைய வகைகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலீட்டு வருமானம் தொடர்புடைய சொத்துக்களை திறைசேரி பிணையங்கள் மற்றும் உண்டியல்கள் மீதான நிறுத்தி வைத்தல் பெயரளவு வருமான வரி, ஊழியர் கடன் வட்டி, சேமிப்பு கணக்கு வட்டி போன்ற அது உள்ளடக்கிய வேறுபட்ட வருமானங்களை முழுமையாகப் பிரகடணப்படுத்தவில்லை. எனினும், 'ஏனைய' வகைகள் மொத்தத் தொகையில் இருந்து நீக்கம்பட்டுள்ளதுடன் 'உழைத்துக்கொள்ளப்பட்ட முதலீட்டு வருமானம்' மும் அதேபோல் கணிப்பீடு செய்யப்படவில்லை.*

### காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

கடன் தீர் எல்லை (இடர் அடிப்படையில் மூலதனம்) விதிகளுக்கு அமைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காப்புறுதியாளர்கள் இடர் போதுமையினை மதிப்பிடுவதற்கும் காப்புறுதியாளர்களினதும் காப்புறுதி பூட்கையாளர்களினதும் பாதுகாப்பினை மேம்படுத்தவதற்கு உரிய இடர்களைப் பிரதிபலிப்பதற்காகவும் மற்றும் அவர்கள் நிலையான அடிப்படையில் செயற்படுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் இடர் தொடர்பான கவனக் குவிப்பு அணுகுமுறையினைப் பின்பற்றுகின்றார்களா என்பதற்கான கண்காணிப்பைத் தொடர்ந்தது. இவ்வருடத்திலும் எந்தவொரு பாரிய பிரச்சினைகளும் எழாதவகையில் கைத்தொழிற்துறையின் முழுமையான நிலைத்திருப்பை உரிய நேரத்தில் பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை உத்தரவாதப்படுத்தியது.

இடர் அடிப்படையிலான மூலதன விதிகளின் கீழ், மூலதன போதுமை தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு காப்புறுதியாளர்கள் குறைந்தபட்ச மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமாக இ.ரூபா 500 மில்லியனையும் 120% வீத மூலதன போதுமை வீதத்தையும் பேணுவதற்கு வேண்டப்படுவர். அட்டவணைகள் 12,13 மற்றும் 14 என்பன 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கான இடர் அடிப்படை சார்ந்த விபரங்களை விளக்குகின்றது.

நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சராசரி மூலதனப் போதுமை விகிதம் மற்றும் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் என்பன முறையே 298% (2018:304%) மற்றும் இ.ரூபா 220,371 மில்லியன் (2018: இ.ரூபா 197,574 மில்லியன்) ஆகும். அதனுடைய மூலதன நிலை தொடர்பாக அகத்துறிஞ்சக்கூடிய இடருக்கான காப்புறுதியாளர்களின் இயலுமையை காட்டும் இடர் அடிப்படையிலான மூலதன விதிகள் மூலதனப் போதுமை விகிதம் இடர் மூலதன தேவைப்பாடுகளுக்கு எதிராக மொத்த கிடைக்கப் பெறும் மூலதனத்தின் போதுமையை அளவிடும். அனைத்து நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளும் 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று குறைந்தபட்ச மூலதனப் போதுமையை திருப்திப்படுத்தியதுடன் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் விபரித்தவாறு அமுலாக்கல் மட்டமான 160% வீதத்திற்கு கீழ் ஒரே ஒரு காப்புறுதியாளர் மட்டும் மூலதனப் போதுமை வீதத்தைப் பதிவு செய்தார். ஒரு காப்புறுதியாளரைத் தவிர்த்து ஏனைய அனைத்து காப்புறுதியாளர்களும் 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று குறைந்தபட்ச மொத்த கிடைக்கப்பெறும் இ.ரூபா 500 மில்லியனைப் பூர்த்தி செய்தனர். அதற்கமைவாக, 2015 கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதன) விதிகளின் இணக்கப்பாடின்மைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

மேலும், அனைத்து ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒப்படைக்கப்பட்டால், உச்சளவான எதிர்மறை இடரைப் பிரதிபலிக்கும் சூழ்நிலை SVCC 31 டிசம்பர் 2019 அன்று இ.ரூபா 3,853 மில்லியன் தொகையாவதுடன் 2018ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்டளவில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 12**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019 அன்று கம்பனி ரீதியாக கடன்தீர் நிலை – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2018 அன்று (அ) | | | | 31 டிசம்பர் 2019 அன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொ.கி.மு (இ.ரூபா'000) | இ.அ.மு.தே (இ.ரூபா'000) | ச.மு.ம.க (இ.ரூபா'000) | மு.போ.வி (இ.ரூபா'000) | மொ.கி.மு (இ.ரூபா'000) | இ.அ.மு.தே (இ.ரூபா'000) | ச.மு.ம.க (இ.ரூபா'000) | மு.போ.வி (இ.ரூபா'000) |
| ஏஐஏ லைப் | 19,221,556 | 2,934,346 | 974,079 | 655 | 23,479,150 | 3,674,691 | 121,861 | 639 |
| எலைன்ஸ் லைப் | 1,209,377 | 297,583 | 98,240 | 406 | 1,447,524 | 223,007 | 471,435 | 307 |
| அமானா லைப் | 493,210 | 282,745 | - | 174 | 508,242 | 267,470 | - | 190 |
| ஆர்பிகோ | 1,618,804 | 413,912 | 406,492 | 391 | 1,802,462 | 485,405 | 349,870 | 371 |
| சிலிங்கோ லைப். | 53,860,075 | 14,813,327 | 8,129 | 364 | 61,948,169 | 17,865,001 | 10,631 | 347 |
| கோப்லைப் | 773,800 | 321,092 | - | 241 | 885,437 | 469,593 | - | 189 |
| எச்என்பி லைப் | 6,636,693 | 2,082,131 | 451,835 | 319 | 7,921,589 | 2,461,800 | 416,272 | 322 |
| ஜனசக்தி லைப் | 9,841,633 | 2,923,139 | 728,421 | 337 | 9,376,364 | 3,125,593 | 119,593 | 300 |
| எல்ஐசி | 476,371 | 248,126 | - | 192 | 395,312 | 275,015 | - | 144 |
| எல்ஓஎல்சி லைப் | 634,156 | 455,978 | - | 139 | 1,280,311 | 588,513 | - | 218 |
| எம்பிஎஸ்எல் | 141,348 | 57,775 | - | 245 | 548,464 | 199,502 | - | 275 |
| சனச லைப் | 577,288 | 282,015 | 2,953 | 205 | 711,479 | 390,784 | 19,312 | 182 |
| எஸ்எல்ஐசி | 79,905,443 | 18,286,644 | 1,325,178 | 437 | 83,505,746 | 19,148,373 | 1,046,379 | 436 |
| சொப் லொஜிக் லைப் | 7,828,045 | 3,935,366 | 1,450,442 | 199 | 8,151,141 | 4,489,448 | 1,041,915 | 182 |
| யூனியன் லைப் | 14,356,049 | 5,495,622 | 164,406 | 261 | 18,409,499 | 5,002,806 | 255,663 | 368 |
| மொத்தம். | **197,573,848** | **52,829,802** | **5,610,175** | **304** | **220,370,890** | **58,667,000** | **3,852,929** | **298** |

*குறிப்பு:*

*எம்பிஎஸ்எல் தவிர்த்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2019ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

நீண்ட கால காப்புறுதியாளர்களின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தொகை 31 டிசம்பர் 2019 அன்று இ.ரூபா 220,371 மில்லியன் (2018: இ.ரூபா 197,574 மில்லியன்) ஆவதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11.54% வீத வளர்ச்சியை பதிவு செய்தது. கடன்தீர் (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளின் படி, அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2 மூலதனத்தைக் கூட்டியதன் பின்னர் கழிப்பனவு எனக் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கழிப்பதன் மூலம் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் கணிப்பிடப்படும். அட்டவணை 13, 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் நீண்ட கால காப்பறுதியாளர்களுடன் தொடர்புடைய மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் கலவையை வழங்குகின்றது. சிலிங்கோ லைப் கம்பனியின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் காணப்பட்டதுடன், இது பிரதானமாக சீராக்கப்பட்ட தக்கவைக்கப்பட்ட உழைப்புகள் மற்றும் மதிப்பீட்டு மிகையின் காரணத்தினால் உருவான அடுக்கு 1 மூலதனத்தினால் உந்தப்பட்டதுடன், இதன் அதிகரிப்பானது 2019இல் இ.ரூபா 8,088 மில்லியனை எட்டியது. மேலும், ஏஐஏ லைப், யூனியன் லைப் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பனவும் மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனத்தில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றத்தைப் பதிவுசெய்ததுடன், இவை அடுக்கு 1 மூலதனத்தில் இருந்து வந்தவையாகும். அடுக்கு 1 மூலதனத்தைச் சுருக்கியதால் ஜனசக்தி லைப் மற்றும் எல்ஜசி தவிர்ந்த ஏனைய அனைத்து நீண்ட கால காப்புறுதியாளர்களும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தில் அதிகரிப்பைப் பதிவுசெய்தனர்.

அடுக்கு1 மூலதனம் பங்கு மூலதனம், தக்கவைத்திருக்கும் உழைப்புகள், தக்கவைத்திருக்கும் உழைப்புக்கான ஏதேனும் சீராக்கல்கள், ஒதுக்கப்படாத மதிப்பீட்டு மிகை என்பவற்றை உள்ளடக்கியிருப்பதுடன் பங்குபற்றல் வியாபாரத்திற்கான எதிர்காலத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மிகைக் கொடுப்பனவுகளின் 50% ஆனது நட்டங்களை ஈடு செய்வதற்கு கிடைக்கப்பெறும் நிரந்தரமான மூலதனம் என வரைவிலக்கணப்படுத்தப்படும். 31 டிசம்பர் 2018இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 212,586 மில்லியன் அடுக்கு 1 மூலதனத்துடன் ஒப்பிடுகையில் 31 டிசம்பர் 2019ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இ.ரூபா 234,867 மில்லியன் தொகை 10.48% வீதத்தினால் மேம்பட்டுள்ளது.

அடுக்கு 1 இற்கு சமாந்தரமான உயர் தர மூலதன குணவியல்புகளில் சில குறைபாடுகளைக் கொண்டிருக்கும் அடுக்கு 2 மூலதனம் திரட்டிய கழிக்கமுடியாத விருப்பத்திற்குரிய பங்குகள், கழிக்கக்கூடிய விருப்பத்திற்குரிய பங்குகள் போன்றவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், இது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.70% வீத அதிகரிப்பை பெற்றுள்ளது. இந்தக் கழிப்பனவுகள் பிரதானமாக கட்புலனாக அல்லது திரவத்தன்மையல்லா சொத்துக்களை உள்ளடக்கியிருப்பதுடன் இதன் பெறுமதி இ.ரூபா 33,728 மில்லியன் (2018:இ.ரூபா 33,923மில்லியன்) ஆவதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பீடுகையில் மாற்றமின்றியே காணப்பட்டது.

**அட்டவணை 13**
**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2018ம் திகதியன்று (அ) | 31 டிசம்பர் 2019ம் திகதியன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|
| | கி.மு.தே (இ.ரூபா'000) | அடுக்கு I (இ.ரூபா'000) | அடுக்கு II (இ.ரூபா'000) | கழிப்பனவுகள் இ.ரூபா'000) | கி.மு.தே (இ.ரூபா'000) |
| ஏஐஏ லைப் | 19,221,556 | 21,454,885 | 6,273,764 | 4,249,499 | 23,479,150 |
| எலைன்ஸ் லைப் | 1,209,377 | 2,144,362 | - | 696,838 | 1,447,524 |
| அமானா லைப் | 493,210 | 475,917 | 88,127 | 55,801 | 508,242 |
| ஆர்பிகோ | 1,618,804 | 2,283,238 | - | 480,776 | 1,802,462 |
| சிலிங்கோ லைப். | 53,860,075 | 68,914,794 | 3,753,287 | 10,719,912 | 61,948,169 |
| கோப்லைப் | 773,800 | 1,050,665 | 99,888 | 265,115 | 885,437 |
| எச்என்பி லைப் | 6,636,693 | 10,589,626 | 381,156 | 3,049,192 | 7,921,589 |
| ஜனசக்தி லைப் | 9,841,633 | 9,715,399 | 1,795,829 | 2,134,864 | 9,376,364 |
| எல்ஐசி | 476,371 | 398,314 | 61,899 | 64,901 | 395,312 |
| எல்ஓஎல்சி லைப் | 634,156 | 1,291,704 | 256,134 | 267,527 | 1,280,311 |
| எம்பிஎஸ்எல் | 141,348 | 769,573 | - | 221,109 | 548,464 |
| சனச லைப் | 577,288 | 1,253,400 | 4,060 | 545,981 | 711,479 |
| எஸ்எல்ஐசி | 79,905,443 | 85,681,871 | 155,614 | 2,331,739 | 83,505,746 |
| சொப் லொஜிக் லைப் | 7,828,045 | 10,418,385 | 890,713 | 3,157,957 | 8,151,141 |
| யூனியன் லைப் | 14,356,049 | 18,424,468 | 5,471,340 | 5,486,309 | 18,409,499 |
| **மொத்தம்** | **197,573,848** | **234,866,600** | **19,231,811** | **33,727,521** | **220,370,890** |

*குறிப்பு:*

*எம்பிஎஸ்எல் தவிர்த்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2019ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

### இடர் அடிப்படையிலா மூலதனத் தேவைப்பாடுகளின் ஒப்பீடு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 14, இடர் அடிப்படையிலான மூலதன விதிகளின் கீழ் கணிப்பிடப்பட்ட பிரதான இடர் வகைகளை உள்ளடக்கிய இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு பற்றிய கம்பனி ரீதியான பகுப்பாய்வைக் காட்டுகின்றது. இது 31 டிசம்பர் 2018 மற்றும் 2019 அன்றுள்ளவாறான கடன் இடர், செறிவு இடர், சந்தை இடர் மற்றும் தொழிற்பாட்டு இடரை உள்ளடக்கியுள்ளது. இடர் அடிப்பயையிலான மூலதனத் தேவைப்பாட்டை உரிய மற்றும் பிரதானமாக வகைப்படுத்தப்பட்ட இடர்களைக் கையாளுவதற்கான ஒன்றுசேர்க்கப்பட்ட மூலதனத் தேவை என வரைவிலக்கணப்படுத்த முடியும்.

மொத்த இடர் மூலதனக் கட்டணங்கள் மாற்றத்தின் பின்னர் நடுநிலையான வீதத்தில் 2019இல் வளர்ச்சியடைந்ததுடன் 2018இல் காணப்பட்ட இ.ரூபா 52,830 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இ.ரூபா 58,667 மில்லியனாக அதிகரித்தது. மாற்றத்திற்கு முன்னர் 2019 இல் இ.ரூபா 76,581 மில்லியனாக காணப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போலவே, மாற்றத்திற்கு முன்னர் மொத்த இடர் தேவைப்பாட்டின் மொத்தத்தின் 54.65% வீதம் பயன்படுத்தப்பட்டதுடன் இ.ரூபா 41,848 மில்லியனுக்கு சமப்படுத்தப்பட்டு 2019இல் நீண்ட கால காப்புறுதியாளர்களினால் சந்தை இடர்கள் தொடரப்பட்டு பாரிய இடர்கள் சந்திக்கப்பட்டது. மாற்றத்திற்கு முன்னர் முறையே 23.29% மற்றும் 8.97% வீத மொத்த இடர் மூலதனத் தேவைப்பாடு பொறுப்பு இடர் மற்றும் செறிவு இடர்களுக்கு பயன்படுத்தப்பட்டது. அதன்பின்னர், இந்த மூன்று இடர் வகைகளும் மாற்றத்திற்கு முன்னர் மொத்த இடர் மூலதனக் கட்டணங்களில் 86.91% (2018:87.80%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

**அட்டவணை 14**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019 அன்று இடர் மூலதன தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - நீண்ட கால காப்பறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2018 (அ) திகதியன்று (இ.ரூபா’000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | மாற்றத்திற்கு முன் இ.மு.தே | மாற்றத்திற்கு பின் இ.மு.தே |
| ஏஐஏ லைப் | 420,637 | 574,443 | 1,007,142 | - | 2,074,536 | 545,703 | 4,622,461 | 2,934,346 |
| எலையன்ஸ் லைப் | 2,375 | 5,900 | 216,028 | 791 | 189,745 | 43,419 | 458,258 | 297,583 |
| அமானா லைப் | 18,882 | 153,823 | 104,693 | 512 | 43,188 | 29,076 | 350,175 | 282,745 |
| ஆர்பிகோ | 33,831 | 121,978 | 135,120 | 264 | 292,926 | 26,911 | 611,030 | 413,912 |
| சிலிங்கோ லைப். | 1,426,249 | 733,458 | 12,362,089 | 4,393 | 2,659,740 | 1,162,007 | 18,347,936 | 14,813,327 |
| கோப்லைப் | 53,770 | 41,319 | 193,484 | - | 138,573 | 24,960 | 452,107 | 321,092 |
| எச்என்பி லைப் | 239,892 | 405,478 | 1,352,803 | 2,235 | 547,326 | 184,588 | 2,732,322 | 2,082,131 |
| ஜனசக்தி லைப் | 247,969 | 66,591 | 2,468,861 | 2,397 | 863,013 | 197,909 | 3,846,741 | 2,923,139 |
| எல்ஜசி | 27,673 | 67,415 | 143,172 | 117 | 63,359 | 26,978 | 328,715 | 248,126 |
| எல்ஓஎல்சி லைப் | 15,260 | 26,772 | 202,240 | - | 382,183 | 46,723 | 673,179 | 455,978 |
| எம்பிஎஸ்எல் | 2,342 | 4,692 | 43,589 | - | 26,513 | 8,505 | 85,641 | 57,775 |
| சனச லைப் | 25,283 | 164,414 | 88,412 | 341 | 40,565 | 18,776 | 337,791 | 282,015 |
| எஸ்எல்ஐசி | 1,264,435 | 2,382,087 | 14,045,424 | - | 4,449,082 | 1,265,728 | 23,406,756 | 18,286,644 |
| சொப் லொஜிக் லைப் | 167,517 | 608,112 | 1,990,814 | - | 2,793,684 | 170,954 | 5,731,081 | 3,935,366 |
| யூனியன் லைப் | 218,989 | 603,863 | 4,542,621 | - | 1,089,026 | 477,063 | 6,931,561 | 5,495,622 |
| **மொத்தம்.** | **4,165,104** | **5,960,347** | **38,896,493** | **11,050** | **15,653,460** | **4,229,299** | **68,915,755** | **52,829,802** |

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2019 (ஆ) திகதியன்று (இ.ரூபா’000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | மாற்றத்திற்கு முன் இ.மு.தே | மாற்றத்திற்கு பின் இ.மு.தே |
| ஏஐஏ லைப் | 470,921 | 677,436 | 1,394,906 | - | 2,580,737 | 612,344 | 5,736,344 | 3,674,691 |
| எலையன்ஸ் லைப் | 2,563 | 5,057 | 104,964 | 1,105 | 184,830 | 51,426 | 349,945 | 223,007 |
| அமானா லைப் | 20,138 | 148,814 | 95,430 | 449 | 23,613 | 29,118 | 317,560 | 267,470 |
| ஆர்பிகோ | 41,291 | 141,501 | 194,599 | 211 | 303,031 | 34,744 | 715,377 | 485,405 |
| சிலிங்கோ லைப். | 1,563,802 | 1,051,504 | 14,986,895 | 4,878 | 2,708,943 | 1,345,605 | 21,661,627 | 17,865,001 |
| கோப்லைப் | 87,808 | 13,345 | 331,666 | | 179,742 | 29,625 | 642,187 | 469,593 |
| எச்என்பி லைப் | 336,655 | 356,165 | 1,662,346 | 1,617 | 677,346 | 217,332 | 3,251,461 | 2,461,800 |
| ஜனசக்தி லைப் | 355,358 | 131,977 | 2,535,244 | 2,433 | 757,422 | 211,997 | 3,994,432 | 3,125,593 |
| எல்ஜசி | 38,898 | 40,181 | 183,824 | 27 | 74,306 | 31,308 | 368,543 | 275,015 |
| எல்ஓஎல்சி லைப் | 21,935 | 63,311 | 259,741 | 5,399 | 469,213 | 58,451 | 878,049 | 588,513 |
| எம்பிஎஸ்எல் | 5,786 | 151,119 | 40,484 | 37 | 25,653 | 12,878 | 235,957 | 199,502 |
| சனச லைப் | 24,066 | 268,721 | 94,441 | 220 | 46,149 | 21,596 | 455,192 | 390,784 |
| எஸ்எல்ஐசி | 1,604,482 | 2,340,302 | 14,480,502 | - | 5,011,022 | 1,434,825 | 24,871,132 | 19,148,373 |
| சொப்ட்லொஜிக் லைப் | 202,984 | 847,336 | 1,688,459 | - | 3,551,671 | 199,656 | 6,490,106 | 4,489,448 |
| யூனியன் லைப் | 385,195 | 633,902 | 3,794,651 | 158 | 1,243,261 | 555,585 | 6,612,752 | 5,002,806 |
| மொத்தம். | **5,161,880** | **6,870,671** | **41,848,153** | **16,534** | **17,836,939** | **4,846,489** | **76,580,665** | **58,667,000** |

*குறிப்பு:*
*எம்பிஎஸ்எல் தவிர்த்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2019ஆம் திகதியின்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2019ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.*


### விநியோகிக்கப்பட்ட மற்றும் அமுலில் இருக்கும் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2019இன் இறுதியில், அமுலில் உள்ள நீண்ட கால காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 3,402,663 ஆவதுடன், இது 2018 இன் இறுதியில் காணப்பட்ட 3,199,354 பூட்கைகளுடன் ஒப்பிடுகையில் 6.35% வீதத்தினால் அதிகரித்துள்ளது. 2019ஆம் ஆண்டு இலங்கை ஆயுள் காப்புறுதி கைத்தொழிற்துறை தனது விரிவாக்கலைத் தொடர்ந்ததுடன் 736,961 புதிய ஆயுள் காப்புறுதிப் பூட்கைகளை விநியோகித்தது, இது விளக்கப்படம் 10 இல் காட்டிய வாறு 2018இல் விநியோகிக்கப்பட்ட 711,126 புதிய பூட்கைகளுடன் ஒப்பிடுகையில் 3.63% வீத அதிகரிப்பை அடைந்துள்ளது.

2018ஆம் ஆண்டு பதிவிட்ட 14.76% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு மொத்த சனத்தொகையில் அமுலில் இருக்கும் பூட்கையின் எண்ணிக்கையின் வீதமான 15.61% வீதத்தை ஒப்பிடுகையில் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. 2017ஆம் ஆண்டைத் தவிர்த்து அமுலில் உள்ள புதிய பூட்கைகளின் எண்ணிக்கையானது ஊழியர்களின் சதவீதமாக தொடர்ந்து அதிகரித்தது. இந்தப் போக்கு 2019 வரை தொடர்ந்ததுடன் 41.59% வீதமாக அதிரித்தது.

**விளக்கப்படம் 10**

**விநியோகிக்கப்பட்ட மற்றும் அமுலில் இருக்கும் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விநியோகிக்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | | 740,511 | 668,714 | 643,483 | 711,126 | 736,961 |
| | அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | | 2,889,763 | 3,009,427 | 3,068,866 | 3,199,354 | 3,402,663 |
| | மொத்த சனத்தொகையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் | % | 13.77 | 14.19 | 14.31 | 14.76 | 15.61 |
| | மொத்த தொழிற்படையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் | % | 33.56 | 37.86 | 37.39 | 39.55 | 41.59 |

**மூலம்: நடு ஆண்டு தொழிற்படை மற்றும் சனத்தொகை - புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

### காப்புறுதி வகை ரீதியாக அமுலில் இருக்கும் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 15, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அமுலில் இருக்கும் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பூட்கைகளில் காப்புறுதி வகை ரீதியான விபரங்களை வழங்குகின்றது. பிரதானமாக உரிமை வழங்கல்கள், யுனிவேர்சல் லைப், தவணை, முழுமையான மற்றும் ஏனைய என வகைப்படுத்தப்பட்ட காப்புறுதி வகைகள் சுகாதாரத் திட்டங்கள், அலகு இணைப்புகள், ஆண்டுத்தொகை மற்றும் குழு ஆயுள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. 2019 இல், காப்புறுதி செய்யப்பட்ட தொகை இ.ரூபா 3,849,146 மில்லியன் ஆவதுடன், 2018 ஆம் ஆண்டு காணப்பட்ட இ.ரூபா 3,055,587 மில்லியனுக்கு எதிராக 25.97% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. 2018ஆம் ஆண்டு அமுலில் இருந்த 3,199,354 காப்புறுதிப் பூட்கைகளுக்கு எதிராக 2019ஆம் ஆண்டு இவ்வெண்ணிக்கை 3,402,663 ஆக விரிவடைந்துள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, உரிமை கோரல் வகைக் காப்புறுதிப் பூட்கைள் பிரதான பூட்கைகளாக இருந்ததுடன் இவற்றின் பெறுமதி 1,225,008 ஆகும். இது 2018ஆம் ஆண்டு காணப்பட்ட பூட்கைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2% வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும், 2019ஆம் ஆண்டில் காப்புறுதி செய்யப்பட்ட போதிலும் உரிமைக் கோரல் வகையில் இ.ரூபா 439,951 மில்லியன் பெறுமதியான கோரிக்கைகள் மட்டுமே கிடைக்கப்பெற்றன. இன்னொருவகையில், புத்தாக்க காப்புறுதி வகைகளை காப்புறுதியாளர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டமையினாலும் இரு காப்புறுதியாளர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஈடுவைத்தல் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் ஏனைய குழு ஆயுள் பூட்கைகள் அதிகரித்ததன் காரணமாக ‘ஏனைய’ எனும் காப்புறுதி வகையில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கையானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 43.97% வீதமாக அதிகூடிய வளர்ச்சியைப் பெற்றது. அதற்கமைவாக 2019ஆம் ஆண்டின் இறுதியில் ‘ஏனைய’ எனும் வகையில் கீழ் 710,021 (2018: 493,169) ஆயுள் காப்புறுதிப் பூட்கைகள் அமுலில் இருந்ததுடன், அதன் காப்புறுதி செய்யப்பட்ட மொத்தத் தொகை இ.ரூபா 1,801,924 மில்லியன் (2018:இ.ரூபா1,323,437 மில்லியன்) ஆகும்.

யுனிவேர்சல் லைப் பூட்கைகளின் எண்ணிக்கையும் 5.48% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளதுடன் பூட்கைகளின் எண்ணிக்கை 942,677 (2018:893,697) ஆவதுடன் காப்புறுதியின் பெறுமதி இ.ரூபா 433,120 மில்லியன் (2018:இ.ரூபா 393,397 மில்லியன்) ஆகும். 2019இல் தவணைக் காப்புறுதி செய்யப்பட்ட தொகையும் குறிப்பிடக்கூடியளவு இருந்ததுடன், அதன் எண்ணிக்கையானது 4.96% வீதத்தினால் சற்று வீழ்ச்சியடைந்தது. முழு ஆயுள் வகைக் காப்புறுதிப் பூட்கைள் எண்ணிக்கையிலும் காப்புறுதி செய்யப்பட்ட தொகை எனும் இரண்டிலும் வீழ்ச்சியை வெளிப்படுத்தியது.

**அட்டவணை 15**

**காப்புறுதி வகை ரீதியாக அமுலில் இருக்கும் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதிப் பூட்கையின் வகை | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|
| | அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை | காப்புறுதி செய்யப்பட்ட தொகை | அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை | காப்புறுதி செய்யப்பட்ட தொகை |
| தவணை காப்புறுதி | 527,307 | 920,092,488 | 501,176 | 1,172,542,129 |
| யுனிவேர்சல் லைப் | 893,697 | 393,397,498 | 942,677 | 433,120,480 |
| முழு ஆயுள் | 24,435 | 1,635,183 | 23,781 | 1,608,526 |
| உரிமை வழங்குதல்கள் | 1,260,746 | 417,025,131 | 1,225,008 | 439,950,741 |
| ஏனையவை | 493,169 | 1,323,437,053 | 710,021 | 1,801,923,679 |
| **மொத்தம்** | **3,199,354** | **3,055,587,353** | **3,402,663** | **3,849,145,555** |


**காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

விளக்கப்படம் 12, 2019ஆம் ஆண்டில் உள்ள மொத்தக் காப்புறுதிப் பூட்கைகள் மற்றும் புதிய காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கையில் காலங்கடந்த பூட்கைகளின் எண்ணிக்கை சற்று வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2019இல் மொத்த காலங்கடந்த ஆயுட் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 249,744 (2018:268,339) ஆவதுடன் அதில் 86,139 (2018:86,484) புதிய பூட்கைகள் ஆகும். அதற்கமைவாக, காலங்கடந்த புதிய காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை 345 பூட்கைகளினால் சற்றுக் குறைந்துள்ளது.

மேலும், 2019இல் மொத்த அமுலில் உள்ள பூட்கைகளில் மொத்தக் காலங்கடந்த பூட்கைகளின் வீதமானது 7.34% (2018:8.39%) ஆக இருக்கையில் புதிதாக வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையில் காலங்கடந்த புதிய பூட்கைகளின் வீதமானது 11.69% (2018:12.16%)


**விளக்கப்படம் 11**

**2018 மற்றும் 2019இல் அமுலில் இருக்கும் காப்புறுதி பூட்கை வகைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




**விளக்கப்படம் 12**

**காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ▬ | விநியோகிக்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | 93,008 | 102,697 | 90,350 | 86,484 | 86,139 |
| —✕— | அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | 264,473 | 271,586 | 275,039 | 268,339 | 249,744 |
| ▬ | மொத்த சனத்தொகையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் % | 12.56 | 15.36 | 14.04 | 12.16 | 11.69 |
| —▲— | மொத்த தொழிற்படையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் % | 9.15 | 9.02 | 8.96 | 8.39 | 7.34 |

### காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்க நேர்ந்த கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்


2019ஆம் ஆண்டில் ஏற்க நேர்ந்த கோரிக்கைகளின் பெறுமதியாக இ.ரூபா 36,079 மில்லியன் (2018: இ.ரூபா 34,416 மில்லியன்) அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.83% வீதத்தினால் அதிகரித்துள்ளது. விளக்கப்படம் 13இல் காட்டியவாறு, மொத்தக் கோரிக்கைகள் அங்கவீன நிதியுதவிகள், மரணத்திற்கான நிதியுதவிகள், சரணடைதல்கள், முதிர்ச்சிக் கால நிதியுதவிகள் மற்றும் ஏனைய நிதி உதவிகளாக பூட்கையாளர்களுக்கு செலுத்தப்பட்டது.

மொத்த ஏற்க நேர்ந்த கோரிக்கைகளில் முதிர்ச்சிகால நிதியுதவிகள் 52.25% வீதமாவதுடன், மொத்தக் கோரிக்கைகளில் இதன் பெறுமதி இ.ரூபா 18,852 மில்லியன் (2018:இ.ரூபா 18,343 மில்லியன்) ஆவதுடன், இதுவே ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த பெறுமதியாகும்.

தன்னொப்படைப்பாளர்களின் கோரிக்கைகள் இ.ரூபா 7,070 மில்லியனாக இருந்ததுடன், இது மொத்தக் கோரிக்கைகளில் 19.59% வீதமாகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.93% வீதத்தினால் அதிகரித்து 2019 ஆண்டின் மொத்தக் கோரிக்கைகளில் குறிப்பிடக்கூடியளவு சதவீதத்தைப் பெற்றிருந்தது.

சுகாதார நன்மைகள், முற்பணக் கொடுப்பனவுகள், மிகை ஊதியங்கள், இரத்துசெய்தல்கள் மற்றும் மீளளிப்புகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஏனைய கோரிக்கைகளுக்காக இ.ரூபா 5,618 மில்லியன் ஏற்க நேர்ந்ததுடன் இது மொத்தக் கோரிக்கைகளில் 15.57% வீதமாகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 7.20% வீதம் எனும் குறிப்பிடக்கூடிய அதிகரிப்பையும் பதிவுசெய்தது. 2019ஆம் ஆண்டில் அங்கவீன நிதியுதவிகள் இ.ரூபா 1,011 மில்லியனாகவும், 2.70% வீத அதிகரிப்பையும் பெற்றிருந்தது.

**விளக்கப்படம் 13**
**காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்க நேர்ந்த கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அங்கவீன நன்மைகள் | 430,617 | 488,818 | 636,472 | 984,923 | 1,011,482 |
| மரணம் | 1,640,801 | 1,616,565 | 2,106,087 | 2,842,975 | 3,527,686 |
| தன்னொப்படைப்புகள் | 5,267,864 | 5,121,636 | 5,530,517 | 7,004,688 | 7,069,627 |
| முதிர்ச்சி நன்மைகள் | 11,687,811 | 12,370,659 | 14,393,605 | 18,343,285 | 18,852,491 |
| ஏனையவை | 1,906,560 | 2,887,039 | 3,704,469 | 5,240,493 | 5,617,722 |

### காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்க நேர்ந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போக்கு காணப்பட்டதுடன், 2019ஆம் ஆண்டில் மொத்த ஏற்க நேர்ந்த கோரிக்கைகளின் எண்ணிக்கையானது 429,606 (2018:413,685) ஆகவும் 3.85% வீதத்தினாலும் சற்று உயர்ந்துள்ளது. 'ஏனைய' என வகைப்படுத்தப்படும் காப்புறுதிப் பூட்கையானது அதியுயர் எண்ணிக்கையைக் கொண்டிருந்தது. மொத்தக் கோரிக்கைகளில் 'ஏனைய நன்மைகள்' வகையைச் சேர்ந்த கோரிக்கைகளின் சதவீதம் 46.07% வீதத்தினால் அதிகரித்து, அதன் எண்ணிக்கை 197,906 (2018:166,745) இனை அடைந்ததுடன், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அதிகரிப்பு தொடர்ந்தது.

**அட்டவணை 16**
**காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அங்கவீன நன்மைகள் | 14,081 | 9,521 | 10,749 | 10,737 | 11,427 |
| மரணம் | 6,747 | 8,418 | 11,247 | 11,935 | 12,920 |
| தன்னொப்படைப்புகள் | 42,814 | 46,484 | 47,191 | 70,412 | 76,630 |
| முதிர்ச்சி நன்மைகள் | 120,661 | 108,680 | 128,266 | 153,856 | 130,723 |
| ஏனையவை | 112,337 | 143,336 | 145,452 | 166,745 | 197,906 |
| **மொத்தம்** | **296,640** | **316,439** | **342,905** | **413,685** | **429,606** |

2019இல் முதிர்ச்சி நிதியுதவிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை 130,723 (2018:153,856) ஆவதுடன் இது மொத்தக் கோரிக்கைகளில் 30.43% வீதமாகவும், 15.04% வீத வீழ்ச்சியையும் அடைந்திருந்தது. சரணடைதல் கோரிக்கைகளில் மொத்த நீண்ட கால காப்புறுதிக் கோரிக்கையில் 17.84% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், இவற்றின் எண்ணிக்கை 76,630 (2018:70,412) ஆகும். மேலும், அங்கவீனத்திற்கான நிதியுதவிகள் 2019இல் சற்று உயர்ந்து 11,427 (2018:10,737) ஆகும்.

அட்டவணை 16, 2015 இருந்து 2019 வரை நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்க நேர்ந்த கோரிக்கைகளின் வகைப்படுத்தலை வெளிப்படுத்துகின்றது.

## பொது காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

அட்டவணை 17இல் காட்டியவாறு, அண்மைக் காலங்களில் அதிக சவாலான ஆண்டுகளைக் கடந்த போதிலும், 2019இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 107,732 மில்லியன் பெறப்பட்டுள்ளதுடன் 7.10% வீத வளர்ச்சியையும் பெற்றுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கான நிலையான வரி அதிகரிப்பு, பொதுக் காப்புறுதித்துறையாளர்களுக்கு இடையேயான விலைப் போட்டி, எதிர்மறையான காலநிலை மற்றும் 2019 ஏப்பிரல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமான எதிர்மறையான பொருளாதார செயற்பாடுகள் காரணமாக மெதுவான வளர்ச்சிப் போக்கு காணப்பட்டது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் இந்த வளர்ச்சி உந்துகையானது பிரதானமாக மோட்டார் காப்புறுதியல்லாத வகையினால் உருவாக்கப்பட்டு பொதுக் காப்புறுதித்துறையின் வரலாற்றை மாற்றியது. அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'சுரக்ஸா மாணவர் காப்புறுதிப் பூட்கை', 'அக்ரஹார உடல்நலக் காப்புறுதித் திட்டம்', 'தேசிய இயற்கை இடர் காப்புறுதி' போன்ற தேசத்திற்கு அவசியமான காப்புறுதித் திட்டங்களினால் வளர்ச்சியானது முன் தள்ளப்பட்டது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் காப்புறுதிப் பெறுமதி 2015 இருந்து 2019 வரை 56% வீதம் மேன்மையடைந்தது. பொதுக் காப்புறுதிக் கைத்துறையினுள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துபவர்களாகவும் பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்தும் கலவை காப்புறுதியாளர்களாகவும் பதிவு செய்யப்பட்ட பதினொரு காப்புறுதிக் கம்பனிகளுக்கிடையே மேம்படுத்தப்பட்ட போட்டி காணப்பட்டது.

எனினும், வருடத்தின் இறுதியில் பரவிய கோவிட்-19 நோய்த் தாக்கத்தின் காரணமாக, சுகாதாரம், பயணம், நிகழ்வு இரத்தாதல், வியாபாரத் தலையீடு, ஊழியர்களின் பொறுப்பு, வருமானக் காப்பீடு போன்ற பல வகைக் காப்புறுதிகளின் எதிர்மறைத் தாக்கத்தின் காரணமாக காப்புறுதி அறிமுகப்படுத்தல்கள் குறைந்ததனால் பொதுக் காப்புறுதியாளர்களின் காப்புறுதியின் நிதியியல் வருமானம் தாக்கமடைந்தது.

இந்த சவால்களுக்கிடையில் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கான சாத்தியமான தன்மையை பொதுக் காப்புறுதித் கைத்தொழிற்துறை கொண்டிருப்பதனால், தற்போதும் பொதுக்

**அட்டவணை 17**

**கம்பனி ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு - பொதுக் காப்புறுதிக் கம்பனி**

| காப்புறுதியாளர் | 2015 | | 2016 | | 2017 | | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ ஜென. | 3,297,840 | 4.76 | - | - | - | - | - | - | - | - |
| ஏஐஜி | 3,141 | 0.00 | - | - | - | - | - | - | - | - |
| எலைன்ஸ் ஜென. | 3,244,844 | 4.68 | 4,247,691 | 5.34 | 5,956,142 | 6.38 | 17,983,748 | 17.88 | 18,095,258 | 16.80 |
| அமான ஜென. | 1,438,732 | 2.08 | 1,474,186 | 1.85 | 1,686,270 | 1.81 | 1,841,067 | 1.83 | 1,621,461 | 1.51 |
| சிலிங்கோ ஜென. | 12,921,561 | 18.65 | 15,265,433 | 19.18 | 17,012,087 | 18.22 | 18,137,933 | 18.03 | 18,401,405 | 17.08 |
| கொன்டினென்டல் | 2,309,413 | 3.33 | 3,088,064 | 3.88 | 3,892,780 | 4.17 | 4,545,405 | 4.52 | 5,002,548 | 4.64 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 1,691,705 | 2.44 | 2,420,130 | 3.04 | 2,966,679 | 3.18 | 3,692,397 | 3.67 | 4,192,960 | 3.89 |
| பியார்பெஸ்ட் | 1,908,901 | 2.76 | 2,361,614 | 2.97 | 9,610,990 | 10.29 | 10,980,850 | 10.92 | 11,247,669 | 10.44 |
| எச்என்பி ஜென. | 2,577,224 | 3.72 | 2,982,385 | 3.75 | 3,662,008 | 3.92 | 4,062,171 | 4.04 | 4,394,457 | 4.08 |
| ஜனசக்தி ஜென. | 7,406,160 | 10.69 | 10,137,864 | 12.74 | 11,740,185 | 12.57 | - | - | - | - |
| எல்ஓஎல்சி ஜென. | 2,476,961 | 3.58 | 3,096,834 | 3.89 | 3,795,106 | 4.06 | 4,318,721 | 4.29 | 4,954,896 | 4.60 |
| எம்பிஎஸ்எல் | 1,159,208 | 1.67 | 972,976 | 1.22 | 260,806 | 0.28 | (512) | 0.00 | 96,217 | 0.09 |
| என்ஜஎஎப் | 4,961,413 | 7.16 | 6,420,822 | 8.07 | 8,114,412 | 8.69 | 9,644,901 | 9.59 | 13,358,203 | 12.40 |
| ஓரியன்ட் | 746,935 | 1.08 | 810,728 | 1.02 | 1,179,000 | 1.26 | 1,376,398 | 1.37 | 1,564,902 | 1.45 |
| பீப்பள்ஸ் | 3,637,404 | 5.25 | 4,166,727 | 5.24 | 4,587,432 | 4.91 | 5,354,368 | 5.32 | 5,694,164 | 5.29 |
| சனச ஜென | 349,527 | 0.50 | 384,481 | 0.48 | 569,509 | 0.61 | 732,379 | 0.73 | 945,162 | 0.88 |
| எஸ்எல்ஐசி | 13,583,222 | 19.61 | 15,198,381 | 19.10 | 18,355,361 | 19.65 | 17,916,274 | 17.81 | 18,163,072 | 16.86 |
| யூனியன் ஜென. | 5,557,189 | 8.02 | 6,561,571 | 8.23 | - | - | - | - | - | - |
| மொத்தம். | **69,271,380** | **100** | **79,589,888** | **100** | **93,388,766** | **100** | **100,586,101** | **100** | **107,732,375** | **100** |
| வளர்ச்சி வீதம் (%) | **13.18** | | **14.90** | | **17.34** | | **7.71** | | **7.10** | |

காப்புறுதியாளர்கள் புதிய சந்தர்ப்பங்களை விரிவுபடுத்திக் கொள்ள முடியும். அதற்கமைவாக, காப்புறுதியாளர்கள் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்ளும் ஒரு எதிர்பார்ப்பாக பொது மக்களுக்கு புதிதாக புத்தாக்கத்திற்கான இன்சூர்டெக், சிக்கனமாக காப்புறுதித் திட்டங்கள் போன்ற புதிய அபிவிருத்திகள் உலகளவில் காணப்படுகின்றது.


அட்டவணை 17 மற்றும் விளக்கப்படம் 14இல் வெளிப்படுத்தியவாறு, சிலிங்கோ இன்சூரன்ஸ் ஜெனரல் இ.ரூபா 18,401 மில்லியன் தவணைக் கட்டணத்தைப் பதிவு செய்ததன் ஊடாக 17.08% (2018:18.03%) வீத சந்தைப் பங்கினைப் பெற்றுக் கொண்டன் ஊடாக சந்தையின் முதலிடத்தைப் பெற்றது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இரண்டாவது பெரிய சந்தைப் பங்கை இ.ரூபா 18,163 மில்லியன் (2018:இ.ரூபா 17,916 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பதிவு செய்தன் ஊடாகப் பெற்றுக் கொண்டு 16.86% வீத சந்தைப் பங்கைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் சிறியவொரு அதிகரிப்பை பிரதிபலித்தது. எலைன்ஸ் ஜெனரல் இ.ரூபா 18,095 மில்லியன் (2018: இ.ரூபா 17,984 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பெற்று மூன்றாவது பெரிய சந்தைப் பங்கான 16.80% (2018:17.88%) பெற்றுக்கொண்டுள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், சந்தைப் பங்கில் 12.40% வீத (2018: 9.59%) இரட்டை இலக்கத்தைப் பெற்று தனது பயணத்தில் மைல்கல்லை நிறுவியதுடன், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமான இ.ரூபா 13,358 (2018:இ.ரூபா 9,645) மில்லியனைப் பெற்றுக்கொண்டதன் ஊடாக, 2018ஆம் ஆண்டில் நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்ட பெயரபெஸ்ட் நிறுவனத்தைப் பின்தள்ளி, சந்தையில் நான்காவது பெரிய பங்காளரானது.

2019ஆம் ஆண்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் இலங்கை அரசாங்கத்தினால் தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டத்திற்கு செலுத்தப்பட்ட இ.ரூபா 500 மில்லியனில் இருந்து இ.ரூபா 1,500 மில்லியனான தவணைக் கட்டணத்துடன், இணைந்து அதிகரித்த அக்ரஹார பங்களிப்பு மற்றும் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத பூட்கைகளினால் உருவாக்கப்பட்ட தவணைக் கட்டணத்தின் ஊடாக அதன் செயலாற்றுகைகளை மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் தொடர்பாக குறிப்பிட்டளவில் மேம்படுத்தியது. 2019ஆம் ஆண்டு, 250 உயிர்களைக் காவு கொண்ட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதிக்கான கேள்வி திடீரென உயர்தது. அதற்கமைவாக, வேலைநிறுத்தம், கலவரம்,

**விளக்கப்படம் 14**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் கம்பனி ரீதியான சந்தைப் பங்குகள் - 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று பொதுக் காப்புறுதி வியாபாரம்**




சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமானது கடந்த ஐந்து வருடங்களில் மிக அதிக தொகையான இ.ரூபா 6,307 மில்லியனை (வளர்ச்சி வீதம் 37.67%) 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று பெற்றுக்கொண்டது.

பெயர்பெஸ்ட் நிறுவனமானது 2019இல் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 11,248 மில்லியனை (2018:10,981 மில்லியன்) பெற்றுக்கொண்டு சந்தைப் பங்கில் 10.44% (2018:10.92%) வீதத்தைக் கொண்டு ஐந்தாம் இடத்தைக் கைப்பற்றியது.

இவ்வருடத்தினுள் அமானா ஜெனரல் தவிர்த்து ஏனைய அனைத்து பொதுக் காப்புறுதியாளர்களும் மேம்படுத்தப்பட்ட செயலாற்றுகையை வெளிப்படுத்தினர்.


### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கான முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

2019இல் பொதுக் காப்புறுதி கைத்தொழிற்துறை சிலிங்கோ ஜெனரல், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், எலைன்ஸ் ஜெனரல், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் பெயர்பெஸ்ட் போன்ற ஒரு சில காப்புறுதியானர்களினால் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 79,266 மில்லியனை (2018:இ.ரூபா 74,664 மில்லியன்) பெற்று முழுச் சந்தைப் பெறுமதியில் 73.58% வீதத்தை தன்னகப்படுத்தி முன்கொண்டு செல்லப்பட்ட அதேவேளையில் ஏனைய பத்துக் காப்புறுதியாளர்களும் மொத்தச் சந்தைப் பங்கில் 26.42% வீதத்தைப் பெற்றுக்கொண்டதுடன், இவர்கள் பெற்றுக்கொண்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் பெறுமதி இ.ரூபா 28,467 மில்லியன் (2018:இ.ரூபா 25,922 மில்லியன்) ஆகும்.

விளக்கப்படம் 15இல் விபரித்தவாறு, சிலிங்கோ ஜெனரல் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன இணைந்து பொதுக் காப்புறுதிச் சந்தையில் 33.94% (2018:35.84%) வீத பங்கிற்கு பங்களிப்பு செய்துள்ளன. எனினும் 2019ஆம் ஆண்டில் சிலிங்கோ ஜெனரல் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்குகளை 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு வீழ்ச்சியே காணப்படுகின்றது. எலைன்ஸ் ஜெனரலின் சந்தைப் பங்கானது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.88% வீதத்தில் இருந்து 16.80% வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் சந்தைப் பங்கில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்தி சந்தைப் பங்கில் 12.40% வீதத்தைக் கைப்பற்றி நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

பெயர்பெஸ்ட் நிறுவனமானது சந்தைப் பங்கில் 10.44% (2018:10.92%) வீதத்தைக் கொண்டு ஐந்தாம் இடத்தைக் கைப்பற்றியது.

**விளக்கப்படம் 15**
**2015இல் இருந்து 2019 வரை முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




| | சிலிங்கோ லைப் | எஸ்எல்ஐசி | ஜனசக்தி ஜென/ எலைன்ஸ் ஜெனரல் | என்ஐடீஎப் | யூனியன் ஜென/ பெயர்பெஸ்ட் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2015 | 18.65 | 19.61 | 10.69 | 7.16 | 8.02 | 35.86 |
| 2016 | 19.18 | 19.10 | 12.74 | 8.07 | 8.24 | 32.67 |
| 2017 | 18.22 | 19.65 | 12.57 | 8.69 | 10.29 | 30.58 |
| 2018 (அ) | 18.03 | 17.81 | 17.88 | 9.59 | 10.92 | 25.77 |
| 2019 (ஆ) | 17.08 | 16.86 | 16.80 | 12.40 | 10.44 | 26.42 |

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

2015 இருந்து 2019 வரையான காலப்பகுதிக்கு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு அட்டவணை 18 இலும் விளக்கப்படம் 16 இலும் காட்டப்பட்டுள்ளது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான உப வகைகளாக தீ, கடல், வாகன, சுகாதாரம் மற்றும் நானாவித காப்புறுதி வியாபாரங்கள் உள்ளன. இத்துடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட்ட வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதப் பூட்கைக்கான தவணைக் கட்டணங்கள் வேறாகக் காட்டப்பட்டுள்ளன.

மோட்டார் காப்புறுதி வியாபாரம் 2019இல் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 63,733 மில்லியனையும் (2018:இ.ரூபா 62,363மில்லியன்) சந்தைப் பங்காக 59.15% (2018:62.00%) வீதத்தையும் அறிக்கையிட்டது. கடந்த நான்கு ஆண்டுகளாக இரட்டை எண்ணில் வளர்ச்சியை வெளிப்படுத்திய வாகனக் காப்புறுதியானது, 2019இல் மிகக் குறைந்த

**அட்டவணை 18**
**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | | | | |
|---|---|---|---|---|---|
| | **2015** | **2016** | **2017** | **2018 (அ)** | **2019 (ஆ)** |
| தீ | 6,604,074 | 7,479,910 | 8,597,489 | 8,821,655 | 8,270,010 |
| கடல் | 1,996,862 | 2,086,394 | 2,191,654 | 2,403,366 | 2,385,567 |
| மோட்டார் | 42,622,205 | 49,333,000 | 56,047,640 | 62,363,476 | 63,732,958 |
| சுகாதாரம் | 8,534,364 | 10,036,518 | 14,649,440 | 14,161,542 | 16,578,713 |
| நானாவிதம் | 6,495,454 | 7,120,742 | 7,866,260 | 8,254,421 | 10,457,778 |
| **உப மொத்தம்** | **66,252,959** | **76,056,564** | **89,352,484** | **96,004,460** | **101,425,025** |
| எஸ்ஆர்சீசீ & ரீ | 3,018,421 | 3,533,324 | 4,036,283 | 4,581,641 | 6,307,350 |
| **மொத்தம்** | **69,271,380** | **79,589,888** | **93,388,766** | **100,586,101** | **107,732,375** |

| வகுப்பு | வளர்ச்சி (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | **2015** | **2016** | **2017** | **2018 (அ)** | **2019 (ஆ)** |
| தீ | 3.95 | 13.26 | 14.94 | 2.61 | (6.25) |
| கடல் | 4.44 | 4.48 | 5.05 | 9.66 | (0.74) |
| மோட்டார் | 19.10 | 15.74 | 13.61 | 11.27 | 2.20 |
| சுகாதாரம் | 12.39 | 17.60 | 45.96 | (3.33) | 17.07 |
| நானாவிதம் | (3.37) | 9.63 | 10.47 | 4.93 | 26.69 |
| **உப மொத்தம்** | **13.51** | **14.80** | **17.48** | **7.44** | **5.65** |
| எஸ்ஆர்சீசீ & ரீ | 6.46 | 17.06 | 14.23 | 13.51 | 37.67 |
| **மொத்தம்** | **13.18** | **14.90** | **17.34** | **7.71** | **7.10** |

| வகுப்பு | சந்தைப் பங்கு (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | **2015** | **2016** | **2017** | **2018 (அ)** | **2019 (ஆ)** |
| தீ | 9.53 | 9.40 | 9.21 | 8.77 | 7.68 |
| கடல் | 2.88 | 2.62 | 2.35 | 2.39 | 2.21 |
| மோட்டார் | 61.53 | 61.98 | 60.02 | 62.00 | 59.16 |
| சுகாதாரம் | 12.32 | 12.61 | 15.69 | 14.08 | 15.39 |
| நானாவிதம் | 9.38 | 8.95 | 8.42 | 8.21 | 9.71 |
| **உப மொத்தம்** | **95.64** | **95.56** | **95.68** | **95.45** | **94.15** |
| எஸ்ஆர்சீசீ & ரீ | 4.36 | 4.44 | 4.32 | 4.55 | 5.85 |
| **மொத்தம்** | **100** | **100** | **100** | **100** | **100** |

வளர்ச்சி வீதமான 2.20% வீதத்தை அறிக்கையிட்டது. இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்படி, இதற்குக் காரணம் இலங்கை அரசாங்கத்தின் 2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தனிப்பட்ட வாகனங்களுக்குரான அனேக வகைகளுக்கு இறக்குமதிக்கான வரிக்கட்டமைப்பு அதிகரிக்கப்பட்டமை ஆகும்.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் இ.ரூபா 16,579 மில்லியனை (2018:14,162 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகவும் வருடத்திற்கு வருட அடிப்படையில் குறிப்பிடத்தக்க வளர்சியாக 17.07% வீதத்தைப் பதிவுசெய்த சுகாதாரக் காப்புறுதி இரண்டாவது பெரிய வகையாக இருந்தது. அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட காப்புறுதிகளான 'சுரக்ஷா மாணவர் காப்புறுதிப் பூட்கை' மற்றும் 'அகரஹாரா சுகாதாரக் காப்புறுதித் திட்டம்' என்பன சுகாதாரக் காப்புறுதி வியாபாரத்தில் வளர்ச்சிக்கு சாட்சியமானது.
நானாவித காப்புறுதி வியாபாரம் இ.ரூபா 10,458 மில்லியனை (2018:இ.ரூபா 8,254 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக உருவாக்கியதுடன், இது முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 9.71% வீதமாகும். 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.93% வீதத்தில் இருந்து 26.69% வீதமாக நானாவித காப்புறுதி வியாபாரம் குறிப்பிட்டுக்கூறக்கூடியவகையில் அதிகரித்துள்ளது. இதற்கு காரணம், என்என்டிஜஎஸ் மற்றும் ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர் காப்பீடுகளினால் உருவாக்கப்பட்ட தவணைக் கட்டணம் அதிகரித்தமையாகும்.


தீ காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் பெறுமதி இ.ரூபா 8,270 மில்லியன் (2018:இ.ரூபா 8,882 மில்லியன்) ஆவதுடன், 2018 (2018:2.61%) ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6.25% வீத மறை வளர்ச்சியைப் பதிவுசெய்த அதேவேளை முழு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 7.68% வீதமாகும்.

மேலே குறிப்பிட்டவாறு 2019இல் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காபப்புறுதியின் சந்தா 37.67% வீதத்தினால் உயர்ந்து இ.ரூபா 6,307 மில்லியன் (2018: இ.ரூபா 4,582 மில்லியன்) ஆகியதுடன் கடந்த ஆண்டுகளில் பதிவுசெய்த உயர் வளர்ச்சியாகும்.

### நானாவித காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு

அட்டவணை 19, 2018 மற்றும் 2019 இல் நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் வேறுபட்ட காப்புறுதி வகைகளில் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை விளக்குகின்றது. நானாவித காப்புறுதி வியாபாரம் பிரதானமாக தனிப்பட்ட விபத்து, விமான ஹல், என்என்டிஜஎஸ், ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர்கள், ஏனையவை என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதப் பூட்கை தவிர்த்து நானாவிதக் காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 10,458 மில்லியனை (2018: இ.ரூபா 8,254 மில்லியன்) பெற்றும் குறிப்பிடத்தக்க 26.69% வீத வளர்ச்சியை வெளிப்படுத்தியது. 2019இல் இந்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வளர்ச்சியானது, பிரதானமாக இ.ரூபா 1,500 மில்லியனைப் (2018: இ.ரூபா 500 மில்லியன்) பதிவுசெய்த, 01 ஏப்பிரல் 2016 இல் இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட என்என்டிஜஎஸ் எனும் உப வகுப்பினால் உருவாக்கப்பட்டது. இந்த பாதுகாப்புத் திட்டம் காப்புறுதி செய்யப்படாத உயிர்கள், ஆதனங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. மேலும்,

**விளக்கப்படம் 16**
**2015 இல் இருந்து 2019 வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




| | | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| | எஸ்ஆர்சீசீ அனட் டீ | 4.36 | 4.44 | 4.32 | 4.55 | 5.85 |
| | நானாவிதம் | 9.38 | 8.95 | 8.42 | 8.21 | 9.71 |
| | சுகாதாரம் | 12.32 | 12.61 | 15.69 | 14.08 | 15.39 |
| | மோட்டார் | 61.53 | 61.98 | 60.02 | 62.00 | 59.16 |
| | கடல் | 2.88 | 2.62 | 2.35 | 2.39 | 2.21 |
| | தீ | 9.53 | 9.40 | 9.21 | 8.77 | 7.68 |
| —×— | கைத்தொழிற்துறை வளர்ச்சி | 13.18 | 14.90 | 17.34 | 7.71 | 7.10 |

**அட்டவணை 19**
**2018 மற்றும் 2019 இற்கு நானாவித காப்புறுதி தவணக் கட்டணங்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு**

| வகை | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | |
|---|---|---|
| | 2018 (அ) | 2019 (ஆ) |
| உயில் நட்டக் காப்புறுதி | 488,362 | 399,180 |
| தனிப்பட்ட விபத்து | 1,673,887 | 1,694,374 |
| ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர்கள் | 467,916 | 1,140,043 |
| நிபுணத்துவ நட்டஈடு | 334,698 | 441,897 |
| பயணக் காப்புறுதி | 532,025 | 477,130 |
| நம்பகத்தன்மை உத்தரவாதம் | 117,853 | 92,779 |
| களவு | 395,880 | 401,421 |
| பாதுகாப்பான காசு உள்ளடங்களாக காசு இடமாற்றம் | 436,850 | 433,592 |
| பண்ட போக்குவரத்து | 125,159 | 115,912 |
| பண்டப் பொறுப்பு | 148,401 | 167,535 |
| அரசுப் பொறுப்பு | 450,273 | 535,243 |
| வங்கியாளர்களின் காப்பீடு | 397,674 | 413,313 |
| எயர்கிராப்ட் ஹல் | 1,061,979 | 1,616,254 |
| பணியாளர்களுக்கான நட்டஈட்டுக் காப்புறுதி | 709,476 | 696,591 |
| தேசிய இயற்கை இடர் காப்புறுதி முறைமை | 500,000 | 1,500,000 |
| ஏனையவை | 902,693 | 1,102,389 |
| **உப மொத்தம்** | **8,743,127** | **11,227,652** |
| கழி: என்ஐடீஎபற்கான எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | (460,879) | (711,516) |
| துணைக் காப்புறுதி தவணைக் கட்டணம் | (27,827) | (58,360) |
| **மொத்தம்** | **8,254,421** | **10,457,776** |


ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர் காப்புறுதிப் பூட்கையின் தவணைக் கட்டணங்கள் இ.ரூபா 1,140 மில்லியன் (2018: இ.ரூபா 468 மில்லியன்) எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கொண்டிருந்தது.

நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் இ.ரூபா 1,694 மில்லியன் (2018: இ.ரூபா 1,674 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உருவாக்கிய தனிப்பட்ட விபத்து வகை, 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் 1.22% வீத மெல்லிய வளர்ச்சியை பெற்றிருந்தது. விமான ஹல், தொழில்முறை காப்பீடு, அரச பொறுப்பு மற்றும் பாதுகாப்பு பொறுப்பு போன்ற சில நானாவித காப்புறுதி வியாபாரத்தில் வருடத்திற்கு வருட அடிப்படையில் நடுநிலையான வளர்ச்சியை அவதானிக்க முடிந்தது.

அட்டவணை 19இல் காட்டப்பட்ட ஏனையவை ஹல் அனைத்து இடர், தனிப்பட்ட காப்புறுதிப் பண்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளதுடன், இது 2019ஆம் ஆண்டில் இ.ரூபா 1,102 மில்லியன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பதிவுசெய்துள்ளதுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.12% வீத நேர்மறை வளர்சியைக் காட்டுகின்றது.

**விளக்கப்படம் 17**

**காப்புறுதியாளர்களினால் செலுத்தப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்தல் தொகை - பொதுக் காப்புறுதி வியாபரம்**




### காப்புறுதியாளர்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்தல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 20 மற்றும் விளக்கப்படம் 17 2015 இல் இருந்து 2019 வரை பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான வகுப்புகளில் காப்புறுதிக் கம்பனிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த எழுத்தப்பட்ட தவணைக் கட்டணம், காப்புறுதியாளர்களுக்கு விட்டுக் கொடுக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைக்கப்பட்ட மட்டங்கள். அட்டவணை 20இல் காட்டியவாறு, 2019இல் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத் தொகையான இ.ரூபா 101,425 மில்லியனில் (2018:96,004 மில்லியன்) பொது காப்புறுதி வியாபாரத்தினால் விட்டுக் கொடுக்கப்பட்ட மீள்காப்புறுதித் தொகை இ.ரூபா 17,813 மில்லியன் (எஸ்ஆர்சீசீ அனட் டீ தவிர்த்து) ஆகும்.

அதற்கமைவாக, 2019ஆம் ஆண்டில், பொதுக் காப்புறுதியாளர்கள் மொத்த தக்கவைத்தல் வீதம் 82.44% ஆவதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சற்று அதிகரித்தது. மோட்டார் காப்புறுதி கடந்த ஐந்து வருடங்களாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் உயர் தக்கவைத்தல் வகுப்பாக தொடர்ந்தும் இருந்ததுடன், 2019இல் தக்கவைத்தல் வீதமான 93.36% (2018:93.11%) வீதத்தைக் கொண்டிருந்தது.

சுகாதாரக் காப்புறுதி குறிப்பிடத்தக்க 91.11% தக்கவைத்தல் வீதமாக 2019 இல் (2018:87.49%) கொண்டிருந்ததுடன், இது 3.62% வீத அதிகரிப்பினை வெளிப்படுத்தியது. அதற்கமைவாக சுகாதாரக் காப்புறுதிக்கான மீள்காப்புறுதியாளர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணம் 2018இல் இ.ரூபா 1,771 மில்லியனில் இருந்து 2019இல் இ.ரூபா 1,473 மில்லியனாக் குறைவடைந்தது.

காப்புறுதி வியாபாரத்தின் தீ வகை, கடந்த ஐந்து ஆண்டுகளில் 26.70% வீதம் எனும் மிகக் குறைவான தக்கவைத்தல் வீதத்தைப் பதிவு செய்ததுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 30.81% வீதத்தில் இருந்து மேலும் குறைவடைந்துள்ளது. அதையொத்து, கடல் காப்புறுதி வியாபாரமும் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைவான தக்கவைத்தல் வீதமான 48.58% வீதத்தை 2019ஆம் ஆண்டுக்குப் (2018: 50.07%) பதிவு செய்தது. இந்த வகைகள், கோரிக்கை இடரைக் குறைப்பதற்காக உயர் இடர் கோரிக்கைகள் மீள்காப்புறுதியாளர்களுக்கு மாற்றப்பட்டமையினால் மிகக் குறைவான தக்கவைத்தல் வீதத்தைப் பதிவுசெய்தது.

அட்டவணை 20
காப்புறுதியாளர்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்தல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| தீ | 6,604,074 | 7,479,910 | 8,597,489 | 8,821,655 | 8,270,010 |
| கடல் | 1,996,862 | 2,086,394 | 2,191,654 | 2,403,366 | 2,385,567 |
| மோட்டார் | 42,622,205 | 49,333,000 | 56,047,640 | 62,363,476 | 63,732,958 |
| சுகாதாரம் | 8,534,364 | 10,036,518 | 14,649,440 | 14,161,542 | 16,578,713 |
| நானாவிதம் | 6,495,454 | 7,120,742 | 7,866,260 | 8,254,421 | 10,457,778 |
| **உப மொத்தம்** | **66,252,959** | **76,056,563** | **89,352,484** | **96,004,460** | **101,425,025** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ட | 3,018,421 | 3,533,324 | 4,036,283 | 4,581,641 | 6,307,350 |
| **மொத்தம்** | **69,271,380** | **79,589,888** | **93,388,766** | **100,586,101** | **107,732,375** |

| வகுப்பு | மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| தீ | 5,137,042 | 5,959,242 | 6,947,675 | 6,103,609 | 6,061,765 |
| கடல் | 1,154,511 | 1,174,266 | 1,177,400 | 1,200,069 | 1,226,580 |
| மோட்டார் | 1,115,036 | 1,233,466 | 2,152,508 | 4,296,451 | 4,229,957 |
| சுகாதாரம் | 3,012,362 | 486,984 | 2,682,617 | 1,771,091 | 1,473,033 |
| நானாவிதம் | 3,213,645 | 3,840,459 | 4,462,894 | 4,821,722 | 10,457,778 |
| **உப மொத்தம்** | **10,418,951** | **12,067,604** | **16,800,660** | **17,834,113** | **17,813,058** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ட | - | - | 108,750 | 81,656 | 55,564 |
| **மொத்தம்** | **10,418,951** | **12,067,604** | **16,909,410** | **17,915,770** | **17,868,622** |

| வகுப்பு | தக்கவைத்தல் தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| தீ | 1,467,033 | 1,520,667 | 1,649,814 | 2,718,046 | 2,208,244 |
| கடல் | 842,351 | 912,129 | 1,014,254 | 1,203,297 | 1,158,987 |
| மோட்டார் | 41,507,169 | 48,099,534 | 53,895,132 | 58,067,024 | 59,503,000 |
| சுகாதாரம் | 12,017,456 | 9,549,533 | 11,966,823 | 12,390,451 | 15,105,680 |
| நானாவிதம் | - | 3,907,097 | 4,025,800 | 3,791,528 | 5,636,056 |
| **உப மொத்தம்** | **55,834,008** | **63,988,960** | **72,551,823** | **78,170,347** | **83,611,967** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ட | 3,018,421 | 3,533,324 | 3,927,533 | 4,499,984 | 6,251,787 |
| **மொத்தம்** | **58,852,429** | **67,522,284** | **76,479,356** | **82,670,331** | **89,863,753** |

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் தக்கவைத்தல் வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| தீ | 22.21 | 20.33 | 19.19 | 30.81 | 26.70 |
| கடல் | 42.18 | 43.72 | 46.28 | 50.07 | 48.58 |
| மோட்டார் | 97.38 | 97.50 | 96.16 | 93.11 | 93.36 |
| சுகாதாரம் | 79.96 | 95.15 | 81.69 | 87.49 | 91.11 |
| நானாவிதம் | - | 54.87 | 51.18 | 45.93 | 53.89 |
| **உப மொத்தம்** | **84.27** | **84.13** | **81.20** | **81.42** | **82.44** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ட | 100 | 100 | 97.31 | 98.22 | 99.12 |
| **மொத்தம்** | **84.96** | **84.84** | **81.89** | **82.19** | **83.41** |

### மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 21 மற்றும் விளக்கப்படம் 18 என்பன 31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று பொதுக் காப்புறுதி கம்பனிகளிடையே சொத்துக்களின் பரம்பலை விளக்குகின்றது.

நாட்டில் காணப்பட்ட சாதகமற்ற சந்தை மற்றும் பொருளாதார நிலைமைகளினால், பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்கள் 2019இல் 4.01% வீத மிகக் குறைந்த வளர்ச்சியில் இ.ரூபா 203,870 மில்லியனை (2018: இ.ரூபா 196,005 மில்லியன்) அடைந்துள்ளது. கடந்த ஆண்டைப் போலவே, இவ்வருடமும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பொதுக் காப்புறுதியாளர்களிடையே பெரிய பங்கினைக் கொண்டிருந்ததுடன் இது மொத்த பொதுக் காப்புறுதி சொத்துக்களில் 34.86% (2018:36.15%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் இதன் பெறுமதி இ.ரூபா 71,059 மில்லியன் (2018: இ.ரூபா 70,854 மில்லின்) ஆகும். எனினும் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சொத்துக்களின் பங்கானது 1.29% வீதத்தினால் சற்றுக் குறைவடைந்ததுள்ளது.


எலையன்ஸ் ஜெனரலின் சொத்துக்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவகையில் 2018ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட இ.ரூபா 34,053 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 13.23% வீதத்தினாலும் இ.ரூபா 29,548 மில்லியனாலும் குறைந்துள்ளது. சிலிங்கோ ஜெனரல், பெயர் பெஸ்ட் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் என்பன முறையே 14.02% (2018:14.23%), 7.86% (2018:7.61%) மற்றும் 7.20% (2018: 6.08%) வீதங்களை பிரதிநிதித்துவப்படுத்தி, மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களை 2019ஆம் ஆண்டில் பெற்றுள்ளன.

இதில் குறிப்பிடகூடிய விடயம் என்னெவெனில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களில் 78.43% வீதம் (2018:81.44%) மேற்குறிப்பிட்ட ஐந்து கம்பனிகளிடையேயும், மிகுதி 21.57% (2018:18.56%) வீதம் மட்டுமே ஏனைய பத்துக் கம்பனிகளுக்கு சொந்தமாக உள்ளதென்பதாகும்.

**அட்டவணை 21**
**காப்புறுதியாளர்களினால் தெக்கவைத்தல் தொகை - பொதுக் காப்புறுதி வியாபரம்**

| காப்புறுதியாளர் | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நீண்ட கால காப்புறுதி (இ.ரூபா '000) | % | நீண்ட கால காப்புறுதி (இ.ரூபா '000) | % |
| எலைன்ஸ் ஜெனா. | 34,052,708 | 17.37 | 29,547,615 | 14.49 |
| அமான ஜெனா. | 3,327,423 | 1.70 | 2,822,858 | 1.38 |
| சிலிங்கோ ஜெனா. | 27,899,029 | 14.23 | 28,586,500 | 14.02 |
| கென்டினென்டல் | 5,284,712 | 2.70 | 6,610,621 | 3.24 |
| கோப்பரெட்டிவ் ஜெனா. | 5,492,747 | 2.80 | 6,622,720 | 3.25 |
| பியார்பெஸ்ட் | 14,917,948 | 7.61 | 16,025,516 | 7.86 |
| எச்என்பி ஜெனா. | 4,773,910 | 2.44 | 5,644,112 | 2.77 |
| எல்ஓஎல்சி ஜெனா. | 5,505,042 | 2.81 | 7,540,029 | 3.70 |
| எம்பிஎஸ்எல் | 868,408 | 0.44 | 1,682,661 | 0.83 |
| என்ஐடீஎப் | 11,909,582 | 6.08 | 14,679,797 | 7.20 |
| ஓரியன்ட் | 2,007,118 | 1.02 | 2,208,665 | 1.08 |
| பீப்பள்ஸ் | 8,417,568 | 4.29 | 9,600,978 | 4.71 |
| சனச ஜென | 694,728 | 0.35 | 1,238,079 | 0.61 |
| எஸ்எல்ஐசி | 70,854,183 | 36.15 | 71,059,444 | 34.86 |
| **மொத்தம்** | **196,005,105** | **100** | **203,869,596** | **100** |

**விளக்கப்படம் 18**
**மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




### பொதுக் காப்புறுதிச் சொத்துக்களின் பரம்பல்

31 டிசம்பர் 2018 மற்றும் 31 டிசம்பர் 2019 அன்று வேறுபட்ட சொத்து வகைகளில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் பரம்பல் அட்டவணை 22 மற்றும் விளக்கப்படம் 19 இல் காட்டப்பட்டுள்ளது.

குறைந்தளவு இடர் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் காரணமாக அரசாங்க கடன் பிணையங்கள் தொடர்ந்தும் பிரதான முதலீட்டு வகையாக இருந்து வருகின்றது. மொத்த அரசாங்க கடன் பிணையங்களின் பெறுமதி இ.ரூபா 54,814 மில்லியன் (2018:இ.ரூபா 53,189 மில்லியன்) ஆவதுடன் இது 26.89% (2018:27.14%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

31 டிசம்பர் 2019 அன்று உரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுமதி இ.ரூபா 32,329 மில்லியன் (2018: இ.ரூபா 34,260 மில்லியன்) ஆவதுடன் உள்நாட்டிலும் உலகளாவிய சூழலிலும் காணப்பட்ட மறை அபிவிருத்தியின் காரணமாக பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்ததன் விளைவாக 5.63% வீத எதிர்மறை வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் இரண்டாவது பெரிய சொத்து வகையாக உரிமைப்பங்கு முதலீடு உள்ளதுடன், 2019ஆம் ஆண்டின் மொத்த சொத்துக்களில் இது 15.86% (2018:17.48%) வீதமாகும்.

2019 இல், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புகள் மொத்த சொத்தக்களில் 11.72% வீதமாவதுடன், இதன் பெறுமதி இ.ரூபா 23,897 மில்லியன் (2018: இ.ரூபா 20,351 மில்லியன்) ஆவதுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.42% வீத வளர்ச்சியை அடைந்துள்ளது.

காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணத்தின் பெறுமதி இ.ரூபா 22,862 மில்லியன் (2018:இ.ரூபா 23,668 மில்லியன்), இது மொத்த சொத்துக்களில்

11.21% வீதத்தைக் கொண்டிருப்பதுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.4% வீதத்தினால் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான முதலீட்டு வகைகளில் கூட்டிணைந்த கடன் பத்திரங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளும் ஒன்றாவதுடன், 2019 இல் இது மொத்த சொத்துக்களில் 8.15% வீதத்தை (2018:6.89%) பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. 2019இல், இ.ரூபா 16,613 மில்லியன் (2018: இ.ரூபா 13,505 மில்லியன்) வரை கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் அதிகரித்ததுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23.02% வீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி, 2019 இலும் கூட்டிணைந்த கடன் பத்திரங்களுக்கான வட்டி வீதம் தொடர்ந்தும் அதிகரித்தமையே மேற்குறிப்பிட்ட வளர்ச்சிக்கு காரணமாகும்.

### முதலீட்டு வருமானம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 23இல், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட சொத்து வகைகளுக்கான முதலீட்டு வருமானம், சராசரி முதலீடுகள் மற்றும் முதலீட்டு வருமான வீதம் என்பன காட்டப்பட்டுள்ளது. சாராசரி முதலீடானது 2018ஆம் ஆண்டில் பதிவுசெய்த இ.ரூபா 129,787 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் இ.ரூபா 138,464 மில்லியனைப் பதிவுசெய்து 6.69% வீத வளர்ச்சியை அடைந்துள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான மொத்த முதலீட்டு வருமானம் இ.ரூபா 12,578 மில்லியனாக (2018:இ.ரூபா 9,380 மில்லியன்) பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2019ஆம் ஆண்டின் முழுமையான முதலீட்டு வருமான வீதம் 9.08% (2018:7.29%) வீதமாகும்.

கடந்த வருடத்தைப் போல், 2019ஆம் ஆண்டில் அதிக பங்கினைக் கொண்டிருக்கும் அரசாங்க கடன் பிணையங்களினாலான சராசரி முதலீட்டுத் தொகை, அரசாங்க கடன் பிணையங்கள் குறைவடைந்த வட்டி காரணமாக சராசரி முதலீட்டு தொகையாக இ.ரூபா 54,001 மில்லியனைக் (2018:இ.ரூபா 47,534 மில்லியன்) கொண்டு 9.17% (2018:9.91%) முதலீட்டு வருமான வீதத்தை உருவாக்கியது.

உரிமைப் பங்குகளில் உள்ள சராசரி முதலீடுகள் குறிப்பிடக்கூடியளவு பங்கினை முதலீட்டில் கொண்டுள்ளதுடன் இ.ரூபா 2,875 மில்லியனை முதலீட்டு வருமானமாக உருவாக்கியுள்ளது. இது ஆண்டுக்கு ஆண்டுடன் ஒப்பீடுகையில் முதலீட்டு வருமானம் வீதமாக 8.63% (2018: 0.84%) வீதத்தையும் இ.ரூபா 2,567 மில்லியன் அதிகரிப்பையும் பெற்றுள்ளது. இந்த முதலீட்டு வருமான அதிகரிப்பு ஒரு பெரிய காப்புறுதியாளர் அவருடைய பட்டியலிடப்படாத துணை முதலீட்டில் இருந்து கிடைக்கப்பெற்ற பங்கு இலாப வருமானமான இ.ரூபா 2,783 மில்லியனால் உருவானதாகும். மேற்குறிப்பிட்ட பங்கு இலாபம் தவிர்த்து முழுமையான


**அட்டவணை 22**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று சொத்துக்களின் பரம்பல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| சொத்துகளின் வகை | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | இ.ரூபா '000 | % | இ.ரூபா '000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 53,189,008 | 27.14 | 54,813,771 | 26.89 |
| உரிமைப் பங்குகள் | 34,259,179 | 17.48 | 32,329,010 | 15.86 |
| கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் | 13,504,819 | 6.89 | 16,613,054 | 8.15 |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 11,984,083 | 6.11 | 12,205,956 | 5.99 |
| வைப்புகள் | 20,351,392 | 10.38 | 23,896,705 | 11.72 |
| அலகு நம்பிக்கைகள் | 1,229,474 | 0.63 | 1,962,072 | 0.96 |
| மீள்காப்புறுதி கிடைப்பனவுகள் | 13,059,051 | 6.66 | 13,071,993 | 6.41 |
| காப்புறுதிப் பூட்கையாளர்கள்: மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள் | 23,666,720 | 12.07 | 22,862,086 | 11.21 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 7,314,626 | 3.73 | 8,245,249 | 4.04 |
| ஏனைய சொத்துகள் | 14,659,052 | 7.48 | 14,863,884 | 7.29 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 2,787,702 | 1.42 | 3,005,818 | 1.47 |
| **மொத்தம்** | **196,005,106** | **100** | **203,869,597** | **100** |

**விளக்கப்படம் 19**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று சொத்துக்களின் பரம்பல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




பட்டியலிடப்பட்ட உரிமைப் பங்குச் சந்தை மிகக் குறைந்த செயலாற்றுகையை 2019இல் வெளிப்படுத்தியது.

வங்கிகள் மற்றும் நிதியியல் கம்பனிகளில் இருந்தான வட்டி வருமானத்தை உள்ளடக்கிய வைப்புக்கள் முதலீட்டு வருமானமாக இ.ரூபா 2,589 மில்லியனை (2018:இ.ரூபா 2,139 மில்லியன்) உருவாக்கியதுடன். 11.70% (2018: 11.07%) வீத முதலீட்டு வருமான வீதத்தை பிரதிபலித்தது. அதற்கமைவாக, அனைத்து நிதியியல் முதலீடுகளிலும் உயர் முதலீட்டு வீதத்தை வைப்புகள் பதிவு செய்தன.

மேலும், கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் முதலீட்டு வருமான வீதமாக 11.44% (2018:11.74%) வீதத்தை பதிவுசெய்த அதேவேளையில் இ.ரூபா 15,060 மில்லியனை (2018: இ.ரூபா 13,130 மில்லியன்) சராசரி முதலீட்டுத் தொகையாகப் பதிவுசெய்து தொடர்ந்தும் கவர்ச்சிகரமானதாகக் காணப்பட்டது.

அட்டவணை 23

முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் சுருக்கம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| வகை | Gross Written Premium (LKR '000) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருவாய் வீதம் (%) | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருவாய் வீதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 4,712,050 | 47,534,405 | 9.91 | 4,950,605 | 54,001,390 | 9.17 |
| - திறைசேரி பிணையங்கள் | 2,499,753 | - | - | 2,743,083 | - | - |
| - திறைசேரி உண்டியல்கள் | 1,315,775 | - | - | 1,363,360 | - | - |
| - ஏனையவை (ரிபோ) | 896,522 | - | - | 844,162 | - | - |
| **உரிமைப் பங்கு** | 305,772 | 36,307,360 | 0.84 | 2,872,148 | 33,294,094 | 8.63 |
| - மூலதன ஈட்டுகை/நட்டங்கள் | (259,131) | - | - | 88,909 | - | - |
| - பங்குலாபம் | 564,903 | - | - | 2,783,239 | - | - |
| **கூட்டிணைந்த கடன் பத்திரங்கள்** | 1,541,159 | 13,130,058 | 11.74 | 1,722,851 | 15,058,937 | 11.44 |
| - தொகுதிக்கடன் | 1,483,310 | - | - | 1,623,188 | - | - |
| - வணிகப் பத்திரம் | 57,849 | - | - | 99,663 | - | - |
| **நிலம் மற்றும் கட்டிடங்கள்** | - | 11,676,822 | - | - | 12,095,019 | - |
| **வைப்புகள்** | 2,139,716 | 19,336,823 | 11.07 | 2,588,873 | 22,124,048 | 11.70 |
| - வங்கி | 1,669,174 | - | - | 2,054,773 | - | - |
| - நிதி கம்பனிகள் | 470,543 | - | - | 534,100 | - | - |
| **அலகு நம்பிக்கை** | 88,013 | 1,378,872 | 6.38 | 58,203 | 1,595,773 | 3.65 |
| **ஏனையவை** | 593,076 | 422,698 | - | 384,991 | 294,799 | - |
| **மொத்தம்** | **9,379,785** | **129,787,038** | **7.23** | **12,577,671** | **138,464,061** | **9.08** |

## காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை - பொதுக் காப்புறுதி வியாபாரம்

2019 இல், இலங்கை காப்புறுதி ஆணைக்குழு காப்புறுதித்துறைக்கு வெளிப்படைத்தன்மையையும் உறுதித்தன்மையையும் கொண்டுவருவதற்காக தவறுகை இடரைக் குறைப்பதன் ஊடாக காப்புறுதிப் பூட்கையாளர்களைப் பாதுகாப்பதை மேம்படுத்தும் நோக்கத்துடன் பொதுக் காப்புறுதியாளர்களின் இடர் அடிப்படையிலான மூலதனம் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக மேற்பார்வையினையும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளையும் தொடர்ந்தது.

இடர் அடிப்படையிலான மூலதன முறைமை பொறுப்புகளில் உள்ள உள்ளார்ந்த இடர்களுக்கு கிடைக்கப்பெறும் மூலதனம் மற்றும் எதிர்பாரா இழப்புகளை அகத்துறிஞ்சுவதற்கு போதுமான மூலதனம் என்பவற்றை அளவிடுகின்றது.

அட்டவணை 24,25 மற்றும் 26 2015ஆம் ஆண்டின் கடன்தீர் (இடர் அடிப்படையிலான மூலதனம்) எல்லைகளின் நிபந்தனையின் கீழ் பொதுக் காப்புறுதியாளர்களின் இடர் அடிப்படையிலான மூலதனம் தொடர்பான விபரங்களை விளக்குகின்றது. மேலும், மேற்குறித்த அட்டவணைகள் 01 ஜனவரி 2019 இல் இருந்து பயனுறுதி பெறும் வகையில் 'சொத்துக்களின் பயன் உரிமை' மற்றும் 'குத்தகை பொறுப்பு' ஆக குத்தகை ஒப்பந்தங்களுக்கான ஐந்தொகையில் உள்ள குத்தகைகளை அடையாளம் காண்பதற்கு கம்பனிகள் கோரப்படும் எஸ்எல்எப்ஆர்எஸ் 16இற்கு (SLFRS 16) அமைவாக 2019ஆம் ஆண்டுக்கான இடர் அடிப்படையிலான மூலதனத்தை விளக்குகின்றன. அதற்கமைவாக, 31 டிசம்பர் 2019 இல் இருந்து பயனுறுதி பெறும்வகையில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கடன்தீர் எல்லை விதிகள் 2015இற்கான குத்தகைகள் தொடர்பாக எஸ்எல்எப்ஆர்எஸ் 16இன் பிரயோகத்தின் மீதான தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படும்.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சராசரி மூலதனக் கிடைக்கப்பெறும் வீதம் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கு முறையே 166% மற்றும் 213% வீதமாகும். அனைத்து பொதுக் காப்புறுதியாளர்களும், கடந்த ஆண்டினைப் போலன்றி 31 டிசம்பர் 2019அன்று ஒழுங்குமுறைப்படுத்தலின் மிகக் குறைந்த தேவைப்பாடான மூலதனக் கிடைக்கப் பெறும் அமுல்படுத்தல் மட்டமான 120% வீதத்திற்கு மேல் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்பட்ட சவாலான வியாபார சூழ்நிலையினுள் நெகிழ்ச்சித்தன்மையை வெளிப்படுத்தினர். அட்டவணை 24 இல் காட்டியவாறு, அனைத்து பொதுக் காப்புறுதிக் கம்பனிகளும், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட இடர் அடிப்படையிலான மூலதனத்தின் மீதான அமுல்படுத்தல் உபாயமார்க்கத்தில் குறிப்பிட்டவாறு 31 டிசம்பர் 2019 அன்று அமுல்படுத்தல் மட்டமான 160% வீதத்திற்கு மேல் மூலதன கிடைக்கப்பெறும் வீதத்தை வெளிப்படுத்தின. மேலும் அமானா ஜெனரல் தவிர்ந்த அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளினாலும் 31 டிசம்பர் 2019 அன்று குறைந்தபட்ச மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமான இ.ரூபா 500 மில்லியனுடன் இணங்க இயலுமானது.

கீழே அட்டவணை 24இல் கவனத்தில் கொள்ளப்படாத பொதுக் காப்புறுதியின் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியியத்தினால் அறிக்கையிடப்பட்ட மூலதன கிடைக்கப்பெறும் வீதம் 31 டிசம்பர் 2018 மற்றும் 2019இல் முறையே 563% மற்றும் 660% வீதமாக இருந்தன. இருந்தும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மூலதன கிடைக்கப்பெறும் வீதம் வேலைநிறுத்தலும், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்தை கருத்தில் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத 2008 இன் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிக்கு அமைவாக வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதி மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்பவை அழுத்தமாகக் கூறி பணிப்புரைகள் விதிக்கப்பட்டன. அதற்கமைவாக வேலைநிறுத்தலும், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் தவிர்த்து, தேசிய காப்புறுதி நம்பிக்கைநிதியத்தின் மூலதன கிடைக்கப்பெறும் வீதம் குறைந்தபட்ட மூலதன கிடைக்கப்பெறும் வீதத் தேவைப்பாடான 120% வீதத்திலும் மிகக்குறைவாக இருந்ததுடன் 31 டிசம்பர் 2018 மற்றும் 2019களில் 331% மற்றும் 399% வீதமாக மறைப்பெறுமதிக்கு மாறியது.

**அட்டவணை 24**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019 அன்று கம்பனி ரீதியாக கடன்தீர் நிலை - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | ச.மு.ம.க (இ.ரூபா'000) | 31 டிசம்பர் 2018 அன்று (அ) | | 31 டிசம்பர் 2017 அன்று (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | மொ.கி.மு (இ.ரூபா'000) | இ.அ.மு.தே (இ.ரூபா'000) | ஊயுசு (%) | மொ.கி.மு (இ.ரூபா'000) | இ.அ.மு.தே (இ.ரூபா'000) | ஊயுசு (%) |
| எலைன்ஸ் ஜென. | 8,144,763 | 3,632,835 | 224 | 6,515,992 | 3,901,094 | 167 |
| அமானா ஜென. | 514,583 | 276,025 | 186 | 493,293 | 247,534 | 199 |
| சிலிங்கோ ஜென. | 5,260,754 | 3,044,281 | 173 | 5,978,705 | 3,220,685 | 186 |
| கொன்டினென்டல் | 1,545,782 | 623,260 | 248 | 1,836,265 | 721,772 | 254 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 1,353,242 | 759,566 | 178 | 1,698,652 | 907,055 | 187 |
| பியார்பெஸ்ட் | 3,188,331 | 1,723,550 | 185 | 3,960,925 | 2,187,118 | 181 |
| எச்என்பி ஜென. | 1,171,520 | 585,201 | 200 | 1,391,752 | 616,879 | 226 |
| எல்ஓஎல்சி ஜென. | 1,093,268 | 634,029 | 172 | 1,742,118 | 832,159 | 209 |
| எம்பிஎஸ்எல் | (244,292) | 136,264 | (179) | 522,190 | 283,548 | 184 |
| ஓரியன்ட் | 628,248 | 242,456 | 259 | 768,495 | 255,346 | 301 |
| பீப்பள்ஸ் | 3,036,641 | 1,279,479 | 237 | 3,141,246 | 1,264,299 | 248 |
| சனச ஜென | 116,699 | 148,533 | 79 | 533,062 | 256,532 | 208 |
| எஸ்எல்ஐசி | 25,110,666 | 12,524,166 | 200 | 26,163,057 | 12,350,481 | 212 |
| **மொத்தம்** | **50,920,206** | **25,609,646** | **166** | **54,745,752** | **27,044,502** | **213** |

*குறிப்பு: எம்பிஎஸ்எல் தவிர்த்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2019ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

### 31 டிசம்பர் 2018 மற்றும் 2019 அன்று மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 25 31 டிசம்பர் 2018 மற்றும் 31 டிசம்பர் 2019ஆம் திகதிகளில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் காணப்படும் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தை விளக்குகின்றது. அதன் கடன்தீர் (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளின் படி, அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2 மூலதனத்தைக் கூட்டியதன் பின்னர் கழிப்பனவு எனக் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கழிப்பதன் மூலம் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் கணிப்பிடப்படும்.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் முழுமையான மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று இ.ரூபா 54,749 மில்லியன் ஆவதுடன் இது 31 டிசம்பர் 2018ஆம் திகதி காணப்பட்ட இ.ரூபா 50,920 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.51% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது. அடுக்கு 1 விநியோகிக்கப்பட்ட மற்றும் முழுமையாக கொடுப்பனவு செய்யப்பட்ட சாதாரண பங்குகள், மூலதன ஒதுக்குகள் மற்றும் தக்கவைத்தல் உழைப்புக்கான ஏனைய சீராக்கல்கள் என்பனவற்றை உள்ளடக்கி 2019இல் இ.ரூபா 81,474 மில்லியன் (2018: இ.ரூபா 84,946 மில்லியன்) ஆக இருந்தது. கடன்தீர் எல்லை விதிகள் 2015இற்கு அமைவாக 50% வீத அடுக்கு 1 மூலதனத்தை விஞ்சாத அடுக்கு 2 மூலதனப் பெறுமதி இ.ரூபா 8,486 மில்லியன் ஆகும். 2019இல் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தில் இருந்தான கழிப்பனவுகள் நிர்வகிக்கப்படாத கடன்கள் மற்றும் முற்பணங்கள், முற்பணக் கொடுப்பனவுகள், கையிருப்பு, வாக்குறுதியளிக்கப்பட்ட சொத்துகள், தவறுகையில் உள்ள வருமான வரி போன்றவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் இதன் பெறுமதி இ.ரூபா 35,214 மில்லியன் ஆகும்.

அட்டவணை 25இல் குறிப்பிட்டவாறு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் பொதுக் காப்பறுதித்துறை சார்பாக 31 டிசம்பர் 2018 மற்றும் 2019இல் முறையே இ.ரூபா 6,459 மில்லியன் மற்றும் இ.ரூபா 6,540 மில்லியன் ஆகும். எனினும், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி வியாபாரம் தவிர்த்து பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்காக மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனமாக குறைந்தபட்சம் இ.ரூபா 500 மில்லியனை பேணுமாறு தேசிய காப்பறுதி நம்பிக்கை நிதியத்திற்கு பணிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி வியாபாரம் தவிர்த்து பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்காக மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனமாக 31 டிசம்பர் 2018 மற்றும் 2019 இல் முறையே இ.ரூபா 2,083 மில்லியன் மற்றும் இ.ரூபா 3,822 மில்லியன் மறைப் பெறுமதியைப் பேணியது. காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வியாபாரங்களை வேறாக்குவதற்கு இணங்குவதற்கு அவர்கள் எதிர்பார்க்கும் இந்த விடயங்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கும் திறைசேரிக்கும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 25**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019 அன்று மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று (அ) கி.மு.தே (இ.ரூபா'000) | 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|
| | | அடுக்கு I (இ.ரூபா'000) | அடுக்கு II (இ.ரூபா'000) | கழிப்பனவுகள் (இ.ரூபா'000) | கி.மு.தே (இ.ரூபா'000) |
| எலைன்ஸ் ஜென. | 8,144,763 | 9,262,690 | - | 2,746,697 | 6,515,992 |
| அமானா ஜென. | 514,583 | 1,386,604 | 302,432 | 1,195,743 | 493,293 |
| சிலிங்கோ ஜென. | 5,260,754 | 11,059,405 | 468,226 | 5,548,926 | 5,978,705 |
| கொன்டினென்டல் | 1,545,782 | 1,966,790 | - | 130,525 | 1,836,265 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 1,353,242 | 2,182,940 | 421,742 | 906,031 | 1,698,652 |
| பியார்பெஸ்ட் | 3,188,331 | 5,789,907 | - | 1,828,982 | 3,960,925 |
| எச்என்பி ஜென. | 1,171,520 | 1,546,966 | - | 155,215 | 1,391,752 |
| எல்ஓஎல்சி ஜென. | 1,093,268 | 2,021,724 | - | 279,606 | 1,742,118 |
| எம்பிஎஸ்எல் | (244,292) | 892,131 | (3,400) | 366,541 | 522,190 |
| ஓரியன்ட் | 628,248 | 858,278 | - | 89,783 | 768,495 |
| பீப்பள்ஸ் | 3,036,641 | 3,652,950 | - | 511,704 | 3,141,246 |
| சனச ஜென | 116,699 | 638,570 | - | 105,508 | 533,062 |
| எஸ்எல்ஐசி | 25,110,666 | 40,215,323 | 7,296,794 | 21,349,060 | 26,163,057 |
| **மொத்தம்** | **50,920,206** | **81,474,279** | **8,485,794** | **35,214,321** | **54,745,752** |

*குறிப்பு: எம்பிஎஸ்எல் தவிர்த்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2019ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

### 31 டிசம்பர் 2018 மற்றும் 2019 அன்று இடர் மூலதனத் தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

இடர் மூலதனத் தேவைப்பாடு கடன் இடர், செறிவு இடர், மீள்காப்புறுதி இடர், சந்தை இடர், காப்புறுதி பொறுப்பு இடர் மற்றும் தொழிற்பாட்டு இடர்களை உள்ளடக்கியிருக்கும். அட்டவணை 26, 31 டிசம்பர் 2018 மற்றும் 2019ஆம் திகதியன்று இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு தொடர்பான கம்பனி ரீதியான வேறுபட்ட இடர் கட்டணங்களின் கலவையைக் காட்டுகின்றது. பிரிந்து சென்றதன் பின்னர் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளினால் பதிவு செய்யப்பட்ட மொத்த இடர் மூலதனத் தேவைப்பாட்டின் பெறுமதி இ.ரூபா 27,045 மில்லியன் (2018: இ.ரூபா 25,610 மில்லியன்) ஆகும். பிரிந்து செல்வதற்கு முன்னர் 2019ஆம் ஆண்டில், மொத்த இடர் மூலதனக் கட்டணங்களில் 34.15% (2018:31.45%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் செறிவு இடரானது பிரதான இடர்வகையாக பொதுக் காப்புறுதித்துறையினுள் கருதப்படுகின்றது. கடந்த ஆண்டைப் போலவே பொறுப்பு இடர் கட்டணங்களானது இரண்டாவது பெரிய இடர் வகையாக காப்புறுதித்துறையில் காணப்பட்டதுடன், 2018இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 10,675 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் இ.ரூபா 11,050 மில்லியனைப் பதிவு செய்துள்ளது. எனினும், 2019இல் பொதுக் காப்புறுதியாளர்களினால் அட்டவணை 26இல் காட்டப்பட்டவாறு, கடந்த ஆண்டைப் போலவே, இவ்வாண்டிலும் பொதுக் காப்புறுதியாளர்கள் சந்தித்த பெரிய இடராக பொறுப்பிடர் உள்ளது. சந்தை இடர் பிரிந்து செல்வதற்கு முன்னர் மொத்த இடர் கட்டணங்களில் 29.28% (2018:28.37%) வீதத்தைக் கொண்டு 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.09% வீதமாக சற்று உயர்ந்துள்ளது. அதற்கமைவாக, இந்த மூன்று இடர் வகைகளும் பிரிந்து செல்வதற்கு முன்னர் மொத்த இடர் மூலதனக் கட்டணங்களில் 90% வீதத்திற்கு மேல் பிரதிநிதித்துவப்படுத்தின.

**அட்டவணை 26**

**31 டிசம்பர் 2018 மற்றும் 2019 அன்று இடர் மூலதனத் தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2018 (அ) திகதியன்று (இ.ரூபா'000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பிரிந்துசெல்வதற்கு முன் இ.மு.தே | பிரிந்துசெல்வதற்கு பின் இ.மு.தே |
| எலைன்ஸ் ஜென. | 171,105 | 1,756,511 | 850,202 | 39,489 | 2,274,785 | 292,628 | 5,384,719 | 3,632,835 |
| அமானா ஜென. | 19,073 | 156,677 | 35,724 | 11,204 | 160,367 | 29,784 | 412,829 | 276,025 |
| சிலிங்கோ ஜென. | 200,544 | 1,310,057 | 784,432 | 201,960 | 1,724,169 | 244,779 | 4,465,941 | 3,044,281 |
| கெண்டினென்டல் | 110,459 | 72,465 | 238,212 | 23,173 | 434,587 | 46,655 | 925,551 | 623,260 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 102,980 | 216,076 | 296,847 | 8,623 | 429,092 | 52,797 | 1,106,416 | 759,566 |
| பியார்பெஸ்ட் | 44,858 | 736,958 | 542,124 | 172,824 | 847,586 | 109,183 | 2,453,533 | 1,723,550 |
| எச்என்பி ஜென. | 49,594 | 201,164 | 103,698 | 13,447 | 453,106 | 42,457 | 863,466 | 585,201 |
| எல்ஓஎல்சி ஜென. | 12,200 | 130,323 | 185,458 | 21,123 | 526,920 | 49,737 | 925,762 | 634,029 |
| எம்பிஎஸ்எல் | 4,164 | 81,762 | 26,363 | 4,666 | 69,387 | 8,651 | 194,994 | 136,264 |
| ஓரியன்ட் | 24,023 | 124,491 | 32,290 | 3,758 | 156,201 | 17,973 | 358,736 | 242,456 |
| பீப்பள்ஸ் | 136,663 | 612,648 | 237,891 | 6,239 | 802,455 | 78,781 | 1,874,677 | 1,279,479 |
| சனச ஜென | 5,793 | 87,400 | 43,982 | 1,852 | 51,805 | 7,040 | 197,873 | 148,533 |
| எஸ்எல்ஐசி | 144,615 | 5,456,490 | 6,496,868 | 102,198 | 2,744,674 | 690,886 | 15,635,730 | 12,524,166 |
| **மொத்தம்** | **1,026,070** | **10,943,021** | **9,874,091** | **610,558** | **10,675,134** | **1,671,351** | **34,800,226** | **25,609,646** |

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2019 (அ) திகதியன்று (இ.ரூபா'000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பிரிந்துசெல்வதற்கு முன் இ.மு.தே | பிரிந்துசெல்வதற்கு பின் இ.மு.தே |
| எலைன்ஸ் ஜென. | 150,270 | 2,112,929 | 809,124 | 56,456 | 2,314,253 | 271,122 | 5,714,155 | 3,901,094 |
| அமானா ஜென. | 20,821 | 155,490 | 14,344 | 8,341 | 144,798 | 26,585 | 370,379 | 247,534 |
| சிலிங்கோ ஜென. | 251,653 | 1,434,138 | 889,040 | 196,997 | 1,621,495 | 246,035 | 4,639,358 | 3,220,685 |
| கெண்டினென்டல் | 101,481 | 106,767 | 258,939 | 26,567 | 523,304 | 57,573 | 1,074,631 | 721,772 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 98,794 | 235,237 | 379,357 | 14,822 | 537,405 | 60,446 | 1,326,062 | 907,055 |
| பியார்பெஸ்ட் | 50,803 | 942,834 | 880,683 | 141,810 | 839,011 | 121,529 | 2,976,669 | 2,187,118 |
| எச்என்பி ஜென. | 60,806 | 211,162 | 119,661 | 12,983 | 463,003 | 49,564 | 917,179 | 616,879 |
| எல்ஓஎல்சி ஜென. | 22,708 | 136,823 | 352,249 | 39,798 | 619,815 | 63,866 | 1,235,259 | 832,159 |
| எம்பிஎஸ்எல் | 7,590 | 228,732 | 30,136 | 4,380 | 82,290 | 16,600 | 369,727 | 283,548 |
| ஓரியன்ட் | 25,556 | 147,984 | 15,740 | 3,229 | 166,580 | 19,821 | 378,910 | 255,346 |
| பீப்பள்ஸ் | 170,641 | 241,118 | 504,659 | 17,730 | 847,603 | 85,957 | 1,867,709 | 1,264,299 |
| சனச ஜென | 7,875 | 173,878 | 66,600 | 1,284 | 57,945 | 11,500 | 319,082 | 256,532 |
| எஸ்எல்ஐசி | 187,158 | 5,313,217 | 6,432,786 | 67,442 | 2,832,715 | 704,002 | 15,537,320 | 12,350,481 |
| **மொத்தம்** | 1,156,156 | 11,440,310 | 10,753,318 | 591,840 | 11,050,217 | 1,734,600 | 36,726,441 | 27,044,502 |

குறிப்பு:

*எம்பிஎஸ்எல் தவிர்த்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2019ஆம் ஆண்டுக்காக பதிவு*

### தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 27 மற்றும் விளக்கப்படம் 20இல் விபரிக்கப்பட்டவாறு, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் உள்ளடங்கலாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான உப வகைகளின் மொத்த உழைக்கப்பட்ட தேறிய வருமானம் இ.ரூபா 88,002 மில்லியன் ஆகும். இது 2018 பதிவு செய்த இ.ரூபா 80,863 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 8.83% வீத வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வளர்ச்சி வீதமானது தேறிய உழைக்கப்பட்ட கட்டணத்தின் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சிக்கும் சாதகமாக அமைந்தது.

வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் உள்ளடங்கலாக மொத்த தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. எனினும், 2019ஆம் ஆண்டு இ.ரூபா 58,436 மில்லியன் தொகையாகி ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 11.28% (2018:9.85%) வீத நடுநிலையான வளர்ச்சியினை வெளிப்படுத்தியது. 2019இல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நானாவித காப்புறுதி வியாபாரம் தவிர்த்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் அனைத்து உப வகைகளிலும் ஏற்கநேர்ந்த கோரிக்கைகளின் தேறிய பெறுமதியானது அதிகரித்திருந்தது.

கடந்த ஆண்டினைப் போலவே, 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.27% வீத எல்லை அதிகரிப்பை வெளிப்படுத்திய அதேவேளை, இ.ரூபா 58,753 மில்லியனைப் பெற்றுக்கொண்டு உப மொத்த தேறிய உழைப்பட்ட தவணைக் கட்டணத்தில் 71.27% (2018:74.05%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய மோட்டார் காப்புறுதி வியாபாரம் உயர்ந்த தேறிய தவணைக் கட்டணத்தைப் பதிவு செய்தது. மேலும், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் உள்ளடங்கலாக மொத்தக் கோரிக்கைகளில் தேறிய கோரிக்கைகள் விகிதமாக 59.07% (2018:60.96%) வீதத்தை வெளிப்படுத்திய மோட்டார் காப்புறுதி வியாபாரம் தேறிய ஏற்கநேர்ந்த கோரிகைகளின் தொகையாக இ.ரூபா 34,704 மில்லியனைப் (2018: 34,682 மில்லியன்) பதிவுசெய்து, அதன் நிலையை உயர்ந்த உப துறையாக தொடர்ந்தும் பேணியது.

சுகாதாரக் காப்புறுதி வியாபாரம் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணப் பெறுமதியாக இ.ரூபா 15,315 மில்லியனைப் (இ.ரூபா 12,386 மில்லியன்) பதிவுசெய்து மொத்த தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் 18.58% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டில் 23.65% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இந்த வியாபார வகை இரண்டாவது உயர் தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகளின் தொகையாக இ.ரூபா 16,739 மில்லியனைப் (2018: இ.ரூபா 12,148 மில்லியன்) பெற்று, மொத்த தேறிய ஏற்க நேர்ந்த கோரிக்கைகளின் பெறுமதியில் (எஸ்ஆர்சீசீ அன்ட் டீ தவிர்த்து) 28.65% (2018:23.13%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

எனினும், 2018ஆம் ஆண்டில் 98.08% வீதமாக காணப்பட்ட தேறிய கோரிக்கைகள் 109.30% வீதமாக அதிகரித்தமை அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் உயர் சுகாதாரப் பராமரிப்பு கைத்தொழிற்துறை ஆகுசெலவானது சவாலாக காணப்பட்டது.

நானாவித காப்புறுதி வியாபாரம் தேறிய தவணைக் கட்டணமாக இ.ரூபா 5,008 மில்லியனைப் பதிவு செய்ததுடன் 2018இல் பதிவு செய்த இ.ரூபா 4,492 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 11.48% வீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்த வகை வியாாபரம் 2018இல் தேறிய கோரிக்கை வீதமாக 86.35% வீதத்தைப் பதிவு செய்ததுடன், இந்த தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சிக்கிடையிலும் நானாவித காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்கநேர்ந்த தேறிய கோரக்கையின் வீதம் 2018இல் பதிவு செய்த கோரிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 5.81% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும் இந்த வியாபார வகைப் பதிவு செய்த தேறிய கோரிக்கைள் வீதமான 65.03% 2018ஆம் ஆண்டில் பதிவு செய்த 76.97% வீதத்துடன் ஒப்பிடுகையில் 11.94% வீதத்தினால் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. மேற்கூறப்பட்ட தேறிய கோரிக்கைகளின் வீழ்ச்சியானது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியதியத்தின் கீழ் 2018ஆம் ஆண்டில் ஏற்கப்பட்ட இ.ரூபா 1,358 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஏற்கநேர்ந்த தொகை 893 மில்லியனாக குறைவடைந்ததனால் பெரிதும் தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டத்தினால் ஏற்பட்டதாகும்.

தீக் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்கநேர்ந்த தேறிய கோரிக்கைகளின் பெறுமதி 2019இல் இ.ரூபா 2,581 மில்லியனாகும். இது 2018இல் பதிவு செய்யப்பட்ட இ.ரூபா 1,697 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 52.12% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. இந்த உப வகையானது, தீ வகுப்பின் கீழ் ஏப்பிரல் 2019இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் ஆதனங்களுக்கு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க தாக்கத்துடன் எதிர்மறையான காலநிலையினால் ஏற்பட்ட தொடர்ந்த தீங்கான விளைவுகளும் இணைந்த 2018இல் பதிவுசெய்யப்பட்ட கோரிக்கைகளின் வீதமான 86.68% வீதத்துடன் ஒப்பிடுகையில் உயர் தேறிய கோரிக்கை வீதமான 118.20 வீதத்தைப் பதிவுசெய்துள்ளது.

கடந்த ஆண்டைப் போலவே, கடல் காப்புறுதி மிகக்குறைந்த தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைத் தொகையான இ.ரூபா 463 மில்லியனையும் (2018: இ.ரூபா 4,032மில்லியன்) 39.45% வீத கோரிக்கைகள் வீதத்தையும் பதிவுசெய்தது.


மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், 2019 ஏப்பிரல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் தேறிய உழைக்கப்பட்ட தவணைக்கட்டணத்திலும் தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகளிலும் முறையே இ.ரூபா 5,569 மில்லியனையும் (2018:இ.ரூபா 4,032மில்லியன்) மற்றும் இ.ரூபா 693 மில்லியனையும் (2018 இ.ரூபா 76மில்லியன்) பதிவுசெய்தது.

அட்டவணை 27 மற்றும் விளக்கப்படம் 20இல் பிரதிபலிக்கப்பட்டவாறு, பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் (எஸ்ஆர்சீசீ அன்ட் டீ உள்ளடங்கலாக) கடந்த ஐந்து ஆண்டுகளில் உயர் செலவான இ.ரூபா 33,474 மில்லியனை 2019இல் அறிக்கையிட்டன. அதற்கமைவாக, 2018இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 30,333 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 10.36% வீதமாக செலவுகள் அதிகரித்துள்ளது. வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டவீடு மற்றும் பயங்கரவாதம் மற்றும் தேறிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் கருதப்பட்ட தேறிய செலவுகள் 2018ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 843 மில்லியனில் இருந்து 2019இல் இ.ரூபா 1,412 மில்லியனாக அதிகரித்துள்ளது.

தேறிய கோரிககைகளின் வீதம் மற்றும் தேறிய செலவுகளின் வீதத்தின் கூட்டுத்தொகையைப் பிரதிபலிக்கும் தேறிய கலவை விகிதம் 2018ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 102.45% வீதத்தில் இருந்து 2019இல் 104.44% வீதமாக சற்று அதிகரித்துள்ளது. 2017ஆம் ஆண்டில் இருந்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய கோர்ககைகளின் வீதம் மற்றும் தேறிய செலவுகளின் வீதத்தின் கூட்டுத்தொகையைப் பிரதிபலிக்கும் தேறிய கலவை விகிதம் 100% வீதத்திற்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ளமை அவதானிக்க முடிந்தது.

**விளக்கப்படம் 20**

**தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**



அட்டவணை 27

தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபரம்

| வகை | தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| தீ | 1,283,463 | 1,213,542 | 1,721,160 | 1,957,237 | 2,183,580 |
| கடல் | 797,026 | 903,170 | 991,573 | 1,104,376 | 1,173,537 |
| மோட்டார் | 37,958,834 | 44,593,900 | 50,580,010 | 56,891,349 | 58,752,984 |
| சுகாதாரம் | 8,071,777 | 9,349,093 | 11,435,476 | 12,386,134 | 15,315,057 |
| நானாவிதம் | 3,270,599 | 3,306,901 | 3,891,564 | 4,492,033 | 5,007,719 |
| **உப மொத்தம்** | **51,381,699** | **59,366,606** | **68,619,783** | **76,831,128** | **82,432,877** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 2,914,630 | 3,274,297 | 3,734,321 | 4,031,846 | 5,568,739 |
| **மொத்தம்** | **54,296,329** | **62,640,903** | **72,354,104** | **80,862,975** | **88,001,616** |

| வகை | தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| தீ | 645,231 | 1,024,290 | 1,640,062 | 1,696,698 | 2,581,074 |
| கடல் | 295,624 | 266,057 | 345,331 | 453,917 | 462,919 |
| மோட்டார் | 24,274,415 | 28,966,019 | 31,134,209 | 34,681,762 | 34,703,545 |
| சுகாதாரம் | 6,958,816 | 8,065,476 | 10,511,212 | 12,148,224 | 16,739,265 |
| நானாவிதம் | 1,677,736 | 2,121,221 | 4,186,860 | 3,457,623 | 3,256,712 |
| **உப மொத்தம்** | **33,851,822** | **40,443,063** | **47,817,674** | **52,438,224** | **57,743,515** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 780 | 33,677 | (10,519) | 76,068 | 692,926 |
| **மொத்தம்** | **33,852,602** | **40,476,740** | **47,807,154** | **52,514,292** | **58,436,440** |

| வகை | தேறிய கோரிக்கைகளின் வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| தீ | 50.27 | 84.40 | 95.29 | 86.69 | 118.20 |
| கடல் | 37.09 | 29.46 | 34.83 | 41.10 | 39.45 |
| மோட்டார் | 63.95 | 64.96 | 61.55 | 60.96 | 59.07 |
| சுகாதாரம் | 86.21 | 86.27 | 91.92 | 98.08 | 109.30 |
| நானாவிதம் | 51.30 | 64.15 | 107.59 | 76.97 | 65.03 |
| **உப மொத்தம்** | **65.88** | **68.12** | **69.68** | **68.25** | **70.05** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 0.03 | 1.03 | (0.28) | 1.89 | 12.44 |
| **மொத்தம்** | **62.35** | **64.62** | **66.07** | **64.94** | **66.40** |

| வகை | தேறிய செலவுகள் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகள் | 19,134,713 | 21,421,928 | 24,491,746 | 29,490,544 | 32,062,276 |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 486,985 | 653,706 | 732,786 | 842,515 | 1,411,974 |
| மொத்தம் | **19,621,698** | **22,075,634** | **25,224,532** | **30,333,059** | **33,474,250** |

| வகை | தேறிய செலவுகளின் வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகளின் வீதம் | 37.24 | 36.08 | 35.69 | 38.38 | 38.90 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகளின் வீதம் மொத்தம் | 36.14 | 35.24 | 34.86 | 37.51 | 38.04 |

| வகை | தேறிய கலவை வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய கலவை வீதம் | 103.12 | 104.21 | 105.38 | 106.63 | 108.94 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய கலவை வீதம் மொத்தம் | 98.49 | 99.86 | 100.94 | 102.45 | 104.44 |

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிபலிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 28, 2015 இருந்து 2019 வரை எழுதப்பட்ட மொத்த தவணைக் கட்டணத்தை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்த பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட உப வகுப்புகளில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கின்றது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் அனைத்து உப வகுப்புகளிலும் உள்ள மொத்த காப்புறுதிப் பூட்கையின் எண்ணிக்கை 2018இல் பதிவுசெய்யப்பட்ட 6,492,003 இலிருந்து 2019இல் 6,728,073ஆக அதிகரித்துள்ளது. 2017ஆம் ஆண்டிலிருந்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தப் பூட்கைகளின் எண்ணிக்கையானது படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

கடந்த ஆண்டைப் போலவே 2019இலும் மோட்டார் காப்புறுதி வியாபாரமானது, 2,895,485 (2018:2,821,529) மூன்றாம் தரப்பு காப்புறுதிக் கொள்கைகளையும் 3,065,956 (2018:2,605,302) விரிவான காப்புறுதிக் கொள்கைகளையும் உள்ளடக்கி பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தனி உப வகுப்பில் இருந்து பெரியதொரு தொகையை வழங்குகின்றதுடன் 2019ஆம் ஆண்டில் மொத்தக் காப்புறுதிப் பூட்கைகளில் 88.60% (2018:86.48%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதற்கமைவாக, பொது மக்கள் அத்தியாவசிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான குறைந்த மட்ட பாதுகாப்பினை விடவும் பரந்தளவான பாதுகாப்பினை விரும்புகின்றார்கள் என்பதை வெளிப்படுத்தும் பெரும்பாலன வாகனக் காப்புறுதிப் பூட்கைகள் விரிவான காப்புறுதிப் பூட்கைகளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

சுகாதாரக் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், 2018இல் பதிவு செய்யப்பட்ட

**அட்டவணை 28**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பூட்கைகளின் எண்ணிக்கை - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகை | பூட்கைகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
| தீ | 227,800 | 246,058 | 241,884 | 245,027 | 232,469 |
| கடல் | 190,720 | 191,966 | 172,733 | 187,338 | 179,084 |
| வாகனம் | 4,531,187 | 5,075,622 | 5,390,222 | 5,614,901 | 5,961,441 |
| மூன்றாம் தரப்பு | 2,460,596 | 2,628,255 | 2,784,920 | 2,821,529 | 2,895,485 |
| விரிவான | 2,070,591 | 2,447,367 | 2,605,302 | 2,793,372 | 3,065,956 |
| சுகாதாரம் | 15,053 | 16,040 | 11,893 | 17,267 | 23,393 |
| நானாவிதம் | 202,038 | 238,921 | 311,084 | 427,470 | 331,686 |
| **மொத்தம்** | **5,166,798** | **5,768,607** | **6,127,816** | **6,492,003** | **6,728,073** |

காப்புறுதிப் பூட்கைளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 35.47% வீதம் அதிகரித்துள்ளது. எனினும், 2019இல் நானாவித காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையானது 22.40% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. மேலும் கடல் மற்றும் தீக் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையானது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 4.40% மற்றும் 5.12% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது.

**புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 29 மற்றும் விளக்கப்படம் 21 என்பன 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் விபரத்தை வெளிப்படுத்துகின்றன. பொதுக் காப்புறுதி வியாபாரத்தைச் சேர்ந்த அனைத்து வகுப்புகளுக்கும் உரிய 2019இல் அமுலில் உள்ள மொத்தப் பூட்கைகளின் எண்ணிக்கை 6,672,241 (2018: 6,393,900) ஆவதுடன் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.35% வீதத்தினால் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டைப் போலவே 2019இலும் மோட்டார் காப்புறுதி வியாபாரமானது, 2,897,534 (2018:2,819,590) மூன்றாம் தரப்பு காப்புறுதிக் கொள்கைகளையும் 3,037,680 (2018:2,) விரிவான காப்புறுதிக் கொள்கைகளையும் உள்ளடக்கி பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தனி உப வகுப்பில் 5,935,214 பூட்கைகளை (2018: 5,571,194) கொண்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தினுள், கடல், தீ மற்றும் நானாவித அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கையானது முறையெ 3.55%, 5.65% மற்றும் 18.89% விதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடகையில் 2019இல் சுகாதாரப் பூட்கைகளின் அமுலில் உள்ள தொகை 40.37% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

2019இல், காப்புறுதிக் கம்பனிகள் எழுதப்பட்ட 3,285,509 புதிய பூட்கைகளைக் கொண்டிருந்துடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.12% வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. 2018 ஆண்டில் 3,394,775 ஆக இருந்த மொத்த புதுப்பிக்கப்பட்ட பூட்கைகளின் எண்ணிக்கை 2019இல் 3,414,769 ஆக உயர்ந்துள்ளது.


**அட்டவணை 29**

**புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| புதிய கொள்கைகளின் எண்ணிக்கை | 2018 | | | 2019 | | |
|---|---|---|---|---|---|---|
| | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | வருட இறுதியில் அமுலில் உள்ள பூட்கைகள் | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | வருட இறுதியில் அமுலில் உள்ள பூட்கைகள் |
| தீ | 87,735 | 157,142 | 244,976 | 85,417 | 149,869 | 231,127 |
| கடல் | 183,594 | 4,256 | 178,908 | 176,076 | 4,087 | 172,564 |
| வாகனம் | 2,523,101 | 3,100,420 | 5,571,194 | 2,789,135 | 3,161,298 | 5,935,214 |
| மூன்றாம் தரப்பு | 1,329,968 | 1,492,035 | 2,819,590 | 1,438,245 | 1,456,199 | 2,897,534 |
| விரிவான | 1,193,133 | 1,608,385 | 2,751,604 | 1,350,890 | 1,705,099 | 3,037,680 |
| சுகாதாரம் | 9,790 | 7,465 | 16,665 | 15,574 | 7,794 | 23,392 |
| நானாவிதம் | 262,811 | 125,492 | 382,157 | 219,307 | 91,721 | 309,944 |
| **மொத்தம்** | **3,067,031** | **3,394,775** | **6,393,900** | **3,285,509** | **3,414,769** | **6,672,241** |

**விளக்கப்படம் 21**

**புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




## மீள்காப்புறுதி வியாபாரம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், இலங்கையில் செயற்படும் அனைத்து முதன்மை காப்புறுதி நிறுவனங்களுக்கு அதன் முதன்மை நோக்கமான தேசிய காப்புறுதியாளராக இருப்பதற்காக 2008ஆம் ஆண்டிலிருந்து மீள்காப்புறுதி இடரை ஏற்றுக் கொள்கின்றது. அதற்கமைவாக, 2012 டிசம்பர் 31 வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி இலக்கம் 1791/4இற்கு அமைவாக 2013இல் இருந்து அனைத்து பிரதான காப்புறுதியாளர்களும் அவர்களுடைய பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தப் பொறுப்பில் முப்பது வீதத்தை மீள்காப்புறுதியாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

2019இல், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உருவாக்கப்பட்ட மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானத்தின் பெறுமதி இ.ரூபா 4,174 மில்லியன் ஆவதுடன், 2018ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 4,056 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 2.89% வீதத்தினால் அதிகரித்துள்ளது. ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் ஒப்பிடும் போது 22.23% வீதத்தினால் குறைவடைந்துள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு மீள்காப்புறுதியாளர்களினால் செலுத்தப்பட்ட பெறுமதி இ.ரூபா 449 மில்லியன் ஆகும்.

2018இல் இ.ரூபா 1,504 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் இ.ரூபா 3,560 மில்லியன் பெறுமதியான கோரிக்கையை ஏற்கநேர்ந்துள்ளதுடன், காப்புறுதியாளர்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் விட்டுக்கொடுக்க நேர்ந்த சில பெரிய கோரிக்கைகளின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிட்டுக்கூடிய 137% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.

எனினும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உயர் தக்கவைத்தல் மட்டம் பேணப்படுவதன் காரணத்தினால், 2019இல் மீள்காப்புறுதியாளர்களினால் இ.ரூபா 498 மில்லியன் மட்டுமே கோரப்பட்டது. மேலும் 2017 மற்றும் 2018 இல் மீள்காப்புறுதியாளர்களுக்கு எவ்வித கோரிக்கைகளையும் விட்டுக்கொடுக்கப்பட வேண்டிய தேவையில்லை. அதற்கமைவாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு பின்னடைவு ஒழுங்குபடுத்தலின் வினைத்திறன் தொடர்பாக மீள்பார்வையிடுமாறு தேசிய காப்புறுதி நம்பிக்கை ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது. 2019இல் ஏற்க நேர்ந்த கோரிக்கைகளின் பெறுமதி குறிப்பிட்டளவில் அதிகரித்தமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரம் முறையே இ.ரூபா 763 மில்லியன் மற்றும் இ.ரூபா 662 மில்லியன் வரிக்கு முன்னரான காப்புறுதி மதிப்பீட்டு இழப்பையும் தேறிய இழப்பையும் ஏற்கநேர்ந்துள்ளதுடன் 2018இல் முறையே இ.ரூபா 1,130 மில்லியன் மற்றும் 1,342 மில்லியனை . வரிக்கு முன்னரான இலாபமாக மதிப்பீட்டு இலாபத்தையும் தேறிய இலாபத்தையும் பெற்றுள்ளது.

மீள்காப்புறுதி தொழிற்பாட்டின் மொத்த சொத்துக்கள் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019 இல் இ.ரூபா 6,690 மில்லியனைப் பெற்று 81.63% வீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அரசாங்க கடன் பிணையங்களில் உள்ள முதலீடுகள் 31 டிசம்பர் 2018 இல் இ.ரூபா 594 மில்லியனாக இருந்ததுடன் இது 318% வீதத்தினால் குறிப்பிட்டளவில் அதிகரித்து 31 டிசம்பர் 2019 இல் 2,484 மில்லயனாக அதிகரித்துள்ளது. அதற்கமைவாக மீள்காப்புறுதி வியாபாரத்தின் கீழ் உள்ள மொத்த சொத்துக்களில் அரசாங்க கடன் பிணையங்கள் 37.13% வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும் மொத்த சொத்துக்களில் பின்னடைவு ஒழுங்குபடுத்தலின் கீழ் கிடைக்க வேண்டிண தொகை 23.61% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எனினும், மீள்காப்புறுதி வியாபாரத்திற்கு உதவுவதற்கு போதியளவு நிதி முதலீடுகள் இல்லை என்பதுடன் நிதியியல் முதலீடுகளின் ஊடாக 47% வீத மீள்காப்புறுதி பொறுப்புகள் மட்டுமே அணவல் செய்யப்படுகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வகையினால் அறிக்கையிடப்பட்ட மூலதன கிடைக்கப்பெறும் வீதமானது கோரப்பட்டுள்ள கிடைக்கப்பெறும் மூலதன வீதமான 120% வீதத்தை விட மிகக்குறைவாக உள்ளதுடன், 31 டிசம்பர் 2018 மற்றும் 2019 இல் முறையே இவ்வீதங்கள் 67% மற்றும் 64% வீத எதிர்மறை விகிதமாக மாறியுள்ளது. அதேபோல், மீள்காப்புறுதி வியாபாரத்தின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் கோரப்பட்ட மொத்த கிடைக்கப் பெறும் மூலதனப் பெறுமதியான இ.ரூபா 500 மில்லியனை விட மிகக் குறைந்த மறைப் பெறுமதியான இ.ரூபா 1,085 மில்லியன் மற்றும் இ.ரூபா 899 மில்லியனை 31 டிசம்பர் 2018 மற்றும் 31 டிசம்பர் 2019இல் கொண்டுள்ளது. இந்த விடயங்கள் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதியை பிரிப்பதற்கு இணக்குவதற்கு எதிர்பார்க்கும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கும் திறைசேரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காப்புறுதி தரகர் கம்பனிகள்

2019ஆம் ஆண்டு, சந்தையில் அறுபத்தியேழு காப்புறுதி தரகர் கம்பனிகள் தொழிற்பட்டதுடன், இவை இ.ரூபா 29,317 மில்லியன் பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உழைத்துக்கொண்டன. இது 2018ஆம் ஆண்டு காப்புறுதி தரகர் கம்பனிகளினால் பிறப்பிக்கப்பட்ட இ.ரூபா 25,063 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019ம் ஆண்டு 16.97% வீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. மேலும், இந்த முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமானது நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களில் இருந்து பெறப்பட்ட முறையே இ.ரூபா 1,095 மில்லியன் மற்றும் இ.ரூபா 28,22 மில்லியன் தொகைகளை உள்ளடக்கியிருந்தது. உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் பொதுக் காப்புறுதி வியாபாரம் 96.26% வீதத்தையும் நீண்ட கால காப்புறுதி வியாாபரம் 3.74 வீதத்தை மட்டும் கொண்டிருந்தன.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் (SRCC&T தவணைக் கட்டணம் உட்பட) மொத்தத் தவணைக் கட்டணமாக ரூபா 107,732 மில்லியனைப் பெற்றுள்ளதுடன், காப்புறுதித் தரகர் கம்பனிகள் இதில் 26.20% வீதத்தை மட்டுமே பெற்றுக்கொண்டுள்ளன. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், 2019இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் (ரூபா 88,781 மில்லியன்) இதன் பங்களிப்பு குறிப்பிடக்கூடியளவில் அல்லாது 1.23% வீத வளர்ச்சியை மட்டுமே மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றிருந்தது.

2019இல், முப்பதியொரு காப்புறுதி தரகர் கம்பனிகள் ரூபா 100 மில்லியனை விட அதிகமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உழைத்திருந்ததுடன், இவை ஒன்று சேர்ந்து இ.ரூபா 27,897 மில்லியனை பெற்றிருந்தன. மிகுதி முப்பத்தியாறு காப்புறுதி தரகர் கம்பனிகளும் அட்டவணை 30இல் வெளிப்படுத்தியவாறு ரூபா 1,420 மில்லியனைப் பெற்றுள்ளன.


அட்டவணை 30

காப்புறுதி தரகு கம்பனியின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - 2019

| இல. | தரகருடைய பெயர் | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்ட கால காப்புறுதி வியாபாரம் | | பொதுக் காப்புறுதி வியாபாரம் | | மொத்தம் | |
| | | இ.ரூபா'(000) | சந்தைப் பங்கு (%) | இ.ரூபா'(000) | சந்தைப் பங்கு (%) | இ.ரூபா'(000) | சந்தைப் பங்கு (%) |
| 1 | ஏடிஎஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 24,536 | 2.24 | 985,649 | 3.49 | 1,010,184 | 3.45 |
| 2 | எயிட்கன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | - | - | 857,685 | 3.04 | 857,685 | 2.93 |
| 3 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 208 | 0.02 | 946,017 | 3.35 | 946,225 | 3.23 |
| 4 | அலியோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 33,806 | 3.09 | 86,644 | 0.31 | 120,450 | 0.41 |
| 5 | அம்ட்ரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 2,503 | 0.23 | 152,818 | 0.54 | 155,320 | 0.53 |
| 6 | அஸ்கி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | - | - | 2,127,693 | 7.54 | 2,127,693 | 7.26 |
| 7 | அஸட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 28,858 | 2.64 | 2,117,281 | 7.50 | 2,146,139 | 7.32 |
| 8 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 21,977 | 2.01 | 146,430 | 0.52 | 168,406 | 0.57 |
| 9 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 846 | 0.08 | 3,385,228 | 11.99 | 3,386,074 | 11.55 |
| 10 | கொலொம்போர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 7,416 | 0.68 | 311,527 | 1.10 | 318,943 | 1.09 |
| 11 | கொமர்'ல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 25,565 | 2.34 | 2,487,291 | 8.81 | 2,512,856 | 8.57 |
| 12 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 202,480 | 18.50 | 1,237,916 | 4.39 | 1,440,396 | 4.91 |
| 13 | ஈசாலி கரிம்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 137,288 | 12.54 | 547,992 | 1.94 | 685,280 | 2.34 |
| 14 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 19 | 0.00 | 106,529 | 0.38 | 106,547 | 0.36 |
| 15 | பைன்ட் மை இன்சூரன்ஸ் அன்ட் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 14,926 | 1.36 | 142,861 | 0.51 | 157,787 | 0.54 |
| 16 | பின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 24,316 | 2.22 | 1,176,712 | 4.17 | 1,201,028 | 4.10 |
| 17 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 26,996 | 2.47 | 874,878 | 3.10 | 901,875 | 3.08 |
| 18 | குளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேர்விஸ் (பிறைவட்) லிமிடட் | 9,018 | 0.82 | 151,098 | 0.54 | 160,116 | 0.55 |
| 19 | இன்சூர்மீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 66,410 | 6.07 | 510,271 | 1.81 | 576,681 | 1.97 |
| 20 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிறைவட்) லிமிடட் | 7,230 | 0.66 | 181,784 | 0.64 | 189,014 | 0.64 |
| 21 | மக்ஸ்வெல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 31,714 | 2.90 | 997,180 | 3.53 | 1,028,894 | 3.51 |
| 22 | மேர்கன்டைல் போர்சூன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 9,506 | 0.87 | 383,300 | 1.36 | 392,806 | 1.34 |
| 23 | நே'ன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 105,282 | 9.62 | 2,155,293 | 7.64 | 2,260,575 | 7.71 |
| 24 | புரோகெயர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 8,708 | 0.80 | 363,020 | 1.29 | 371,728 | 1.27 |
| 25 | புரெட்டெக்ஸன் அன்ட் அட்மோஸட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 915 | 0.08 | 621,724 | 2.20 | 622,639 | 2.12 |
| 26 | புரெட்டெக்ஸன் அன்ட் அசூரதன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | 103,239 | 9.43 | 74,703 | 0.26 | 177,942 | 0.61 |
| 27 | ரிலைன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 48,743 | 4.45 | 1,103,794 | 3.91 | 1,152,537 | 3.93 |
| 28 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 21,728 | 1.98 | 1,279,658 | 4.53 | 1,301,386 | 4.44 |
| 29 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | - | - | 976,401 | 3.46 | 976,401 | 3.33 |
| 30 | ஸ்ரடர்ஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 12,782 | 1.17 | 87,835 | 0.31 | 100,617 | 0.34 |
| 31 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 36,456 | 3.33 | 307,031 | 1.09 | 343,487 | 1.17 |
| | உப மொத்தம் | 1,013,469 | 92.60 | 26,884,242 | 95.25 | 27,897,711 | 95.17 |
| | ஏனைய காப்புறுதித் தரகர் கம்பனிகள் (35) | 81,176 | 7.40 | 1,338,402 | 4.75 | 1,419,579 | 4.83 |
| | **மொத்தம்** | **1,094,645** | **100** | **28,222,645** | **100** | **29,317,290** | **100** |

**விளக்கப்படம் 22**

**2010 இருந்து 2019 வரை காப்புறுதி தரகர் கம்பனிகளின் ஊடாக உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்**




*குறிப்பு: 2019இல் 2019இல் தரவுகளைச் சமர்ப்பிக்காமையினால் பொதுக் காப்புறுதீல் இருந்து ரெட்மோ சுவிஸ் இன்சூரன்ஸ் புரோக்கர் கம்பனியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் விலக்கப்பட்டுள்ளது.*

# தொழிற்பாடுகளின் மீளாய்வு

## மேற்பார்வை மீளாய்வு

**காப்புறுதிக் கம்பனிகள்**

**1. விபரத்திரட்டுகளின் மீளாய்வு**

**அ) வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டு அறிக்கைகள்**

2017 மார்ச் 13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 14 மற்றும் 15ஆம் தீர்மானங்களுக்கு அமைவாக சகல காப்புறுதி வழங்குனர்களும் தமது வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டு மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுக்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட நிதி ஆண்டு நிறைவடைந்து அடுத்து வருகின்ற நான்கு மாதங்களினுள் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதிக் கணக்கீட்டு அறிக்கை ஒன்றையும் மற்றும் வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுடன் தொடர்புடைய சாராம்சம் ஒன்றையும் சட்டத்திற்கு அமைவாக சமர்ப்பிக்க வேண்டும்.

வருடாந்த/காப்புறுதிக் கணக்கீட்டு விபரத் திரட்டுகளை சமர்ப்பிப்பதற்கு கால நீடிப்பைக் கோரி பல வேண்டுகோள்கள் காப்புறுதி நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்டமையினால், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு 31 மே 2019 வரை ஒரு மாத கால நீடிப்பினை வழங்கியது.

ஆணைக்குழு விபரத்திரட்டுகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதைக் கண்காணிப்பதுடன், அவற்றின் செம்மை மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதையும் உறுதிப்படுத்தவதற்கு அவற்றை பரீட்சிக்கின்றது. மீளாய்வின் போது அவதானிக்கப்படும் நியதிச் சட்ட தேவைகளில் இருந்தான விலகல்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிவர்த்தி செய்யுமாறு காப்புறுதிக் கம்பனிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. அவசியமாயின், பின்னூட்டு நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், விபரத்திரட்டுகளின் மீளாய்வின் போது அவதானிக்கப்படும் பிரச்சினைகள் அமைவிடத்திலான பரீட்சித்தல்களின் போதும் உரிய கம்பனிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.

வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், சில காப்புறுதி வழங்குனர்கள் அவர்களுடைய தாய்க் கம்பனிக்கு அதனுடைய தாய்க் கம்பனியின் சுருக்கெழுத்து மற்றும்/அல்லது வர்த்தக சின்னத்தைப் பயன்படுத்துவதற்காக அரசுரிமைக் கொடுப்பனவாக வகைப்படுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அவதானித்தது. இவ்வருடம் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு சுருக்கெழுத்து மற்றும்/அல்லது வர்த்தக சின்னத்தைப் பயன்படுத்துவதற்காக, அவ்வாறான கொடுப்பனவுகளை தாய்க் கம்பனிக்கு, தொடர்புடைய மற்றும்/அல்லது தொடர்பில்லாத கம்பனிகளுக்கு கொடுப்பனவு செய்வதைத் தடை செய்து பணிப்புரை 20 இனை வழங்கியது.

மேலும், பல காப்புறுதிக் கம்பனிகள் மிகை, முற்பணம், அடையாளம் காணப்படாதது, முன்மொழிவு மற்றும் முதிர்ச்சியடைந்த பூட்கை தவணைக் கட்டணங்கள் போன்ற வேறுபட்ட வடிவங்களில் பொறுப்பு மீதியாக அடையாளம் காணப்படாத மொத்த தவணைக் கட்டணங்களை காப்புறுதிப்பூட்கையாளர்கள்/ முன்மொழிவாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற குறிப்பிடக்கூடியளவு தொகையை பதிவு செய்துள்ளது.

காப்புறுதியாளர்கள் காப்புறுதிப்பூட்கையாளர்கள்/ முன்மொழிவாளர்களுக்கு இந்தத் தொகையை மீளளிப்பு செய்வதற்கு போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. சில கம்பனிகள் குறிப்பிட்ட சில காலத்திற்கு இவற்றை வைத்திருந்ததன் பின்னர் வருமானக் கூற்றில் வருமானமாக அந்தப் பொறுப்புகளை மீண்டும் எழுதியுள்ளது/ மாற்றிள்ளது. அதனால இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, பொது மக்களுக்கு சொந்தமான அந்தப் பணத்தினை மீள வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதற்கும், காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கும் வரை 2019 நிதி ஆண்டில் இருந்து வருமானக் கூற்றுக்கு அந்தத் தொகைகளை மீண்டும் எழுதுதல்/ மாற்றுதல் என்பவற்றை மேற்கொள்ளாதிருப்பதற்கும் காப்புறுதிக் கம்பனிகளுக்கு அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

**ஆ) காப்புறுதி கம்பனிகள் மற்றும் குழுக்களின் நிதி பாதிப்பின் மதிப்பீடு**

காப்புறுதி வழங்குனர்கள் அவர்களுடைய வருடாந்த விபரத்திரட்டின் ஒரு பகுதியாக, இடர் மதிப்பீட்டு அறிக்கையை ஆணைக்குழுவிற்கு ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர். அதற்கமைவாக, காப்புறுதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகள் தொடர்பான மேலோட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, இந்த வருடம் இடர் மதிப்பீட்டு அறிக்கையில் நிறுவன கட்டமைப்பு மற்றும் உரிமை, வியாபார சுருக்கக் குறிப்பு, சிரேஸ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம், கோரிக்கைகள் நிர்வாகம், இடர் முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக உள்ள தகவல்களை ஆணைக்குழு மீளாய்வு செய்தது.

**இ) மீள்காப்புறுதி ஒழுங்குகள்**

சட்டத்தின் பிரிவு 31(1) இற்கு அமைவாக, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் மீள்காப்புறுதி ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பாக அறிவிக்குமாறு கோரப்படுகின்றது. காப்புறுதி வழங்குனர்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மீள்காப்புறுதி நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யுமாறு கோரப்படுகின்றனர். ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட தரப்படுத்தல் தேவையை திருப்பதிப்படுத்தும் வகையில் மீள்காப்புறுதியாளரிடமிருந்து மீள்காப்புறுதி காப்பீடுகளைப் பூர்த்தி செய்கின்றதுடன், காப்பீடுகள் உரிய வகைகளுக்கு பெறப்பட்டு காப்புறுதி வழங்குனர் தேசிய காப்புறுதி நம்பிக்கை சபையினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு இக்குறித்த ஆவணங்களை மீளாய்வு செய்கின்றது. யாதேனும் இணக்கப்பாடின்மை மற்றும் விலகல்கள் அவதானிக்கப்படின், அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகளை குறித்த கால வரையறைக்குள் மேற்கொள்ளுமாறு உரிய கம்பனிகளுக்கு ஆணைக்குழுவினால் அறிவித்தல் வழங்கப்படும்.

அத்துடன், அனைத்துக் காப்புறுதி வழங்குனர்களும் காலாண்டு அடிப்படையில் விருப்பத்திற்குரிய மறுகாப்பீட்டு ஏற்பாடுகளை வழங்குமாறு கோரப்படுகின்றார்கள். ஆணைக்குழு மேற்குறிப்பிட்ட ஒழுங்குகளையும் வேறுபாடுகளையும் மீளாய்வு செய்து அவதானிப்புகளை உரிய காப்புறுதி நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட காலத்தினுள் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனுப்பி வைக்கும்.

**ஈ) காலாண்டு விபரத்திரட்டுகள்**

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்தைந்து தினங்களுக்குள் காலாண்டு விபரத்திரட்டினை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு காப்புறுதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

2019ஆம் ஆண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன், சட்டத்தின் ஒழுங்குவிதிகளுடன் அவர்களுடைய காலாண்டு செயற்பாடுகள் மற்றும் இணக்கப்பாடுகளின் இணக்கம் உறுதிப்படுத்தப்பட்டது.

காப்புறுதிக் வழங்குனர்களின் சொத்து மற்றும் பொறுப்பு நிலை, மூலதனப் போதுமை (கடன்தீர் நிலை), திரவத்தன்மை மற்றும் ஏனைய இடர் பரப்புகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்வதன் ஊடாக ஒவ்வொரு காலாண்டும் ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனிகளினதும் நிதியியல் நிலை தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டது. காலாண்டு விபரத்திரட்டுகளில் அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மை

மற்றும் குறிப்பிடக்கூடிய வேறுபாடுகள் உரிய காப்புறுதிக் கம்பனிகளுக்கு குறிக்கப்பட்ட கால எல்லையினுள் திருத்தப்படுவதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியினதும் காலாண்டு செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக, ஆணைக்குழு பொது மற்றும் நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் தவணைக் கட்டண வருமானம், உத்தரவாதமளிக்கப்பட்ட இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பனவற்றை விபரத்திரட்டின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தது. மேலும், முழுமையான பகுப்பாய்வு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு இலாபத்தன்மை, செலவினங்கள் மற்றும் கோரிக்கைகள் போன்றன குறித்த காப்புறுதி வழங்குனர்களின் காலாண்டு செயற்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், முன்னைய காலாண்டு எச்சரிக்கை விகிதங்களுடன் ஒப்பீடும் செய்யப்பட்டது.

2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், சபையின் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் அவர்கள் இணங்குகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் இரண்டு இணக்கப்பாட்டு சான்றிதழினை வழங்குமாறு கோரப்படுகின்றர்.

### உ) மாதாந்த விபரத்திரட்டுகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் 2019இல், நான்கு காப்புறுதிக் கம்பனிகள் இடர் அடிப்படையிலான மூலதன சட்டகத்தின் கீழ் மாதாந்த விபரத்திரட்டுகளை சமர்ப்பிப்பதற்கு கோரப்பட்டதுடன், இவற்றின் மூன்று கம்பனிகள் மாதம் முடிவடைந்து இருபத்தியொரு நாட்களினுள்ளும், ஒரு கம்பனி முப்பது நாட்களினுள்ளும் சமர்ப்பிப்பதற்கு கோரப்பட்டது. இந்த முடிவு அவர்களின் நிதியில் ஸ்தீரநிலை மற்றும் இணக்கம் என்பவற்றை பரிசோதித்ததன் பின்னர் எடுக்கப்பட்டது. அதற்கமைவாக, இந்தக் கம்பனிகளின் நிதி நிலமை சட்டத்தின் ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக இந்தக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த விபரத்திரட்டுகளை ஆணைக்குழு மீளாய்வு செய்தது.

## 2. கடன்தீர் எல்லை விதிகளுடனான (இடர் அடிப்படையிலான மூலதனம்) இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

2015 கடன்தீர் எல்லை விதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காப்புறுதி வியாபாரமும் குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதத்தையும் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தையும் பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் இரண்டும் பேணுதல் வேண்டும் என்பதுடன் அவர்களின் கடன்தீர் எல்லை கணிப்பீட்டினை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த விபரத்திரட்டுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கடன்தீர் எல்லை விதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு இவ்வாறான கணிப்பீட்டினை பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்கின்றது. காப்புறுதி வழங்குனர்கள் அவசியமான கடன்தீர் எல்லையை பூர்த்திசெய்வதற்கு தவறும் பொழுதில் அல்லது கணிப்பீடானது தவறாக இருக்கும் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அதனை சீர்செய்வதற்கும் மற்றும் கடன்தீர் எல்லையுடன் இணங்குவதற்குமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு சபை அவர்களுக்கு அறிவுறுத்தும்.

## 3. முதலீட்டு குறித்துரைப்புகளுடனான இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

### அ) அரச பிணையங்களில் முதலீடு

அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் அவர்களுடைய காப்புறுதி நிதிகளை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றனர். சட்டத்தின் 25ஆம் பிரிவுக்கு அமைவாக, அரச பிணையங்களில் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்களில் 20% வீதத்திற்கு குறையாத தொகையையும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் சொத்துக்களில் 30% வீதத்திற்கு குறையாத தொகையையும் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றர். குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட விபரத்திரட்டுகள் மற்றும் உரிய துணை ஆவணங்கள் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக அரச பிணையங்களில் முதலீடுகளை ஆணைக்குழு மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கின்றது.

யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது வேறுபாடுகள் அவதானிக்கப்படின், குறிப்பிட்ட கால வரையறைக்குள் உரிய திருத்தத்திற்கான நடவடிக்கையை எடுக்குமாறு உரிய காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்படும்.

### ஆ) தீர்மானம் 1இற்கு அமைவாக ஏனைய முதலீடுகள்

ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களும் அவர்களின் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்கள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் மீதிகளை 2011 மார்ச் 01ஆம் திகதி 1ஆவது தீர்மானத்திற்கும் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆணைக்குழு 1ஆம் தீர்மானத்திற்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களினால் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் அவர்கள் வழங்கிய விரபத்திரட்டுகளை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப ஒதுக்குகள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் முதலீட்டு விபரங்களை மீளாய்வு செய்கின்றது.

இந்த வருடம் 1ஆம் தீர்மானத்துடன் வேறுபட்டமை மற்றும் இணக்கப்பாடின்மை ஒரு காப்புறுதி வழங்குனரிடம் அவதானிக்கப்பட்டது. அதற்கமைவாக, கம்பனிக்கு உடனடியாக தீர்மானம் 1இற்கு அமைவாக அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கம்பனி, தீர்மானம் 1இற்கு அமைவாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது

## 4. கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) மீதான அமுலாக்கல் உபாயமார்க்கம்

காப்புறுதிக் கம்பனி கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளுக்கு அமைவாக மூலதன போதுமை தேவைப்பாடுகளை பாராமரிப்பதற்கு தவறின், ஆணைக்குழு தலையீட்டை மேற்கொண்டு, அந்தக் கம்பனி இடர் அடிப்படையிலான மூலதனத்தின் மீது அமுலாக்கப்பட்டுள்ள உபாயமார்க்கத்தின் அடிப்படையில் சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதற்கு காரணம், காப்பறுதிக் கம்பனிகளை முதல் கட்டத்திலேயே அடையாளம் காணல் மற்றும் குறிப்பிடத்தக்க அமுலாக்கல் பிரச்சினை வருவதற்கும் மற்றும் அவர்களுடைய கட்டுப்பாட்டை மீறுமளவிற்கு வளருவதற்கு முன்னர் வினைத்திறனான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகும். இது காப்புறுதி நிறுவனங்களின் செயற்திறனை உன்னிப்பாக கண்காணிக்க, நிதி நிலமை அல்லது கடன்தொகையில் ஏதேனும் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்படுவதையும் நெருக்கடி நிலைக்கு இட்டுச்செல்வதையும் தடுப்பதற்கு வழிவகுக்கும். இவ்வருடம் ஐந்து நிறுவனங்கள் 120% இருந்து 160% வீதமான மூலதனப் போதுமை விகிதத்தை அறிவித்தன, அதன்படி ஆணைக்குழு அமுலாக்க உபாயமார்க்கத்தின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது.

## 5. அமைவிட பரீட்சித்தல்

2019ஆம் ஆண்டின் போது, ஆணைக்குழுவினால் இடர் அடிப்படையிலான மேற்பார்வை முறைமையியல் அடிப்படையில் மூன்று காப்புறுதிக் கம்பனிகளில் அமைவிட பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டது. இந்த பரீட்சித்தல்கள் உயர் மட்ட இடர்களுடன் தொடர்புடைய காப்புறுதியாளர்களின் பிரதானமாக கூட்டிணைந்த ஆளுகை, நிதியியல் நிலமை, முதலீடுகள், தீர்க்கப்படாதவை மற்றும் ஏனைய தொழிற்பாட்டு செயற்பாடுகள், இடர் முகாமைத்துவம் மீளாய்வுகளை உள்ளடக்கியுள்ளது.

அதற்கமைவாக, ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட ஏனைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் அவர்களுடைய இணங்குவிப்பை மதிப்பீடு செய்வதற்கு காப்புறுதியாளர்களின் தொழிற்பாடுகள், முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. பிரதான செயற்பாடுகளின் செயன்முறை தொடர்பாக தற்போதுள்ள இடர் அகற்றல் உபாயமார்க்கங்கள், முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் தாக்கம் பரீட்சிக்கப்பட்டது. மேலும், காப்புறுதியாளர்களின் பொறுப்பு மதிப்பீடுகள், நடைமுறைகள் மற்றும் முறைமைகள் தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளின் சிரேஸ்ட அலுவலர்கள், உள்ளக/வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டாளர்களுடன் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. பணத்தை தூயதாக்கல் வழிகாட்டல் நடைமுறைகளுடனான இணக்கப்பாடு அமைவிட பரீட்சித்தலின் போது உறுதி செய்யப்பட்டது.

அமைவிட பரீசிலித்தலின் போதான அவதானிப்புகள் உரிய காப்புறுதி வழங்குயாளர்களுக்கு அவர்களுடைய பொறுப்புகளை மேம்படுத்துவதற்கான ஆணைக்குழுவின் விதப்புரையுடன் இணைத்து வழங்கப்பட்டது.

## 6. இலங்கை மத்திய வங்கிக்கு தகவல்களை வழங்குதல்

ஆணைக்குழு காலாண்டு விபரத்திரட்டுகளில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட, விபரங்களை காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் காலாண்டு செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் நிதி முறைமை நிலைப்படுத்தல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும்.

## 7. கைத்தொழில் கைநூல் 2018

2018 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கு சமர்ப்பிப்பதற்கு காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் தகவல்கள் மற்றும் புள்ளிவபரங்கள் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்பட்டதுடன், காப்புறுதிக் கைத்தொழிற்துறையாளர்களினதும், பங்குதாரர்களினதும் நன்மைக்காக “கைத்தொழிற்துறை கைநூல்” வெளியிடப்பட்டது. இந்தக் கைநூல் காப்புறுதிக் கம்பனிகளின் வேறுபட்ட காப்புறுதி வியாபார வகைகளின் மொத்த சொத்துக்கள், மொத்த எழுதப்பட் தவணைக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு, எழுத்துறுதி பெறுபேறுகள், கிடைக்கப்பெறும் மொத்த மூலதனம், கடன்தீரு நிலை மற்றும் இணைந்த வீதங்கள், தக்கவைப்பு வீதம் போன்ற வீதங்களையும் உள்ளடக்கிய தகவல்களைக் கொண்டிருக்கும்.

## 8. இடர் கருவி

வருடாந்த விபரத்திரட்டுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகளின் ஊடாக காப்புறுதி வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி மற்றும் ஏனைய தகவல்களின் அடிப்படையில், முன்னராக எச்சரிக்கை முறைமையாக ஒவ்வொரு கம்பனியினதும் பிரதான இடர்களை அடையாளம் காண்பதற்கு உள்ளக இடர் கருவியினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அபிருத்தி செய்துள்ளது. அதற்கமைவாக, ஒவ்வொரு கம்பனியினதும் இடர்கள், மூலதன போதுமை வீதம், மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனம், எழுத்தாக்க விகிதம், இலாப வீதம் போன்றவற்றின் அடிப்படையில் குறைந்த, நடுநிலையான மற்றும் உயர்ந்தவை என வகைப்படுத்தப்படுகின்றதுடன் கண்காணிப்பு தலையீடுகள் மேற்கொள்ளப்படும்.

## 9. பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடல் நடவடிக்கைகள

### அ. அவ்விடத்துக்குச் சென்று ஆய்வுசெய்தல்

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் புலன்விசாரணைப் பிரிவுடன் இணைந்து ஆணைக்குழு மூன்று பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடல் தொடர்பான கள விசாரணைகளை 2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதியியல் பரிமாற்றங்கள் தொடர்பான அறிக்கையிடல் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் இணைந்து வாசிக்க வேண்டிய பிரிவு 15(1)(உ) விற்கு அமைவாக, நிதியியல் பரிமாற்றங்கள் தொடர்பான அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுடன் காப்புறுதிக் கம்பனிகள் ஒழுகுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக நடாத்தியது. அவர்களுடைய பதிலைப் பெறுவதற்காக உரிய காப்புறுதியாளர்களுக்கு கள விசாரணை தொடர்பான அவதானிப்புகள் தெரிவிக்கப்பட்டன.

### ஆ. நிதியியல் செயற்பாட்டு இலக்குப் படையின் கள ஆய்வுக்குழுவுடன் சந்திப்பு

பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய கொள்கை வகுப்பாளரான FATF இலங்கையை பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடுவதில் குறைபாடுகளுக்கான உபாயமார்க்கத்துடனான அதிகாரசபையாக பட்டியலிட்டுள்ளது. அதனுடைய இணக்கப்பட்டு பணத் தூய்தாக்கலுக்கு தடைசெய்வதுடன் பயங்கரவாதத்திற்கான நிதியிடலை எதிர்த்தலுக்கான ஆவணத்துடன், பணத் தூய்தாக்கலுக்கு எதிரான உலகளாவிய கொள்கை அமைப்பாளர் பணமோசடி மற்றும் எதிர் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் (ஏ.எம்.எல்/சிஎப்டி) இலங்கையை மூலோபாய ஏஎம்எல்/சிஎப்டி அதிகார வரம்பு, அதன் இணக்கத்தில் சிப்டி குறைபாடுகள் அதிகம் கொண்ட பொதுவாக “சாம்பல் பட்டியல்” என்பதில் அடையாளம் காண்கின்றதுடன், அதற்கான அமுல்படுத்தலுக்கு கால வரையரையுடனான செயற்பாட்டுத்திட்டத்தை வழங்குகின்றது. செயற்பாட்டுத்திட்டத்தின் ஒரு விடயம் காப்புறுதித் துறை உள்ளடங்களாக நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வையுடன் தொடர்புடையதாகும்.

அதற்கமைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காப்புறுதித்துறையில் பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடுவதற்கான இடர் அடிப்படையிலான மேற்பார்வையின் பிரயோக அமுல்படுத்திலின் மீதான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் புலன்விசாரணை அலகின் அலுவலர்களுடனான கலந்துரையாடலின் போது 16 செப்டெம்பர் 2019 அன்று இலங்கைக்கு விஜயம் செய்த மதிப்பீட்டாளர்களின் குழுவைச் சந்தித்தது

### இ. பணத்தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடுவதற்கான இடர் கருவியின் அபிவிருத்தி மற்றும் இற்றைப்படுத்தல்

2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதியியல் பரிமாற்றங்கள் தொடர்பான அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இலங்கை மத்திய வங்கியின் நிதியில் புலன்விசாரணை அலகுடன் இணைந்து 2020ஆம் ஆண்டுக்கான அனைத்து ஆயுள் காப்புறுதிக் கம்பனிகளின் பணத்தூய்தாக்கல் பாதிப்புகளை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

அதற்கமைவாக, குழுவின் பரந்த மேற்பார்வையை கவனத்தில் கொண்டு வினாக்கொத்து தயார்செய்யப்பட்டது. ஒவ்வொரு கம்பனியினதும் பண்டங்கள், வாடிக்கையாளர்கள், அரசியல் சார்ந்த நபர்கள், விநியோகச் சங்கிலிகள், கூட்டிணைந்த ஆளுகை, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், இடர் முகாமைத்தவம், பணியாளர்களின் விடாமுயற்சி, இணக்கப்பாடு, உள்ளக கட்டுப்பாடுகள் போன்ற பரந்தளவிலான தகவல்களை சேகரிக்கும் நோக்கத்துடன் கேள்விக்கொத்து தயார் செய்யப்பட்டது. 2020ஆம் ஆண்டுக்கான கம்பனிகளின் இடர் மட்டத்தை மதிப்பீடு செய்வதற்கும் இடர் கருவிக்கும் இணைக்குவதற்காக ஆயுட் காப்புறுதியாளர்களுக்கு கேள்விக்கொத்து வழங்கப்பட்டது.

## 10. IFRS 17இனை அமுல்படுத்தவதற்கு தயாராவதற்கான மதிப்பீடு

1 ஜனவரி 2021 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் அறிக்கையிடல் காலத்திற்கு பயனுறுதி பெறும்வகையில் காப்புறுதி ஒப்பதங்கள் மீதான சர்வதேச நிதியியல் அறிக்கையில் நியமங்கள் 17 ஆரம்பத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அமுல்படுத்தலுக்கான காலம் ஒரு ஆண்டால் தள்ளிப்போடப்பட்டுள்ளது. சர்வதேச நிதியியல் அறிக்கையில் நியமங்கள் 17 இனை அமுல்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய முக்கிய மாற்றங்களை கருத்தில் கொண்டு, ஆணைக்குழு காப்புறுதிக் கம்பனிகளுக்கு கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட 17இற்கான நிதியியல் தாக்கம் மற்றும் முறைமை தேவைப்பாடு என்பவற்றுக்கான இடைவெளிப் பகுப்பாய்வு, கம்பனிகளினால் அடையாளம் காணப்பட்ட அவர்களுடைய பாதை வரைபடத்தில் திட்ட மாற்றங்கள் மற்றும் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு போன்ற பிரதான சவால்கள் என்பவற்றை உள்ளடக்கி அவர்களின் தயார்நிலையை சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளது.

## 11. SLFRS 16 குத்தகைகள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் புதிதாக SLFRS 16 – குத்தகையை விநியோகித்துள்ளது. இந்த நியமங்கள் குத்தகைகளின் அங்கீகரிப்பு, அளவீடு, பிரகடனப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தலுக்கான கொள்கைளை உருவாக்குகின்றன. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக குத்தகை வழங்குபவர்களும் குத்தகை பெறுபவர்களும் உரிய தகவல்களை உண்மையான வகையில் வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தவதே இதன் நோக்கமாகும். இந்தத் தகவல்கள் ஒரு உருவகத்தின் நிதியியல் நிலை, நிதியியல் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் மீது அந்தக் குத்தகைகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு நிதியியல் பயன்படுத்துனர்களுக்கான அடிப்படையை வழங்குகின்றது. இந்த நியமத்தின் அமுல்படுத்தலுக்கான கம்பனிகளின் கடன்தீர் நிலமைத் தாக்கத்திற்கான நிதியியல் கூற்றுக்களைப் பாதிக்கும் வகையில் நிதியியல் கூற்று காட்சிப்படுத்தலின் வரையறைக்கு தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் இடர் அடிப்படையிலான கடன் மற்றும் கடன்தீர் அறிக்கையிடல் மாதிரிகளைத் திருத்தி வழங்குமாறு இலங்கை காப்புறுதிச் சங்கம் கோரியுள்ளது. அதற்கமைவாக SLFRS 16இன் அமுல்படுத்தலின் மீது கைத்தொழிற்துறையின் தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## காப்புறுதித் தரகர் கம்பனிகள்

### 1. காலாண்டு விபரத்திரட்டுகள், இடைக்கால நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் மீளாய்வு

2010 பெப்பரவரி 25ஆம் திகதி வெளியிடப்பட்ட 1642/16 (முதலாம் அட்டவணை) வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து நாட்களினுள் காப்புறுதி தரகர் கம்பனிகள் அவர்களின் காலாண்டு விபரத்திரட்டுகளை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

2019ஆம் ஆண்டு, அனேகமான காப்புறுதி தரகர் கம்பனிகள் தங்கள் காலாண்டு விபரத்திரட்டுகளை ஆணைக்குழுவிற்கு இறுதி நாளுக்கு முன்னராக சமர்ப்பித்தன. அவர்களின் நிதியியல் நிலைமையை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அவை சட்டம், ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றமையை கண்காணிப்பதற்கும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்ப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதாயின், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவற்றினை திருத்துமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

நிதியாண்டு முடிவடைந்ததும் அதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் காப்புறுதி தரகர் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதாயின் அவற்றினை திருத்துமாறு நடவடிக்கை எடுக்குமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

### 2. தவணைக் கட்டணங்களின் சேகரிப்பினைக் கண்காணித்தல்

சட்டத்தின் 89ஆம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதியாளர்களுக்காக காப்புறுதி தவணைக் கட்டணங்களை காப்புறுதி தரகர் கம்பனிகள் சேகரித்து உரிய காப்புறுதியாளர்களுக்கு சேகரித்து இரு வாரங்களினுள் வரவு வைத்தல் வேண்டும். இந்த காலாண்டு விபரத்திரட்டுகள் மற்றும் அமைவிட கண்காணிப்புகள் மூலம் சட்டத்தின் 89ஆம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதித் தரகர் கம்பனிகள் இணங்குகின்றனவா என்பதை ஆணைக்குழு உன்னிப்பாக கண்காணித்தது. இந்த பிரிவுக்கு அமைவாக இணங்காத காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு எதிராக அவசியமான நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டது.

### 3. அமைவிட பரீட்சிப்புகள்

ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள் இணங்கப்படுகின்றதா என மதிப்பிடுவதற்காக 2019ஆம் ஆண்டினுள் ஆணைக்குழுவினால் பத்து அமைவிட பரீட்சிப்புகள் காப்புறுதி தரகர் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டது. அமைவிட பரீட்சிப்புகளின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள், உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளின் திருத்தச் செயற்பாடுகளுக்காக ஆணைக்குழுவின் விதப்புரைகள் கம்பனிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. மேலும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மீறப்பட்டமைக்காக பொருத்தமான ஒழுங்காற்றல் நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

### 4. பதிவினை புதுப்பித்தல்

2020ஆம் ஆண்டுக்கான அவற்றின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் காப்புறுதி தரகர் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்றது. புதுப்பிப்பதற்கு முன்னர் அவற்றின் நிதியியல் நிலமையை தீர்மானிப்பதற்காக, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகள் என்பனவற்றை ஆணைக்குழு பகுப்பாய்வு செய்தது.

### 5. புதிய காப்புறுதித் தரகர் கம்பனிகளைப் பதிவு செய்தல்

இவ்வருடத்தினுள் காப்புறுதி தரகர் கம்பனிகளாக பதிவினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்மொழியப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. ஆணைக்குழு பதிவிற்கு விதப்புரை செய்வதற்கு முன்னர், விண்ணப்பிக்கப்பட்ட கம்பனியின் விற்பனை மற்றும் நிதியியில் முன்மதிப்பீடு, நிறுவனத்தின் கட்டமைப்பு, கிடைக்கப்பெறும் உட்கட்டமைப்பு வசதி மற்றும் வெளிவாரி கணக்காய்வாளரின் சான்றிதழ் உள்ளடங்களாக வியாபாரத் திட்டத்தை பகுப்பாய்வு செய்தது.

# ஒழுங்குபடுத்துனர் மீளாய்வு

**காப்புறுதிக் கம்பனிகளின் பதிவு**

இவ்வருடம் ஆணைக்குழு புதிய பதிவுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. எனினும், வேறுபடுத்தல் செயன்முறையைப் பூர்த்தி செய்த காரணத்தினால் சனச பொதுக் காப்புறுதி கம்பனிக்கு பொதுக் காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. அதற்கமைவாக அதன் தொழிற்பாடுகளை நிறுத்துவதன் காரணமாக அதன் கலைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது அதனுடன் சேர்த்து பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 28 ஆகும்.

**இணைப்பு I** ஆணைக்குழுவில் பதிவுசெய்துள்ள அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளின் பெயர்களையும் அவை கொண்டு நடாத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட வியாபார வகை/வகைகள் என்பவற்றை வழங்கும்.

**அமுலாக்கல் நடவடிக்கைகள்**

**காப்புறுதிக் கம்பனிகள்**

**இடைநிறுத்தல்கள்**

ஆணைக்குழு, 28 ஜுன் 2017 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு காப்புறுதி நிறுவனத்தின் மோசமடைந்துவரும் நிதி நிலையை பரிசீலித்ததன் பின்னர், நீண்ட கால மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்கள் இரண்டையும் தொடர வழங்கப்பட்ட அதன் பதிவை நிறுத்தி வைத்தது. அதற்கமைவாக, ஏன் அத்தகைய இடைநீக்கம் நீக்கப்பட்டு பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என நிறுவனம் ஆணைக்குழுவிற்கு எழுத்துமூலமான காரணத்தைக் காட்ட வேண்டியதுடன் சட்டத்தின் ஏற்பாடுகளுடன், இணங்குவதற்கான ஒழுங்குமுறைத் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்வதற்கான மூலதனத் திட்டத்தை ஆணைக்குழுவின் கவனத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். இதுவரை கம்பனியினால் அதனை சமர்ப்பிக்க முடியாதுள்ளதனால், கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த இடைநிறுத்தல் 20 ஜுலை 2017 இல் இருந்து 2 ஏப்பிரல் 2019 வரை சட்டத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன தேவைப்பாட்டுடன் இணங்கும் வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த இடைநிறுத்தல் சில குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கு உடன்பட்டமையினால் 03 ஏப்பிரல் 2019ஆம் திகதியில் இருந்து நீக்கப்பட்டது. சிலிங்கோ டக்காபுல் லிமிடட் நிறுவனத்திற்கு 2009 இல் விதிக்கப்பட்டுள்ள இடைநிறுத்தல் 2019 வரை தொடர்கின்றது. அத்துடன், ஆணைக்குழுவினால் நியாயமான கோரிக்கைகள் என அடையாளம் காணப்பட்ட கோரிக்கைகள் அனைத்தையும் நிறுவனம் தீர்த்து வைத்திருந்தாலும், சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது நீதிமன்ற வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று வருவதனால், உரிமைக்கோரல் தீர்வு செயன்முறையை முடிக்க முடியவில்லை. சட்டத்தின் பிரிவு 18(1)இன் படி, ஒரு குறிப்பிட்ட வகை அல்லது காப்புறுதி வியாபாரத்தின் துணை வகை மற்றவற்றுடன் கடனைத் தக்கவைக்கத் தவறியதாக ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அல்லது சட்டத்தின் எந்தவொரு விதிமுறையையும் அல்லது எந்தவொரு விதியையும் அல்லது விதிக்கப்பட்ட நிபந்தனையையும் அல்லது சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட எந்தவொரு பணிப்புரையையும் அல்லது தீர்மானத்தையும் மீறியமைக்காக ஒரு காப்புறுதியாளரின் பதிவை ஆணைக்குழு இரத்து செய்யலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

**எச்சரிக்கைகள்**

ஒரு காப்புறுதியாளரினால் 31 மார்ச் 2018 மற்றும் 30 ஜுன் 2018ஆம் திகதிகளில் விருப்பத்திற்குரிய மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, இந்தக் கம்பனி கென்யா ரீஇன்சூரன்ஸ் கோர்பரே'ன் லிமிடட் நிறுவனத்துடன் மீள்காப்புறுதி செய்திருந்ததுடன், இது ஆணைக்குழுவினால் குறித்தரைக்கப்பட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் மீதான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கான தரப்படுத்தலுக்கும் குறைவாகக் காணப்பட்டது. மேலும், கென்யா ரீஇன்சூரன்ஸ் கோர்பரேஷன் லிமிடட் நிறுவனத்தின் தரப்படுத்தல் கீழ் இறக்கப்பட்ட திகதிக்குப் பின்னரும் மேற்குறித்த மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட தரப்படுத்தலிலும் குறைவான மீள்காப்புறுதிக் கம்பனியுடன் அடுத்த காலாண்டிலும் மீள்காப்புறுதி ஒப்பந்தத்தைத் தொடர்ந்தமையினால், ஆணைக்குழு மேற்குறித்த மீள்காப்புறுதி நியதிகள் மற்றும் நியமங்களுடன் இணங்காமை தொடர்பாக மேற்குறிப்பிட்ட காப்புறுதியாளருக்கு எச்சரிக்கையினை வழங்கியது.

சட்டத்தின் 57ஆம் பிரிவுக்கு அமைவாக, இதே கம்பனிக்கு ஆணைக்குழுவின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளாமல் வங்கிகளிடமிருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதைத் தவிர்த்தல் வேண்டும் என ஆணைக்குழு 2012ஆம் ஆண்டில் பணிப்புரை ஒன்றினை வழங்கியுள்ளது. எனினும் 2016 மற்றும் 2017 இல், கம்பனி தன் மாலைதீவு கம்பனியைத் தொடர்ந்து அதன் ஆயுள் கம்பனிப் பங்குகளையும் பிணையம் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வங்கியுடன் ஒப்பந்தத்திற்கு வந்துள்ளது. மேற்குறித்த இரண்டு கொடுக்கல் வாங்கல்களும் ஆணைக்குழுவின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டதனால், மேற்குறித்த பணிப்புரையை மீறியுள்ளது. அதனால், ஆணைக்குழு மேற்குறிப்பிட்ட இரு மீறலுக்காக 2019 இல் எச்சரிக்கையை விநியோகித்துள்ளது.

ஆணைக்குழு அந்தக் காப்புறுதி நிறுவனத்தின் பிரதான அலுவலருக்கும் பிரதான நிதி அலுவலருக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளையும் ஆணைக்குழுவினால் 2 ஒகஸ்ட் 2017 இல் வழங்கப்பட்ட பணிப்புரையையும் மீறியமைக்காக எச்சரிக்கையை வழங்கியுள்ளது. இந்தத் தீர்மானம் ஆணைக்குழுவினால் காப்புறுதியாளர் விபரத்திரட்டுகளையும் ஏனைய கோரப்பட்ட தகவல்களையும் வழங்காமை/கால தாமதமாக வழங்கியமை/தவறாக வழங்கியமை என்பவற்றைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும்.

**பணிப்புரை**

ஒரு காப்புறுதியாளர் தனது விவகாரங்களை தேசிய நலனுக்கு தீங்குவிளைவிக்கும் வகையிலும் பூட்கையாளர்களின் நலனுக்கு பாதகமான முறையிலும் மேற்கொள்வதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் மேற்குறித்த கம்பனியின் பிரதான அலுவலர் மற்றும் பிரதான நிதி அலுவலர் தங்களுடைய கடமைகளை வினைத்திறனுடனும் அக்கறையுடனும் மேற்கொள்வதிலிருந்து தவறியுள்ளனர் என்பதும் அவதானிக்கப்பட்டது. அதனால், மேற்குறித்தவற்றைக் கவனத்தில் கொண்டு, காப்புறுதியாளருக்கு ஆணைக்குழு பிரிவு 57இன் கீழ், அதன் பிரதான அலுவலரையும் பிரதான நிதி அலுவலரையும் நீங்குவதற்கான பணிப்புரையை வழங்கியது

**புதிய காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவு மற்றும் காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவைப் புதுப்பித்தல்.**

காப்புறுதி தரகர்களாக பதிவுசெய்ய ஆர்வமுள்ள ஆட்களிடமிருந்து இந்த ஆண்டில் 4 புதிய வியாபாரத்திட்டங்களை ஆணைக்குழு பெற்றது. இந்த வருடம் ஆணைக்குழு மேற்குறித்த நான்கு ஆட்களுக்கும் பெயர் அனுமதியை வழங்கியது. அத்துடன் ஆணைக்குழு மேற்குறித்த கம்பனிகளுக்கு இந்த வருடத்தில் காப்புறுதி தரகுக் கம்பனிகளாக செயற்படுவதற்கான பதிவினையும் வழங்கியது.

2020ஆம் ஆண்டுக்கு அவர்களுடைய புதுப்பித்தல்களை மேற்கொள்வதற்கு 64 காப்புறுதி கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், சட்டத்தின் தேவைப்பாட்டுக்கு அமைவாக இணங்கியமையினால் அதில் 62 கம்பனிகளுக்கு பதிவைப் புதிப்பித்தலுக்கான அனுமதி வழங்கப்பட்டது. ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டின் கீழ் தேறிய மூலதன நிலை காணப்பட்டதனால் இரு கம்பனிகளின் புதுப்பித்தல் 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று நிலுவையில் இருந்தது. எனினும் ஒரு

காப்புறுதி தரகர் கம்பனி அதனைத் தொடர்ந்து தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தமையினால், ஆணைக்குழுவினால் அதன் பதிவினைப் புதுப்பிக்க முடிந்தது. மற்றைய கம்பனியின் புதுப்புத்தல், அவசியமான தேவைப்பாடுகளுடன் இணங்காமையினால் நிலுவையில் உள்ளது.

**இணைப்பு II:** ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/வகைகள் என்பவற்றை வழங்குகின்றது.

**அமுலாக்கல் நடவடிக்கைகள்**

**காப்புறுதித் தரகர் கம்பனிகள்**

**எச்சரிக்கைகள்**

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் இரு காப்புறுதித் தரகர் கம்பனிகளுக்கு எச்சரிக்கை கடிதங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டன. ஆறு மாத காலத்திற்கு மாதாந்த அடிப்படையில் விபரத் திரட்டுகளை சமர்ப்பித்தல் வேண்டும் என சட்டத்தின் 96 அ பிரிவுக்கு அமைவாக கோரப்பட்டிருந்த போதிலும், கம்பனி அதனுடன் இணங்காமை காரணமாக ஒரு எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டது. சட்டத்தின் பிரிவு 86 (1) இற்கு அமைவாக இணங்குவதற்கு தவறியமையினால், ஆணைக்குழுவினால் இன்னுமொரு எச்சரிக்கை கடிதம் காப்புறுதி தரகர் கம்பனிக்கு அனுப்பப்பட்டது.

சட்டத்தின் பிரிவு 86(1) உடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2010 பெப்பரவரி 25ஆம் திகதி வெளியிடப்பட்ட 1642/16ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்ளவாறு, ஒவ்வொரு காப்புறுதி தரகரும் ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்ததும், அதனைத் தொடர்ந்து வரும் நாற்பத்தி ஐந்து நாட்களினுள் காப்புறுதி தரகர் கம்பனியின் பிரதான அலுவலர் மற்றும் பணிப்பாளரினால் சான்றுபடுத்தப்பட்ட காலாண்டு விபரத்திரட்டை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்புரைகள்**

இரண்டு காப்புறுதி தரகர் கம்பனிகளின் தேறிய மூலதன நிலை அவதானிக்கப்பட்டதுடன், இது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான இ.ரூபா 2.5மில்லியனை விடக் குறைவாகக் காணப்பட்டதுடன், ஆணைக்குழு அவர்களுக்கு மூலதனத்தை உள்ளீடு செய்யுமாறும் உள்ளீடு செய்யப்பட்டதன் பின்னர் இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளுடன் கம்பனி பதிவாளர் நாயகத்தினால் சான்றுபடுத்தப்பட்ட படிவ இலக்கம் 06 இனை சமர்ப்பிக்குமாறு பணித்தது. அத்துடன் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகளுக்கு மேலதிகமாக, மாதாந்த அடிப்படையில் காலாண்டு விபரத்திரட்டு மாதிரியைப் பயன்படுத்தி விபரத்திரட்டுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.

**இடைநிறுத்தல்கள்**

ஐந்து காப்புறுதித் தரகர் கம்பனிகள் காலாண்டு முடிவடைந்து ஒரு மாதத்தினுள் குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதனால் 19ஆவது பணிப்புரையுடன் இது இணங்காமையினால், அந்தக் கம்பனிகள் இணக்கப்பாட்டினை அடையும் வரை அவற்றின் பதிவினை இடைநிறுத்தியது. இரண்டு தரகர் கம்பனிகளால் குறிப்பிடப்பட்ட இணக்கத்தை வருடத்தினுள் அடைவதற்கு முடியாமல் போனதனால், அவற்றின் இடைநிறுத்தல் மேலும் நீடிக்கப்பட்டது

காப்புறுதிக் கணிப்பீட்டாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டாளர்களின் பதிவினைப் புதுப்பித்தல்.

இவ்வருடத்தினுள் ஆணைக்குழு 6 நபர்களை நட்டக் கணிப்பீட்டாளர்களாக பதிவு செய்வதற்கு அனுமதியினை வழங்கியது. அத்துடன், ஆணைக்குழு இவ்வருடத்தினுள் 10 நபர்களின் பதிவினை நட்டக் கணிப்பீட்டாளர்களாக புதுப்பிப்பதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியது.

சட்டத்தின் பிரிவு 114(1)ஆம் பிரிவுக்கு அமைவாக, "காப்புறுதிக் கணிப்பீட்டாளர்" என்பவர் அலசியாராய்வதில் விசேட அறிவினைக் கொண்டுள்ளவராகவும் காப்புறுதிக் கோரிக்கைகளில் இருந்து எழும் நட்டங்களை மதிப்பிடக்கூடியவராகவும் சட்டத்தின் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக காப்புறுதிக் கணிப்பீட்டாளராகவும் பதிவு செய்யப்பட்டவர் ஆவார்.

**இணைப்பு III:** ஆணைக்குழுவில் காப்புறுதிக் கணிப்பீட்டாளராக பதிவு செய்தவர்களின் பெயர்களையும் அனுமதிப்பத்திரத்தின் செயல்வலுத் திகதியையும் வழங்கும்.

**ஒழுங்குமுறைப்படுத்தல்/ஆலோசனை நடவடிக்கைகள்**

1. ஒரு கப்பல் போக்குவரத்து உருவகத்தினால் சில கப்பல் தொகுதிக்கு வெளிநாட்டு காப்புறுதியாளருடன் ஹல், இயந்திரங்கள் மற்றும் போர் இடர் காப்புறுதி முறைமையைத் தொடர்வதற்கு ஆணைக்குழுவிடம் இருந்து அனுமதி கோரப்பட்டிருந்தது, மேற்குறிப்படப்பட்ட காப்புறுதிக்கு ஆணைக்குழுவினால், சட்டத்தின் பிரிவு 101இற்கு அமைவாக, 2019 ஜுன் மாதத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

   சட்டத்தின் பிரிவு 101இற்கு அமைவாக, இலங்கையில் உள்ள எந்தவொரு நபரும், ஆணைக்குழுவினால் விசேட அனுமதி வழங்கப்பட்ட ஏனைய காப்புறுதிகள் போன்ற மற்றும் மீள்காப்புறுதி வியாபாரம் தொடர்புடையவை தவிர்ந்த, ஏனைய காப்புறுதி தொடர்பாக ஆணைக்குழுவின் முன்னனுமதியின்றி, நேரடியாக அல்லது மறைமுகமாக எந்தவொரு காப்புறுதி வியாபாரத்தையும் ஆணைக்குழுவுடன் பதிவினை மேற்கொள்ளாத காப்புறுதியாளருடனும் மேற்கொள்ள முடியாது. மேலும், அந்த அனுமதி காப்புறுதி கைத்தொழிற்துறை மற்றும் நாட்டின் நலன் கருதி அரசாங்கத்தின் கொள்கையைக் கருத்தில் கொண்டே வழங்கப்படும்.

2. ஆணைக்குழு, 2018 பெப்பரவரி 27ஆம் திகதி காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கான புதுப்பித்தல் கட்டணம் தொடர்பாக 9ஆவது தீர்மானத்தை திருத்தியது. இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தின் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு, 2018 ஓகஸ்ட் 13ஆம் திகதி காப்புறுதி தரகர்களுக்கான பதிவினை புதுப்பித்தலுக்கான தீர்மானம் 9இனை காப்புறுதி திருத்தியது. அதன் பின்னர், இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் 2019இல் மேலும் புதுப்பித்தல் கட்டணத்தைக் குறைக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. எனினும் ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னரே திருத்தங்களை மேற்கொண்டதனால் அந்த வேண்டுகோளை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை.

3. 2010 ஒக்டோபர் 05ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1674/4 இனால் திருத்தப்பட்ட 23 செப்டெம்பர் 2002ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1255/3 இன் 2(சீ)(ii) விதியின் நியதிகளுக்கு அமைவாக, இலங்கை காப்புறுதி நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஆட்சேர்ப்புக்கு முன் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வருங்கால காப்புறுதி முகவர்களினால் வழங்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தகைமைகளை கருத்தில் கொண்டு ஆணைக்குழு அனுமதிகளை வழங்கியது.

   காப்புறுதி முகர்களின் தகைமையாக (2010 ஒக்டோபர் 05ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல்

இலக்கம் 1674/4 இனால் திருத்தப்பட்ட 23 செப்டெம்பர் 2002ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1255/3 இல் 2(சீ)(ii) விதியின் கீழ் காப்புறுதி முகவராகப் பதிவு செய்வதற்கான ஒரு மிகக் குறைந்த தகைமையாக கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஈ 2(சீ)(ii) விதியின் கீழ் யாரேனும் நபர் குறிப்பிடப்பட்ட தகைமைக்கு சமமான அல்லது 2(சீ)(ii) விதியின் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையைவிட உயர்ந்த தகைமையைக் கொண்டிருப்பின் ஆணைக்குழு ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனியாகப் பார்க்கும்.

4. ஆணைக்குழு காப்புறுதிக் கம்பனிகளை வியாபாரத்தை ஆரம்பித்து முதல் மூன்று மாதங்களுக்கு மாதாந்தம் விபரத்திரட்டுகளை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு கோரியது. அவற்றினுடைய நிதி நிலமை அறிக்கையை மீளாய்வு செய்ததன் பின்னர், ஆணைக்குழு அந்தக் கம்பனிகளை மறு அறிவித்தல் வரை மாதாந்த அறிக்கையிடலைத் தொடருமாறு கோரியது. 12 மாத காலத்திற்கு விபரத்திரட்டுகளைச் சமர்ப்பித்ததன் பின்னர், கம்பனிகளை ஆணைக்குழுவிற்கு மாதாந்தம் விபரத்திரட்டுகளை சமர்ப்பிக்கும் தேவையை அகற்றியது. ஆணைக்குழு, அந்தக் கம்பனிகள் ஆணைக்குழுவின் இணக்காப்பாட்டுடன் இணங்கியுள்ளமையை ஏற்றுக்கொண்டுள்ளது

5. தாய்லாந்து காப்புறுதி ஆணைக்குழுக் காரியாலயம் காப்புறுதிச் சந்தைகளில் அதிகரித்துவரும் சர்வதேச நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்கும் இரு அதிகாரசபைகளுக்கும் இடையில் பரஸ்பர ஒத்துழைப்பை நாடுவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு ஆணைக்குழுவிடம் கோரியது. உரிய சட்ட அதிகாரங்களில் உள்ள காப்புறுதிச் சட்டங்களை நிர்வகித்தல் மற்றும் அமுல்படுத்தலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக, குறிப்பிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான அங்கீகாரத்தை வழங்கியதுடன், ஆணைக்குழு சார்பாக குறித்துரைத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான பிரதிநிதியையும் நியமித்தது. எனினும், ஏப்பிரல் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் நிகழ்வு பிற்போடப்பட்டது. சட்டத்தின் பிரிவு 5, ஆணைக்குழுவிற்கு அதன் நோக்கத்தையும் பொறுப்பினையும் பூர்த்தி செய்வதற்காக தகவல்களைப் பரிமாறிக்கொளவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆட்களுடன் இருதரப்பு அல்லது பல்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதற்கான அதிகாரத்தினை வழங்கியுள்ளது.

6. ஆணைக்குழு நீண்டகால காப்புறுதி வியாபாரத்தையும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தையும் வேறுபடுத்தலுக்கான படிமுறையில் அவர்களுடைய கம்பனியின் பெயர்களை மாற்றுவதற்கான வேண்டுகோளை காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொண்டது. அதற்கமைவாக, அந்தக் கம்பனியின் பணிப்பாளர் சபை வியாபாரத்திற்காகவும் வர்த்தக நாம பிரதிவிம்பத்திற்காக அவர்களுடைய பெயரினை விதப்புரை செய்தது.

சட்டத்தின் பிரிவு 96இற்கு அமைவாக, அவர்களுடைய கம்பனியின் பெயரின் ஒரு பகுதியாக காப்புறுதி எனும் பெயரைப் பயன்படுத்தவதற்கு, பொதுக் காப்புறுதிக் கம்பனியினை பதிவு செய்வதற்கான கடிதம் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது.

சட்டத்தின் பிரிவு 96இற்கு அமைவாக, காப்புறுதியாளர், சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர், தரகர் அல்லது ஒரு காப்புறுதி முகவர் போன்ற ஒரு தரகர் தவிர்நத எந்தவொரு நபரும், ஆணைக்குழுவின் எழுத்து மூல அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல், அந்தப் பெயர், தலைப்பு அல்லது விபரிப்பு அல்லது ஏதேனும் பில் தலைப்பு, கடிதத்தாள் தலைப்பு, அறிவித்தல் அல்லது விளம்பரம் போன்ற எதனையும் பிரதிநிதித்துவப்படுத்தி அந்தப் பெயரில் இலங்கையில் அந்நபர் காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதாக வெளிப்படுத்தும் “காப்புறுதி” எனும் சொல்லை அல்லது அச்சொல்லில் இருந்து பிறந்தவொரு சொல்லை அல்லது எந்தவொரு மொழியிலும் அதற்கு ஒத்த பொருள் தரும் சொல்லை அதன் பெயரின் ஒரு பகுதியாக, தலைப்பாக அல்லது விபரிப்பாக பயன்படுத்த முடியாது.

7. காப்புறுதித் தரகர் கம்பனிகள் சிலவற்றினால் வெளிநாட்டு சுகாதாரக் காப்புறுதிப் பண்டங்களை சேர்த்துக்கொள்வதற்கு சுற்றறிக்கை 36இன் கீழ் விநியோகிக்ப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு அனுமதியை வழங்கியது.

சுற்றறிக்கை 36 ஏதேனும் காப்புறுதி தரகர் கம்பனி ஏதும் வெளிநாட்டு காப்புறுதி பூட்கை வகைகளை தங்கள் வியாபாரத்தில் இணைந்துக்கொள்ள விரும்பின், அதற்கான அனுமதியை ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும் எனக் கோருகின்றது.

மேலும் காப்புறுதித் தரகர் கம்பனிகளினால், வெளிநாட்டு சுகாதார காப்புறுதிப் பண்டங்களை தொடர்ந்து பேணுவதற்காக அதனைப் புதுப்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைவாக, ஆணைக்குழு அதற்கான அங்கீகாரத்தை வழங்கியது.

8. ஆணைக்குழு பல்வேறு காப்புறுதிக் கம்பனிகளுக்கு காப்புறுதி வியாபாரத்தைத் தவிர்த்து ஏனைய வியாபாரங்களை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கியது. பணிப்புரை 10, அனைத்து காப்புறுதித் தரகர் கம்பனிகளும், சட்டதில் வரைவிலக்கணப்படுத்தப்படாத காப்புறுதி தரகர் வியாபாரம் தவிர்த்து ஏனைய துணைச் சேவைகளை வழங்குவதற்கு முன்னர் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

9. 2011ஆம் ஆண்டு 03ஆம் இலக்க திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ் காப்புறுதி கம்பனிகளுக்கான பணிப்பாளர்களை நியமிப்பதற்கான பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு ஒப்புதலை வழங்கியுள்ளது.

11. 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு பதிலளித்தது.

12. ஆணைக்குழு காப்புறுதியாளர்களின் பல காப்புறுதி வகைகளை மீளாய்வு செய்ததுடன், உரிய காப்புறுதியாளர்களுக்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவதானிப்பை வழங்கியுள்ளது. சுற்றறிக்கை 39, அனைத்துக் காப்புறுதியாளர்களும், அவர்களின் புதிய காப்புறுதிப் பண்டத்தை அறிமுகப்படுத்தவதற்கு முன்னர், அந்தப் பண்டம் தொடர்பான பூட்கை ஆவணங்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலனாய்வாளரின் மீளாய்வு


தற்போதுள்ள மற்றும் உத்தேச பூட்கை வைப்பாளர்களின் நன்மைகளை பாதுகாக்கும் நோக்கத்தின் கீழ், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் கோரிக்கையாளர்கள் இருவருக்கிடையில் தோன்றும் முரண்பாடுகளை தீர்த்துவைப்பதற்காக கோரிகையாளர்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உள்ளதனால் வழங்கப்பட்ட கோரிக்கை முரண்பாட்டினைத் தீர்த்து வைப்பதற்காக அனைத்துத் தரப்பினரினதும் பிரச்சனைகளையும் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பம் ஆணைக்குழுவினால் வழங்கப்படும். அத்துடன், யாரேனும் காப்புறுதியாளர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக யாதேனும் தவறான நடவடிக்கைகள் அல்லது ஒழுங்கீனங்கள் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதா என ஆணைக்குழு புலனாய்வு செய்யும்.

ஆணைக்குழுவிற்கு யாதேனும் முரண்பாடுகள் அல்லது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதும் (காப்புறுதியாளர், காப்புறுதி தரகருக்கு அல்லது முகவருக்கு எதிராக), எதிர் தரப்பினருக்கு அவர்களின் தீர்மானம் தொடர்பாக அதற்கான காரணத்தை சான்றளிக்கும் தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் கட்டியெழுப்புமாறு கோரப்படுவர். அவசியமாயின் ஆணைக்குழு தீர்மானத்திற்கு வருவதற்காக மூன்றாம் தரப்பினரிடமிருந்து உறுதிப்படுத்தல்களையும் தனிப்பட்ட நிபுணர்களிடமிருந்து கருத்துகளையும் பெற்றுக்கொள்ளும்.


### மொத்தப் பரிந்துரைகளின் பகுப்பாய்வு

மீளாய்வுக்குட்பட்ட இவ்வருடத்தில் மொத்தமாக 315 புதிய முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றதுடன், அதில் 352 விடயங்கள் (கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டு முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள் உள்ளடங்கலாக) இவ்வருடத்தினுள் தீர்க்கப்பட்டது. தீர்க்கப்பட்ட விடயங்களில் ஆணைக்குழுவின் தலையீடு காரணமாக 54 கோரிக்கைகள் காப்புறுதி பூட்கையாளர்களுக்கு சார்பாக தீர்க்கப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி இ.ரூபா 139 மில்லியன் ஆகும். கடந்த ஐந்து வருடங்களில் ஆணைக்குழுவுக்கு மொத்தமாக 1,529 விடயங்கள் கிடைக்கப்பெற்றது. விளக்கப்படம் 1இல் காட்டப்பட்டுள்ளவாறு, கடந்த ஆண்டுடன் (247) ஒப்பிடுகையில் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை (315) அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்பட்டமையினால், இவ்வருடத்தினுள் முறைப்பாடுகள் அதிகரித்திருக்கக்கூடும்.

விளக்கப்படம் 01: கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பரிந்துரைகள்





விளக்கப்படம் 2: 2019 இனுள் பரிந்துரைகளின் மாதாந்தப் பகுப்பாய்வு




இந்த ஆண்டினுள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை மாதாந்த அடிப்படையில் விளக்கப்படம் 2இல் காட்டப்பட்டுள்ளது. அதிகப்படியான முறைப்பாடுகள் ஜுலை மாதத்தில் (42) கிடைக்கப்பெற்றதுடன், ஏப்பிரல் மாதத்தில் 14 குறைந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. சாராசரியாக மாதத்திற்கு 26 பரிந்துரைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், ஜனவரி, ஜுன், ஜுலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மேற்படி சராசரி கிடைத்துள்ளது.

விளக்கப்படம் 03: 2019இன் மொத்த பரிந்துரைகளின் வகைப்படுத்தல்




2019ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்த பரிந்துரைககளின் வகைப்படுத்தல் விளக்கப்படம் 3இல் காட்டப்பட்டுள்ளது. இந்த மொத்த முறைப்பாடுகளில் முறையே 176 (56%) பரிந்துரைகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாகவும் 107 (34%) பரிந்துரைகள் நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்றவையாகும். இங்கு வழங்கப்பட்டவற்றில் 32 (10%) பரிந்துரைகள் பொது முறைப்பாடுகளாகும், இவற்றை காப்புறுதி வியாபாரத்துடன் வகைப்படுத்துவதற்கு முடியாது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், கிடைக்கப்பெற்ற பரிந்துரைகளில் பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள் 49% (2018இல்)வீதத்தில் இருந்து 56% வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் நீண்ட கால வியாபாரம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பரிந்துரைகள் 31% (2018இல்)வீதத்தில் இருந்து 34% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது. ஏனைய பரிந்துரைகளின் வீதமானது 20% (2018) வீதத்தில் இருந்து 10% வீதமாகக் குறைவடைந்துள்ளது.

### பொதுக் காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்ற பிரச்சினையின் வகையை அடிப்படையாகக் கொண்டு பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு தொடர்பான விபரங்கள் அட்டவணை1இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1: பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள்: பிரச்சினைகள் ரீதியாக

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| முரண்பாட்டுக் கோரிக்கைகள் | 164 | 93.2 |
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 131 | 79.9 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவு தொடர்பாக திருப்தியின்மை | 21 | 12.8 |
| கோரிக்கைக் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் | 12 | 7.3 |
| ஏனைய முறைப்பாடுகள் | 12 | 6.8 |
| மொத்தம் | **176** | **100.0** |

அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் உள்ள மொத்தப் பரிந்துரைகளில் (176) 164 (93.2%) பரிந்துரைகள் உரிமைக்கோரல் முரண்பாடுகள், மீதமுள்ள 12 (6.8%) பரிந்துரைகள் இடைக்கால கொள்கை இரத்து போன்ற பிற புகார்கள், கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை, தவணைக் கட்டணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகள் மற்றும் பூட்கை ஆவணங்களை பெறாதது போன்றவை யாகும். உரிமை கோரல் முரண்பாடுகளின் கீழ் பரிந்துரைகளுக்கான (79.9.%) முக்கிய பிரச்சினை பொறுப்பை ஏற்காதது, அதாவது உரிமைக்கோரல் மறுப்பாகும்.

பரிந்துரைக்கான ஆணிவேர், மோட்டார் வாகனக் காப்புறுதிக் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான பிரதான காரணம் வெளிப்படுத்தாமை அல்லது விபத்துகள் தொடர்பான பிரதான காரணங்களை தவறான முறையில் சித்தரித்தமை (உள்ளடங்காத பயன்பாடு, குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல், சாரதிக்கு முறையான சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை அல்லது காப்புறுதி செய்தவர் வாகன விற்பனையின் போது காப்புறுதி செய்வதற்கான விருப்பினைக் கொண்டிராமை போன்றன), விபத்து பற்றிய விளக்கத்துடன் சேதங்கள் பொருந்தாமை, முழுத் தவணைக் கட்டணத்திற்கான கட்டணத்தை செலுத்தாமையினால் விபத்து நடந்த வேளையில் பூட்கை இரத்து செய்யப்பட்டிருத்தல் போன்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அரசாங்க ஆய்வாளர் திணைக்களம், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மூன்றாம் சாட்சிகளிடமிருந்து (அவசியமானால்) அவதானிப்புகளை அழைப்பதன் மூலம் உரிமைகோரல் மறுப்பு தொடர்பாக விரிவான விசாரணைகள் நடாத்தப்பட்டன. பூட்கை இழப்பு காரணத்தை உள்ளடக்கிய சந்தர்ப்பங்களில், உரிமைகோரல் தொடர்பான பொருள் உண்மைகளை மோசடி அல்லது வேண்டும் என்றே சித்தரிக்காத வேளைகளில் ஆணைக்குழு உரிமைகோருபவர்களுக்கு உதவியது.

உரிமைகோரல் முரண்பாடுகளின் கீழ் பரிந்துரைகளுக்கு (12.8%) வீதம் வழங்கப்பட்ட/செலுத்தப்பட்ட உரிமைக் கோரலின் அதிருப்தி என்பன மற்றைய முக்கிய காரணமாகும். பூட்கை சொற்களின் தவறான புரிதல் மற்றும் இழப்பு சரிசெய்தல்/விலக்குகள் குறித்து காப்புறுதியாளர்கள் வழங்கிய விளக்கங்களில் தெளிவு இல்லாமை ஆகியவை இந்த பரிந்துரைகளுக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. இந்த மோதல்களில் பெரும்பாலனவை உரிமை கோருபவர்களுக்கு எழுத்துமூலமாக அல்லது ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் தேவையான விளக்கங்களை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகின்றது. ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட மீதமுள்ள பன்னிரெண்டு முரண்பாடுகள் உரிமைக்கோரல்களைத் தீர்ப்பதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பானதாகும். உரிமைக்கோரல்கள் குறித்து மேலதிக விசாரணைகளை இறுதியாக்குவதற்கு தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதில் காப்புறுதியாளர்கள் அல்லது பழுதுபார்ப்பவர்களின் தாமதங்கள் காரணமாக பெரும்பாலன தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

### நீண்டகால காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

கீழே அட்டவணை 2இல், நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

*அட்டவணை 2 - நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள்: பிரச்சினைகள் ரீதியாக*

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| முரண்பாட்டுக் கோரிக்கைகள் | 46 | 43.0 |
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 29 | 63.0 |
| முதிர்ச்சி மற்றும் சரணடைதல் நன்மைகள் | 11 | 24.0 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவுத் தொகை தொடர்பாக திருப்தியின்மை | 6 | 13.0 |
| ஏனைய முரண்பாடுகள் | 61 | 57.0 |
| மீள்செலுத்தல்/ இரத்துச்செய்தல் அல்லது புதுப்பித்தல் கோரிக்கைகள் | 35 | 57.3 |
| தகவலுக்கான ஏற்பாடு | 5 | 8.2 |
| தவணைக் கட்டணங்களின் தவறான கையாளுகை/ மோசடி | 3 | 5.0 |
| ஏனையவை | 18 | 29.5 |
| **மொத்தம்** | **107** | **100.0** |

அட்டவணை 2இற்கு அமைவாக, நீண்டகால காப்புறுதி தொடர்பான மொத்த பரிந்துரைகளில் (107) கோரிக்கை தொடர்பான முரண்பாடுகள் (43%) மற்றும் ஏனைய முறைப்பாடுகள் (57%) வீதமும் இருந்தன.

கோரிக்கை முரண்பாடுகளில் (63%) பெரும்பான்மையானவை காப்புறுதியாளரினால் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளாமை உள்ளது. கொள்கையின் தொடக்கத்திலோ அல்லது புதுப்பித்தலிலோ பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாது அல்லது தவறாக சித்தரிப்பதை அடிப்படையாகக் கொண்டது. காப்புறுதி ஒப்பந்தங்களின் காப்புறுதியின் அடிப்படைச் சட்டக்கொள்கை uberrimae fidei (உச்ச நம்பிக்கை) ஆவதுடன், ஒப்பந்தத்தின் இரு தரப்பினருக்கும் நேர்மாறாக செயற்படுகின்றது. அதாவது காப்புறுதியாளர் மற்றும் காப்புறுதி செய்யப்பட்டவர் இருவருக்கும் இது பொதுவானது. ஒரு காப்புறுதியாளர் முன்மொழிவு படிவத்தில் முன்மொழிந்தவர் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில், முன்மொழிவாளரின் உயிருக்கான ஆபத்தை ஏற்றுக்கொள்வது மற்றும் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கின்றார். எனவே பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாத அல்லது தவறாக சித்தரிப்பது காப்புறுதியாளர்களினால் உச்ச நம்பிக்கையை மீறுவதாகும்.

சில நிகழ்வுகளில், முன்மொழிவாளர்களினால் உண்மைகளை வெளிப்படுத்தாததற்கும் தவறாக சித்தரிப்பதற்கும் காரணம் தொடர்புடைய காப்புறுதிக் கொள்கைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாதது மற்றும் பொருள் தகவல்களை வெளிப்படுத்த வேண்டிய கடமை பற்றிய தெரியாமையாகும். ஆகையால் காப்புறுதியாளர்கள் வருங்கால பூட்கையாளர்களுக்கு தங்களது வெளிப்படுத்தல் கடமை மற்றும் அவ்வாறு செய்யத் தவறினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் குறித்து முறையாக அறிவிக்கப்படுவதை உறுதி செய்ய கூடுதல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தாமை அல்லது தவறாக சித்தரிக்கப்பட்டமை வேண்டுமென்றே மேற்கொள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய சில நிகழ்வுகளுக்கு மட்டுமே ஆணைக்குழுவினால் உதவ முடிந்தது.

பூட்கையாளர்களுக்கு ஒரு பூட்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அவர்கள் தவணைக் கட்டணங்களை தவறாமல் செலுத்துவதை உறுதி செய்வதற்கான ஒப்பந்தக் கடமை உள்ளது. உரிமைக்கோரல் நேரத்தில், தவணைக் கட்டணம் செலுத்தாததால் பூட்கைகளை இழந்த இடத்தில் உரிமைக்கோரல்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பூட்கையாளர்கள் சரியான நேரத்தில் தவணைக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பூட்கைகளைப் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் முரண்பாடுகள் ஏற்பட்டால் தீர்ப்பதற்கு அவர்கள் செலுத்தியதற்கான ஆதாரங்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அதன்படி, தவணைக் கட்டணங்களை சரியான நேரத்தில் செலுத்துவது அல்லது பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதை நியாயப்படுத்தக்கூடிய இடங்களில் மட்டுமே ஆணைக்குழு உதவ முடியும்.

உரிமைக்கோரல் முரண்பாடுகளின் மற்றைய முக்கிய காரணம் (24%) முதிர்வு மற்றும் சரணடைதல் நன்மைகளைப் பெறுவது தொடர்பானது. இத்தகைய முரண்பாடுகளுக்கு முக்கிய காரணம் கொள்கை சொற்களின் தவறான புரிதல் மற்றும் காப்புறுதியாளர்கள் வழங்கிய விளக்கங்கள் போதாமையாகும். பூட்கைதாரர்களுக்கு தேவையான விளக்கங்களை எழுத்து மூலமாகவும், ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் வழங்குவதன் மூலம் இந்த முரண்பாடுகளில் பெருமாலானவை தீர்க்கப்படலாம். உரிமைகோரல் தொகைகளில் உரிமைக்கோருபவர்களுக்கு அதிருப்தி அடைந்து கிட்டத்தட்ட முரண்பாடுகளிலும் (13%) உரிமை கோருபவர்களுக்கு தங்கள் சலுகைகளைத் தெரிவிக்கும் போது காப்புறுதியாளர்கள் வழங்கிய தெளிவுபடுத்தல்கள் அல்லது விளக்கங்கள் இல்லாததே காரணம் என்று தென்பட்டது.

பூட்கைகளை இரத்துச் செய்து தவணைக்கட்டணங்களை திரும்பப்பெறுதல் அல்லது பூட்கைகளுக்கு புத்துயிர் பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பாக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பிற புகார்களின் முக்கிய காரணம் (57.3%) பூட்கைகளை இரத்துச்செய்து தவணைக் கட்டணங்களை மீளப்பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பான விடயங்களில் உதவ முடியாது, ஏனெனில் அதற்குரிய காலம் முடிந்த பின்னர், அதாவது பூட்கை ஆவணம் கிடைத்த நாளிலிருந்து 21 நாட்களினுள் இல்லை எனில் பூட்கையாளர்களுக்கு அத்தகைய உரிமையில்லை, எனினும் பூட்கையாளர்கள் அல்லது உரிமைக்கோருபவர்கள் அனுபவிக்கும் இடங்கள் தெளிவாக தெரிந்த இடத்தில் நிவாரணம் வழங்க காப்புறுதியாளர்கள் ஒப்புக்கொண்டனர். புத்துயிர் பெறுவதற்கான கோரிக்கைகள் குறிப்பிட்ட காலத்தில் காலாவதியான பிறகு செய்யப்படும் பூட்கைக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கும் தாமதங்களை பூட்கையாளர்கள் நியாயப்படுத்தக்கூடிய இடத்தில் மட்டுமே உதவ முடியும். ஆயுட் காப்புறுதிப் பூட்கையாளர்கள் மீள்கொடுப்பவை கேட்பதற்கு பிரதான காரணமாக பூட்கையாளர்களுக்கு ஆயுட் காப்புறுதிப் பூட்கையின் முக்கியத்துவம் விளங்குவதற்கு போதிய அறிவு காணப்படாமை மற்றும் நாளாந்தக் கட்டணங்களை செலுத்துவதற்கு எதிர்கொள்ளும் நிதிப்பிரச்சினைகள் அமைந்திருந்தன.

தகவல்களை வழங்குவது தொடர்பான புகார்கள் (8.2%) விசாரணைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் தீர்க்கப்படலாம். தவணைக்கட்டணங்களை செலுத்துதல் மற்றும் முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பான 5% புகார்கள் மட்டுமே இருந்தன. சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களால் தவறாகப் பயன்படுத்துவதை நிறுவக்கூடிய இடத்தில் மட்டுமே பூட்கையாளர்களுக்கு உதவ முடியும். ஏனைய புகார்களில் (29.5%) பூட்கைக் கடன்கள், தவணைகட்டணம் செலுத்தும் முறைகள் மற்றும் கிளை அலுவலகங்களின் செயற்பாடு தொடர்பானவையாகும். விசாரணைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் இதுபோன்ற அனைத்துப் புகார்களும் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

8 தகவல்களை வழங்குவது தொடர்பான புகார்கள் (8.2%) விசாரணைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் தீர்க்கப்படலாம். தவணைக்கட்டணங்களை செலுத்துதல் மற்றும் முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பான 5% புகார்கள் மட்டுமே இருந்தன. சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களால் தவறாகப் பயன்படுத்துவதை நிறுவக்கூடிய இடத்தில் மட்டுமே பூட்கையாளர்களுக்கு உதவ முடியும். ஏனைய புகார்களில் (29.5%) பூட்கைக் கடன்கள், தவணைகட்டணம் செலுத்தும் முறைகள் மற்றும் கிளை அலுவலகங்களின் செயற்பாடு தொடர்பானவையாகும். விசாரணைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் இதுபோன்ற அனைத்துப் புகார்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### ஏனைய பரிந்துரைகள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், வியாபாரத்துடன் குறிப்பிடப்படாத 32 பிற விடயங்கள் முக்கியமாக நியாயமற்ற பணி நீக்கம்/தடுப்புப்பட்டியல் மற்றும் முகவர்களின் கல்வித் தகுதிகள் புகார்தாரர்களுக்கு உதவ அல்லது விவகாரங்களைத் தீர்ப்பதற்கான சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், சாத்தியமான இடங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### காப்புறுதி முரண்பாடு தீர்த்தல் முறைமையை முறைப்படுத்தல்

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசுக்கு மூலதன சந்தை மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2 தவணைகளில் கொள்கை அடிப்படையிலான கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. முதலீட்டாளர் தளத்தின் விரிவாக்கம் மற்றும் பல்வகைப்படுத்தல் மூலம் சேமிப்பு மற்றும் முதலீட்டிற்கு இடையிலான ஒதுக்கீட்டு செயற்திறனை மேம்படுத்துவதன் மூலம் நிதி இடைநிலை மற்றும் வள அணிதிரட்டலில் மூலதன சந்தையின் பங்கை மேம்படுத்தவதற்கான மூலதன சந்தை அபிவிருத்தி வரவுசெலவுத்திட்டம் ஆதரவை வழங்குகின்றது. நிதி வெளியீடு செயல்படுத்துவதைப் பொறுத்து ஆணைக்குழு உட்பட முகவர்களை செயல்படுத்துவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட சில கொள்கை நடவடிக்கைகள், கொள்கை நடவடிக்கைகளை செயல்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து செயல்படுத்தும் முகவர் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுகின்றது.
டிரன்ச் 2ஐப் பொறுத்தவரை, ஆணைக்குழு தனது பரிந்துரைகளை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் காப்புறுதித்துறைக்கு ஒரு முரண்பாடுகளைத் தீர்க்கும் குழுவை நிறுவி பணியாற்ற வேண்டும். ஜுலை 2018இல் சர்வதேச ஆலோசகர்களின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு, சட்டத்தின் 98ஆவது பிரிவின் கீழ் ஆணைக்குழவில் ஒப்படைப்பதன் மூலம் தற்போதுள்ள காப்புறுதி ஒம்புட்ஸ்மன் திட்டத்தை முறைப்படுத்தவும் மேம்படுத்தவும் ஆணைக்குழு முடிவுசெய்துள்ளது. நவம்பர் 2018இல் முன்மொழியப்பட்ட காப்புறுதி வியாபார ஓம்புட்ஸ்மன் மையத்திற்கான வரைவு கட்டமைப்பு மற்றும் செயற்படுத்தல் திட்டம் குறித்து பூர்வாங்க தொழில் ஆலோசனை நடாத்தப்பட்டது. ஆணைக்குழு தொழிற்துறையின் கருத்துகளைக் கருத்தில் கொண்டு கட்டமைப்பை திருத்தி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது. 2019 மே மாதம் கட்டமைப்பு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட IIOC கட்டமைப்பு கைத்தொழிற்துறைக்கு பகிரப்பட்டது. 2019 ஜுலை இல், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு உடன்பாட்டை கைத்தொழிற்துறைக்கு அறிவித்தது. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆலோசனையாளர்கள் மற்றும் கைத்தொழிற்துறையினருடன் இணைந்து பட்டயத்தை பூரணப்படுத்தும் செயன்முறைகளை மேற்கொண்டது.

# சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள் மீளாய்வு

காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் பிரதான காரணியாக அமைந்துள்ளது. பொது மக்களினால் காப்புறுதி என்பதன் கருப்பொருள் மற்றும் இடரைக் குறைக்கும் கருவியாக அதன் நன்மைகள் என்பன பொது மக்களினால் முழுமையாக விளங்கிக்கொள்ளப்படுதல் வேண்டும். காப்புறுதி சந்தை மீது பொது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் வளர்ப்பதற்கும் காப்புறுதி தொடர்பான விடயங்களுக்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வை உருவாக்குவதற்கு சந்தை அபிவிருத்தி மற்றும் வெளி உறவுகள் நடவடிக்கைகள் தொடர்பாக ஆணைக்குழு தன் கவனத்தை செலுத்தியுள்ளது.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் பல்வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆணைக்குழு நடாத்தியது. காப்புறுதியின் முக்கியத்துவம், காப்புறுதி கைத்தொழிற்துறை மற்றும் அதன் தற்போதைய அபிவிருத்திகள், பொருத்தமான காப்புறுதிப் பண்டங்களைத் தேர்ந்தெடுத்தல், மீதான அறிவினை மேம்படுத்துவதன் ஊடாக தற்போதைய மற்றும் உத்தேச பூட்கையாளர்களின் விருப்பத்தைப் பாதுகாப்பதற்கு இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஆணைக்குழு நடாத்தியது.

இந்த நோக்கத்தை தொடர, இலக்கு கேட்போர்களை அடைவதற்கு ஆணைக்குழு பல்வேறு தகவல் தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்தியது. தகவல்தொடர்பு ஊடகங்களின் விபரங்கள் மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வறுமாறு:

### காப்புறுதி விழிப்புணர்வு உருவாக்குதன் மீதான எல்லைகடந்த நிகழ்ச்சித்திட்டங்கள்

#### பிரதேச செயலக மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள்

இந்த நிகழ்ச்சிகள் பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டன. இத்தகைய திட்டங்களின் நோக்கம், கிராம அலுவலர்கள், பொலிஸ், மதுவரித் திணைக்கள அலுவலர்கள், சமூர்த்தி விளையாட்டு, அபிவிருத்தி, விவசாய மற்றும் ஏனைய கள அலுவலர்கள் மற்றம் அந்தந்த பிரதேச செயலகங்களின் பணியாளர்கள் போன்ற பொது மக்களுடன் தொடர்புறும் அலுவலர்களின் காப்புறுதி குறித்த அறிவை மேம்படுத்துவதாகும். ஆணைக்குழுவின் பங்கு (காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் ஒழுங்குபடுத்துனராக) பங்கேற்பாளர்களுக்கு ஆயுள் அல்லது சொத்துக்கான அபாயங்களை ஈடுகட்ட தேவையான காப்புறுதிக் கொள்கையை வைத்திருப்பதன் முக்கியத்தவம், காப்புறுதிக் கொள்கையாளரின் உரிமைகள் மற்றும் கடமைகள், காப்புறுதிப் பூட்கையை வாங்கும் போது மற்றும் பராமரிக்கும் போது மற்றும் காப்புறுதிக் கொள்கையின் கீழ் உரிமை கோரும் போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணிகள் பற்றி தெரியப்படுத்தப்படுவதாகும்.

எட்டு (8) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலக மட்டத்தில் யட்டவத்த, கலொன்பிந்துனுவவ, இம்புல்பே, பிபிலே, வீரகட்டிய, கடுவெல, வலப்பன மற்றும் வவுனியா ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 471 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியது. அந்தப் பிரிவுகளைச் சேர்ந்த அண்ணளவாக 743 அரசாங்க அலுவலர்கள் பங்குபற்றினர்.



பிரதேச செயலக மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள்

பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்பட்ட பிரதான விழிப்பணர்வு நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக, இரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை காலி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அமைந்துள்ள வணிக சம்மேளன அங்கத்தவர்களுக்கு நடாத்தியது.

#### இலங்கை தேசிய தொழில்முயற்சி கண்காட்சி

அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "Enterprise Sri Lanka National Exhibition" கண்காட்சியில் பங்குபற்றியது. ஆணைக்குழுவினால் காப்புறுதி தொடர்பான தகவல்களைக் காட்சிப்படுத்துவதற்கான கூடம் நிறுவப்பட்டது. காப்புறுதி தொடர்பான பல்வேறுபட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பாரியளவிலான பார்வையாளர்கள் வருகை தந்தனர். பார்வையாளர்களுக்கிடையில் வினாவிடை நிகழ்ச்சி நடாத்தப்பட்டதுடன் வெற்றியாளர்களுக்கு ஞாபகச்சின்னங்கள் வழங்கப்பட்டது. மேலும், அனுராதபுரத்தில் நடைபெற்ற கண்காட்சியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்காக இரு தூதர்கள் நிறுத்தப்பட்டனர்.



இலங்கை தேசிய தொழில்முயற்சி கண்காட்சிக் கூடத்தில்

#### பாடசாலை சிறுவர்களுக்கான சித்திரக் கண்காட்சி

தேசிய காப்புறுதி நாளையொட்டி கல்வி அமைச்சு மற்றும் இலங்கை காப்புறுதிச் சங்கம் என்பவற்றுடன் இணைந்து ஆணைக்குழுவினால் நாடாளாவிய ரீதியில் சித்திரக் கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டது. போட்டி "எங்கள் வாழ்க்கைக்கும் ஆதனத்திற்கும் காப்புறுதியின் முக்கியத்துவம்" எனும் தொனிப் பொருளில் நடாத்தப்பட்டது. இப் போட்டி 6 தொடக்கம் 13ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு 4 பிரிவுகளின் கீழ் நடாத்தப்பட்டது. ஆணைக்குழு கிட்டத்தட்ட 6,000 சித்திரங்களை பாடசாலை மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டதுடன், கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட நடுவர் குழுவினால் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கிடைக்கப்பெற்ற சித்திரங்களில் இருந்து நியமிக்கப்பட்ட நடுவர் குழுவினால் 136 வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன் கீழ் தங்கம், வெள்ளி, வெண்கலம் மற்றும் சிறப்புத் தேர்ச்சி விருது எனும் வகைகளின் கீழ் பரிசுகள் வழங்கப்பட்டன. வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்கள், பண விருதுகள் மற்றும் ஞாபகச்சின்னங்கள் வழங்கப்பட்டன. புகழ்பெற்ற அழைப்பாளர்களின் முன்னிலையில் நெலும் பொக்குன மகிந்த ராஜபக்ஷ அரங்கில் டிசம்பர் மாதத்தில் பரிசளிக்கும் வைபவம் நடைபெற்றது.

#### கைத்தொலைபேசி வலையமைப்பாளர்களின் ஊடாக விழிப்புணர்வை உருவாக்குதல்

தேசிய காப்புறுதி நாளை முன்னிட்டு, 2019 செப்டெம்பர் 1ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொலைபேசி வலையமைப்பு செயற்பாட்டாளர்களின் ஊடாக குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு காப்புறுதியின் முக்கியத்துவம் தொடர்பான குறுந்தகவல் அனுப்பப்பட்டது.

### அச்சு ஊடகத்தின் ஊடாக தகவல்களை பரப்புதல்

மீளாய்வுக் காலப்பகுதியில் ஆணைக்குழு கீழ்வரும் பத்திரிகை வெளியீடுகளையும் பத்திரிகை அறிவித்தல்களையும் வெளியிட்டது

#### பத்திரிகை வெளியீடுகள்

- காப்புறுதியாளர்களுக்கான கூட்டிணைந்த ஆளுகையினை காப்புறுதி ஒழுங்குபடுத்துனர் விநியோகித்தார்
- 2019, 1ஆம் காலாண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை
- 2018ஆம் ஆண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை
- 2019 இன் அரையாண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை
- 2019 3ஆம் காலாண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை

#### பத்திரிகை அறிவித்தல்கள்

- காப்புறுதி ஆலோசனையாளர்களின் வகிபாகம்
- பாடசாலை மாணவர்களுக்கான நாடளாவிய சித்திரப் போட்டி



Press Notice

#### அச்சடிக்கப்பட்ட விழிப்புணர்வு வெளியீடுகள்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் தற்போதுள்ள ஆயுட் காப்புறுதி கையேடுகள் மற்றும் மோட்டார் வாகன துண்டுப் பிரசுரங்கள் என்பன மீள அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.



Brochure / Handout

### மின்னிலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக விழிப்புணர்வை உருவாக்கல்

காப்புறுதி மீதான விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்கு தகவல்களைப் பரப்புவதற்கு ஊடகம் மிகப் பெரிய வகிபாகத்தை வகிக்கின்றது. அதனால், மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் ஆணைக்குழு மூன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் மூன்று வானொலி நிகழ்ச்சிகளையும் நடாத்தியது. காப்புறுதி விடயங்கள் தொடாபான விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்கு கீழ்வரும் நிகழ்ச்சிகளில் ஆணைக்குழுவின் அலுவலர்கள் பங்குபற்றினா்

#### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

- சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பில் காப்புறுதி தொடர்பான தகவல்களை உள்ளடக்கி கோப்பி கடை எனும் புகழ்பெற்ற தொலைகாட்சி நாடகம் ஒரு நாள் தொடராக காண்பிக்கப்பட்டது.
- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சனல் ஐ பதிவுசெய்யப்பட்ட "Business Today" கலந்துரையாடலை ஒளிபரப்பியது.
- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ரூபவாகினியில் சன்ஹின்ட எனும் நேரடிக் கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஒளிபரப்பியது.

#### வானொலி நிகழ்ச்சிகள்

- இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சிட்டி எப்எம்மில் ஒரு மணித்தியால செய்திச் சுருக்கங்களின் முன்னர் முன்பதிவு செய்யப்பட்ட 'News in Brief' இல், நாளொன்றுக்கு பத்துத் தடவைகள் என முப்பது நாட்களுக்கு ஒலிபரப்பப்பட்டது.
- இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் அனைத்து சனல்களிலும் (12) பிரதான செய்திச் சுருக்கங்களின் முன்னர் முன்பதிவு செய்யப்பட்ட 'SLBC News Package' இல் ஒலிபரப்பப்பட்டது.
- "சூரிய சிரச மோர்னிங் ஷோ" தொகுப்பாளர்கள், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தகவல்களை உள்ளடக்கி காப்புறுதி தொடர்பான பல விடயங்களை நேரடி உரையாடல்களில் விளக்கினர்

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதன சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பகுதி 2இன் கீழ், நிதி கல்வியறிவை வலுப்படுத்த சில்லறை கல்விக்கான விரிவான மூலோபாயத்தை செயல்படுத்த ஆணைக்கழு தொடங்கியிருக்க வேண்டும்.

ஆலோசகர் சமர்ப்பித்த கல்வி உத்தி மற்றும் அமுலாக்கத் திட்டத்தை ஆராய்ந்த பின்னர், ஆலோசகரின் சமர்ப்பிப்பை மேலும் மீளாய்வு செய்யவும், முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகளுக்கு ஏற்ப இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையான மேலதிக தகவல்கள்/ விளக்கங்களை (ஆலோசகருக்கு) தெரிவிக்கவும் ஆணைக்குழு அறிவுறுத்தியது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, உள்ளூர் சூழல் மற்றும் வளங்களின் வரம்புகளைக் கருத்தில் கொண்டு கல்வி மூலோபாயம் திருத்தப்பட வேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆலோசகர்கள் ஒப்புக்கொண்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி, மூலதன சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் காப்புறுதி கல்வி ஆக்கக்கூறின் கீழ் ஆணைக்குழுவின் நோக்கங்களைக் கருத்தில் கொள்வதற்காக, கல்வி உபாயமார்க்க மற்றும் அமுல்படுத்தல் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் ஆலோசனையாளரை நியமித்தது.

ஆலோசனையாளர் காப்புறுதிக் கைத்தொழில்துறை பிரதிநிதிகளை உள்ளடக்கிய இலக்கு குழுக்களுடனும்/ பிரதான தகவலாளர்களுடனும் டெஸ்க் மீளாய்வு மற்றும் கலந்துரையாடல்களைப் பூர்த்திசெய்து, கல்வி உபாயமார்க்கத்திற்கான முன்மொழிவுகள் தொடர்பாக 2019 மார்ச் 2019 இல் காட்சிப்படுத்தலை ஆணைக்குழுவிற்கு வழங்கினார். ஆலோசனையாளரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் செயலகத்தின் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் கருத்தினை ஆணைக்குழு கோரியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஆணைக்குழுவினதும் கல்வி அமைச்சின் செயலாளரினதும் கருத்துக்கள்/ பின்னூட்டல்களுக்கு அமைவாக கல்வி உபாயமார்க்கம் மற்றும் அமுல்படுத்தல் திட்டம் என்பவற்றைத் திருத்தி, ஆணைக்குழுவின் அனுமதிக்காக 2019 ஜூலையில் அதனைக் காட்சிப்படுத்தியது. ஆணைக்குழுவின் 2020ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள, மூன்று உபாயமார்க்கங்களை உள்ளடக்கிய விநியோக சட்டகத்தையும் அமுல்படுத்தல் சட்டகத்தையும் உள்ளடக்கிய நுகர்வோர் கல்வி உபாயமார்க்கம் அங்கீகரிக்கப்பட்டது. நுகர்வோர் கல்வி உபாயமார்க்கத்தை 2020 இன் நான்காம் காலாண்டில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஏனைய பங்குபற்றல்கள்

#### பொது மக்களின் விசாரணைகளுக்கு பதிலளித்தல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், ஆணைக்குழு பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விசாரணைகள் மற்றும் பூட்கையாளர்கள் மற்றும் பல்வேறுபட்ட நலன்விரும்பிகளினால் கோரப்பட்ட காப்புறுதித்துறை சார்ந்த தகவல்கள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றுக்கு பதிலளித்தது.

# நிர்வாக மீளாய்வு

**பணிக் குழுவினர்**

எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் திறமையிலேயே பெரும் அளவில் தங்கி இருக்கின்றது. எனவே, ஆணைக்குழுவின் வெற்றிகரமான உத்திகளுக்கு முதுகெலும்பாக இருப்பது மனித மூலவளம் என நாங்கள் நம்புகின்றோம்.

காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரது ஆர்வங்களையும் பாதுகாக்கும் நோக்கத்துடன், இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் நேர்மையுடன் நடத்தப்படுவதை உறுதி செய்யும் ஒட்டு மொத்த நோக்கத்தை அடைவதற்கு தனது கடமையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுகின்ற வகையில் தனது நிறுவனக் கட்டமைப்பை ஆணைக்குழு நிறுவியுள்ளது.

அவசியமான தொழில் வல்லுனர்களை ஏற்ற நேரத்தில் நியமிப்பதன் ஊடாக, மனித வளத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன். மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் போது அனேக முக்கியமான முன்னெடுப்புகளை ஆணைக்குழு மேற்கோண்டது. இத்தகைய முன்னெடுப்புகளை சந்திப்பதற்காக, மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது நிரந்தர பதவிகளுக்கு இரு பணிப்பாளர்கள், மூன்று நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ஒரு செயலாளர் என்போர் நியமிக்கப்பட்டனர். 2019 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, ஆணைக்குழுவின் மொத்த பணியாட் தொகுதியினரின் வலு 48 ஆகும்.

கீழே உள்ள அட்டவணையில் பணிக் குழுவினரின் கல்வி மற்றும் தொழில் சாந்த தகைமைகள் காட்டப்பட்டுள்ளது:

| ஊழியர்களின் எண்ணிக்கை | கல்வி சார்ந்த/தொழில் சார்ந்த தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப்பின்படிப்பு பட்டங்களும் முதலாவது பட்டமும், மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப்பின் படிப்பு பட்டங்களும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப் பின்படிப்பு மற்றும் முதலாவது பட்டம் | முதலாவது பட்டமும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும | முதலாவது பட்டம் | தொழில் சார்ந்த தகைமைகள் |
| 48 | 07 | 04 | 06 | 06 | 11 | 02 |

**பயிற்சி**

நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு ஊழியர்கள் அறிவையும் தொழில்சார்ந்த திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது ஆணைக்குழுவின் குறிக்கோளாகும். இவ்வருடக் காலப்பகுதியில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வகைப்படுத்தல் | 2019 (ரூபா) | 2018 (ரூபா) |
|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 1,610,639 | 1,264,144 |
| மாநாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி | 10,375,090 | 10,589,034 |

**பணியாள் தொகுதியினரின் நலன்கள்**

நிறுவனத்தின் பணியாளர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது, அவர்கள் மத்தியில் ஊக்குவிப்பை உருவாக்குவதிலும் அவர்களின் நேர்மையை அதிகரிப்பதிலும் முக்கிய காரணியாக செயற்படுகின்றது. எனவே, உள்ளேயும், வெளியிலும் கிடைக்கும் மருத்துவத் திட்டங்கள், சுய விபத்து காப்புறுதி பூட்கை, வாகனம் மற்றும் துயரிடர் கடன் திட்டங்கள், பண்டிகை முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக கவர்ச்சிகரமான நலன்புரி பொதிகள் ஆகியவற்றை ஆணைக்குழு வழங்குகின்றது. மேலும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வருடாந்த ஒன்று கூடல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பணியாட் தொகுதியினருடனும், அவர்களின் குடுப்பத்தினருடனும் நல்லுறவுகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளையும் ஆணைக்குழு வழங்குகின்றது.

# நிதியியல் மீளாய்வு


### காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்

காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்காக சேகரிக்கப்பட்ட செஸ் கட்டணம், சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஆணைக்குழுவினால் விவேகமான முறையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2015இல் இருந்து 2019 வரை பெறப்பட்ட செஸ் சேகரிப்பு மற்றும் முதலீட்டு வருமானத்தை விளக்கப்படம் 1 விளக்குகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் செஸ் வருமானம் அதிகரித்துச் செல்வதை விளக்கப்படம் 1 காட்டுகின்றது. சந்தையில் காணப்பட்ட சாதகமான நிலைமையின் காரணமாக முதலீட்டு வருமானத்தில் 2018இல் இருந்து 2019 வரை குறிப்பிடத்தக்க வளர்ச்சி காட்டப்படுகின்றது..

காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகரித்துச் செல்வதை விளக்கப்படம் 2 காட்டுகின்றது.


**விளக்கப்படம்: 2015 - 2019 வரையான காலப்பகுதிக்குரிய செஸ் வருமானம் மற்றும்**




| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (இ.ரூபா மில்லியன்) | 322 | 408 | 418 | 479 | 493 |
| முதலீட்டு வருமானம் (இ.ரூபா மில்லியன்) | 145 | 229 | 372 | 455 | 574 |


31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று நிதியத்தின் சொத்துக்களின் கலவை கீழே விளக்கப்படுகின்றது.

**விளக்கப்படம் 2: 2015 - 2019 வரையான காலப்பகுதிக்கு காப்புறுதி பூட்கையாளர்களின் நிதியத்தின் பெறுமதி**




| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவுகள் (இ.ரூபா மில்லியன்) | 2,643 | 3,292 | 4,110 | 5,043 | 6,253 |

**விளக்கப்படம் 3: 31 டிசம்பர் 2019 திகதயன்று காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துக்களின் கலவை**




### ஆணைக்குழுவின் வருமானம்

கீழ்வரும் மூலங்களில் இருந்து ஆணைக்குழு வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்றது.:

- காப்புறுதியாளர்கள், காப்புறுதித் தரகர் கம்பனிகள் மற்றும் நட்டச் சீராக்கலாளர்களைப் பதிவுசெய்தல் கட்டணம்
- காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பெறப்படும் வருடாந்தக் கட்டணம்
- காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பதிவைப் புதுப்பிப்பதற்கான வருடாந்தக் கட்டணம்
- மிகை நிதியத்தை முதலீடு செய்வதன் ஊடான வட்டி வருமானம்
- நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தில் இருந்து வருமானம்

2015இல் இருந்து 2019 வரை கிடைக்கப்பெற்ற மொத்த வருமானத்தின் சுருக்கத்தை விளக்கப்படம் 4 விளக்குகின்றது.

**விளக்கப்படம் 4 2015 - 2019 வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவின் வருமானம்**





| | | | | | |
|---|---|---|---|---|---|
| வருடாந்தக் கட்டணங்கள் (இ.ரூபா மில்லியன்) | 104 | 126 | 142 | 168 | 224 |
| பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணங்கள் (இ.ரூபா மில்லியன்) | 9 | 5 | 9 | 8 | 14 |
| ஏனைய வருமானம் (இ.ரூபா மில்லியன்) | 2 | 3 | 3 | 8 | 16 |
| நன்கொடை அங்கீகரிப்பு (இ.ரூபா மில்லியன்) | 5 | 2 | 1 | 2 | 84 |
| மொத்த வருமானம் (இ.ரூபா மில்லியன்) | 119 | 136 | 155 | 186 | 339 |

### ஆணைக்குழுவின் செலவுகள்

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டில் செலவு 31.56 % வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், 2019 இல் ஆணைக்குழு இ.ரூபா 129.2 மில்லியனை மிகையாகப் பதிவுசெய்துள்ளது. கொள்கைத் தீர்மானத்திற்கு அமைவாக மேற்குறிப்பிட்ட மிகை காப்புறுதிப் பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 5 2015இல் இருந்து 2019 வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவின் மொத்த செலவினை விளக்குகின்றது.

**விளக்கப்படம் 5 2015 - 2019 வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவின் மொத்த செலவுகள்**




| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவுகள் (இ.ரூபா மில்லியன்) | 123 | 124 | 125 | 143 | 188 |



# நிதி தகவல்கள்

# நிதியியல் நிலமைக் கூற்று

**31 டிசம்பர் 2019 அன்றுள்ளவாறு**

| | குறிப்புகள் | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் | 1 | 15,691,234 | 15,689,425 |
| காப்புறுதிப் பூட்கையாளர் நிதியம் - வாடகை மற்றும் மின்சார வைப்புகள் மற்றும் திறைசேரிப் பிணையங்கள் | 2 | 1,086,252,949 | 1,086,252,949 |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | 1,101,944,183 | 1,101,942,374 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | 3 | 654,321 | 522,620 |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகள் மற்றும் ஏனையவை | 2 | 5,166,705,283 | 3,956,513,320 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 4 | 21,986,662 | 16,007,020 |
| அரசாங்க பிணையங்களில் உள்ள முதலீடுகள் - ரிபோ | | 162,000,000 | 70,700,000 |
| காசுக்குச் சமமானவையும் | 5 | 11,455,374 | 2,711,448 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 5,362,801,640 | 4,046,454,408 |
| **மொத்த சொத்துக்கள்** | | 6,464,745,823 | 5,148,396,782 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகளும் நிதிகளும்** | | | |
| திரட்டிய நிதியம் | 6 & 20 | - | 41,337,937 |
| பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் | 7 | 6,252,958,232 | 5,042,765,873 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | | 17,689,652 | 17,689,652 |
| நிதி அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற மானியம் | | 976,126 | - |
| **மொத்த ஒதுக்குகளும் நிதிகளும்** | | 6,271,624,010 | 5,101,793,462 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| மானியம் | 8 | 7,966,332 | 5,389,425 |
| ஓய்வு நலக் கடப்பாடு | 9 | 15,839,021 | 12,155,897 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | 23,805,353 | 17,545,322 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| பெற்றுக்கொண்ட முற்பணங்கள் | | 14,332,836 | 14,161,815 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 10 | 154,280,881 | 14,896,183 |
| வங்கியின் மறை மீதி | 5 & 21 | 702,743 | - |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | 169,316,460 | 29,057,998 |
| **மொத்த ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | 6,464,745,823 | 5,148,396,782 |

இந்தக் கணக்குக் கூற்றுக்களைத் தயார் செய்வதிலும், சமர்ப்பிப்பதிலும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களே பொறுப்புடையவர்களாவர்.

“மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 88 தொடக்கம் 98 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.”

**ராஸீக் ஸாருக்**
தலைவர்

**அங்கத்தவர்**

**தமயந்தி பெர்னான்டோ**
பணிப்பாளர் நாயகம்

**சத்தீஸ் குமார**
பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம்

கொழும்பு, இலங்கை
26 பெப்பரவரி 2020

# நிதிச் செயலாற்றுகை கூற்று

**31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்புகள் | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | 11 | 238,813,675 | 176,168,849 |
| FSMP இல் இருந்து வருமானம் | 12 | 81,620,094 | - |
| மானிய அங்கீகாரம் | 8 | 2,324,391 | 1,929,052 |
| வட்டி வருமானம் | 13 | 15,757,900 | 7,439,303 |
| ஏனைய வருமானம் | 14 | 338,154 | 277,233 |
| **மொத்த வருமானம்** | | 338,854,213 | 185,814,437 |
| **செலவுகள்** | | | |
| ஊழியர் ஆகுசெலவு | 15 | (112,323,915) | (79,009,564) |
| தொழில்முறைக் கட்டணங்கள் | 16 | - | (5,035,081) |
| தொழிற்பாட்டு செலவுகள் | 17 | (73,323,241) | (58,453,496) |
| FSM கருத்திட்ட செலவுகள் | 18 | (456,260) | - |
| நிதி மற்றும் ஏனையவை | 19 | (1,568,501) | (155,451) |
| **மொத்தச் செலவு** | | (187,671,916) | (142,653,592) |
| வரிக்கு முன்னரான தேறிய மிகை /(பற்றாக்குறை) | | 151,182,297 | 43,160,845 |
| வரிவிதிப்பு | 22 | (22,479,379) | (1,822,908) |
| காப்புறுதிப் பூட்கையாளர் நிதியத்திற்கு மாற்றப்பட்ட மிகை | 7 | (129,218,719) | - |
| வரிக்கு பின்னரான மிகை /(பற்றாக்குறை) | | (515,801) | 41,337,937 |
| ஓய்வு நன்மைகள் தேவைப்பாட்டின் மீது உண்மையான நட்டம் /(ஈட்டுகை) | | 515,801 | - |
| **வருடத்திற்கான தேறிய மிகை** | | - | 41,337,937 |

"மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 88 தொடக்கம் 98 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்."

# உரிமைப்பங்கு/தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றத்திற்கான கூற்று

**31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | திரட்டப்பட்ட மிகைகள்/ (பற்றாக்குறைகள்) | மொத்தம் |
|---|---|---|---|
| **01 ஜனவரி 2018 அன்று மீதி** | 7,389,652 | - | 7,389,652 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்டது | - | 41,337,937 | 41,337,937 |
| ஆதன மீள்மதிப்பீடு மீதான ஈட்டுகை | 10,300,000 | - | 10,300,000 |
| **31 டிசம்பர் 2018 ஆம் திகதியன்று மீதி** | 17,689,652 | 41,337,937 | 59,027,589 |
| **01 ஜனவரி 2019 அன்று மீதி** | 17,689,652 | 41,337,937 | 59,027,589 |
| சம்பள மீளத் திருத்தம் தொடர்பான முன் வருட சீராக்கம் | - | (11,643,186) | (11,643,186) |
| 2018 ஆம் ஆண்டுக்கான வருமான வரி சீராக்கம் | - | (11,190,575) | (11,190,575) |
| PPF இற்கு 2018 இல் மாற்றப்பட்ட மிகை | - | (18,504,176) | (18,504,176) |
| இவ்வருடத்திற்கான மிகை | - | 128,702,918 | 128,702,918 |
| கணிப்பீட்டு நட்டம்/(ஈட்டுகை) | - | 515,801 | 515,801 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்டது | - | (129,218,719) | (129,218,719) |
| **31 டிசம்பர் 2019 அன்று மீதி** | **17,689,652** | **-** | **17,689,652** |

# காசுப்பாய்ச்சல் கூற்று

**31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்புகள் | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| இக்காலப்பகுதிக்கான நிகர அதிகரிப்பு /(குறைவு) | | 151,182,297 | 41,337,937 |
| பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு | 1 | 4,899,489 | 3,535,279 |
| ஓய்வு நலனுக்கான ஏற்பாடு | 9 | 4,558,024 | 2,014,024 |
| அகற்றல் மீதான இலாபம் / (நட்டம்) | 14 | (83,065) | - |
| மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு - ஓய்வு நலன் | 9 | (359,100) | (760,674) |
| மானிய அங்கீகாரம் | 8 | (2,324,391) | (1,929,052) |
| வருமான வரி செலுத்தியது | 22 | (17,343,545) | 1,822,908 |
| வட்டி வருமானம் | 13 | (15,757,900) | (7,439,303) |
| நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 124,771,809 | 38,581,119 |
| | | | |
| நடைமுறை மூலதனத்தில் மாற்றம் | | | |
| இருப்புகளில் குறைவு/(அதிகரிப்பு) | 3 | (131,701) | (175,322) |
| பெறுவனவுகளில் குறைவு/(அதிகரிப்பு) | 4 | (7,721,734) | (4,482,480) |
| முற்பணங்களில் அதிகரிப்பு/(குறைவு) | | 171,021 | 6,803,715 |
| கடன் வழங்குநர் மற்றும் அட்டுறுக்கான அதிகரிப்பு/(குறைவு) | 10 | 136,025,149 | (21,397,313) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிதிப் பாய்ச்சல் | | 128,342,736 | (19,251,399) |
| | | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர நிதிப் பாய்ச்சல்கள் | | 253,114,545 | 19,329,720 |
| | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) / நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | (131,300,000) | (28,700,000) |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | 40,000,000 | - |
| வட்டி வருமானம் | | 15,724,103 | 6,285,506 |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திர விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானம் | 14 | 83,065 | - |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திரக் கொள்வனவு | 1 | (4,901,298) | (1,599,945) |
| முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (80,394,130) | (24,014,439) |
| | | | |
| **நிதியியல் நடவளக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியத்தில் மாற்றப்பட்ட மூலதனம் | 7 | 4,901,298 | 1,599,945 |
| PPF 2019இல் மாற்றப்பட்ட மிகை | | (129,218,719) | - |
| திரட்டப்பட்ட மிகை -2018 | 6 | (41,337,937) | - |
| நிதி அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற மானியம் | | 976,126 | |
| நிதியில் நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல் | | (164,679,232) | 1,599,945 |
| | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | 8,041,184 | (3,084,774) |
| | | | |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 2,711,448 | 5,796,222 |
| | | | |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 10,752,632 | 2,711,448 |
| | | | |
| **வங்கி மற்றும் கையிலுள்ள காசு** | 5 & 21 | | |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | | 10,197,543 | 4,248,455 |
| இலங்கை வங்கி 1877 - பேரேட்டின் படி | | (702,743) | (1,537,007) |
| இலங்கை வங்கி FSMP கணக்கு | | 1,257,278 | - |
| சேமிப்பு - NSB | | 554 | - |
| | | 10,752,632 | 2,711,448 |

"மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 88 தொடக்கம் 98 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்."

# காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் காசுப்பாய்ச்சல் கூற்று

**31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்புகள் | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| காப்புறுதிப் பூட்கையாளர்களின் நிதியத்தில் நிகர அதிகரிப்பு | | 1,210,191,963 | 932,807,064 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 1,210,191,963 | 932,807,064 |
| தொழிற்படு மூலதன மாற்றம் | | | |
| அரசாங்க பிணையங்கள் மீதான கிடைக்கவுள்ள வட்டியின் (அதிகரிப்பு)/ குறைவு | | (50,203,714) | (53,659,167) |
| (செஸ் கிடைப்பனவுகளில் (அதிகரிப்பு)/குறைவு | | 2,848,980 | (2,372,466) |
| வாடகை வைப்பில் (அதிகரிப்பு)/குறைவு | | - | - |
| PPF இருந்து மாற்றப்பட்ட தொகையின் அதிகரிப்பு/ (குறைவு) | | (125,914,867) | 29,810,751 |
| | | (173,269,601) | (26,220,882) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசு | | 1,036,922,363 | 906,586,182 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/ நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | - | - |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | (1,019,563,000) | (906,097,000) |
| முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (1,019,563,000) | (906,097,000) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | 17,359,363 | 489,182 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 1,047,306 | 558,124 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 18,406,669 | 1,047,306 |
| நடைமுறைக் கணக்கில் மீதி | 2 | 1,000,000 | 47,306 |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | | 17,406,669 | 1,000,000 |
| | | 18,406,669 | 1,047,306 |

குறிப்பு : காப்புறுதியாளர் பாதுகாப்பு நிதியத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று ஒரு மேலதிக வெளிப்படுத்தல் ஆகும்.

# கணக்கீட்டு கொள்கைகள்

## 1. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1 பொதுத் தகவல்கள்

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் தொழிற்பாடுகள் 2001 பெப்பரவரி 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1172/27 உடைய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவாக 01 மார்ச் 2001ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டன.

ஆணைக்குழுவின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் 11ஆம் மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

ஆணைக்குழுவின் நோக்கமாகவும் பொறுப்பாகவும், இலங்கையினுள் காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் உத்தேச காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் தேவையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் காப்புறுதி வியாபாரத்தை நேர்மையுடனும் மற்றும் தொழில்முறையுடன் விவேகமாக மேற்கொள்வதை உறுதிசெய்தல் அமைந்துள்ளது.

சட்டத்தில் குறிப்பிட்டவாறு ஆணைக்குழுவின் கடமை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் கீழ்வருமாறு அமையும்.

(அ) இலங்கையினுள் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் காப்புறுதியாளர்களைப் பதிவுசெய்தல்,

(ஆ) காப்புறுதித் தரகர்களாகப் பதிவுசெய்தல்,

(இ) காப்புறுதி கைத்தொழிற் துறையின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல்,

(ஈ) காப்புறுதிக் கைத்தொழிற் துறையுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்,

(உ) ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளைச் செயற்படுத்தல், செய்தல் மற்றும் நிறைவேற்றுதல் போன்ற நோக்கங்களுக்காக அவசியமான அத்தகைய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை ஈடுபடுத்தல்,

(ஊ) ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை கைக்கொள்வதுடன், அதனை விற்பனை செய்தல், குத்தகைக்கு வழங்கல் அல்லது அகற்றவும் முடியும்,

(எ) அதனுடைய அதிகாரத்தை, கடமைகளை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு, செயலாற்றுவதற்கு மற்றும் விடுவிப்பதற்கு அவசியமான ஒப்பந்தங்களுக்கு வருதல், மற்றும்

(ஏ) இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்களை, கடமைகளை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு, விடுவிப்பதற்கு மற்றும் செயலாற்றுவதற்கு உரிய அவசியமான அனைத்து ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 1.2 தயாரித்தலுக்கான அடிப்படை

ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், வரலாற்று அடிப்படையில் தயாரிக்கப்பட்டதுடன் இலங்கை ரூபாவில் கிட்டிய தொகைக்குச் சீரமைக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டது. வரலாற்று ஆகுசெலவு மரபின் கீழ் நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்பட்டது. இந்தக் கணக்குகளைப் பாதிக்கும் வகையிலான பணவீக்க காரணிகளுக்கான சீராக்கங்கள் செய்யப்படவில்லை.

பொருத்தமான இடங்களில் இயைபான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்னிணைப்பு குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.3 இணக்கம் பற்றிய கூற்று

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை அரசதுறை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டதோடு அது, கூறப்பட்ட நியமங்களுடன் இணங்கியுள்ளது.

### 1.4 தொடர்ந்து செல்லும் கரிசனை

ஆணைக்குழு உறுப்பினர்கள், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொடர்ந்து செல்லும் கரிசனை அடிப்படையில் ஆணைக்குழு தொடர்ந்து இயங்குவதற்கான தகைமை உள்ளதா என்பதை மதிப்பீடு செய்துள்ளனர். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் செயற்பாட்டைத் தொடரும் எனவும், எதிர்பார்க்கக்கூடிய எதிர்கால நியதிச் சட்டக் கடமைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்ற நியாயமான உறுதிப்பாட்டுடன் உள்ளனர். எதிர்காலம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கருத்திற் கொண்ட பின்னர் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தேவை ஒன்று உள்ளது என்பதை எதிர்பார்க்கவில்லை. இதற்கமைவாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ந்து செல்லும் கரிசனை என்பதை தொடர்ந்து தழுவுகிறது.

### 1.5 அறிக்கையிடும் காலப் பகுதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் தேவையான இடங்களில் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் நடைபெற்ற அனைத்து முக்கிய சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு, பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.6 வெளிநாட்டு நாணயத்தை மாற்றுதல்

ஏதேனும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற நடவடிக்கைகள் இருப்பின், கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற வேளையில் இருந்த நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் அவை, அறிக்கையிடும் நாணயமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயத்தில் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஐந்தொகை தாளில் உள்ள திகதியில் காணப்பட்ட நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டது. அதன் காரணமாக உருவான ஈட்டுகைகளும் நட்டங்களும் வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் தீர்க்கப்பட்டன.

### 1.7 ஒப்பீட்டு இலக்கங்கள்

தற்போதைய நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டவற்றில் ஏற்பட்ட மாற்றங்களோடு இணங்கிச் செல்வதற்காக, ஒப்பீட்டு எண்ணிக்கைகள் மீளக் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.8 நிதியியல் இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்

ஆணைக்குழுவின் நிதியியல் பொறுப்புகள் முற்பணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை

# கணக்கீட்டு கொள்கைகள்

உள்ளடக்கியுள்ளது. நிதியியல் பொறுப்புகள் என்பது ஆணைக்குழுவிற்கு வரவேண்டிய நேரடியான தொழிற்பாட்டிலிருந்தான வருமானக் கிடைப்பனவுகளும் ஏனைய குறுகிய கால முதலீடுகளுமாகும்.

### 1.8.1 சந்தை இடர்

சந்தை இடர் என்பது சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக நிதியியல் சாதனத்தின் எதிர்கால காசுப் பாய்ச்சலின் நியாயமான பெறுமதியாகும். சந்தை விலைகள் இரு வகையான இடர்களை உள்ளடக்கியிருக்கும். அவை வட்டி வீத இடர் மற்றும் நாணய இடராகும். நிதியியல் நிறுவனங்களில் உள்ள வைப்புகள் உள்ளடங்கலாக நிதியியல் சாதனங்கள் சந்தை இடரினால் பாதிக்கப்படும்.

### 1.8.1.1 வட்டி வீத இடர்

வட்டி வீத இடர் என்பது நிதியியல் சாதனத்தின் நியாயப் பெறுமதி அல்லது எதிர்கால காசுப்பாய்ச்சல் சந்தையின் வட்டி வீதங்களினால் நிலையில்லாமல் மாறுவதாகும். ஆணைக்குழுவின் சந்தை வட்டி வீதங்களின் மாற்றத்திலான இடருக்கு வெளிப்பாடு ஆணைக்குழுவின் மிதக்கும் வட்டி வீதங்களுடனான கடப்பாட்டுக்கு பிரதானமானதாகும்.

### 1.8.1.2. திரவம்தன்மை இடர்

ஆணைக்குழு தொடர்ச்சியான காசுப்பாய்ச்சல் முன்மதிப்பீடு மற்றும் காசு வரவுசெலவுக் கணிப்பீட்டைப் பயன்படுத்தி பற்றாக்குறையான திரவத்தன்மை இடரைக் கண்காணிக்கும்.

## 2. சொத்துகள் மற்றும் மதிப்பீட்டுக்கான அடிப்படை

### 2.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

#### உரிமை கொள்ளப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன, திரண்ட தேய்மானத்தில் இருந்து கழிக்கப்பட்டு, அதன் நிலை/மீள் மதிப்பீட்டுத் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விலை, அவை எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்த எண்ணியிருந்ததோ அதற்காக அவை செயற்படுகின்ற நிலையில் கொண்டுவருவதற்கு உட்பட்ட ஏதேனும் செலவுகள் மற்றும் அதனைக் கைக் கொள்வதற்கான செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும்.

ஆணைக்குழு மூலதனச் செலவாகக் கருதும் உருப்படிகளுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளுடன் தொடர்புடைய கொண்டு செல்லல் அல்லது பாய்ச்சலில் நிரந்தர தன்மையுடைய சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், விரிவாக்கல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக பிற்பட நேர்ந்த ஆகுசெலவு உறப்பட்டது.

#### தேய்மானம்

பெறுமானத் தேய்வு, நேர்கோட்டு அடிப்படையில், மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்திற்கு ஏற்ப அறவிடப்பட்டுள்ளது.

| சொத்து | வருடத்திற்கு % |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடமும் பொருத்திகளும் | 12.5 |
| அலுவலக மற்றும் EDP உபகரணம் | 25 |
| பயிற்சி உபகரணம் | 25 |

ஒரு சொத்து கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது அகற்றப்படும் நாள் வரை பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது. அகற்றப்படுதல் மீதான பெறுவனவுகளும் இழப்புக்களும் அகற்றப்படுவதிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டு வரும் தொகையுடன் ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுகின்றது.

மோட்டார் வாகனங்கள் ஒவ்வொரு மூன்றாண்டுக்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்யப்படும். கடைசி மீள்மதிப்பீடு ஒட்டோமொபைல் அசோசியேசன் ஒப் சிலோன் நிறுவனத்தினால் 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

### 2.2 முதலீடுகள்

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளை மட்டுமே முதலீடுகள் உள்ளடக்கியுள்ளதுடன், செலவு குறைந்த அடிப்படையில் அல்லது முகப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள வருட முடிவு வரை வட்டி சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த முதலீடுகள் ஆண்டு இறுதி வரை ஆகுசெலவு மற்றும் திரட்டப்பட்ட வட்டியில் கூறப்படுகின்றன. அதனால், நிதியாண்டின் இறுதியில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தும் நிதியியல் சாதனங்கள் மீது இடர்கள் எழமாட்டாது.

### 2.3 இருப்புச் சரக்கு

இருப்புச் சரக்குகளின் செலவு குறைவாக அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. பொருள் பட்டியல்களுக்கான விலை "முதலில் வருவது முதலில்" (FIFO) என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

### 2.4 பெறுவனவுகள்

பெறுவனவுகள் பெறப்படக் கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன.

### 2.5 காசு மற்றும் காசுக்குச் சமனானவை

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்குச் சமமானவை வங்கியிலும், கையிலும் உள்ள பணத்தை உள்ளடக்குகின்றது.

## 3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

ஐந்தொகைத் திகதியில் அனைத்து கருத்தில் கொள்ள வேண்டிய பொறுப்புகளும் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மிகையாக அறியப்பட்டவைக்கு போதியளவு ஏற்பாடுகள் பொறுப்புகளுக்கு செய்யப்பட்டுள்ளன.

### 3.1 ஓய்வுகால நலன்கள்

### 3.1.1 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன் திட்டங்கள் - பணிக்கொடை

1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு அனைத்து ஊழியர்களுக்கான ஓய்வுகால நலன் திட்டத்தை ஆணைக்குழு உருவாக்கியுள்ளது. இந்த ஓய்வுகால நலன் திட்டம் ஒரு ஊழியர் ஓய்வின் போது பெற்றுக்கொள்ளும் நலன் தொகையினை வரையறுத்துள்ளது.

இலங்கை அரசதுறை கணக்கியல் நியமம் 19: ஊழியர் நன்மைகளின் கீழ் விபரித்துள்ள உய்த்தறியப்பட்ட அலகு கடன் முறையினைப் பயன்படுத்தி ஆணைக்குழு வருடந்தோறும் வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்தைக் கணிப்பீடு செய்வதன் ஊடாக நிதியியல் நிலைமைக் கூற்றில் பொறுப்பு இனங்காணப்படும்.

# கணக்கீட்டு கொள்கைகள்

| | |
|---|---|
| **2019ஆம் ஆண்டின் தொடக்கத்தில்** | **12,155,897** |
| தற்போதைய சேவை ஆகுசெலவு | 1,879,168 |
| வட்டி ஆகுசெலவு | 1,409,637 |
| கடந்த ஆண்டின் கீழ் ஏற்பாடு | 1,269,219 |
| **விரிவான வருமானக் கூற்றில் இலாப நட்டத்தில் அறவிடப்பட்டது** | **4,558,024** |
| கணிப்பீடு செய்யப்பட்ட நட்டங்கள் / (ஈட்டுகைகள்) | (515,801) |
| செலுத்தப்பட்ட நலன்கள் | (359,100) |
| **2019 நிதியியல் ஆண்டின் இறுதியில்** | **15,839,020** |

கடந்த ஆண்டில் ஏற்பாடுகளின் பற்றாக்குறை அல்லது மிகை காரணமாக எழும் மாற்றங்களினால் ஈட்டுகைகளும் நட்டங்களும் எழுவதுடன் அவை எழும் காலத்தில் விரிவான வருமானக் கூற்றில் அவை அறவீடு செய்யப்படும். இந்த ஆண்டுக்கான தேவைப்பாடு உடனடியாக விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.

பிரதான கணிப்பீட்டு எடுகோள்கள் பின்வருமாறு எடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| கழிவு வீதம் | : | ஆண்டுக்கு 10.5% |
| சம்பள அதிகரிப்பு வீதம் | : | 5% - 8% |
| ஒய்வுபெறும் வயது | : | 60 வருடங்கள் |

### 3.1.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் – EPF மற்றும் ETF

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன, பொருத்தமான நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, அனைத்து ஊழியர்களும் ஊழியர் பங்கிலாப பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புகள் ஆகியவற்றுக்குத் தகுதியுடையவர்கள். ஆணைக்குழு ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கு ஊழியர்களின் மொத்த வருமானத்திலிருந்து முறையே 12% மற்றும் 3% இனை பங்களிப்புச் செய்கிறது.

### 3.2 பொறுப்புகள்

நிதிக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகள் என்பதில் கேள்வி மீதான கொடுப்பனவு அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவைகள் அடங்கும். நடைமுறையற்ற பொறுப்புகள் என்பது, அறிக்கையிடும் காலப்பகுதியில் இருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்த வேண்டிய மிகுதிகள் ஆகும். நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில், அறிந்து கொள்ளப்பட்ட சகல பொறுப்புக்களும் அதன் விலையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 3.3 மானியம்

### 3.3.1 காப்புறுதிப் பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியம்

பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட காப்புறுதி பூட்கையாளர்களின் மூலதனச் செலவு, மானியமாக கருதப்பட்டு சொத்து ஒன்றின் மதிப்பிடப்பட்ட பாவனைக் காலத்தின் மீது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 3.3.2 நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம்

மானியங்கள் அதனுடைய நியாயப் பெறுமதியில் நிதியியல் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது. மானியம் தொடர்புடைய செலவுகள் எழும் போது, அது அந்தக் காலத்திற்குரிய வருமானமாக அதனுண்டய ஆகுசெலவுடன் பொருந்துவதற்கு முறைமையான அடிப்படையின் மீது ஈடுசெய்யும் நோக்கம் கொண்டது.

பெறுபேறு அடிப்படையிலான நிதியிடல் வருமானமாக அங்கீகரிக்கப்படுவதற்காக நிதி அமைச்சிடமிருந்து மானியம் கிடைக்கப் பெறும். முதலீட்டு கருத்திட்ட நிதியிடலுக்கான மானியம் கிடைக்கப்பெறும் போது அது கூறப்பட்ட ஆகுசெலவுடன் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

## 4. வருமானம் மற்றும் செலவு

### 4.1 வருமான அங்கீகாரம்

வருமானம், உண்மையான அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 4.2 செலவு அங்கீகாரம்

ஆணைக்குழுவைப் பேணிப் பாதுகாப்பதற்காக கூறப்பட்ட அனைத்து செலவுகளும் வருமானத்தின் மீதான செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு வருவாய்க்கு அறவிப்பட்டுள்ளது.

### 4.3 காசுப் பாய்ச்சல் கூற்று

நேரடியல்லா முறையைப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**1 ஆதனம், பொறி மற்றும் உபரணம்**

| | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்களும், பொறுத்திகளும் | அலுவலக உபகரணம் (EDP & ஏனையவை) | பயிற்சி உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **ஆகுசெலவு/மீள்மதிப்பீடு** | | | | | |
| 01 ஜனவரி 2019 அன்று மீதி | **10,300,000** | **14,152,432** | **26,635,537** | **141,450** | **51,229,419** |
| சேர்ப்புகள் | - | 1,508,944 | 3,392,354 | - | 4,901,298 |
| அகற்றல்கள் | - | (18,895) | (2,271,627) | - | (2,290,522) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | 10,300,000 | 15,642,481 | 27,756,264 | 141,450 | 53,840,195 |
| **திரட்டப்பட்ட பெறுமானத்தேய்வு** | | | | | |
| 01 ஜனவரி 2019 அன்று மீதி | - | 12,675,881 | 22,722,663 | 141,450 | 35,539,995 |
| இவ்வருடத்திற்கான கட்டணம் | 2,575,000 | 533,646 | 1,790,844 | - | 4,899,489 |
| அகற்றல்கள் | - | (18,895) | (2,271,627) | - | (2,290,522) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | **2,575,000** | **13,190,632** | **22,241,880** | **141,450** | **38,148,962** |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | |
| **31 டிசம்பர் 2019 அன்று மீதி** | **7,725,000** | **2,451,848** | **5,514,385** | **-** | **15,691,234** |
| பதிவழிக்கப்பட்ட பெறுமதி | | | | | |
| 31 டிசம்பர் 2018 அன்று மீதி | 10,300,000 | 1,476,550 | 3,912,875 | - | 15,689,425 |

** முழுமையாக பெறுமானத்தேய்வு வழங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி கீழ்வருமாறு அமையும்

| | தொகை ரூபா |
|---|---|
| தளபாடங்களும் பொருத்திகளும் | 5,001,628 |
| இணைப்புகளும் பொருத்திகளும் | 6,279,006 |
| அலுவலக உபரணம் -EDP | 16,741,852 |
| அலுவலக உபகரணம் - ஏனையவை | 2,552,355 |
| பயிற்சி உபகரணம் | 141,450 |
| | **36,147,267** |

மோட்டார் வாகனங்கள் ரூபா 10,300,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | குறிப்புகள் | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **2 காப்புறுதி பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்தின் முதலீடுகள் மற்றும் ஏனையவை** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| வாடகை மற்றும் மின்சார வைப்பு | | 9,593,949 | 9,593,949 |
| திறைசேரி உண்டியல்கள் | | 1,076,659,000 | 1,076,659,000 |
| | | 1,086,252,949 | 1,086,252,949 |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | 4,619,960,000 | 3,600,397,000 |
| அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் இருந்து கிடைக்க வேண்டிய வட்டி | | 277,460,484 | 227,256,770 |
| CESS கிடைக்க வேண்டியவை | | 126,560,709 | 129,409,689 |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | 23 | 17,406,669 | 47,306 |
| வங்கியில் உள்ள மீதி | 23 | 1,000,000 | 1,000,000 |
| மாற்றப்பட்ட மிகை | | 124,317,421 | (1,597,445) |
| | | 5,166,705,283 | 3,956,513,320 |
| கழி: | | | |
| இருந்து மாற்றப்பட்ட வேண்டிய தொகை | | - | - |
| | | 5,166,705,283 | 3,956,513,320 |
| மொத்த சொத்துகள் | | 6,252,958,232 | 5,042,766,269 |
| **3 சரக்குஇருப்பு** | | | |
| அச்சிடுதல், எழுதுகருவிகள் மற்றும் கணணி உதிரிப்பாகங்கள் | | 617,711 | 455,105 |
| முத்திரை | | 36,610 | 67,515 |
| | | 654,321 | 522,620 |
| **4 ஏனைய நடைமுறைச் சொத்துகள்** | | | |
| வைப்புகள் | | 2,896,832 | 212,237 |
| சேமிப்பு - NSB | | - | 500 |
| ஏனைய கிடைப்பனவுகள் | | 2,185,248 | 820,886 |
| WHT ஈடுசெய்ய வேண்டியவை | | 1,208,606 | 1,551,524 |
| VAT கட்டுப்பாடு | | 3,794,678 | 1,874,969 |
| வட்டிக் கிடைப்பனவுகள் - அரசாங்க பிணையங்கள் | | 536,878 | 1,076,391 |
| ஊழியர் கடன்கள் * | | 5,347,093 | 5,005,967 |
| முற்பணங்கள் மற்றும் முன் கொடுப்பனவுகள் | | 5,393,700 | 1,778,025 |
| PPF இருந்து மாற்றப்பட்ட வேண்டிய தொகை | | - | 1,597,445 |
| கைக்கொள்ளுவதற்க்கான ஏற்பாடு | | 623,626 | 2,089,077 |
| | | 21,986,662 | 16,007,020 |
| *ஊழியருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | |
| 01 ஜனவரி 2019 அன்று மீதி | | 5,005,967 | 5,769,159 |
| இவ்வருடத்தில் வழங்கப்பட்ட கடன்கள் | | 3,862,000 | 3,236,700 |
| | | 8,867,967 | 9,005,859 |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள்செலுத்தல்கள் | | (3,520,873) | (3,999,892) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | | 5,347,093 | 5,005,967 |
| **5 காசு மற்றும் காசுக்கு சமனானவை** | | | |
| **வங்கியில் உள்ள காசு** | | | |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | 23 | 10,197,543 | 4,248,455 |
| இலங்கை வங்கி 1877 - பேரேட்டின் படி | 23 | (702,743) | (1,537,007) |
| இலங்கை வங்கி FSMP கணக்கு | | 1,257,278 | - |
| சேமிப்பு - NSB | | 554 | - |
| | | 10,752,631 | 2,711,448 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | குறிப்புகள் | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **6 திரட்டிய நிதியம்** | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ள மீதி | 20 | **41,337,937** | - |
| வருடத்திற்கான மீதி | | **-** | 41,337,937 |
| திருத்தப்பட்ட சம்பள நிலுவை 2018 - தற்போதுள்ள ஊழியர்கள் | | **(10,237,415)** | - |
| திருத்தப்பட்ட சம்பள நிலுவை 2018 - நிறுத்தப்பட்ட ஊழியர்கள் | | **(985,609)** | - |
| 2018 இற்கான திருத்தப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவு | | **(73,217)** | - |
| திருத்தப்பட்ட விடுமுறையை பணமாக்கும் கொடுப்பனவு - 2018 | | **(346,946)** | - |
| 2018 ஆம் ஆண்டுக்கான வருமான வரி | | **(11,190,575)** | - |
| 2018 மீதி மாற்றப்பட்டது - காப்புறுதி பூட்கையாளர்களுக்கான பாதுகாப்பு நிதியம் | | **(18,504,176)** | - |
| வருட இறுதியில் மீதி | | **-** | 41,337,937 |
| **7 காப்புறுதிப் பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியம்** | | | |
| ஆரம்ப மீதி | | **5,042,765,873** | 4,109,959,205 |
| இவ்வருடம் கிடைத்த செஸ் | | **493,068,161** | 479,088,491 |
| ரிபோ மற்றும் சேமிப்பு கணக்குகளில் இருந்து கிடைத்த வட்டி | | **3,698,834** | 36,710 |
| திறைசேரி பிணையங்களின் முதலீடுகளில் இருந்து கிடைத்த வட்டி | | **92,882,074** | 95,120,708 |
| நிலையான வைப்புகளில் இருந்து கிடைத்த வட்டி | | **477,484,713** | 359,754,785 |
| நிதி முகாமைத்துவ கணக்கில் இருந்து கிடைத்த வட்டி | | **247,397** | 419,017 |
| ஆணைக்குழுவின் நிகர மிகை - 2018 | | **18,504,176** | - |
| ஆணைக்குழுவின் நிகர மிகை - 2019 | | **129,218,719** | - |
| | | **6,257,869,945** | 5,044,378,915 |
| கழி: | | | |
| மூலதனச் செலவுகளுக்கான மாற்றல் | | **4,901,298** | 1,599,945 |
| மொத்த மாற்றல்கள் - காப்புறுதிப்பூட்கை பாதுகாப்பு நிதியம் | | **4,901,298** | 1,599,945 |
| வங்கிக் கட்டணங்கள் | | **10,414** | 13,097 |
| | | **4,911,713** | 1,613,042 |
| முடிவு மீதி | | **6,252,958,232** | 5,042,765,873 |
| **8 மானியம்** | | | |
| வருட ஆரம்பத்தில் மீதி | | **5,389,425** | 5,718,532 |
| காப்புறுதிப் பூட்கையாளர் காப்புறுதி நிதியத்தில் இருந்து மூலதன செலவு | | **4,901,298** | 1,599,945 |
| கழி : இவ்வருடததின் கடன் தீர்ப்பு | | **(2,324,391)** | (1,929,052) |
| வருட இறுதியில் மீதி | | **7,966,331** | 5,389,425 |

குறிப்பு - மானியத்தை அடையாளம் காணல்
கீழ்வரும் வீதங்களில் வருமானங்களாக மானியம் நிதியியல் செயலாற்றுகை கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது. (அதாவது, தொடர்புடைய சொத்துக்களின் பயனுள்ள ஆயுள் குறித்த முறைமையான அடிப்படை)

| | | 31.12.19 | 31.12.18 |
|---|---|---|---|
| மோட்டார் வானம் | | **25%** | 25% |
| அலுவலக உபகரணம் - ஏனையவை மற்றும் EDP | | **25%** | 25% |
| தளபாட இணைப்புகள் மற்றும் பொருத்திகள் | | **12.5%** | 12.5% |
| பயிற்சி உபகரணங்கள் | | **25%** | 25% |
| **9 ஒய்வு நலன் தேவைப்பாடுகள்** | | | |
| வருட ஆரம்பத்தின் மீதி | | **12,155,897** | 10,902,547 |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | | **3,288,805** | 2,014,024 |
| கடந்த வருடத்தின் பற்றாக்குறை ஏற்பாடு | | **1,269,219** | - |
| உண்மையான (ஈட்டுகை)/நட்டம் | | **(515,801)** | - |
| (-) இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | | **(359,100)** | (760,674) |
| வருட இறுதியில் மீதி | | **15,839,021** | 12,155,897 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | குறிப்புகள் | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **10 ஏனைய நடைமுறை பொறுப்புகள்** | | | |
| அட்டுறு செலவுகள் | | **22,304,938** | 13,188,945 |
| EPF கொடுப்பனவு செய்ய வேண்டியவை | | **1,135,994** | 710,207 |
| ETF கொடுப்பனவு செய்ய வேண்டியவை | | **170,400** | 106,532 |
| PAYE கொடுப்பனவு செய்ய வேண்டியவை | | **151,990** | 74,014 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பிடித்து வைத்தல்கள் | | **36,228** | - |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரி | | **3,359,549** | - |
| PPF க்கு மாற்றப்பட்ட வேண்டிய தொகை | | **124,317,421** | - |
| ஏனையவை | | **2,804,361** | 816,486 |
| | | **154,280,881** | 14,896,184 |
| **11 வருமானம்** | | | |
| காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருடாந்த கட்டணம் | | **224,428,714** | 168,499,107 |
| பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் | | **14,384,961** | 7,669,742 |
| | | **238,813,675** | 176,168,849 |
| **12 FSM கருத்திட்டத்தில் இருந்து வருமானம்** | | | |
| FSMP - DLI மானியம் | 26 | **81,096,220** | - |
| FSMP - Non DLI மானியம் | | **523,874** | - |
| | | **81,620,094** | - |
| **13 வட்டி வருமானம்** | | | |
| நிலையான வைப்புகளில் இருந்தான வட்டி | | **10,258,118** | 4,608,151 |
| நிதி முகாமைத்துவ நிதியத்தின் மீதான வட்டி | | **286,691** | 420,782 |
| சேமிப்பு கணக்கு மீதான வட்டி | | **57** | - |
| ரிபோ மீதான வட்டி | | **5,213,034** | 2,410,370 |
| | | **15,757,900** | 7,439,303 |
| **14 ஏனைய வருமானம்** | | | |
| வாகனக் கடன் மீதான வட்டி | | **30,328** | 31,406 |
| இடர் கடன் மீதான வட்டி | | **142,586** | 143,164 |
| அகற்றல் மீதான இலாபம் | | **83,065** | - |
| நானாவித வருமானம் | | **82,175** | 102,664 |
| | | **338,154** | 277,233 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|
| **15 ஊழியர் செலவுகள்** | | |
| ஊழியர் சம்பளங்கள் | **65,968,080** | 41,676,378 |
| EPF 12% | **7,913,290** | 4,987,246 |
| ETF 3% | **1,978,323** | 1,246,812 |
| தலைவர் - கொடுப்பனவு | **-** | 129,589 |
| தலைவர் - எரிபொருள் கொடுப்பனவு | **-** | 25,775 |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் - அமர்வுக்கான கொடுப்பனவு | **540,000** | 530,000 |
| உள்ளுறைக் கொடுப்பனவு | **344,925** | 342,600 |
| மேலதிக நேரம் | **400,137** | 209,841 |
| ஊழியர் மருத்துவச் செலவு | **1,927,480** | 1,970,211 |
| ஊழியர் மருத்துவக் காப்புறுதி | **1,615,932** | 1,117,854 |
| தீ மற்றும் தனியாள் காப்புறுதி | **339,294** | 239,222 |
| ஊழியர் நலன்புரி | **841,693** | 1,163,529 |
| உள்ளூர் ஊழியர் பயிற்சி மற்றும் சந்தா | **1,610,639** | 1,264,144 |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர் - வெளிநாட்டு பயிற்சி மற்றும் பயணம் | **10,375,090** | 10,589,034 |
| செயலலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவு | **7,178,213** | 4,561,566 |
| ஆட்சேர்பு விளம்பரம் | **693,115** | 249,975 |
| பணிப்பாளர்களின் வதிவிடத் தொலைபேசி | **461,959** | 390,112 |
| விடுமுறையைக் காசாக்கல் | **1,218,344** | 687,638 |
| வாகனத் தொழிற்பாட்டுக் குத்தகைக் கட்டணம் | **1,455,048** | 1,455,048 |
| சாரதிக் கொடுப்பனவு | **500** | 26,786 |
| பணிப்பாளர் வாகனக் கொடுப்பனவு | **3,246,712** | 3,123,699 |
| பணிப்பாளர்களின் எரிபொருள் கொடுப்பனவு | **1,066,755** | 1,008,482 |
| ஊழியர் பணிக்கொடை | **3,148,387** | 2,014,024 |
| | **112,323,915** | 79,009,564 |
| **16 தொழில்முறைக் கட்டணங்கள்** | | |
| ஆலோசனைக் கட்டணம் | **-** | 5,035,081 |
| | **-** | 5,035,081 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | 31.12.19 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|
| **17 தொழிற்பாடடுச் செலவுகள்** | | |
| வாடகை | **40,474,432** | 36,423,747 |
| தரிப்பிடக் கட்டணம் | **730,676** | 606,000 |
| தொலைபேசிக் கட்டணங்கள் மற்றும் இணையம் | **1,417,311** | 1,499,000 |
| மின்சாரம் | **1,859,221** | 1,503,455 |
| அலுவலகப் பராமரிப்பு | **551,193** | 764,913 |
| அச்சிடுதல் மற்றும் எழுதுகருவி | **3,406,080** | 1,650,787 |
| பொது மக்கள் விழிப்புணர்வு | **9,834,508** | 2,402,923 |
| களியாட்டம் | **-** | 4,000 |
| போக்குவரத்து - உள்ளூர் | **170,842** | 133,883 |
| ஈடிபி மற்றும் ஏனையவைக்கான அலுவலக உபகரணப் பராமரிப்பு | **2,107,863** | 1,743,298 |
| ஐஏஐஎஸ் (IAIS) இற்கான சர்வதேச அங்கத்துவக் கட்டணம் | **3,413,130** | 3,147,964 |
| விளம்பரம் - ஏனையவைகள் | **128,925** | 105,050 |
| சட்டச் செலவுகள் | **522,852** | 336,428 |
| பத்திரிகை மற்றும் நூலக புத்தகங்களுக்கான சந்தா | **153,471** | 121,387 |
| தபால் மற்றும் பொதிக் கட்டணம் | **238,326** | 242,488 |
| கணக்காய்வுக் கட்டணம் - கணக்காய்வாளர் நாயகம் | **161,400** | 485,000 |
| கணக்காய்வுக் கட்டணம் - உள்ளக | **1,603,166** | 1,440,000 |
| பெறுமானத் தேய்வு | **4,899,489** | 3,535,279 |
| பெயர் மாற்றம் தொடர்பான செலவுகள் | **-** | 416,496 |
| பொதுச் செலவுகள் | **109,255** | 80,855 |
| சட்டச் செலவுகள் | **1,210** | 98,370 |
| புலனாய்வுச் செலவுகள் | **33,661** | 26,202 |
| மேற்பார்வை செலவுகள் | **2,500** | 1,775 |
| வாகனப் பராமரிப்பு | **126,395** | 409,483 |
| வாகனக் காப்புறுதி | **67,026** | 110,693 |
| வாகன ஓட்டக் கட்டணங்கள் | **287,862** | 260,688 |
| மிகைக் கட்டணம் மற்றும் தண்டம் | **-** | 1,754 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | **-** | - |
| தேசக் கட்டுமான வரி | **1,022,445** | 901,576 |
| | **73,323,241** | 58,453,496 |
| **18 FSM கருத்திட்டம் தொடர்பான செலவுகள்** | | |
| ஆட்சேர்ப்புக்கான விளம்பரம் | **450,760** | - |
| வங்கிக் கட்டணம் | **5,500** | - |
| | **456,260** | - |
| **19 நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் மீதான வட்டி | **1,409,637** | - |
| வங்கி கட்டணங்கள் | **158,864** | 155,451 |
| | **1,568,501** | 155,451 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

## 20. ஒன்றுதிரட்டிய நிதியம்

2018ஆம் ஆண்டுக்கான சம்பளத் திருத்தம் மற்றும் வருமான வரி என்பன சீராக்கப்பட்டதன் பின்னர், ஆணைக்குழுவின் மிகை காப்புறுதிப்பூட்கையாளர்களின் நிதியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

## 21. நிதி முகாமைத்துவக் கணக்குகள், பேரேட்டு மீதிகள் மற்றும் வங்கி மீதிகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, ஆணைக்குழுவின் இரு நடைமுறைக் கணக்குகளில் (ஆணைக்குழு மற்றும் காப்புறுதிபூட்கையாளர் பாதுகாப்பு நிதியம் என்பவற்றுக்கான) சாதகமான மீதியான ரூபா 1,000,000 இனை கொண்டுள்ள நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் (வங்கி பதிவேடுகளில்) நிதி முகாமைத்துவ கணக்குகளுக்கு தன்னியக்கமாக மாற்றப்படும் வகையில் இரு நிதி முகாமைத்துவக் கணக்குகளை தொழிற்படுத்துகின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் ஏற்கனவே வழங்கப்பட்ட காசோலைகள் உடனடியாக சமர்ப்பிக்கப்படாதிருந்தால், பேரேட்டில் காணப்படும் வங்கி மீதியானது நிதி முகாமைத்துவ கணக்குகளுடனான கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் பதிவுசெய்யப்படுவதன் காரணமாக மறைப் பெறுமதியை வெளிப்படுத்தக்கூடும்.

31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று வங்கி மீதிகள் பின்வருமாறு,

| | |
|---|---|
| நடப்புக் கணக்கின் இருப்பு - | (ரூபா. 702,743) |
| காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் | ரூபா. 10,197,543 |
| **மொத்தம்** | **ரூபா 9,494,800** |

## 22. வரிவிதிப்பு

வருமான வரிக்கான ஏற்பாடுகள் 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அமைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | **2019 (ரூபா)** |
|---|---|
| வரிவிதிப்புக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் | 151,182,297 |
| **சேர்:** வரிவிதிக்கத்தக்க வருமானம்/(நட்டம்) இனை தீர்மானிப்பதில் அனுமதிக்கப்படாத செலவுகளின் வரித் தாக்கம் | 14,820,771 |
| **கழி:** வரிவிதிக்கத்தக்க வருமானம்/(நட்டம்) இனை தீர்மானிப்பதில் அனுமதிக்கக்கூடிய செலவுகளின் வரித் தாக்கம் | (21,366,888) |
| வரிவிதிக்கக்கூடிய கணக்கீட்டு இலாபம்/(நட்டம்) | 144,636,179 |
| வட்டி வருமானம் | 15,930,814 |
| மொத்த வரிவிதிக்கத்தக்க வருமானம் | 160,566,993 |
| இவ்வருடத்திற்கான வட்டி வீதம் | 14% |
| இவ்வருடத்திற்கான வரி | 22,479,379 |
| **கழி:** வரி வரவுகள் | (1,776,285) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட சுய கொடுப்பனவு | (17,343,545) |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதி வரி | 3,359,549 |

## 23. மூலதன ஒப்படைப்புகள்

31 டிசம்பர் 2019 அன்று மூலதன ஒப்படைப்புகள் ஏதுமில்லை.

## 24. தொடர்ந்து செல்லும் பொறுப்புகள்

31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று சொத்து கைக்கொள்ளலுக்காக ரூபா 623,626.00 இற்கான ஏற்பாட்டை ஆணைக்குழு செய்துள்ளது.

## 25. அறிக்கையிடலின் பின்னரான நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுகளில் அவசியமான சீராக்கல்கள் மேற்கொண்டதன் பின்னர் அல்லது வெளிப்படுத்ததன் பின்னர் அறிக்கையிடப்பட்டதன் பின்னரான எந்த ஒரு நிகழ்வும் எழவில்லை.

## 26. இலங்கை நிதியியில் துறையை நவீனமயப்படுத்துவதற்கான கருத்திட்டம் (FSMP)

இலங்கை அரசாங்கம், நிதித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவிகளை வழங்குவதற்கு உலக வங்கி போன்ற அபிவிருத்திப் பங்காளிகளிடம் கோரியுள்ளது. உலக வங்கி ஐந்து வருட காலங்களுக்கு, மூன்று நிதியியல் துறை ஒழுங்குபடுத்துனர்களை அமுல்படுத்தல் பங்காளர்களாகக் கொண்டு **“இலங்கையின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்திற்கு”** ஆதரவளிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

கருத்திட்ட அபிவிருத்தியின் நோக்கம், நிதியியல் மற்றும் காப்புறுதித்துறையின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் நிதியியல்/காப்புறுதி சேவைகளை நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பயன்படுத்துவதற்கு பங்களிப்பு செய்வதாகும். இந்த கருத்திட்டம் கருத்திட்ட அபிவிருத்தி நோக்கத்தை நிதியியல் சந்தைக் கட்டமைப்பை நவீனமயப்படுத்தல், நிதியியல் முறைமைக்கான சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்ட அமைப்பை மேம்படுத்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் போன்ற நிதியியல் துறை ஒழுங்குபடுத்துனர்களின் நிறுவன இயலுமையை பலப்படுத்தல் என்பவற்றினூடாக அடையும். அதற்கமைவாக, இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசும் சர்வதேச அபிவிருத்தி சங்கமும் (கடன் இலக்கம் 6006-எல்கே), விசேட பெற்றுக்கொள்ளல் உரிமைகள் 55,400,000 (அண்ணளவாக அ.டொ 75 மில்லியன்) சமனான கடன் தொகைக்கு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. கடன் நடைமுறைகளில் இருந்து, அரசாங்கம் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவுடன் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் அமைக்கப்படும் உரிய செலவழிப்பு இணைக்கு காட்டிகளாக (DLIS) விசேட பெற்றுக்கொள்ளல் உரிமைகள் 6,650,000 (அண்ணளவாக அ.டொ 9 மில்லியன்) மற்றும் விசேட பெற்றுக்கொள்ளல் உரிமைகள் 708,333 (அண்ணளாவாக அ.டொ 1 மில்லியன்) இனை வழங்குவதற்கு உப ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

உலக வங்கி கீழ்வரும் தொகையை நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பியுள்ளது.

(i) FSMP முதலீட்டு கருத்திட்டநிதியியடல்

| திகதி | தொகை (ஐ.அ.டொ) |
|---|---|
| 14/01/2019 | 523,000 |

(ii) பெறுபேறு அடிப்படையிலான நிதியிடல்

| திகதி | தொகை (ஐ.அ.டொ) |
|---|---|
| 27/03/2019 | 261,163.13 |
| 25/05/2019 | 64,677.66 |
| 09/10/2019 | 64,039.69 |
| 17/12/2019 | 64,803.28 |

**27. தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்**

திரு. மனோ திதத்தவெல் (தலைவர்), 1 ஜனவரி - 22 நவம்பர் 2019 வரை.
திரு. யுதிஸ்ரன் கனகசபை, 1 ஜனவரி - 25 நவம்பர் 2019 வரை
திரு. உபுல் தேசப்பிரிய, 1 ஜனவரி - 2 டிசம்பர் 2019 வரை
திரு. எச்.ஏ. கருணாரத்ன 1 ஜனவரி - 31 டிசம்பர் 2019 வரை
திரு. டி.என.ஆர். சிறிவர்தன 1 ஜனவரி - 31 டிசம்பர் 2019 வரை
திரு. ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து 7 பெப்பரவரி - 13 டிசம்பர் 2019 வரை

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. TRE/C/IRCSL/01/2019/FA/08 — ඔබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 2021 ஜனவரி 29

தவிசாளர்,
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு.

**இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2019 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று தொடர்பான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவுக்கமைய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

## 1. நிதி கூற்று

### 1.1 உள்ளவாறான விளக்க கருத்து.

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2019 டிசம்பர் 31 திகதிய நிதிநிலை கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று, உரித்து மாற்றமடையும் கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று, நிதி கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், சாராம்சங்கங்கள் முக்கியமான கணக்கீட்டு தராதரங்களை உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31 நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) பிரிவுடன் இணைத்து வாசிக்க வேண்டிய 2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971/38 இலக்க நிதி சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எனது ஆணையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரைக்கமைய எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் உள்ளவாறான விளக்க கருத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, நிதியத்தின் 2019 டிசம்பர் 31 திகதிய நிதிநிலை மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப்பாய்ச்சல் இலங்கை அரச துறை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைவாக உண்மையான, நியாயமான நிலையை வெளிப்படுத்துகிறது என்பது எனது கருத்தாகும்.

### 1.2 உள்ளவாறான விளக்க கருத்துக்கான அடிப்படை

(அ) சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தை மீண்டும் மீயாய்வு செய்து, அதற்கமைய தெரியவரும் மதிப்பீடு செய்யப்பட்ட தவறுகள் அரச துறை கணக்கீட்டு தராதர இலக்கம் - 03 இற்கு அமைய மீண்டும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், முழுமையாக பெறுமான தேய்வு செய்யப்பட்டிருந்தும் தற்போது பாவிக்கப்படும் மொத்தம் ரூ. 36,147,267 ஆன சொத்துக்கள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 05 ஆண்டுகளில் மீள பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தனியார் நிறுவனமொன்றில் வைப்பு செய்யப்பட்டிருந்த நடைமுறையற்ற சொத்தாக கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூ. 12,282,195 தொகையில் ரூ. 2,674,746 நிதி நிலைக் கூற்றில் நடைமுறை சொத்தாக காட்டப்பட்டிருந்தது.

(இ) 2019 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 4,723,000 பெறுமதியான கணனி மென்பொருள் அரச துறை கணக்கீட்டு தராதர இலக்கம் - 20 க்கு அமைய நிறுவனத்தின் கட்புலனாகா சொத்தாக இனங்காணப்பட்டு, கணக்கு வைக்கப்படுவதற்கும், அந்த சொத்து பெறுமானத் தேய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதுடன், இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 844,167 கொடுப்பனவு முன்னைய கொடுப்பனவின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும் இந்த மென்பொருள் தொடர்பில் குறித்த வழங்குனருடன், ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட எழுத்துமூல உடன்படிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு (இ.க.த) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தராதரங்களின் கீழ் எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிகூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதுமானதும், பொருத்தமானதுமாகும் என நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව — இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. — No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 — +94 11 2 88 72 23 — ag@auditorgeneral.gov.lk — www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

### 1.3. நிதிக்கூற்று தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் நிர்வாக தரப்பினரின் பொறுப்புகள்.

இந்த நிதிக்கூற்று இலங்கை அரச துறை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைய தயாரிக்கப்படுதல், நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி, தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றை தயாரிப்பதற்கு தேவையான உள்ளக நிர்வாக தீர்மானங்களை மேற்கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றை தயாரிக்கும் போது, நிதியத்தை தொடர்ச்சியாக பேணிச்செல்லும் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், நிதியத்தை குலைப்பதற்கு முகாமைத்துவம் கருதினாலோ அல்லது வேறு மாற்று தெரிவுகள் இல்லாவிட்டால் செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ச்சியாக இயக்கும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் ஆணைக்குழுவை தொடர்ச்சியாக இயக்குவதற்கான விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் வகிக்கப்படுகிறது.

2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவுக்கமைய நிதியத்தின் வருடாந்த மற்றும் சமகால நிதிக்கூற்றை தயாரிக்க கூடிவாறு தமது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரியவாறான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேண வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு.

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்று மோசடி, தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்கள் அற்றதென நியாயமான சான்று வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுபடுத்தல், உயர் தரத்தில் சான்றுபடுத்திய போதிலும், இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு அமைய கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் குறிப்பிடத்தக்களவு கூறப்படாதவைகளை வெளிப்படுத்தியதாக சான்றுபடுத்தப்படவில்லை. மோசடி, தவறுகளின் தனியான அல்லது கூட்டான தாக்கம் காரணமாக குறிப்பிடத்தக்களவு வெளிப்படுத்தப்படாதவை இருக்கலாம் என்பதுடன், இந்த நிதிக்கூற்றை அடிப்படையாக கொண்டு பரிசோதித்தவர்களால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்வாண்மையான தீர்ப்பு மற்றும் தொழில்வாண்மையான சந்தேகத்துடன் இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு அமைய கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள், தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்களின் ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்தக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள், தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தவிர்ப்பதற்கு, போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகளை பெறுதல் எனது கருத்துக்கு அடிப்படையானதாகும். குறிப்பிடத்த பொய்யான கூற்றுக்களால் ஏற்படும் தாக்கங்களை விடவும் சோடிகளால் ஏற்படும் தாக்கம் பலமானது. போலி ஆவணங்கள் தயாரித்தல், வேண்டுமென்றே தவிறவிடுதல் மற்றும் உள்ளக கட்டப்பாட்டின் தவறவிடுதல்கள் மோசடிகள் ஏற்பட காரணமாகும்.

- சந்தர்ப்பத்தக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் தெளிவடைந்த போதிலும், உள்ளக கட்டுப்பாட்டின் பயன்மிகு தன்மை தொடர்பில் கருத்து தெரிவிக்கப்படவில்லை.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டு தராதரங்கள், கணக்கிடப்பட்ட செலவு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்தல்கள் தராதரம் பாராட்டப்படுகிறது.

- சம்பவங்கள் அல்லது நிலமைகள் காரணமாக நிதியத்தை தொடர்ச்சியாக பேணுதல் தொடர்பில் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை பாவிக்கப்படும் தொடர்புடைய தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் தீர்மானித்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்படுத்தல் போதுமானதல்ல எனின், எனது கருத்து கணக்காய்வு செய்யப்பட வேண்டும். இருந்தபோதிலும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலமைகள் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடையலாம்.

- வெளிப்படுத்தலை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல், விளக்கம் மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கு அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதி கூற்றுக்களில் உள்ளடக்கியது பாராட்டப்படுகிறது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டபிடிப்புகள்,பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாக தரப்பினர் தெளிவுபடுத்தப்பட்டனர்.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## 2. ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டன. எனது பரிசீலனையில் தெரியவருவதற்கு அமைய உரிய நிதி அறிக்கை நிறுவனத்தால் பேணப்பட்டு வந்துள்ளது.

- 2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (இ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்று கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாகிறது.

- 2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (இ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெறப்பட்ட சாட்சிகள் அடிப்படையிலும், போதுமானளவு விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் கூற்றுக்களை செய்வதற்கு போதுமான எதுவும் எனது கவனத்துக்கு உட்படவில்லை.

- 2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதிய கட்டுப்பாட்டு சபையின் எவராவது உறுப்பினருக்கு நிதியம் தொடர்பில் நேரடியாகவோ, ஏனைய வழிகளிலோ சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பான தொடர்புகள் இருப்பதாகவும்,

- 2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஏதாவது தொடர்புடைய எழுத்து மூல சட்டத்துக்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதல்லாத வகையில் செயற்பட்டுள்ளதாக,

| | தொடர்புடைய ஒழுங்குவிதிகள் / உத்தரவுகள் | விபரம் |
|---|---|---|
| (அ) | 2000 / 43 இலக்க காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 6 (2) (ஈ) பிரிவு | ஆணைக்குழுவால் அதன் அதிகாரம், கருமங்கள், பணிகளை அமுல்படுத்தும் போது, நிறைவேற்றும் பொது ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் அனைத்து நிதிகளும் அதன் வருமானமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், 2019 ஆண்டில் செஸ் வரியாக கிடைத்திருந்த ரூ. 493,068,161 மற்றும் 2019 ஆண்டில் காப்புறுதி பொறுப்பு வகிப்போர் பாதுகாப்பு நிதியத்துக்கு உரிய ரூ. 574,313,018 ஆன வட்டி வருமானம் ஆணைக்குழுவின் மீளாய்வு ஆண்டுக்கான வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கடந்த ஆண்டிலும் இந்த நிலை அந்த வகையிலேயே இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2000 / 43 இலக்க காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 48 (1) பிரிவு | அனைத்து காப்புறுதியாளர்களாலும், அந்த வியாபார காப்புறுதியாளரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மதிப்பீடு செய்தலும் அடங்கலாக, ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் உயிரளவையியலாளரை ஈடுபடுத்தி புலனாய்வு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுடன். சபையால் உருவாக்கப்பட்ட சட்ட விதிகளுக்கு அமைவாக பகுதி அறிக்கை தயாரிப்பதற்கான நடவடிக்கை சபையால் எடுக்கப்பட வேண்டும். இருந்த போதிலும் ஆணைக்குழுவில் உயிரளவையியலாளர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாக இருப்பதன் காரணமாக காப்புறுதியாளர்களால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் உயிரளவையியலாளர் அறிக்கையை மீளாய்வு செய்வதற்காக நிரந்தரமான செயற்திட்டத்தை பாவிப்பதில் ஆணைக்குழு தோல்வியடைந்துள்ளது. |
| (இ) | 2003 ஜுன் 02 திகதிய PED / 12 இலக்க அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 9.14 பந்தி | நிர்வாக கையேட்டை தயாரித்து, அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், திறைசேரி செயலாளரிடம் சமர்ப்பித்து ஒத்திசைவு பெறப்பட வேண்டும் என்ற போதிலும், 2020 ஜுலை 31 திகதியில் கூட ஆணைக்குழுவால் பாவிக்கப்படும் கையேட்டுக்கு திறைசேரி செயலாளரின் ஒத்திசைவு கிடைத்திருக்கவில்லை. இருந்த போதிலும் முற்பணம் செலுத்துதல், வாகன கடன் வழங்குதல் உள்ளிட்ட செயற்பாடுகள் அங்கீகாரம் பெறப்படாத நிர்வாக கையேட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. |
| (ஈ) | 2017 / 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 07 ஆவது பிரிவு | ஆணைக்குழுவின் மதிப்பீட்டு ஆண்டுக்கு உரிய வருமான வரிக்கு உட்பட வேண்டிய மேலே குறிப்பிடப்பட்ட மொத்தம் ரூ.1,067,381,178 மீளாய்வு ஆண்டுக்கு உரிய வருமான வரி பொறுப்பு கணக்கிடும் போது கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

- 2018/19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஆணைக்குழுவின் அதிகாரம், பணிகள் மற்றும் கருமங்களுக்கு அமைவாக இல்லாத வகையில் செயற்படுத்தப்பட்டுள்ளதாக,
- 2018.'.19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புகள் தவிர ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் உற்பத்தித்திறனாக காலப்பகுதியில் சட்ட விதிகளுக்கு அமைவாக பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு பாவிக்கப்பட்டிருக்கவில்லை என,

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**

(அ) காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 13 (1) (இ) பிரிவுக்கு அமைய புதிதாக பதிவு செய்வதற்காக விண்ணப்பம் செய்யும் காப்புறுதி கம்பனி, ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் பணத்தொகையை திறைசேரியில் வைப்பு செய்ய வேண்டும். அவ்வாறு வைப்பு செய்யப்பட்ட பணம் தொடர்பாக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தால் பேணப்பட்டுவரும் பதிவேடுகள் மற்றும் ஆணைக்குழுவால் பேணப்பட்டு வரும் பதிவேடுகளுக்கும் இடையில் ரூ. 3,700,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, குறித்த வேறுபாட்டுக்கான காரணம் இணக்கம் செய்யப்பட்டு, வைப்பு பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேலும், 2007 ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட 11 காப்புறுதி கம்பனிகள் தொடர்பில் மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட வைப்பு தொடர்பான தகவல்களை ஆணைக்குழு பேண நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) 2016 ஆண்டுக்கு முன்பிருந்து கிடைக்க வேண்டியது என நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூ. 1,208,602 தடுத்து வைக்கப்பட்டுள்ள வரி மீதி மீளாய்வு ஆண்டு முடிவடையும் போது கூட சீர் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழு 2016 ஆண்டின் ஆரம்பத்திலிருந்து காப்புறுதி கம்பனிகளின் சட்ட ஏற்பாடுகளுக்கு மாற்றீடாக அறிமுகப்படுத்தப்பட்ட இடர் அடிப்படையிலான மூலதனத்தை (சுடீஊ) அடிப்படையாக கொண்ட மேற்பார்வை முறையை பின்பற்றியதன் காரணமாக உயிரியலளவை அலகை உருவாக்குவதற்கு 2016 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 05 நிறைவேற்று மட்ட பதவிகள் வெற்றிடமாக இருந்தது.



**டபிள்யூ.பி.சீ.விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் நாயகம்.

# 2019 ஆண்டுக்கு கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விசாரணைகள் மற்றும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

<table>
<tr><th colspan="3">2019ஆம் ஆண்டு அறிக்கையில் கணக்காய்வு அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களுக்கு ஆணைக்குழுவின் பதிலளிப்பு</th></tr>
<tr><th colspan="2">கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை</th><th>இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதில்</th></tr>
<tr><th colspan="2">கணக்காய்வின் மீதான கருத்துக்கான அடிப்படை</th><th></th></tr>
<tr><td colspan="2">- சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட் காலத்தை மீள மீளாய்வு செய்ததற்கு அமைவாக கண்டுபிடிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குறைபாடு அரச பிரிவுகளுக்கான கணக்கீட்டு நியம இலக்கம் 03இற்கு அமைவாக மீண்டும் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் முழுமையாக தேய்மானம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தற்போது பாவனைக்கு எடுக்கப்படும் மொத்தத் தொகை ரூ.36,147,267ஆக இருந்த போதிலும் சொத்துகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.</td><td>இலங்கை அரச பிரிவுகளுக்கான கணக்கீட்டு நியமம் 07இற்கு அமைவாக சொத்துகளின் நியாயப் பெறுமதி (fair value) தொடர்ச்சியாக ஏற்ற இறக்கமாக (Volatile) காணப்பட்டால் மாத்திரமே சொத்துக்களுக்கான வினைத்திறன் ஆயுட் காலத்தை வருடாந்தம் கணக்கிடுதல் வேண்டும். அவை முழுமையாக தேய்மானம் வழங்கப்பட்ட சொத்துகள் என்பதனால் அவை விரைவாக மாற்றமடையாது என்பது முகாமைத்துவத்தினதும் கணக்காய்வுக் குழுவினதும் தீர்மானமாக இருந்தது. அத்துடன் இது போன்ற மீள் மதிப்பீட்டுக்காக செலவிடப்படும் செலவைக் கருத்தில் கொண்டு மோட்டார் வாகனத்தை மாத்திரம் மீள் மதிப்பீடு செய்வதற்கு கணக்காய்வுக் குழு தீர்மானித்தது. அதனால் எங்கள் நிறுவனம் நியம இலக்கம் 07இற்கு அமைவாக செயற்பட்டுள்ளது என்பது எங்களது கருத்தாகும்.</td></tr>
<tr><td colspan="2">- 05 வருடத்தின் பின்னர் மீண்டும் எடுக்கக்கூடிய வகையில் தனியார் நிறுவனத்தில் வைப்பு செய்யப்பட்ட ரூ.12,280,195இல் ரூ.2,674,746 எனும் தொகை நடைமுறைக் கணக்காக நிதி நிலமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.</td><td>வாடகை ஒப்பந்தத்திற்கு அமைவாக, கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகைக்கு அமைவாக ரூ.9,607,449 வைப்புத் தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு முன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதனை நடைமுறையல்லாத சொத்தாகக் கணக்கீடு செய்தல் சரியானதாகும். ரூ.2,674,946 வைப்பு 2019 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், அது ஒரு வருடத்திற்கும் குறைவு என்பதனால், நடைமுறையல்லா சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டு 2020ஆம் ஆண்டில் நடைமுறையல்லாக் கணக்கிற்கு உரிய தொகை மாற்றப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td colspan="2">- 2019ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.4,723,000 பெறுமதியான கணணி மென்பொருள் அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் - 20 இற்கு அமைய நிறுவனத்தின் கட்புலனாகா சொத்தாக இனங்காணப்பட்டு, கணக்கு வைக்கப்படுவதற்கும், அந்த சொத்து பெறுமானத் தேய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதுடன், இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூ.844,167 கொடுப்பனவு முன்னைய கொடுப்பனவின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும் இந்த மென்பொருள் தொடர்பில் குறித்த வழங்குனருடன், ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட எழுத்து மூல உடன்படிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.</td><td>இந்த Board Pac மென்பொருள் தொடர்பான கொடுப்பனவாகும். இந்த மென்பொருள் தொடர்பாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூ.844,167.00 முன்கொடுப்பனவு எனக்குறிப்பிடப்பட்டு மாதாந்த வருமானம் மற்றும் செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதற்குக் காரணம், இது வருடாந்தம் கொடுப்பனவு செய்வதற்கான அனுமதிப்பத்திரக் கட்டணமாவதனால், (License Fee) இந்த அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்திற்கு செல்லுபடியாவதுடன், அந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே மென்பொருளைப் பயன்படுத்த முடியும் என்பதனால் நீங்கள் குறிப்பிட்ட ரூபா 4,723,000.00 தொகை ஐந்து வருடத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையாகும். இவ்வாறு ஒப்பந்தம் செய்தது விலையேற்றத்தை தவிர்பதற்காகவேயன்றி, அந்தத் தொகை கொடுப்பனவு செய்யப்படவில்லை. அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால், நீங்கள் கூறியவாறு கட்புலனாகச் சொத்துக்களாக கணக்கீடு செய்யக்கூடியதாக இருந்திருக்கும். எனினும், இத்தொகை வருடந்தோறும் கொடுப்பனவு செய்யப்படுவதனாலும், வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு இதன் நன்மைகள் கிடைக்கப்பெறாமையினாலும் இதனைக் கட்புலனாகச் சொத்தாக கணக்கீடு செய்ய முடியாது அதனால், இந்த வருமானம் மற்றும் செலவு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><th colspan="3">ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள்</th></tr>
<tr><td>(அ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 6 (2) (ஈ) பிரிவு</td><td>ஆணைக்குழுவால் அதன் அதிகாரம், கருமங்கள், பணிகளை அமுல்படுத்தும் போது, நிறைவேற்றும் போது ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் அனைத்து நிதிகளும் அதன் வருமானமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், 2019ஆம் ஆண்டில் செஸ் வரியாக கிடைத்திருந்த ரூ. 493,068,161 மற்றும் 2019 ஆம் ஆண்டில் காப்புறுதி பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்துக்கு உரிய ரூ. 574,313,018 ஆன வட்டி வருமானம் ஆணைக்குழுவின் மீளாய்வு ஆண்டுக்கான வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கடந்த ஆண்டிலும் இந்த நிலை அந்த வகையிலேயே இருந்தது அவதானிக்கப்பட்டது.</td><td>2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 103 (1) ஆம் பந்திக்கு அமைவாக, செஸ் வரியின் ஊடாக கிடைக்கும் அனைத்து நிதிகளும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 6 ஆம் பந்திக்கு அமைவாக, ஆணைக்குழுவிற்கு வேறு ஒரு நிதியம் உருவாக்கப்பட்டு அதற்கு கீழ்வரும் வருமானங்களை வரவு வைக்க முடியும்.<br>• பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி<br>• பதிவுக் கட்டணம்<br>• வருடாந்த பதிவினைப் புதுப்பித்தல் கட்டணம்<br>• வேறு.<br>அதனால் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெளிவாக 2 நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய வருமானம் எவை என்பது குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவம் அதற்கு அமைவாக செயற்பட்டுள்ளது. அத்துடன், இவ்வாறு செஸ் வரியினைச் சேகரிக்கும் ஏனைய நிறுவனங்களும் பின்பற்றுவது இதே நடைமுறையை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். அதனால் இந்த கணக்கீட்டு முறையில் எவ்வித தவறும் இல்லை என்பது எங்களது கருத்தாகும்.</td></tr>
<tr><td>(ஆ) 2000ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 48 (1) ஆம் பிரிவு.</td><td>அனைத்து காப்புறுதியாளர்களாலும், அந்த வியாபார காப்புறுதியாளரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மதிப்பீடு செய்தலும் அடங்கலாக, ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் உயிரளவையியலாளரை ஈடுபடுத்தி புலனாய்வு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுடன். சபையால் உருவாக்கப்பட்ட சட்ட விதிகளுக்கு அமைவாக பகுதி அறிக்கை தயாரிப்பதற்கான சபையால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இருந்த போதிலும் ஆணைக்குழுவில் உயிரளவையியலாளர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாக இருப்பதன் காரணமாக காப்புறுதியாளர்களால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் உயிரளவையியலாளர் அறிக்கையை மீளாய்வு செய்வதற்காக நிரந்தரமான செயற்திட்டத்தை பாவிப்பதில் ஆணைக்குழு தோல்வியடைந்துள்ளது.</td><td>உலக வங்கியின் நன்கொடையின் கீழ் செயற்படுத்தப்படும் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் (Financial Sector Modernization Project) ஊடாக உயிரளவீட்டு ஆலோசகரை நியமித்து உயிரியலளவை அலகு நிறைவேற்றுத் தர அலுவலர்களுடன் நடவடிககைகள் மேற்கொள்ளப்படுகின்றன.</td></tr>
</table>

# 2019 ஆண்டுக்கு கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விசாரணைகள் மற்றும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| | | |
|---|---|---|
| (இ) 2003 ஜூன் 02 ஆம் திகதி PED/12 இலக்க அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | நிர்வாகக் கையேட்டைத் தயாரித்து, அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், திறைசேரி செயலாளரிடம் சமர்ப்பித்து ஒத்திசைவு பெறப்பட வேண்டும் என்ற போதிலும், 2020 ஜூலை 31 ஆம் திகதியில் கூட ஆணைக்குழுவால் பாவிக்கப்படும் கையேட்டுக்கு திறைசேரி செயலாளரின் ஒத்திசைவு கிடைத்திருக்கவில்லை. இருந்த போதிலும் முற்பணம் செலுத்துதல், வாகனக் கடன் வழங்குதல் உள்ளிட்ட செயற்பாடுகள் அங்கீகாரம் பெறப்படாத நிர்வாக கையேட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. | நிர்வாக கையேடு திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக 30.03.2017ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அரச தொழில்முயற்சி திணைக்களத்தின் இலக்கம் PE/REG/IRCSL/PR மற்றும் 05.04.2018ஆம் திகதி கடிதத்தின் ஊடாக அதனை மதிப்பீடு செய்வதற்கு அவசியமான மனிதவளப் பிரச்சினைகள் உள்ளதனால் அது தாமதமடைகின்றது எனக் குறிப்பிடப்பட்டது.<br>ஆணைக்குழுவினாலும் அன்றன்றைய நிர்வாக நடவடிக்கையின் போது இந்த நிர்வாக கையேடு பயன்படுத்துவதற்கு தகுதியுடையது என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br>ஆணைக்குழுவாக எங்களுக்கு செய்ய முடியந்தளவு எங்களினால் உச்சளவில் செய்யப்பட்டுள்ளதுடன், திறைசேரியினால் அனுமதி வழங்குவற்கு காலதாமதமடைதல் எங்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ளது என்பது எங்களின் கருத்தாகும். அதனால், ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் கொண்டு நடாத்தப்பட வேண்டும் என்பதனால், அனைத்து நடவடிக்கைகளும் அவ்வாறு செய்யப்படுதல் பொருத்தமானது மற்றும் சரியானது என்பது எங்களது நம்பிக்கையாகும். |
| (ஈ) 2017 ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 07 ஆவது பிரிவு | ஆணைக்குழுவின் மதிப்பீட்டு ஆண்டுக்கு உரிய வருமான வரிக்கு உட்பட வேண்டிய மேலே குறிப்பிடப்பட்ட மொத்தம் ரூ.1,067,381,178 மீளாய்வு ஆண்டுக்கு உரிய வருமான வரி பொறுப்பு கணக்கிடும் போது கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | காப்புறுதி நம்பிக்கை நிதியத்தை வருமான வரியில் இருந்து விடுவிப்பதற்கு நிதி அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன், நிதியத்தின் வட்டி வருமானத்திற்கு மட்டும் வரி அறிவிடப்பட்டுள்ளது. நிதி அமைச்சினால், உரிய பதில் வழங்கப்படும் வரை செஸ் வரி மற்றும் வட்டி வருமானத்தின் மீது வருமான வரி செலுத்துவதில்லை எனும் தீர்மானம் எடுக்கப்பட்டது. |
| **வேறு கணக்காய்வு அவதானிப்பு** | | |
| (அ) | காப்புறுதித் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 13 (1) (சி) இன் கீழ் மறு பதிவு செய்ய விண்ணப்பிக்கும் காப்புறுதி நிறுவனங்கள் பொதுத் திறைசேரியினால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிலையான தொகையை வைப்புச் செய்ய வேண்டும். அவ்வாறு வைப்புச்செய்யப்பட்ட தொகை தொடர்பாக திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களத்தினால் பேணப்படும் அட்டணை மற்றும் ஆணைக்குழுவினால் பேணப்படும் அட்டவணை என்பவற்றுக்கு இடையே ரூ.3,700,000 வேறுபாடு உள்ளது. அதற்கமைவாக, உரிய வேறுபாட்டுக்கு காரணத்தை ஒப்பீட்டு இற்றைப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | திறைசேரி வைப்பு திணைக்களத்தின் இதற்குரிய வைப்பு அறிக்கையில் கொடுப்பனவு செய்தவர்கள் தொடர்பான பெயர் அல்லது வேறு விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. அதனால் இந்த வைப்பு எதற்காக கிடைத்த வைப்பு என்பதை உறுதி செய்ய முடியாதுள்ளது. எனினும் ஆணைக்குழுவினால் கொண்டு நடாத்தப்படும் அறிக்கையில் பெயர் உள்ளடங்கலாக அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதால் அது சரியானது என்பது எங்களது நம்பிக்கையாகும். |
| (ஆ) | அத்துடன் 2007ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்யாத காப்புறுதி நிறுவனங்கள் 11 தொடர்பாக மேற்குறிப்பிட்ட (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட வைப்பு தொடர்பான தகவல்களை ஆணைக்குழு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திலிருந்து தகவல்களைப் பெற்று தகவல்களை இற்றைப்படுத்தவதற்கு எதிர்பார்க்கின்றோம். |
| (இ) | 2016ஆம் ஆண்டுக்கு முன்னர் கிடைக்க வேண்டியது என நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட ரூ.1,208,602 நிறுத்திவைத்தல் மீதி மீளாய்வுக்குட்பட்ட வருடம் முடிவடைந்த போதிலும் அதனைத் தீர்ப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவில்லை. | 2016ஆம் ஆண்டிற்கு முன் ஆணைக்கு வரிக் கொடுப்பனவுக்கு உட்படாததனால், 2014 ஆண்டுக்கு முன்னர் கொடுப்பனவு செய்த நிறுத்திவைத்தல் வரி வரவினை பதிலீடு செய்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அனுமதி வழங்காததுடன், இதற்கு முன்னர் ஈ அன்ட் வை நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஆணைக்குழு 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து காப்புறுதி கம்பனிகளின் சட்ட ஏற்பாடுகளுக்கு மாற்றீடாக அறிமுகப்படுத்தப்பட்ட இடர் அடிப்படையிலான மூலதனத்தை (RBC) அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை முறையை பின்பற்றியதன் காரணமாக உயிரியலளவை அலகை உருவாக்குவதற்கு 2016ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 05 நிறைவேற்று மட்ட பதவிகள் வெற்றிடமாக இருந்தது. | இதற்கு 26.02.2018ஆம் திகதி உயிரளவீடு மற்றும் உதவி உயிரளவீடு எனும் இரு பதவிகளுக்கும் 01.09.2019ஆம் திகதி உதவி உயிரளவீடு எனும் பதவிக்கும் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் எதிர்பாக்கும் நிபுணத்துவம் கொண்ட விண்ணப்பங்கள் ஏதும் இருக்காமை மற்றும் நிபுணத்துவத்தை நிரூபித்ததன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி உயிரளவீட்டாளர் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சம்பளத்தை விட அதிக சம்பளத்தை எதிர்பார்த்ததனால் ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடியாமல் போனது.<br><br>அதேபோல் தற்போது உலகவங்கியின் கடன் நன்கொடையின் கீழ் செயற்படும் FSMP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு உயிர்அளவீட்டாளரின் சேவை பெறப்படுவதுடன் அவருடன் பணியாற்றுவதற்கு உயிரளவீட்டாளர் மற்றும் உதவி உயிரளவீட்டாளர் என்பர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பத்திரிகை அறிவித்தல் வழங்கப்பட்டு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>அதேபோல் உயிரளவீட்டு அலகுக்காக நிறைவேற்றுத்தர அலுவலர்கள் இருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>வெளிநாட்டு உயிரளவீட்டாளரினால் வழங்கப்பட வேண்டிய சேவைகளில் உயிரளவீட்டு அலகினை நிர்மாணிப்பதும் உள்ளடங்கி உள்ளதுடன் அவரின் ஆலோசனை பெறப்பட்டு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான பணி விபரங்கள் (Job Description) தயாரிக்கப்பட்டுள்ளன. |

# இணைப்பு I

31 டிசம்பர் 2019 அன்று 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள்

| தொ. இல. | காப்புறுதிக் கம்பனியின் பெயர் | காப்புறுதி வியாபாரத்தின் வகுப்பு |
|---|---|---|
| 1 | ஏஐஏ இன்சூரன்ஸ் லங்கா பிஎல்சி. | நீண்ட கால காப்புறுதி |
| 2 | ஏஐஜி இன்சூரன்ஸ் லிமிடட். * | பொதுக் காப்புறுதி |
| 3 | எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | பொதுக் காப்றுதி |
| 4 | எலைன்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | நீண்ட கால காப்பறுதி |
| 5 | அமானா டக்காபுல் பிஎல்சி | பொதுக் காப்பறுதி |
| 6 | அமானா டக்காபுல் லைப் பிஎல்சி | நீண்ட கால காப்பறுதி |
| 7 | ஆர்ப்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்பறுதி |
| 8 | ஸொப்ட்லொஜிக் லைப் இன்சூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்பறுதி |
| 9 | பியார்பெஸ்ட் இன்சூரஸ் லிமிடட் | பொதுக் காப்பறுதி |
| 10 | சிலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்பறுதி |
| 11 | சிலிங்கோ லைப் இன்சூரன்ஸ் லிமிடட் | நீண்ட கால காப்பறுதி |
| 12 | கென்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | பொதுக் காப்பறுதி |
| 13 | கோப்பரெட்டீவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | பொதுக் காப்பறுதி |
| 14 | கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிடட். | நீண்ட கால காப்பறுதி |
| 15 | எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி. | நீண்ட கால காப்பறுதி |
| 16 | எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | பொதுக் காப்பறுதி |
| 17 | ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்பறுதி |
| 18 | லைக் இன்சூரன்ஸ் கோர்பரேஷன் (லங்கா) லிமிடட். | நீண்ட கால காப்பறுதி |
| 19 | எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | பொதுக் காப்பறுதி |
| 20 | எல்ஓஎல்சி லைக் அசூரன்ஸ் லிமிடட். | நீண்ட கால காப்பறுதி |
| 21 | எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | நீண்ட கால காப்பறுதி மற்றும் பொதுக் காப்பறுதி |
| 22 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | பொதுக் காப்பறுதி |
| 23 | ஒரியன்ட் இன்சூரன்ஸ் லிமிட்ட | பொதுக் காப்பறுதி |
| 24 | பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பொதுக் காப்பறுதி |
| 25 | சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | பொதுக் காப்பறுதி |
| 26 | சனச லைப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | நீண்ட கால காப்பறுதி |
| 27 | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | நீண்ட கால காப்பறுதி மற்றும் பொதுக் காப்பறுதி |
| 28 | யூனியன். அசூரன்ஸ் பிஎல்சி | நீண்ட கால காப்பறுதி |

*எந்தவொரு புதிய காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதுடன் இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

# இணைப்பு II

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் 31 டிசம்பர் 2019 அன்றுள்ள பதிவுசெய்யப்பட்ட காப்புறுதித் தரகர் கம்பனிகள்

| இல. | தரகர் கம்பனியின் பெயர் | வியாபார வகுப்பு |
|---|---|---|
| 1 | 3 டி எச் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 2 | ஏசியன் இன்டர்நஷனல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 3 | ஏ.எம்.டபில்யு இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 4 | ஏடிஎஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 5 | எயிட்கன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 6 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 7 | அலியோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 8 | அம்ட்ரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 9 | அகுலைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 10 | அஸ்கி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 11 | அஸட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 12 | அக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 13 | பிஐஎம்ஏ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 14 | பரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 15 | சியேக்சி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 16 | சீலான் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கோ (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 17 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 18 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 19 | கொலொம்போர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 20 | கொமர்'ல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 21 | டி எஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 22 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 23 | ஈகிள் டிவிஆர்எஸ் இன்சூரன்ஸ் அன்ட் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 24 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 25 | இஸ்னா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 26 | ஈசாலி கரிம்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 27 | பெயர்வே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 28 | பைன்ட் மை இன்சூரன்ஸ் அன்ட் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 29 | பின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 30 | போர்மோஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 31 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 31 | குளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேர்விஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 33 | கிரான்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 34 | கார்டியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 35 | ஜக்கன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட்*** | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 36 | இன்சூர்மீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 37 | ஜேய் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கன்ஸல்டன்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |

# இணைப்பு II

| இல. | தரகர் கம்பனியின் பெயர் | வியாபார வகுப்பு |
|---|---|---|
| 38 | ஜேஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 39 | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 40 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 41 | எம் ஆர் எஸ் யு இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 42 | மக்ஸ்வெல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 43 | மேர்கன்டைல் போர்சூன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 44 | மேர்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 45 | முத்துவல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 46 | எல்எம் அன்ட் ஏ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட்டு | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 47 | மை இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 48 | ந'னல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 49 | பிளசிட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 50 | புரோகெயர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 51 | புரெட்டெக்ஸன் அன்ட் அசூரதன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 52 | பிரியோரிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 53 | ரெட்மோ ஸ்விஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 54 | ரிலைன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 55 | ரின்கோன் லங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 56 | ஆர் எம் எஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 57 | சம்சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 58 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 59 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 60 | ஸ்ரடர்ஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 61 | எஸ் வை எம் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் **** | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 62 | ட்ரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 63 | யூஎன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 64 | யுனைட்டட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 65 | வேராசிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 66 | விக்டர் இமானுவேல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 66 | வோங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |
| 67 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் |

*** ஐக்கோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் - நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களைக் கொண்டு நாடாத்துவதற்கு வழங்கப்பட்ட பதிவு 17 டிசம்பர் 2019 ஆம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் மறு அறிவித்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**** எஸ் வை எம் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் - பொதுக் காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நாடாத்துவதற்கு வழங்கப்பட்ட பதிவு 29 ஓகஸ்ட் 2019 ஆம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# இணைப்பு III

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் 31 டிசம்பர் 2019அன்று பதிவுசெய்யப்பட்ட நட்ட சீராக்கலாளர்கள்.

| இல. | தரகர் கம்பனியின் பெயர் | வியாபார வகுப்பு |
|---|---|---|
| 1 | திருமதி. உதிதமாலா ஜினாதரி குருகுலசூரிய | 13th ஜுன் 2018 |
| 2 | திரு. ரன் பண்டார தென்னகோன் | 25th ஜுன் 2018 |
| 3 | திரு. விஜிதசேன லீலாரத்ன பெர்னான்டோ | 25th ஜுன் 2018 |
| 4 | திரு. காமினி கினிகம | 25th ஜுன் 2018 |
| 5 | திரு. அஹமட் நஸீம் நஸ்வி ரஹ்மான் | 25th ஜுன் 2018 |
| 6 | திரு. குணவர்தன முதியான்சலாகே ஆனந்த உதய குமார குணவர்தன | 25th ஜுன் 2018 |
| 7 | திரு. மஹபாலகே டொன் சிசிர உபாலி பெரேரா | 26th ஜுன் 2018 |
| 8 | திரு. நிரோஷ் சஞ்சீவ வத்துகரவத்த | 26th ஜுன் 2018 |
| 9 | திரு. சுசாந்த மகிந்தரத்ன வீரகோன் | 26th ஜுன் 2018 |
| 10 | திரு. ராஜபக்ஷ பத்திரகே டொன் காஞ்சன சுரங்கிகா | 10th செப்டெம்பர் 2018 |
| 11 | த ஷீல்ட் அஜஸ்டர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 29th மார்ச் 2019 |
| 12 | திரு. ஏ.டபில்யூ.எம். பந்துல விஜேகோன் | 29th மார்ச் 2019 |
| 13 | திரு. கிறிசாந்த கருணாரத்ன | 29th மார்ச் 2019 |
| 14 | திரு. ராஜபக்ஷ முதலியான்சலாகே ஹேரத் ராஜபக்ஷ | 26th செப்டெம்பர் 2019 |
| 15 | திரு. ஜசின் பஸ்தியன் ஆரச்சிகே ரவினாத் நிரோஷன | 26th செப்டெம்பர் 2019 |
| 16 | திரு. கீர்த்தி தெல்வத்த | 26th செப்டெம்பர் 2019 |

# அருஞ்சொல் அகராதி

**திரட்டு**
அதே கம்பனியுடன் காப்புறுதி செய்துகொண்ட அல்லது மறுகாப்பீடு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அளவான இடர்கள் இழப்பு நிகழ்வு ஒன்று நடைபெறும் அதே சமயத்தில் பாதிக்கப்படும் சூழ்நிலையை குறிக்கும்.

**கையேற்புச் செலவுகள்**
புதிய காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் இருக்கின்ற காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் கையேற்புகளோடு முதன்மையாக சம்பந்தப்பட்ட அத்துடன் மாறுபடும் அனைத்துச் செலவுகளையும் குறிக்கும். உதாரணம் - தரகு.

**காப்பீட்டு கணிப்பாளர்**
காப்பீட்டுக் கணிப்பாளர் என்பவர், எதிர்பாராத நிகழ்வுகளையுடைய நிதிசார் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு தொழில் முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட நபர் ஆவார். காப்புறுதிக் கணிப்பீட்டாளர்கள் காப்புறுதி வியாபாரத்தின் இயல்பு, அதன் நிதிசார் சேவைகள், சொத்துக்களுடன் ஒன்றிணைந்துள்ள இடர்கள் மற்றும் புள்ளி விபரவியல் மாதிரிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் சிறந்த விளக்கம் கொண்டவர்களாக இருத்தல் அவசியமாகும். காப்புறுதிச் சூழலில் இந்தத் திறன்கள் உதாரணமாக, கட்டுப்பணங்களை நிரூபித்தல், தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் மூலதன மட்டங்கள் ஆகியவற்றில் அடிக்கடி பயன்படுத்தப்படும்.

**நிர்வாகச் செலவுகள்**
கட்டுப்பணச் சேகரிப்பு, இலாகா நிர்வாகம், ஊழியர் செலவீனம், ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான பெறுமானத் தேய்வுகளுக்கான ஏற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய நிர்வாகத் தன்மையைக் கொண்ட செலவுகளாகும்.

**அனுமதிக்கத்தக்க ஆதனங்கள்**
காப்புறுதியாளர் ஒருவரின் நியதி பூர்வமான கடன்தீர் ஆற்றலை நிர்ணயிப்பதில் உள்ளடக்கக் கூடிய ஆதனங்கள். அத்தகைய சொத்துகள், என்பவை 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆண்டுத் தொகை**
குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பிரிவுக்கு அல்லது காப்புறுதிதாரரின் ஆயுள் காலத்தின்போது, காலத்திற்குக் காலம் வருமான அனுகூலங்களைச் செலுத்தும் ஒரு காப்புறுதித் திட்டம். எதிர்காலத்தில் ஏதாவது ஒரு கட்டத்தில் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது ஒத்திவைக்கப்பட்ட ஆண்டுத்தொகையாகும். உடனடியாக வருடாந்த கொடுப்பனவு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆரம்பத்திலேயே கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது உடனடியான ஆண்டுத்தொகை ஆகும்.

**பாங்கசூரன்ஸ் (Bancassurance)**
ஒரு காப்புறுதியாளர், காப்புறுதி மற்றும் மூலதனப் பொருளை, வங்கி வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான ஒரு ஒழுங்கமைப்பு.

**பயனாளி**
காப்புறுதிப் பூட்கையாளரின் மரணத்தின் போது, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும், கிடைக்க வேண்டிய ஏனைய அனுகூலங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர் எனக் காப்புறுதிப் பூட்கையாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்.

**மூலதன போதுமான விகிதம் (CAR)**
தேவைப்படும் இடர் மூலதனத்திற்கு (RCR) ஆதரவளிக்கும் மொத்த மூலதனத்தின் (TAC) போதுமான வழிவகைகள்.
CAR = (TAC/RCR) x100

**ஒப்பளிப்பாளர்**
மீள்காப்புறுதிக் கம்பனியின் வாடிக்கையாளர் (ஆரம்ப காப்புறுதிக் கம்பனி). விட்டுக்கொடுத்தல் - விட்டுக்கொடுக்கப்படும் கம்பனிகளால் மறு காப்புறுதியாளருக்கு மாற்றப்படும் இடரின் ஒரு பகுதி.

**கோரிக்கைகள்**
காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் காப்புறுதி நிகழ்வு சம்பவிக்குமிடத்து, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை. அதாவது, சொத்துகள் அழிதல் அல்லது சேதமடைதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மரணம் அல்லது காயங்கள், மருத்துவமனைச் செலவுகள் அல்லது மருந்துச் செலவுகள் ஏற்படுதல், காப்புறுதி செய்யப்பட்ட நபரின் மரணம் அல்லது உடல் ஊனம், ஒரு காப்புறுதிப் பத்திரம் முதிர்ச்சியடைதல், ஓய்வூதிய வயதை அடைதல், போன்றவை காப்புறுதிப் பத்திரத்தைக் கையளிக்கும் போது செலுத்தப்பட வேண்டிய தொகை.

**ஏற்க நேர்ந்த கோரிக்கைகள்**
கணக்குக் காட்டப்படும் காலப்பகுதியில், கோரிக்கை கையாளுவதோடு தொடர்புடைய செலவுகள், பொருத்தமான சந்தர்ப்பங்களில் கணக்குக் காட்டப்படும் காலத்தின் ஆரம்ப அல்லது இறுதித் திகதியில் செலுத்தப்பட வேண்டிய இருக்கின்ற கோரிக்கை தொடர்பான ஏற்பாடுகளைச் சீராக்குதல் ஆகியவற்றோடு தொடர்புபட்ட செலுத்தப்பட்ட மொத்தக் கோரிக்கைகளின் கூட்டுத் தொகை ஆகும்.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட அறிவிக்கப்படாத செலவுகள் (IBNR)**
ஏற்பட்டிருக்கும் ஆனால் இதுவரையில் காப்புறுதியாளருக்கு அறிவிக்கப்பட்டிராத எதிர்பார்க்கப்படும் இழப்புக்களின் செலவை உள்ளடக்கும் பொருட்டு, சொத்து, பொறுப்பு மற்றும் ஏனைய காப்புறுதிகள் என்பன தொடர்பாக கணக்கீட்டுக் காலத்தின் முடிவின்போது வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஒதுக்கு.

**நிலுவையில் இருக்கும் கோரிக்கைகள் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**
ஐந்தொகைத் திகதிக்குள் இடம் பெற்றிருக்கும் நிகழ்வுகளில் இருந்து தோன்றும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவுகளை உள்ளடக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை. இது அறிவிக்கப்படாத (IBNR) ஆனால், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் கோரிக்கைகள் தொடர்பான செலவுகள், கோரிக்கைகளைக் கையாளும் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், அக்கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் தொகைகள் இதிலிருந்து கழிக்கப்படுகின்றன.

**இணைக் காப்புறுதி**
ஓர் நட்ட இடரை குறித்துரைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் உடன்பட்டிருக்கும் விகிதத்தில் உள்ளடக்கும் பொருட்டு காப்புறுதி செய்பவருடன் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட காப்புறுதியாளர்கள் தனியொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு.

**தரகுக் கட்டணம்**
காப்புறுதியாளர் ஒருவரின் காப்புறுதி திட்டங்களை விற்பனை செய்தமைக்காக மற்றும் சேவைகளை வழங்கியமைக்காக, ஒரு தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவு.

**செறிவு இடர்**
காப்புறுதியாளரின் சொத்துக்கள், உள்ளார்ந்த கடன் இடரை, பொருத்தமான வகையில் கணிப்பதற்கு போதுமான அளவில் பன்முகப்படுத்தப்படாத போது இருக்கின்ற மேலதிகக்கடன், மேலதிக கடன் இடர்.

**கடன் இடர்**
கம்பனிக்கு வெளிப்பாடு ஒன்று உள்ள பிணையங்கள் காப்பறுதியாளரின் (காப்பறுதியாளரின் மூலதன இலாகாவில்), கடனாளிகள் (உதாரணம்- அடமானதாரர்கள்), அல்லது எதிர் முனைவோர் (உதாரணம் - மறுகாப்பீட்டு ஒப்பந்தங்கள், வழித்தோன்றல் ஒப்பந்தங்கள் அல்லது வைப்புக்கள் மீது) மற்றும் இடைத்தரகர்களின் தவறுகை அல்லது கடன் விகித ஒப்படைகளில் ஏற்படும் நகர்வுகள் காரணமாக, நிகழும் நிதி இழப்பு இடர், கடன் இடர் எனப்படும். கடன் இடர், தவறுகை இடர், தரமிறக்கிய அல்லது இடம்பெயர்வு இடர், உட்கிடையான கடன் அல்லது பரவலான கடன், செறிவு இடர் மற்றும் இடைத்தொடர்பு இடர் என்பவற்றை உள்ளடக்கும். கடன் இடர் மூலதன எதிர்முனைவோர், காப்புறுதிக் கொள்கையாளர்கள் (செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணங்கள் ஊடாக), மறுகாப்பீட்டாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் வழித்தோன்றல் எதிர்முனைவோர் என்பவற்றில் இருந்து தோன்றும்.

# அருஞ்சொல் அகராதி

**ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**
வருடாந்த கணக்கீட்டு அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் தினத்தில் செல்லுபடியான ஒப்பந்தங்களின் முதிர்ச்சியடையாத இடர்க் காலம் தொடர்பான கையகப்படுத்தல் செலவுகள் இவை ஒரு கணக்கீட்டுக் காலப் பிரிவிலிருந்து, அடுத்துவரும் கணக்கீட்டுக் காலப் பிரிவுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

**கைவிடப்பட்ட செயற்பாடு**
நிறுவனம் முழுவதிலும் இருந்து அகற்றுவதற்கு முறையான திட்டம் ஒன்றுள்ள ஒரு நிறுவனத்தின் முழுமையான பிரிவு, துணைப் பிரிவு அல்லது ஒரு பிரிவின் செயற்பாடுகள்.

**கொடையுரிமையளித்தல்**
எதிர்பாராத நிகழ்வு காரணமாக தனிப்பட்டவரின் ஆயுளைப் காப்பீடு செய்வதுடன், காப்புறுதிக் காலத்தின் முடிவின் முதிர்ச்சி அனுகூலங்களையும் வழங்கும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம். (ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் (அதன் முதிர்ச்சியின் போது) அல்லது மரணத்தின் போது ஒரு தொகைக் கொடுப்பனவை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு ஆயுள் காப்புறுதி)

**பொதுக் காப்புறுதி வர்த்தகம்**
தீ, கடல், மோட்டார் வாகன அல்லது நானாவித காப்புறுதி வர்த்தகத்தை தனியாகவோ, ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து மேற்கொள்ளல். கிடைத்த, மொத்த தவணைக் கட்டணங்கள் அல்லது அனைத்து மூலங்களில் இருந்தும் கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள். இவை கணக்கீட்டுக் காலப் பிரிவின் போது பொதுக் காப்புறுதி வர்த்தகம் தொடர்பாகக் கருதப்பட்ட மீள் காப்புறுதிக்கான கட்டணங்களையும் உள்ளடக்குகின்றன.

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்**
கழிவுகள், மீள் திருப்பப்பட்ட தொகை, மற்றும் தள்ளுபடிகள் ஆகியவை கழிக்கப்பட்டதன் பின்னரான தவணைக் கட்டணமாயினும், இது எந்தவொரு தவணைக் கட்டண செலுத்துதல்கள் அல்லது காப்பறுதியாளர் ஒருவரின் மீள் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவு என்பவை கழிக்கப்படுவதற்கு முன்னரானதாக இருக்கும் தொகை ஆகும்.

**காப்புறுதியாளர்**
2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டதும் மற்றும் 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான கம்பனி.

**காலாவதியான கொள்கை**
கட்டுப்பணத்தைச் செலுத்தாமையின் காரணமாக, சலுகைக் கால இறுதியில் முடிவுறுத்தப்பட்ட ஒரு கொள்கை.

**பொறுப்பு போதுமான தன்மை பரீட்சை (LAT)**
அதன் காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் உள்ள எதிர்கால நிதிப் பாய்ச்சல்களின் நிகழ்கால மதிப்புகளைப் பயன்படுத்தி, அதன் காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமையானவையா என அங்கீகரிப்பதற்காக அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவிலும் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு.

**பொறுப்பு இடர்**
காப்புறுதியாளரால் ஸ்தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளரின் பொறுப்புகள், எதிர்காலக் கோரிக்கைகள் மற்றும் தற்போது வலுவிலுள்ள கொள்கைகள் மீதான செலவுகள் என்பவற்றைச் செலுத்துவதற்கு போதுமானதாக இல்லாமையைக் குறிப்பிடும்.

**ஆயுள் மிகை**
பொறுப்புகளுக்கு மேலாக உள்ள சொத்துக்களின் மிகை மற்றும் பூட்கையாளர்களுக்கு மிகையூதியம் விநியோகித்ததன் பின்னர் நட்டக் கணிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட தொகை (கடன்தீர் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டதன் பின்னர்)

**நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம்**
மனித ஆயுள் தொடர்பான பூட்கை ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் அல்லது பராமரித்தல் தொடர்பான வர்த்தகம். அத்தகைய ஒப்பந்தங்கள் மரணத்தின் போது அல்லது மனித வாழ்க்கையில் ஏதேனும் திடீர் நிகழ்வுகள் இடம்பெறும் போது, பணக் கொடுப்பனவு உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும், மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஓர் அவசர நிலைக்கென தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன.

**சந்தை இடர்**
காப்புறுதியாளரின் சொத்துக்களுக்குரிய சந்தைப் பெறுமதியில் குறைப்பை ஏற்படுத்தும் இடர்

**முதிர்சி**
நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்று பெறப்பட்டு அதன் தவணை முடிவில் செலுத்த வேண்டிய தொகைக்குரிய கொடுப்பனவை மேற்கொள்கின்ற நேரம்.

**இறப்பு விகிதம்**
முழு மக்கள் தொகைக்கு அல்லது குறிப்பிட்ட வயது குழுமத்திற்குரிய மரண விகிதம். இது, உலகளாவிய ரீதியில் விகிதத்தில் வெளிப்படுத்தப்படுவதோடு, இறப்பு விகித அட்டவணைகளில் விளக்கப்படுகிறது.

**நிகர கோரிக்கைகள் விகிதம் அல்லது நிகர இழப்பு விகிதம்**
நிகர இழப்புச் செலவுகளை நிகர வருமானத்துடன் தொடர்புபடுத்துவதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதி களைக் கழித்த பின்னர்)

$$\frac{\text{நிகர கோரிக்கை கொடுப்பனவுகள்}}{\text{நிகர தவணைக் கட்டண பெறுகைகள்}} \times 100$$

**நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**
இது காப்பறுதியாளரின் தொழிற்பாடுகளின் இலாபத் தன்மையைக் காட்டுகின்றது. தேறிய நட்ட விகிதத்தையும் தேறிய செலவு விகிதத்தையும் இணைத்துக் கணிக்கப்படுகின்றது. இது முதலீட்டு வருமானத்தைக் கவனத்தில் எடுப்பதில்லை.

$$\frac{\text{நிகர கோரிக்கை செலவுகள்}}{\text{நிகர தவணைக் கட்டணங்கள்}} \times 100 + \frac{\text{செலவுகள்}}{\text{நிகர உழைக்கப்பட்ட தவணைக்கட்டணம்}} \times 100$$

**தேறிய தவணைப் பெறுகைகள் -பொதுக் காப்புறுதி வியாபாரம்**
மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் பெறப்படாத தவணைக் கட்டணங்களுக்கான அதிகரிப்பு மற்றும் குறைவு என்பனவற்றுக்கென சீராக்கம் செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்.

**தேறிய செலவு விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**
கையகப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறிப்பிடுவதற்கென காப்புறுதிக் கம்பனிகளினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (உதாரணம், தரகுக் கட்டணம், வரிகள், ஆளணி, விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்).

தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் மீள்காப்புறுதியாளர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணங்களை கழித்ததன் பின்னர் ஏதேனும் மீள்காப்புறுதிகளாகக் கருதியவற்றைக் கூட்டிய பின்னர் வரும் காப்புறுதிக் கம்பனியினால் திரட்டிய எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் ஆகும்.

**பங்கேற்காத காப்புறுதிப்பத்திரம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**
பொருத்தமான ஆயுள் காப்புறுதி நிதியத்திலுள்ள மிகைகளை பங்கிட்டுக் கொள்வதற்கான ஒப்பந்த ரீதியில் உரித்தற்ற நீண்ட காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதிக் கொள்கையாளர்கள்.

# அருஞ்சொல் அகராதி

**ஒரு தடவை மேலதிகம்**
2016 ஆம் ஆண்டின் ஜனவரி 01 இல் உள்ளவாறு இடர் அடிப்படையிலான மூலதனத்தில் (RBC) உள்ள மொத்த கொள்கை பொறுப்புக்கள் மீது 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிகர தவணைக் கட்டண மதிப்பீட்டு (NPV) ஆளுமையின் கீழ் உள்ள மொத்த கொள்கைப் பொறுப்புக்களின் மிகை ஆகும். மேலதிகம் பின்வரும் மாற்றத்தினால் உருவாக்கப்பட்டது. கொள்கை பொறுப்புக்களுடைய மதிப்பீட்டு முறைமை நிகர கட்டுப்பண மதிப்பீட்டிலிருந்து மொத்த கட்டுப்பண மதிப்பீட்டிற்கு மாற்றப்பட்டது

**ஒரு தடவை மேலதிக மாற்றம்**
மிகை உடைய மாற்றம் பின்வரும் காரணத்தினால் ஏற்பட்டது. கொள்கைப் பொறுப்புக்கள் மதிப்பீட்டு முறைமை, நிகர கட்டுப்பண மதிப்பீட்டிலிருந்து (NPV) பங்குதாரர் நிதியத்திற்கான மொத்த கட்டுப்பண மதிப்பீட்டிற்கு (GPV) மாற்றப்பட்டது.

**செயற்பாட்டு இலாபம்**
முதலீட்டு வருமானம், தேறிய மூலதன ஆதாயங்கள் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் இலாபம்.

**செயற்பாட்டு இடர்**
உள்ளக முறைமைகள், ஆட்கள், நடவடிக்கை முறைகள் அல்லது நிதி இழப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள், உள்ளக முறைமைகள், ஆட்கள், நடவடிக்கை என்பவற்றின் பற்றாக்குறை அல்லது தோல்வி அல்லது நிதியிழப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள் என்பவற்றில் இருந்து எழுகின்ற இடர் செயற்பாட்டு இடர். பாதுகாப்பு இடரையும் உள்ளடக்கும்.

**காப்புறுதிப் பூட்கை**
காப்புறுதிப் பூட்கையாளருக்கு விநியோகிக்கப்படும் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை கொண்டுள்ள ஓர் ஆவணம்.

**காப்புறுதிப் பூட்கையாளர்**
காப்புறுதியாளருடனான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் காப்புறுதிப் பத்திரத்தை அச்சமயத்தில் சட்டபூர்வமாக வைத்திருக்கும் ஒரு நபர்.
காப்புறுதி பூட்கைக் கடன்
நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமதியைப் பிணையாக கொண்டு காப்புறுதியாளர் ஒருவர் காப்புறுதிப் பூட்கையாளருக்கு வழங்கும் கடன். இக்கடன் காப்புறுதிப் பத்திரத்தின் தற்போதைய ஒப்படைப்புப் பெறுமதியின் குறிப்பிட்டதொரு சதவீதத்திற்கு பொதுவாக வரையறுக்கப்பட்டிருப்பதுடன், இத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படுகின்றன.

**மீள்காப்புறுதி**
ஒரு பிரதிபயனின் (கட்டுப்பணம்) பரிமாற்றத்திற்காக மாற்றாளரால் வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களின் இழப்புக்களுக்கு எதிராக அவற்றைத் தீர்ப்பதற்காக ஒரு காப்பறுதியாளர் அல்லது மீள்காப்பீட்டாளர் இன்னுமொரு காப்புறுதியாளருடன் (மாற்றாளர்) செய்து கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம்.

**மீள்காப்புறுதித் தரகு**
மீள்காப்புறுதியாளர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணங்களோடு சம்பந்தப்பட்ட பெறப்பட்ட அல்லது பெற வேண்டிய தரகு.

**உள்நோக்கிய மீள் காப்புறுதி**
மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை ஏற்றுக்கொள்ளல்.

**வெளிநோக்கிய மீள் காப்புறுதி**
மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை வைத்தல்.

**மீள் காப்புறுதி தரகு கட்டண இலாபம்**
மீள் காப்பறுதியாளரினால் மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட (மீள் காப்புறுதி ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) தேறிய இலாபத்தின் அடிப்படையில், மீள் காப்புறுதி செய்தவருக்கு (ஆரம்பக் காப்பறுதியாளருக்கு) கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி மற்றும் தரகுக் கட்டணம்.

**வரையறுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் ஒதுக்குகள்**
பணிப்புரை 16இற்கு அமைவாக பங்குதாரரின் நிதியத்திற்கு பங்குபற்றும் வியாபாரம் தவிர்த்து மாற்றம் செய்யப்படும் ஒரே தடவை மிகை.

**தக்க வைத்துக் கொள்ளல்**
காப்புறுதியாளர் / மீள்காப்புறுதியாளர் மீள்காப்புறுதி / திருப்பிச் செலுத்தமாட்டார் என அனுமானிக்கப்பட்ட இடரின் ஒரு பகுதி. அதாவது, சொந்தக் கணக்கிற்காக நிகர தொகையை வைத்துக் கொள்ளுதல்.

**மீளப் பெறுதல்**
மீள்காப்புறுதியாளர் இடர்களை மாற்றும் ஒரு நடவடிக்கையாகும். இது, இன்னுமொரு மீள்காப்புறுதியாளருக்காக மீள் காப்புறுதி செய்யப்பட்டது.

**இடர் மூலதன தேவைப்பாடு (RCR)**
இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு என்பது, 2015 ஆம் ஆண்டின் கடன் தீர்வு திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து பொருத்தமான மற்றும் பொருள் வகையைச் சார்ந்த இடர்களின் மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்குரிய தேவைப்படும் மூலதனத்தின் மொத்த தொகை. (RCR) பொது மற்றும் நீண்டகால காப்புறுதிக்கு வெவ்வெறாக கணக்கிடப்படுவதுடன், காப்புறுதி மற்றும் பங்குதாரர் நிதியம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்.

(அ) பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கு
RCR = [( கடன் இடர் மூலதனக் கட்டணம் + செறிவு இடர் மூலதனக் கட்டணம் + மறு காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$ + பொறுப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$ + செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$ ]; மற்றும்

(ஆ) நீண்டகால வியாபாரம் ஒன்றுக்கு:
RCR = max {(SVCC, [( கடன் இடர் மூலதனக் கட்டணம் + செறிவு இடர் மூலதனக் கட்டணம் + மறு காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$ + பொறுப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$ + செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$]

**கடன் தீர் திறன் விழிம்பு (இடர் அடிப்படையிலான மூலதனம்)**
காப்புறுதிப் பொறுப்புகளுக்காக தொழில்நுட்ப ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, காப்பறுதியாளரினால் வைத்திருக்க வேண்டிய வில்லங்கமற்ற மூலதனத்தின் தொகையைத் தீர்மானிப்பதற்காக இருக்கின்ற ஒழுங்குபடுத்தும் மூலதனத் தேவைப்பாடு. அத்துடன், முழுமையான குறைந்தபட்ச மூலதன போதுமான தன்மையின் தராதரத்தை உள்ளடக்கியதோடு, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 26(1) உடன் சேர்த்து வாசிக்கின்றவிடத்து, பிரிவு 105 இன் கீழ் உருவாக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் கடன் தீர் திறன் விழிம்பு விதிகளின் (இடர் அடிப்படையிலான மூலதனம்) வரைவிலக்கணப்படுத்தியுள்ள இடர் அடிப்படையிலான தேவைப்பாட்டையும் உள்ளடக்குகிறது.

**சரணடையும் பெறுமதி**
காப்புறுதிக் கொள்கை ஒன்றின் தவணைக்காலம் பூர்த்தியடைய முன்னர், நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்று முடிவுறுத்தப்படும் போது அதற்காக காப்புறுதியாளரினால் காப்புறுதிக் கொள்கையாளருக்கு செலுத்த வேண்டிய தொகை ஆகும். இங்கு குறிப்பிடப்பட்ட சரணடையும் பெறுமதியை அடைவதற்கு காப்புறுதிக் கொள்கை தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு அமுலில் இருந்திருத்தல் வேண்டும்.

**சரணடையும் பெறுமதி மூலதனக் கட்டணம் (SVCC)**
அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரே நேரத்தில் சரணடையக் கூடிய தீவிர பாதகமான சூழ்நிலை ஒன்று ஏற்படும் சந்தர்ப்பம்.

# அருஞ்சொல் அகராதி

**தவணைக் காப்புறுதி**
குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றுக்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட தவணைக்கு பாதுகாப்பை வழங்குகின்ற ஆயுள் காப்புறுதிக் கொள்கையின் ஒரு வகை. கொள்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியின் போது காப்புறுதியாளர் இறந்தால் மற்றும் காப்புறுதிக் கொள்கை வலுவில் இருப்பின் - இறப்பின் மீதான ஒரு அனுகூலம் செலுத்தப்படும

**தொழில்நுட்ப ஏற்பாடு**
இலாகாவின் ஆயுள் காலத்தின் போது, அதிலிருந்து எழும் ஏனைய பயனாளிகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளருக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் அதன் காப்புறுதிக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக காப்பறுதியாளரினால் ஒதுக்கி வைக்கப்படும் ஒரு தொகை. இது, கொள்கைகள், மறு காப்புறுதி என்பவற்றை நிர்வகிப்பதற்கான செலவுகள் மற்றும் எஞ்சிய இடர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான மூலதனத்தையும் உள்ளடக்கும்.

**அடுக்கு 1**

மூலதனம் தொடர்ந்து செல்வதற்கான கரிசனைகள் மற்றும் வியாபாரத்தை முடிவுறுத்தல் ஆகிய அடிப்படையின் மீது அனைத்து சந்தர்ப்பங்களிலும் காப்பறுதியாளருக்கு ஏற்படுகின்ற நட்டத்தை பாதுகாப்பதற்காக முழுமையாக இருக்கக்கூடிய நிரந்தர மூலதனம்.

**அடுக்கு 2**

மூலதனம் அடுக்கு 1 மூலதனத்தில் உறிஞ்சும் தன்மையுடைய பண்புகள் இல்லாத மூலதனம். ஆயின், எவ்வாறாயினும், நடந்து கொண்டிருக்கின்ற செயற்பாடுகள் அல்லது வியாபாரத்தை முடிவுறுத்தும் செயற்பாடுகளின் போது சில இழப்பு உறிஞ்சும் தன்மையை வழங்கக்கூடியது

**மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனம் (TAC)**
2015 ஆம் ஆண்டின் கடன்தீர் திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட கழிப்பனவுகள் ஏதேனும் இருப்பின், அவற்றைக் கழித்த அடுக்க 2 மூலதனம் மற்றும் அடுக்கு 1 மூலதனம் ஆகிய இரண்டினதும் மொத்தத் தொகை இருக்கக்கூடிய மொத்த மூலதனமாகும்.

**எழுத்தாக்க இலாபம்**
மூலதன வருமானம் மற்றும் ஏனைய வருமானத்தை கருத்திற் கொள்ளாது, பொதுக் காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதன் மூலம் ஈட்டப்படும் தொழில்நுட்ப இலாபம்.

**சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கு**
வரவேண்டிய கட்டுப்பணங்கள் கணக்குகளில் ஏற்கனவே உள்ளிடப்பட்டிருப்பதோடு, இது, ஐந்தொகை திகதியை அடுத்து வரும் இடர் காலப்பகுதியோடு தொடர்புபட்டது

**சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கு**
இன்னும் வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் எதிர்காலத்தில் எழக்கூடிய கோரிக்கைகளை வழங்குவதற்காக பொதுக் காப்புறுதியாளரினால் வைத்திருக்கப்படும் நிதியமாகும்.

**காலாவதியாகாத இடர் ஒதுக்கு**
கோரிக்கைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட கூடிய தொகை மற்றும் இதுவரை அத்திகதிக்கு முன்னர் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் முடிவுபெற்ற ஒப்பந்தங்களில் இருந்து எழக்கூடிய செலவுகள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட தொகையைவிட கூடிய தொகையாகும். ஏனெனில், அவற்றினுடைய மதிப்பிடப்பட்ட தொகை சம்பாதிக்கப்படாத கட்டுப்பணங்களுக்கான ஏற்பாடுகளைவிட அதிகரித்திருப்பதால் (ஒத்தி வைக்கப்பட்ட ஏதேனும் கையேற்புக்கான செலவுகள் இருப்பின் அவற்றைக் கழித்த பின்பு).

**உலகளாவிய ஆயுள் காப்புறுதி**
முதலீட்டு சேமிப்புகள் மற்றும் குறைந்த கட்டுப் பணங்களை உள்ளடக்கிய வகையிலான தவணை ஆயுள் காப்புறுதியாக அமைகின்ற நிரந்தர ஆயுள் காப்புறுதி ஆகும். அநேகமான உலகளாவிய காப்புறுதிக் கொள்கைகள், நெகிழ்வான கட்டுப்பணத் தெரிவுகளை உள்ளடக்கியிருக்கிறது. எவ்வாறாயினும், சில ஒற்றைக் கட்டுப்பணம் (ஒற்றை மொத்தத் தொகைக் கட்டுப்பணம்) அல்லது நிலையான கட்டுப்பணங்களை (அட்டவணையிடப்பட்ட நிலையான கட்டுப்பணங்கள்) விரும்புவர்.

**முழு ஆயுளுக்குமான காப்புறுதி**
முழு ஆயுள் காப்புறுதி பெற்றவரின் ஆயுள் காலம் முழுவதையும் பாதுகாப்பதற்காக வழங்கப்படுகிறது. இறப்பு மீதான நலனை வழங்குவதற்கு மேலதிகமாக, முழுமையான ஆயுள் காப்புறுதி பணப் பெறுமதி திரளக்கூடிய ஒரு சேமிப்பு உறுப்பையும் உள்ளடக்கும். இந்தக் கொள்கைகள் நிரந்தர அல்லது பாரம்பரிய ஆயுள் காப்புறுதி எனவும் அழைக்கப்படும்.

# பொதுத் தகவல்கள்

### அலுவலக முகவரி

இல. 11, கிழக்குக் கோபுரம்,
உலக வர்த்தக நிலையம்,
எக்சலன் சதுக்கம், கொழும்பு 1
ஸ்ரீ லங்கா.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | +94 11 2396184-9 |
| தொலைநகல் | : | +94 11 2396190 |
| மின்னஞ்சல் | : | info@ircsl.gov.lk |
| இணைய தளம் | : | www.ircsl.gov.lk |

### சட்ட வடிவம்

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க விதிகளுக்கு அமைய, இலங்கையில் ஒரு நியதிச் சட்ட சபையாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது, 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதிய, 1172/27 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2001 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

### ஆணைக்குழுவின் இலக்கும் பொறுப்பும்

காப்புறுதிக் கொள்கையாளர்கள் மற்றும் எதிர்கால காப்புறுதிக் கொள்கையாளர்களின் அக்கறைகளைப் பாதுகாக்கும் நோக்குடன், இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மைத் திறனுடனும், தொழில் முறையாகவும், விவேகமான முறையிலும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது ஆணைக்குழுவின் இலக்கும், பொறுப்பாகும்.

### கணக்கியல் வருடம்

டிசம்பர் 31

### கணக்காய்வாளர்

கணக்காளர் நாயகம்

### வங்கியாளர்

இலங்கை வங்கி

### கணக்காய்வுக்குழு

திரு. யுதிஸ்ரன் கனகசபை
திரு. ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து
திரு. ஈ.ஏ.டி. பெரேரா

Designed & Printed By Ceylon Printers PLC

இலங்கை
காப்புறுதி ஒழுங்கு
முறைப்படுத்தல்
ஆணைக்குழு


11, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், எக்சலன் சதுக்கம், கொழும்பு 01, ஸ்ரீ லங்கா
தொலைபேசி : +94 11 2396184-9 | தொலைநகல் : +94 11 2396190
மின்னஞ்சல் : info@ircsl.gov.lk | இணையதளம் : www.ircsl.gov.lk